# தைத்திரீய உபநிஷதம்

## (வாழ்க்கையை வாழுங்கள்)






ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | தைத்திரீய உபநிஷதம் |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2023 |
| அளவு | : | A4 |
| **பக்கங்கள்** | : | 228 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

# தைத்திரீய உபநிஷதம்

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# தைத்திரீய உபநிஷதம்

## (வாழ்க்கையை வாழுங்கள்)

## முகவுரை:

'**வாழ்க்கை நடக்கிறது**' என்பது வேறு, '**வாழ்க்கையை வாழ்வது**' என்பது வேறு. தன் போக்கில் வாழ்க்கையை வாழாமல், சரியாக சிந்தித்து முறையாக வாழச்சொல்கிறது இந்த தைத்திரிய உபநிஷதம்.

பொதுவாக, எல்லா உபநிஷதங்களும் வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒன்றை விரிவாக வெளிப்படுத்தவும், உருவமற்றதை உயர்வாக வர்ணிக்கவும், குரலற்ற அதன் மகிமையை அழகான குரலில் மந்திரங்களாக, அந்த முழுமையின் பேரின்பத்தையும் பாட முயல்கின்றன.

உபநிஷதத்தின் மிக முக்கிய நோக்கம், எல்லாவற்றையும் விட உன்னதமான ஒன்றைப் பற்றிய உயரிய எண்ணங்களில் மனதை ஈடுபடுத்துவதாகும். அந்த வகையிலே, இந்த தைத்திரிய உபநிஷதம் யஜுர் வேதத்தின் ஒரு பகுதியாகும். மேலும், இது இந்து தத்துவத்தில் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது. இந்த குறிப்பிட்ட உபநிஷதம் இந்து தத்துவத்தின் உயர்ந்த சித்தாந்தங்கள் பற்றிய முக்கியமான நுண்ணறிவை வழங்குகிறது.

பகவான் ஸ்ரீ சங்கராச்சாரியார் இந்த குறிப்பிட்ட உபநிடதத்திற்கு தனது முதல் வர்ணனையை அளித்தார் என்பதிலிருந்தும், அதே நேரத்தில் அவர் இந்த உபநிடதத்தை 147 முறை தனது பாஷ்யங்களிலோ அல்லது பிரம்மசூத்திரத்திலோ மேற்கோள் காட்டியிருப்பதிலிருந்து தைத்திரீய உபநிஷத்தின் முக்கியத்துவத்தை அறியலாம்.

தைத்திரீய உபநிஷதம் ஒரு தனித்துவமான படைப்பாக நிற்கிறது, ஏனெனில், அது தேடுபவருக்குள் உள்ள அகநிலை யதார்த்தத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் விளக்கியுள்ளது. ஐந்து உறைகளின் விளக்கம் இந்த குறிப்பிட்ட உபநிடதத்தில் முதன்முறையாக வருகின்றது. அதாவது, ஒவ்வொரு மனிதனும் இந்த ஐந்து உறைகளால்

ஆனவர்கள் என்று விளக்குகிறது. மனித ஆளுமை பற்றிய முழுமையான ஆய்வை உள்ளடக்கிய ஒரே உபநிஷதம் இந்த தைத்திரிய உபநிஷதம் மட்டுமே என்று கூறலாம்.

தைத்திரிய உபநிஷதம் கிருஷ்ண யஜுர் வேதத்தின் ஒரு பகுதியாகும் மற்றும் தைத்திரிய ஆரண்யகத்தின் ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது அத்தியாயங்களின் ஒரு பகுதியாகும்.

ஒரு சுவாரஸ்யமான புராணக்கதை தைத்திரிய உபநிடதத்துடன் நெருக்கமாக தொடர்புடையது. ஒருமுறை துறவி வைசம்பாயனர் தனது முக்கிய சீடர்களில் ஒருவரான யாஜவல்கியாவிடம் கோபமடைந்தார் என்று புராணக்கதை கூறுகிறது. குரு தன் சீடன் மீது கோபம் கொண்டதால், தன் சீடன் குருவிடம் இருந்து பெற்ற அனைத்து அறிவையும் திரும்பக் கொடுக்க வேண்டும் என்று கோரினார். குருவிடமிருந்து அவ்வாறு கட்டளையிடப்பட்ட யாஜவல்கியர், குருவிடமிருந்து தான் பெற்ற முழு அறிவையும் வாந்தி எடுத்தார். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் குரு மறுபுறம் தனது மற்ற சீடர்களை தைத்திரியா எனும் பறவை வடிவத்தை எடுத்து, அந்த சிதறிய வாந்தியை உட்கொள்ளும்படி கூறினார். இந்தக் காரணத்தினாலேயே இந்த உபநிஷதம் **தைத்திரீய உபநிஷதம்** என்று அழைக்கப்பட்டது என்பதாக புராணக்கதை கூறுகின்றது.

பொதுவாக பார்க்கும்போது, கதையின் இந்த பதிப்பு வெறுக்கத்தக்கதாக இருக்கலாம். ஆனால், இதன் உண்மைப்பொருள் என்னவெனில், யாக்ஞவல்கியர் முனிவர் ஒரு மிகப்பெரிய மேதையாக இருந்ததால், அவர் குருவின் போதனைகளை கற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், அவர் பெற்ற அந்த அறிவில் கற்றுக் கொண்டது மட்டுமின்றி, அந்த தூய அறிவு அவரிடம் பிரகாசித்ததின் வாயிலாக, மேலும் பல அரிய ஆழமான போதனைகளையும், நுண்ணறிவையும் சேர்த்துள்ளார் என்பதாகவே பார்க்க வேண்டும்.

அவரது, அத்தகைய தனித்துவமான வெளிப்பாட்டைக் கண்ட அவரது குரு அவரது அற்புதமான அத்யாத்ம யோகத்தின் வெளிப்பாட்டைக் கண்டு மிகவும் வசீகரிக்கப்பட்டார். அவர் தனது மற்ற சீடர்களிடம் யாக்ஞவல்கியர் உருவாக்கிய அறிவை தங்களால் இயன்றவரை நீங்களும் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். இது சம்பந்தமாக, **தைத்திரிய–பறவைகள்** உதாரணமாக காட்டப்பட்டு, அவைகள் அளவில் சிறியதாக இருந்தாலும், அறிவிலும், அறிவதிலும் கவனமாகவும், மிகவும் சுறுசுறுப்பாகவும், இருப்பதாகக் கொண்டு, அவைகளைப் போன்று தனது சிஷ்யர்களும் இந்த பாடங்களைக் கற்க வேண்டும் என்பதின் அடிப்படையில் அவ்வாறு அந்த பறவையை சுட்டிக் காட்டப்பட்டது.

தைத்திரீய உபநிஷதம் மனித சுயத்தின் ஒவ்வொரு நிலையையும் மிகவும் நேர்மறையாக விவரித்திருப்பதால், உலகத்தை உறுதிப்படுத்தும் ஒரு தத்துவத்தை உள்ளடக்கியது என்று கூறலாம்.

தைத்திரீய உபநிஷத்தில் மூன்று முக்கிய பிரிவுகள் உள்ளன. அவை சிக்ஷா வல்லி (முதல் அத்தியாயம்), பிரம்மானந்த வல்லி (இரண்டாம் அத்தியாயம்) மற்றும் பிருகு வல்லி (மூன்றாவது அத்தியாயம்) என்பன. இதில் இந்த வல்லிகள் ஒவ்வொன்றும் அனுவாகங்கள் அல்லது வசனங்கள் எனப்படும் சிறிய பிரிவுகளாக மேலும் பிரிக்கப்பட்டுள்ளன.

முதல் அத்தியாயம் அல்லது **சிக்ஷா வல்லி** சிக்ஷாவின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது, இதில் முக்கியமாக ஒலிப்பு மற்றும் உச்சரிப்பு பற்றிய ஆய்வு அடங்கும். சிக்ஷா வல்லியில் வெவ்வேறு மந்திரங்களைக் கையாளும் பன்னிரண்டு வசனங்கள் அல்லது அனுவாகங்கள் உள்ளன. பன்னிரண்டு வசனங்களில் ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான தியானம் மற்றும் நெறிமுறை விதிகளைக் கையாள்கின்றன. அறிவைத் தேடுபவர் தனது மனதைத் தூய்மையாக்க அவைகளைப் பின்பற்ற வேண்டும்.

பிரம்மனை அறிந்தவன் உன்னத அறிவை அடைந்தான் என்பதே பிரம்மானந்த வல்லியின் மையக் கருத்து. தைத்திரீய உபநிஷத்தின் இரண்டாம் அத்தியாயம் மேலும் ஒன்பது அனுவாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தைத்திரீய உபநிஷத்தின் இரண்டாம் அத்தியாயத்தின் ஒன்பது வசனங்களும் மனிதர்களின் பல்வேறு நிலைகளைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. பரமாத்மாவைப் பற்றிய உண்மையான அறிவால் மட்டுமே அனைத்து துன்பங்களுக்கும் முடிவு கட்ட முடியும் என்றும், ஒரு ஆத்மாவை அறிந்தவன் அறியாமைகள் எனும் தளைகளிலிருந்து விடுபட முடியும் என்று கூறியுள்ளது.

அடுத்து, பிருகு என்ற பெயரால் அழைக்கப்படும் நீர் கடவுளான வருணனின் மகன் தனது தந்தையின் வழிகாட்டுதலின் கீழ் தியானத்தின் மூலம் பிரம்மனை எவ்வாறு உணர்ந்தான் என்பதை பிருகு வல்லி விளக்குகிறார்.

இந்த வல்லி பகுதியில், ஒரு சிஷ்யனை ஒரு ஆசிரியர் சரியாக வழிநடத்துகிறார். அவர் ஐந்து உறைகளையும் உணர்ந்து கொள்ள ஊக்குவிக்கிறார். இதனால், அதை அறிபவர்கள் அந்த ஐந்து கோஷங்களால் மறைந்துக் கொண்டுள்ள ப்ரஹ்மத்தை அறியலாம்.

அடுத்து, இந்த வல்லியின் எஞ்சிய பகுதி உணவின் சாரத்தை போற்றியுள்ளது. உணவே வாழ்க்கைத் துணை என்பதால், உணவை அவமதிப்பது ஒருபோதும் விரும்பத்தக்கதல்ல என்று அது கூறியுள்ளது.

முழு தைத்திரீய உபநிஷதத்தின் மூன்றில் ஒரு பங்கு வெவ்வேறு வடிவங்களில், பல்வேறு உபாசனைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அறிவைத் தேடுபவருக்கு சுய ஒருங்கிணைப்பு, செயல்முறை எவ்வளவு முக்கியமானது என்பதைக் காட்டுவதற்காக இந்த குறிப்பிட்ட உபநிஷதத்தில் உபாசனைகள் சேர்க்கப்பட்டுள்ளன என்று கூறலாம்.

அனைத்து உபநிஷதங்களும் முதலில் சாந்தி மந்திரத்துடன்தான் தொடங்குகின்றன. இதனால், அனைத்து தீமைகளும் விலகி, அறிவைப் பெறுவதற்கான பாதையில் வருகின்ற தடைகளை தகர்க்கின்றன.

அத்துடன், மனிதன் என்பவன் யார்? அவன் சமுதாயத்தில் நல்ல அங்கத்தினனாக விளங்குவதற்கான கடமைகள் எவை? தெய்வச் சிந்தனையுடன் வாழ்வது எப்படி? உண்மையான ஆனந்தத்தை அடைவது எப்படி? என்பவைகள் போன்ற அரியப் பல ஆழமான வாழ்க்கை விஷயங்கள் இங்கே ஆராயப்படுகின்றன.

வாழ்க்கையை வெறுக்கவோ, அதிலிருந்து விலகி ஓடவோ வேண்டியதில்லை. வாழ்க்கையை எப்படி அணுக வேண்டும்? மேலும், சரியான வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும், அதற்கான மகிமைகள் இறைவனிடம் இருந்து எப்படி வெளிப்படுகின்றது போன்ற சில முக்கியமான கருத்துக்களை இன்னும் சிறப்பாக இந்த உபநிஷதம் சுட்டுக் காட்டுகின்றது. அத்துடன் சில தியானங்கள், உயரிய பண்புகள், ஆனந்தமய வித்தை, **பார்கவி – வாருணீ** வித்தை என்ற இரண்டு வித்யைகளும் இங்கு விளக்கப்படுகின்றன.

ஆகவே, நம்முடைய பாரதம் ஒரு பண்டைய கல்வி முறை பாரம்பரியத்தை கொண்டுள்ளது. வேதம் கற்பித்தல் மற்றும் கற்பதற்கான பூர்வீகம் நம் பாரதம் என்றால் அது மிகையாகாது. அந்தக் காலத்திலேயே நாலந்தா எனும் பல்கலைக் கழகம் நமது நாட்டில்தான் இருந்தது. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பண்டைய வேத இலக்கியங்களை உற்று நோக்குவதன் மூலம் இதை எளிதில் உணரலாம். இதற்கு மேல், அதன் மிகப்பெரிய தனித்துவம் என்னவென்றால், அது கற்பவர்களுக்கு நித்திய பலன்களைத் தருகிறது. ஏனென்றால், **அத்யாத்மவித்யா** எனும் இந்த பிரஹ்மவித்யா இன்று வரை அழியாமல் உள்ளது. அந்த வகையில், நம்முடைய சனாதன தர்மம் என்றும் அழியாத தர்மம் என்பது நிரூபணமாகின்றது. நாம் கல்வி என்பது வேதகாலத்தின் அடிப்படையில், இந்த தைத்திரீய உபநிஷதத்தைப் பற்றிப் பார்க்கலாம்.

# வேத பாராயண வழிகாட்டி

பண்டைய ரிஷிகளின் படைப்பாகிய வேத மந்திரங்களின் நாதமே மனதை அகமுகமாக்க வல்லது. பொதுவாக வேத மந்திரங்கள் ஒலிக்கின்ற இடத்தில் மனதின் கெட்ட குணங்களாகிய எதிர்மறை எண்ணங்கள் இருக்காது. அதாவது, மனதின் எதிர்மறை எண்ணங்களை தீய சக்திகள் என்கின்றோம். அவைகள் அவ்விடத்திலிருந்து விலகுகின்றன. அத்துடன் அந்த மங்களகரமான சூழ்நிலையில், நம் மனம் நேர்மறை எண்ணங்களால் சூழப்பட்டு, நம்மிடையே அன்பு, கருணை, பணிவு போன்ற சத்துவகுணம் மேலோங்குகின்றன. இதுவே, இறைவன் குடியிருக்கும் இல்லம் என்பதினால், நம் அகத்திலும், புறத்திலும் ஒன்றாகவே நடைப்பெறுகின்றன.

வேதங்களில் மிகவும் அதிகமாக அனைவராலும் ஓதப்படுகின்ற பாராயண மந்திரங்கள் இந்த தைத்திரீய உபநிஷத மந்திரங்கள் ஆகும். இந்த வேத மந்திரங்களை ஓதுவது என்பது, ஒரு நியதிக்குட்பட்ட வேத மரபில் உள்ள வேத விற்பன்னர்களைக் கொண்டு, முறையாக அதன் பதம் மாறாமல், பொருள் மாறாமல், உச்சரிப்பு தொணி மீட்டர் மாறாமல் ஓதப்பட வேண்டும் என்ற நியதி உள்ளது. இந்த முறையே, வேத மந்திர எழுத்துக்களின் உச்சரிப்புக் குறியீடுகளை உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் மற்றும் தீர்க்க ஸ்வரிதம் என்ற முறையில் அந்த மந்திர ஏற்ற, இறக்கங்களை சரியாக ஓதப்படுகின்றன.

அவைகள் முறையே,

**க** – **உதாத்தம்:** சாதாரண ஸ்வரத்தில் உச்சரிக்க வேண்டும்.

**க** – **அனுதாத்தம்:** சாதாரண ஸ்வரத்தில் இருந்து ஒரு மாத்திரை அளவு இறக்கி உச்சரிக்க வேண்டும்.

**க|** – **ஸ்வரிதம்:** சாதாரண ஸ்வரத்தில் இருந்து ஒரு மாத்திரை அளவு ஏற்றி உச்சரிக்க வேண்டும்.

**க||** – **தீர்க்க ஸ்வரிதம்:** சாதாரண ஸ்வரத்தில் இருந்து இரண்டு மாத்திரைகள் அளவு ஏற்றி உச்சரிக்க வேண்டும்.

பொதுவாக, பாரம்பரிய சங்கீத ஞானம் உள்ளவர்கள் இதை எளிதாகப் புரிந்துக் கொள்ள முடியும். ஆக, முறைப்படி ஓதப்படுகின்ற வேத பாராயணம் ஒரு மகிமை வாய்ந்த நிலையில், நமக்குப் பல நன்மைகளை செய்கின்றன. அவ்வாறு, முறையாக ஓதமுடியாதவர்கள் அந்த வேத மந்திரங்களை கேட்க மட்டுமாவது செய்யலாம்.

# அத்தியாயம் – 1 (வாழ்க்கைக் கல்வி)

ॐ श्री गुरुभ्यो नमः । हरिः ॐ ।

शीक्षावल्ली

## சீக்ஷா வல்லீ

## (பகுதி – 1)

1. **வாழ்க்கைக் கல்வி (சீக்ஷா வல்லீ)**

   ---------------------------------------

சீக்ஷா அல்லது சிக்ஷா என்றல் கல்வி, வல்லி என்றால் பகுதி. கல்விப்பற்றி சிறப்பாக கூறப்படுவதால் இந்தப் பகுதி **"சீக்ஷாவல்லி"** என்று அழைக்கப்படுகின்றது.

மனிதனுக்கு இரண்டு வகையான தேவைகள் உள்ளன. உணவு, உடை, தங்குமிடம் போன்றவை முதல் வகை, இவைகள் அடிப்படைத் தேவைகள். ஆனால் இவற்றால் மட்டும் அவனால் திருப்தியுற்று நின்று விட முடிவதில்லை.

அன்பு வேண்டும், ஆற்றல் வேண்டும், இன்பம் வேண்டும், அறிவு வேண்டும், இறைவனை நாட வேண்டும் இவ்வாறு எத்தனையோ வேண்டியுள்ளன. ஒரு கோணத்தில் பார்க்கும் பொழுது, அடிப்படை தேவைகளை விட இவைகள் முக்கியமானவைகள். இவைகள் வாழ்க்கைத் தேவைகள். இந்த இரண்டு வகைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குத் துணை செய்கின்ற கல்வியே முழுக்கல்வியாக இருக்க முடியும்.

அத்தகைய கல்வியையே நாம் **வாழ்க்கைக் கல்வி** என்கிறோம்.

வேதகால இந்தியாவில், ஏன், அன்னியர் படையெடுப்புகளினால் நமது கலாச்சாரம் தடுமாறும்வரை இந்தியாவில் அத்தகைய அறிவுக் கல்வியே நிலவியது. அதுவே குருகுலக் கல்வி முறை. புறச் சூழ்நிலை காரணமாகவும், பெற்றோர், சமுதாயம் என்று பலரது ஆதிக்கம் காரணமாகவும் மனம் ஒரு நிறம் பெறும் முன்னரே, அதாவது மிகச் சிறிய வயதிலேயே சிறுவர்கள் அறிவொளி பெற்ற குருவின் வீட்டில் அவரது பொறுப்பில் விடப்பட்டனர்.

இதில் வேதங்கள் மட்டுமின்றி, வில் வித்தை, தற்காப்புக் கலை, ஜோதிடம், வானசாஸ்திரம், கணிதம், மற்றும் மருத்துவம் என பல்வேறு வாழ்வியல் கல்வியும் கற்பிக்கப்பட்டன. இத்துடன் இயற்கையுடன் இயைந்து வாழுதல், இறைவனை சார்ந்து வாழுதல் போன்றவைகள் இயல்பாகவே அவர்களது வாழ்வில் அங்கங்களாகத் திகழ்ந்தன. எனவே அவர்கள் குருகுலத்தில் படித்து முடித்து நிறை நிலை மனிதனாகவே வெளியே வந்தனர்.

அவர்களால் வாழ்க்கையை சிறப்பாக எதிர்கொள்ள முடிந்தது. அடிப்படைத் தேவைகளுடன், வாழ்க்கைத் தேவைகளையும் பூர்த்தி செய்தபடி அவர்கள் சமுதாயத்தில் சிறப்பாக வாழ்ந்தனர். ஆன்மீகத்தில் உச்சங்களைக் கண்ட உபநிஷத முனிவர்களைப் போலவே உலகியல் துறைகளிலும் மாமேதைகளை பாரதம் உருவாக்கியது.

இந்த வாழ்க்கை கல்வியால்தான் மருத்துவத்தில் சரகர், சுஷ்ருதர். வானவியலில் ஆரியபட்டர், பாஸ்கரர். கணிதத்தில் பாஸ்கரர், லீலாவதி. ஜோதிடத்தில் வராக மிகிரர், அரசியலில் சாணக்கியர், தற்காப்புக் கலையில் போதிதர்மர், வேதத்தில் வியாசர் என இந்தப்பட்டியல் நீள்கின்றது.

பிற நாடுகளிலிருந்தும் மாணவர்கள் கடல் கடந்து வந்து படிக்கும் அளவிற்கு அன்றைய காலத்திலேயே நாலந்தா பல்கலைக்கழகம் போன்றவைகள் இங்குதான் இருந்தன. பொருளாதாரத்திலும், வாணிபத்திலும் ஈடு இணையின்றி நம் பாரதம் திகழ்ந்தது. அதற்கான அடிப்படைக் கல்வியாக அவர்கள் வாழ்க்கைப் பாடம் போதிக்கப்பட்டது. ஆனால் இன்றைய பல்கலைக் கழகங்களில் போதிக்கும் கல்விமுறை மிகவும் பின் தங்கியுள்ளது. இன்றைய இளைஞர்கள் பணம் ஒன்றே பிரதானம் என நினைக்கின்றனர்.

படித்து பட்டம் பெற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும் என்ற எதிர்ப் பார்ப்பு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகின்றது. இதனால் தனி மனித ஒழுக்கம் தடுமாறுகின்றது. இந்த கல்வி முறையால் கலாச்சார சீர் கேடு உண்டாகின்றது. மாணவன் புதிதாக ஒன்றையும் கற்பதில்லை, மாறாக தன்னிடம் உள்ளவற்றையும் இழக்கிறான்.




உண்மையான கல்வி என்பது தகவல்களைச் சேகரிப்பது அல்ல. அது மனதின் இயல்பான ஆற்றலை வளரச் செய்வது. அல்லது மனிதனை சரியாக, திறமையாக சிந்திக்கப் பயிற்றுவிப்பது.

**கல்வி என்றால் என்ன?**

அது வெறும் புத்தகப் படிப்பா? இல்லை. அது பலவகைப் பட்ட அறிவைத் தேடிக்கொள்வதா? அதுவும் இல்லை. தன்னுடைய மனோ ஆற்றலின் போக்கையும், வெளிப்பாட்டையும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, பயனளிக்குமாறு செய்கின்ற பயிற்சியே உண்மையான கல்வி.

நம் மாணவர்கள் பெறும் கல்வி எதிர்மறையாக உள்ளது. இந்திய சுதந்திரத்திற்கு பிறகு. கடந்த 76 ஆண்டுகளாக இதே நிலையில் இருக்கும் இத்தகைய கல்வி சுய சிந்தனையுள்ள ஒருவனைகூட தோற்றுவிக்கவில்லை என்பதை பார்க்கும் பொழுது கல்வியின் தரம் நமக்கு நன்கு புலப்படும்.

'கல்வி என்ற மந்திரத்தால் தீர்க்க முடியாத பிரச்சினையே இல்லை. உண்மையான கல்வி என்பது ஆற்றலை வளரச் செய்வது. அந்த தூய அறிவை ஒருவருள் உணரச் செய்வது, அதன் வாயிலாக மனிதனைச் சரியாக, திறமையாகச் சிந்திக்க வைப்பது. அத்தகைய நல்ல சிந்தனைகள் வாயிலாக, நற்செயல்களை நடைமுறையில் கொண்டுவருவது. பொதுவாக, **கல்வி என்பது என்ன?** அது புத்தகப் படிப்பா? என்றால்,

அப்படி இல்லை. அது பலவகைப்பட்ட அறிவைத் தேடிக் கொள்வதா? என்றால், அதுவும் இல்லை.

மனம் எழுப்புகின்ற சங்கற்பத்தின் (WILL) போக்கையும், வெளிப்பாட்டையும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, அவைகளை நல்ல முறையில் பயனளிக்குமாறு செய்கின்ற பயிற்சியே **கல்வி** எனப்படும். தற்போதைய மாணவர்கள் கற்கின்ற கல்வி அத்தகைய நல்ல நிலைகளில் அவர்களைக் கொண்டுபோக முடியாமல் இருப்பதற்குக் காரணம், அவைகள் பொருளாதாரம் சார்ந்த கல்வியாக மட்டுமே இருப்பதினால், அவைகள் அவனுக்கு எதிர்மறையாகவே உள்ளது. அதன் வாயிலாக, அவன் சுய அறிவு தூண்டப்படுவதில்லை. ஆகவே, இப்போதுள்ள மாணவர்கள் எதையும் புதியதாக இந்த சமுதாயத்திற்கு என்று படைக்கவும் முடிவதில்லை. மேலும், அவர்கள் தங்களுவைய அறிவை வெறும் புத்தக அறிவாகவே வைத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் அனுபவ அறிவுக்கு வருவதில்லை. அதனால், அவர்கள் தங்களிடம் உள்ள உயரிய விசயங்களை எல்லாம் இழக்கின்றார்கள். பல்வேறு, புதிய, புதிய இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள். கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் இத்தகைய **மெக்காலே கல்வி** முறை ஆங்கிலேயர்களால் உண்டாக்கப்பட்டு, இன்று வரை நம்மால் நடைமுறையில் கற்கப்பட்டு, மனிதனின் மூளையை மழுங்கடித்து, அவர்களை அடிமை வாழ்க்கை வாழக் கற்றுக் கொடுத்துவிட்டது என்றால், அது மிகையாகாது.

ஆகவே, எந்தக் கல்வியினால் ஒருவன் தன் மனதை சுயமாக விசாரித்து, விவேகத்தினால் சரியாக சிந்திக்கக் கற்றுக் கொள்வார்களோ? அதுவே மிக உயரிய கல்வி. அத்தகைய அக வாழ்க்கைக்கான கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதில் அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்ட வேண்டும். இந்த அடிப்படைக் கருத்தை மறந்தது போனதுதான் இந்தியாவின் இன்றைய இளைஞர்களின் இழிவான வாழ்க்கை நிலைக்கு மிக முக்கியக் காரணம்.

ஆகவே, மாணவர்களுக்கு அக வாழ்க்கை வாழக்கூடிய இத்தகைய கல்வி அளிக்கப்படுமானால், அவர்கள் மனிதர்கள் மட்டுமல்ல, அதையும் தாண்டிய புனிதர்கள் ஆவார்கள். வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்வதற்கான ஆற்றல்களைப் பெறுவார்கள்.

தற்போதைய மேலை நாட்டு நாகரீக நாடுகளின் சில அறிஞர்கள் இவைகளை ஆராய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். நமது நாட்டிலோ பல்லாயிர வருடங்களுக்கு முன்பு இது ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டு விட்டது. அதற்குப் பண்டைய **குருகுல வாசம்** எனும் மிக உயரிய கல்வி முறையை மீண்டும் அனைவருக்கும் கொண்டுவர வேண்டும். அது நவீன நாகரீகத்தின் தொழில் நுட்பம் காரணமாக, இன்னும் சிறப்பாகக் கொண்டு வரவும் முடியும்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டு, நமது நாட்டை பல உயரிய உன்னதங்களில் திளைக்கச் செய்த குருகுலக் கல்வியான நம்முடைய புறவாழ்க்கை மற்றும் அகவாழ்க்கைக் கல்வியின் ஆழமான சில அடிப்படை அம்சங்களையே உபநிஷதத்தின் இந்த முதற்பகுதியில் பார்க்க இருக்கின்றோம்.

இந்த **தைத்திரீய உபநிஷதம்** காட்டும் வாழ்க்கை கல்வியின் முதல் அம்சம் பிரார்த்தனை. உயர்ந்த எதையும் சாதிப்பதற்கு பிரார்த்தனை பூர்வமான வாழ்க்கை தேவை. இயற்கையை அணுகும் போதும் சரி, இறைவனை அறியும் போதும் சரி பணிவுடனும், பிரார்த்தனையுடனும் முயற்சிகள் செய்தால், நம்முடைய வாழ்க்கை எனும் பயணம் பாதை **மோக்ஷம்** எனும் இலக்கை அடைய மிக சுலபமாகின்றது. அதனால், வாழ்க்கையை சரியாக அணுக வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற இந்த **உபநிஷதம்** பிராத்தனையுடன் தொடங்குகின்றது.

பல்வேறு தேவர்களிடம் பிரார்த்திப்பதாக இந்தப் பிரார்த்தனை அமைந்துள்ளது. காண்கின்ற புற உலகை இயக்குகின்ற ஸ்தூல சக்திகளாயினும் சரி, கண்களால் காண முடியாத அக உலகை இயக்குகின்ற சூட்சும சக்திகளாயினும் சரி ஒவ்வொன்றையும் ஒரு தெய்வமாகக் கண்டனர் உபநிஷத ரிஷிகள். இந்த தேவதைகள் அபிமான தேவதைகள் எனப்பட்டனர். ஒவ்வொரு தேவதையும் பிரபஞ்சத்தில் ஒன்றையும், மனிதனில் ஒன்றையும் இயக்குவதாக கொள்ளப்பட்டனர்.

உதாரணமாக, கண்ணுக்கும், பிராணனுக்கும் அபிமான தேவதை அர்யமான் (சூரியன்). இந்த சூரியனை வழிபட்ட நம்முடைய வழிபாடு முறையில் **சௌரம்** என்ற ஒரு சமயமும் உள்ளது. அந்த சூரியனை வழிபட்டு செய்கின்ற முயற்சிகள் தடையின்றி நிறைவேறும். நல்ல பலன்களைக் கொடுக்கும். மேலும் தமிழர் பண்டிகையான பொங்கல் பண்டிகை கூட விவசாயிகள் விளைச்சலுக்காக உதவிய சூரியனுக்கும், கால் நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் பொருட்டு, இதுப்போன்ற பொங்கல் பண்டிகளை கொண்டாடி மகிழ்ந்தனர். எனவே. இதுப்போன்ற இயற்கை எனும் தேவர்களிடம் பிரார்த்திக்கின்றார் இந்த உபநிஷத முனிவர்.

இந்தப் பிரார்த்தனையின் மூலம் இயற்கையுடன் இணைந்து வாழுகின்ற வாழ்க்கை சுட்டிக்காட்டப்படுகின்றது. நாம் ஒவ்வொருவரும் சமுதாயத்தில் ஓர் அங்கம். மனிதர்கள் மட்டுமல்ல, மிருகங்கள், பறவைகள், செடி கொடிகள், நதிகள், மலைகள் என்று இயற்கையில் காணப்படுகின்ற அனைத்துமே சமுதாயத்தின் அங்கங்கள். இவற்றுடன் இயைந்து இன்பமாக வாழும்போதே, வாழ்க்கை அதன் முழுப் பரிமாணத்துடன் திகழும். எனவே இயற்கையைப் போற்றுவதற்கு முதலில் போதிக்கப்படுகின்றது.

மனித வாழ்வு வளம் பெறவேண்டும் என்றால் இயற்கையை பாதுகாக்க வேண்டும். அதாவது மரம், செடி, கொடி, பறவைகள், உயிரினங்கள் என அத்தனையையும் போற்றி பாதுகாக்கவேண்டும். இயற்கையை நாம் அழித்தால் நாமும் அழிவோம். மாறாக நாமும் இயற்கையும் பரஸ்பரம் பேணி வாழ்ந்தால் இயற்கையும் வாழும், நாமும் வாழ்வோம். இயற்கைச் சக்திகளான அந்த தேவர்களிடம் பிரார்த்தனை செய்வதாக அமைந்துள்ள இந்த மந்திரம் நாம் இயற்கையுடன் இயைந்து வாழ்வதற்கு வற்புறுத்துகின்றது. இந்த உபநிஷத் உரைநடையில் இருப்பதால், இதை பத்திகளாக பிரிக்கப்பட்டு இருக்கின்றது. இந்த பத்திகளை அனுவாகம் என்று அழைக்கப்படுகின்றது.

इति प्रथमोऽनुवाकः ॥

**அனுவாகம்–1 (பிரார்த்தனை)**

**=======================**

இந்த உபநிஷதம் காட்டும் வாழ்க்கைக் கல்வியின் முதல் அம்சம் **பிரார்த்தனை.** உயர்ந்த எதையும் சாதிப்பதற்கு பிரார்த்தனை பூர்வமான வாழ்க்கை தேவை. இயற்கையை அணுகும்போதும் சரி, இறைவனை நாடும் போதும் சரி, பணிவுடனும் பிரார்த்தனையுடனும் முயற்சிகளை செய்தால் பாதை சுலபமாகிறது. வாழ்க்கையை அணுகுகின்ற இந்த உபநிஷதம் பிரார்த்தனையுடன் தொடங்குகிறது.

பல்வேறு தேவர்களிடம் பிரார்த்திப்பதாக இந்தப் பிரார்த்தனை அமைந்துள்ளது. காண்கின்ற புற உலகை இயக்குகின்ற தூல சக்திகளாயினும் சரி, காணாத அக உலகை இயக்குகின்ற சூட்சம சக்திகளாயினும் சரி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தெய்வமாகக் கண்டனர் உபநிஷத ரிஷிகள். இந்த தெய்வங்கள் அபிமான தேவதைகள் எனப்பட்டனர். ஒவ்வொரு தேவதையும் பிரபஞ்சத்தில் ஒன்றையும் மனிதனில் ஒன்றையும் இயக்குவதாகக் கொள்ளப்பட்டனர். உதாரணமாக, சூரியனுக்கும் கண்ணுக்கும் அபிமான தேவதை அர்யமான். பகலுக்கும் பிராணனுக்கும் அபிமான தேவதை மித்ரன். இந்த தெய்வ சக்திகள் நினைத்தால் நம்மிலும் பிரபஞ்சத்திலும் நமக்கு அனுகூலமான சூழ்நிலையை உருவாக்க முடியும். அப்போது முயற்சிகள் தடையின்றி நிறைவேறும். எனவே, அந்த தேவர்களிடம் பிரார்த்திக்கின்றார் உபநிஷத முனிவர்.

இந்தப் பிரார்த்தனையின் மூலம் இயற்கையுடன் இயைபு (HARMONY WITH NATURE) என்கின்ற கருத்தும் சுட்டிக் காட்டப்படுகிறது. நாம் ஒவ்வொருவரும் சமுதாயத்தில் ஓர் அங்கம். மனிதர்கள் மட்டுமல்ல. மிருகங்கள், செடிகொடிகள், நதிகள், மலைகள் என்று இயற்கையில் காணப்படுகின்ற அனைத்துமே சமுதாயத்தின் அங்கங்கள். இவற்றுடன்

இணைந்து வாழும்போதே வாழ்க்கை அதன் முழுப் பரிமாணத்துடன் திகழும். எனவே இயற்கையைப் போற்றுவதற்கு முதலில் போதிக்கப்படுகிறது.

மனித வாழ்வு வளம் பெற வேண்டுமானால், இந்த இயற்கை சக்திகளை வளம் பெறச் செய்ய வேண்டும். அதாவது மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழ வேண்டும். உலகில் எத்தனை கோடி உயிரினங்கள் இருந்தாலும், அத்தனைக்கும் உணவும் வாழ வசதியும் வழங்குவதற்கு இயற்கையன்னை தயாராகவே இருக்கிறாள். அனால், அதற்கு ஆவலுடன் அந்த இயற்கை கெடுக்காமல், இணைந்து வாழ்வது மிகவும் இன்றியமையாதது. இயற்கையை நாம் அழித்தால், அந்த இயற்கையோடு சேந்து நாமும் அழிவோம். மாறாக, நாமும், இயற்கையும் பரஸ்பரம் பராமரிக்கப்பட்டு, பேணி வாழ்ந்தால், இயற்கையும் வாழும், நாமும் வாழ்வோம்.

இவ்வாறு, அந்த இயற்கைச் சக்திகளான தேவர்களிடம் பிரார்த்தனை செய்வதாக அமைந்துள்ள பிரார்த்தனை மந்திரம், மனிதனை இயற்கையுடன் இணைந்து வாழ்வதற்கு வலியுறுத்துகிறது.

### ஸ்லோகம்: 1.1.1

प्रथमा शीक्षावल्ली

ॐ शं नो मित्रः शं वरुणः । शं नो भवत्वर्यमा ।
शं न इन्द्रो बृहस्पतिः । शं नो विष्णुरुरुक्रमः ।
नमो ब्रह्मणे । नमस्ते वायो । त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि ।
त्वामेव प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि । ऋतं वदिष्यामि ।
सत्यं वदिष्यामि । तन्मामवतु । तद्वक्तारमवतु ।
अवतु माम् । अवतु वक्तारम् ।
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥ १॥

इति प्रथमोऽनुवाकः ॥

prathamā śīkṣāvallī
oṃ śaṃ no mitraḥ śaṃ varuṇaḥ . śaṃ no bhavatvaryamā .
śaṃ na indro bṛhaspatiḥ . śaṃ no viṣṇururukramaḥ .
namo brahmaṇe . namaste vāyo . tvameva pratyakṣaṃ brahmāsi .
tvāmeva pratyakṣaṃ brahma vadiṣyāmi . ṛtaṃ vadiṣyāmi .
satyaṃ vadiṣyāmi . tanmāmavatu . tadvaktāramavatu .
avatu mām . avatu vaktāram .
oṃ śāntiḥ śāntiḥ śāntiḥ .. 1.. iti prathamo'nuvākaḥ ..

**பிரார்த்தனை மந்திரம்:**

ஓம் சன் நோ மித்ர: சம் வருண: I சன் நோ பவத்வர்யமா I
சன் ந இந்த்ரோ ப்ருஹஸ்பதி: I சன் நோ விஷ்ணுருருக்ரம: I
நமோ ப்ரஹ்மணே I நமஸ்தே வாயோ I
த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி I
த்வாமேவ ப்ரத்யக்ஷம் | ப்ரஹ்ம வதிஷ்யாமி I
ரிதம் வதிஷ்யாமி I ஸத்யம் வதிஷ்யாமி I
தன்மாவவது I தத்வக்தாரமவது I
அவது மாம் I அவது வக்தாரம் II
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: II 1 II

**இது முதல் அனுவாகம்.**

பொருள்:

மித்ரன் நமக்கு நன்மை செய்யட்டும். வருணன் நமக்கு நன்மை செய்யட்டும். அர்யமான் நமக்கு நன்மை செய்யட்டும். இந்திரனும், பிருஹஸ்பதியும் நமக்கு நன்மை செய்யட்டும். எங்கும் நிறைந்தவராகிய விஷ்ணு நமக்கு நன்மை செய்யட்டும். பிரம்மனை வணங்குகிறேன். வாயு தேவனே, உன்னை வணங்குகிறேன். நீயே கண்கண்ட தெய்வமாக இருக்கிறாய். கண்கண்ட தெய்வம் என்று உன்னைப் போற்றுகிறேன். பஞ்சபூதத் தன்மையிலே ஒரு ஒழுங்குமுறை உள்ளதை ரிதம் என்று போற்றுகிறேன். சத்தியம் என்று கூறுகிறேன். அந்தப் பரம்பொருள் என்னைக் காப்பாராக! ஆசிரியரைக் காப்பாராக!

பிராணனுக்கும், பகலுக்கும் அபிமானி தேவதை மித்ரன். அபானனுக்கும் இரவுக்கும் அபிமானி தேவதை வருணன். கண்ணுக்கும் சூரியனுக்கும் அபிமானி தேவதை அர்யமான். கைகளுக்கும் வலிமைக்கும் அபிமானி தேவதை இந்திரன். வாக்கிற்கும் புத்திக்கும் அபிமானி தேவதை ப்ருஹஸ்பதி. பாதங்களுக்கு அபிமானி தேவதை விஷ்ணு.

ரிதம் என்பது பிரபஞ்ச இயக்கத்தின் ஒழுங்குமுறை நியதி. அதற்கு அடிப்படையான உண்மையே சத்தியம். பிரபஞ்சம் இயங்குகிறது, ஏனெனில் இறைவன் அதனைப் பின்னின்று இயக்குகிறார். பிரபஞ்சம் என்பது இயற்கை சக்திகளின் ஒட்டுமொத்தம்.

இவ்வாறு இயற்கை சக்திகளாகவும் அவற்றைப் பின்னின்று இயக்குபவராகவும் விளங்குகின்ற இறைவனை மாணவனையும் ஆசிரியரையும் காக்கட்டும் என்று இந்த மந்திரத்தில் பிரார்த்திக்கப்படுகிறது.

குரு சிஷ்யர்களான எங்களுக்கு மித்ரன் என்கின்ற தேவதை மங்கலத்தைக் கொடுக்கட்டும், சுகத்தை கொடுக்கட்டும்.

மித்ரன் என்பவர் வெளியே விடும் காற்றான பிராணனுக்கும், பகல் நேரத்திற்கும் அதிஷ்டான தேவதையாக இருப்பவர். வருண தேவன் உள்ளே செல்கின்ற பிராணனனுக்கும், இரவு நேரத்திற்கும் அதிஷ்டான தேவதையாக இருப்பவர். இவரும் எங்களுக்கு மங்கலத்தையும், சுகத்தையும் கொடுக்கட்டும்.

கண்ணுக்கும், சூரியனுக்கும் அதிஷ்டானமான தேவதையாக இருக்கும் அக்யமா என்பவர் எங்களுக்கு நன்மையை தந்தருளட்டும். இந்திரதேவன், கைகளின் பலத்திற்கு அதிஷ்டான தேவதையாக இருப்பவர், பிருஹஸ்பதி, வாக்கு, புத்தி இவற்றிற்கு அதிஷ்டான தேவதையாக இருப்பவர், விஷ்ணு, பாதத்திற்கு அதிஷ்டான தேவதையாக இருப்பவர், இவர்களும் எங்களுக்கு நன்மையை கொடுக்கட்டும்.

உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு ப்ராண சக்திதான் காரணம். எனவே, பிராணனின் அதிஷ்டான தேவதையை துதிக்கின்றார்கள். அதன்பிறகு அரியமாவிடமிருந்து எல்லா ஞானேந்திரியங்களும் நலமாக இருக்கட்டும் என்றும், நல்ல புத்திக்கும், நல்வாக்குக்கும் பிருஹஸ்பதியை வேண்டுகின்றார்கள். கர்மேந்திரியங்களின் நலத்திற்கு விஷ்ணுவை வேண்டுகின்றார்கள்.

எல்லா சூக்ஷ்ம பிரபஞ்சத்திற்கும் ஆதாரமாக இருப்பவர், எல்லா தேவதைகளுக்கும் ஆதரமாகவும் இருப்பவர், முதன்முதலில் ஈஸ்வரனிடமிருந்து தோன்றியவர் ஹிரண்யகர்ப்பன் என்றும், சகுண பிரம்மன் என்றும் அழைக்கபடுகின்றார். இவருக்கும் நமஸ்காரம் செய்கின்றனர்.

வாயுவாகவும் இருக்கும் ஹிரண்யகர்ப்பனுக்கு நமஸ்காரம் செய்கின்றனர். எல்லா சூட்சும சரீரங்களுக்கும் முக்கியமானதாக கருதப்படுகின்றது வாயு. எனவே அவரை வாயு ஸ்வ்ரூபமாக அழைக்கின்றார்கள்.

**த்வமேவ ப்ரதியக்ஷம் பிரஹ்ம அஸி** – நீங்களே நேரிடையாக அறியப்படுகின்ற பிரஹ்மமாக இருக்கின்றீர்கள்.

**ரிதம் வதிஷ்யாமி ஸத்யம் வதிஷ்யாமி** – சரியான ஞானத்தை கொடுக்க கூடியவர் என்றும், ஸத்யமாக இருப்பவர் என்றும் உங்களை அழைக்கின்றேன்.

ஹிரண்யகர்ப்பர் கர்ம பலனை தந்து கொண்டிருப்பவர். **ரிதம்** என்ற சொல்லுக்கு ஒழுங்கு என்பதினால், சரியாக புரிந்துக் கொள்ளும் திறமை என்று பொருள். **சத்யம்** என்ற சொல்லுக்கு சரியாக புரிந்து கொண்டதை வாக்கில் சொல்வது என்று பொருள்.

சாஸ்திரத்தை படிக்கும் நான் அது உரைக்கின்ற சரியான அறிவை அடைய வேண்டும். அவ்வாறு அடைந்த அறிவு என்னிடத்தில் நிலை பெற வேண்டும். அதை வாக்கினாலே சரியாக சொல்ல வேண்டும். ஹிரண்யகர்ப்பன் அருள் இருந்தால்தான் நம்மால் ஆத்ம ஞானத்தை அடைய முடியும்.

**தத் மாம் அவத். தத் வக்தாரம் அவத்** – என்னை காப்பாற்று, என் குருவையும் காப்பாற்று என்று ஹிரண்யகர்ப்பனிடம் வேண்டுகின்றனர். இங்கே என்னை காப்பாற்று என்பது ஞானத்தை அடைவதற்கு இடையூறாக இருப்பவகளை நீக்கி அதை அடைவதற்கும், சாதன சதுஷ்டய சம்பத்திக்களையும் அடைந்திட அருள் புரிய வேண்டும் என்று வேண்டுவதாக புரிந்துக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று குருவுக்கு நீண்ட ஆயுளை கொடுத்தும், அவர் அடைந்த அந்த தூய அறிவை சரியாக உபதேசிக்கும் திறமையை கொடுத்தும் அவரை காப்பாற்று என்று வேண்டுவதாக உள்ளது.

**அனுவாகம் – 2 (வேதம் ஓதுதல்)**

வாழ்க்கைக் கல்வியின் அடுத்த அம்சமாக வருவது வேத பாராயணம். அதாவது வேதங்களை ஓதுதல். இதன் முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே கண்டோம். வேதங்களை ஓதும்போது, கவனத்தில் கொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள் இங்கே கூறப்படுகின்றன.

**காயிகா கர்மணி:**

இங்கே உடல் ஒரு பாத்திரத்தை வகிக்கிறது. இது கர்ம யோகம் அல்லது பஞ்ச மகா யக்ஞம் என்றும் அழைக்கப்படுகிறது. இவைகள் அனைத்தும் நம் மனதைத் தூய்மைப்படுத்தவும், தமோகுணம் அல்லது சோம்பலை வெல்லவும் தேவை.

**வாச்சிக கர்மணி:**

பல கர்மாக்கள் வாய்மொழி அளவில் விதிக்கப்பட்டுள்ளன. அவை அடங்கும்: ஜபம், பாராயணம், முதலியன. பாராயணம் என்பது ஸ்லோகங்களை உச்சரிப்பது. ஸ்லோகத்தின் அர்த்தத்தை அறிந்தோ அல்லது ஸ்லோகத்தின் அர்த்தம் தெரியாமலோ அதை நிகழ்த்தலாம்.

ஜபிப்பது, அர்த்தத்தை அறிந்து கொள்வது மிகவும் பயனுள்ளதாக கருதப்படுகிறது. ஜபம் என்பது ஒரு மந்திரத்தை பல முறை திரும்பச் சொல்வது. சில மந்திரங்கள் 108 முறை கூட உச்சரிக்கப்படுகிறது. இருப்பினும், பாராயணத்தில், ஒருவர் மந்திரத்தை மீண்டும் செய்வதில்லை.

ஜபங்களில் இரண்டு வகை உண்டு.
ஞான யோக்யத சித்தி ஜபங்கள் மற்றும்
ஞான சித்தி ஜபம்.

**மனஸ் கர்மணி:**

இவை மன செயல்பாடுகள். பேச்சு உறுப்புகள் மற்றும் உடல் உறுப்புகள் இந்த செயலில் ஈடுபடவில்லை. இது முற்றிலும் மன செயல்பாடு அல்லது உபாசனா. சிக்ஷவல்லியில் ஐந்து உபாசனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அவை இனி நடைமுறைப்படுத்தப்படுவதில்லை, ஏனெனில் அவை நமக்கு ஒரு கோட்பாட்டு ஆர்வமாக மட்டுமே உள்ளன.

இவ்வாறு, மூன்று கர்மணிகள், இரண்டு ஜபங்கள் மற்றும் ஐந்து உபாசனைகள் அனைத்தும் சிக்ஷாவல்லியின் பகுதியாகும்.

## ஸ்லோகம்: 1.2.1

शिक्षाशास्त्रार्थसङ्ग्रहः

ॐ शीक्षां व्याख्यास्यामः । वर्णः स्वरः । मात्रा बलम् ।
साम सन्तानः । इत्युक्तः शीक्षाध्यायः ॥ १॥
इति द्वितीयोऽनुवाकः ॥

சீக்ஷாம் வ்யாக்யாஸ்யாம: | வர்ண: ஸ்வர: | மாத்ரா பலம் |
ஸாம ஸந்தான: | இத்யுக்த: சீக்ஷாத்யாய: || 2 ||

பொருள்:

உச்சரிப்பு பற்றி விளக்குவோம். ஒலி, ஏற்ற இறக்கம், நீட்டல்–குறுக்கல், உச்சரிப்பதற்கான முயற்சி, நிறுத்தும் விவரம், தெளிவான உச்சரிப்பு ஆகியவை உச்சரிப்புப் பற்றிய பாடங்கள் ஆகும்.

**வேதம் ஓதுவதற்கான விதிகள்**

வேத மந்திரம் அல்லது வேத பாராயணம் புனிதமானது. சங்கீதம் கற்கும்போது, நாம் அந்த ஸ்வரங்களை உச்சரிக்கும் முறையைப் போலவே, இந்த வேத எழுத்துக்களின் ஸ்வரங்களை உச்சரிப்பதும் ஆகும். பாராயணங்களில் **வேதபாராயணம்** மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. மற்றவைகள் அனைத்தும் பிற்பாடு வந்த ரிஷிகளின் படைப்பாகிய ஸ்மிருதியினுடையவைகள். ஆனால், வேதங்கள் நேரடியாக பரமனிடமிருந்து வந்தவை. ஆதலால், நம்முடைய சனாதன தர்மத்தில் வேதம் மிக முக்கியமான புனிதமான முறையில் போற்றப்படுகிறது. வேதபாராயணத்தை சரியாக உச்சரிப்பது மிகவும் அவசியம். ஒருவர் எப்படி ஜபிக்க வேண்டும் என்பதற்கு விதிகள் உள்ளன. வேதத்தை ஓதுவதற்கு சில அடிப்படை விதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த தைத்திரீய உபநிஷதம் ஷிக்ஷா பகுதி அத்தகைய வேத மந்திரங்களின் உச்சரிப்பைப் பற்றி நன்றாகவே விளக்குகின்றது. இதுவே, நம்முடைய பாரத தேசத்தின் பண்டைய கல்வி முறையாகும்.

அத்தகைய வேத சாஸ்திரங்களை பாராயண செய்யும்போது, அவைகள் சிக்ஷா (ஒலியியல்), வியாகரணம் (இலக்கணம்), சந்தஸ் (உரை), நிருக்தா (சொற்பொழிவு), ஜோதிஷா (வானியல்) மற்றும் கல்ப (காலம்) போன்றவைகள் சிக்ஷா சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ள.

உச்சரிப்பு விதிகள் ஆறு வகைகளில் உள்ளன. அவைகள்: **உச்சாரணம், ஸ்வரம், மாத்திரை, பலம், ஸமம், ஸந்தானம்** என்ற பல விஷயங்களை சிக்ஷா சாஸ்திரம் சொல்லி, ஒவ்வொரு மந்திரத்தையும் ஒரு மயிரிழைகூட அதன் சப்தரூபம் தப்பாத வகையில் வகுத்துக் கொடுக்கிறது.

அதிலும், இன்னின்ன எழுத்துக்கள் மனித சரீரத்தில் இன்னின்ன இடத்தில் பிறப்பவைகள் என்றும், இவைகள் இன்னின்ன முயற்சியால் உண்டானவைகள் என்று அது நிர்ணயித்திருக்கிறது. அதை மிகவும் நேரடி அனுபவத்திலும், அறிவியல் ரீதியாகவும் உள்ளது. உதடுகளை இப்படிச் சேர்த்தால், இந்த சப்தம் வரும் என்று அது சொன்னால், உண்மையில் அப்படியே இருக்கிறது.

இதைச் சொல்லும்போது ஒன்று ஞாபகம் வருகிறது. ப,ம,வ போன்ற சப்தங்களில்தானே உதட்டுக்கு வேலை இருக்கிறது? க,ங,ச,ஞ,ட,ண,த,ந முதலியவற்றில் உதடுகள் ஒட்டுவதில்லை. வேத அக்ஷரங்களை எத்தனை கவனத்தோடும், ஜாக்ரதையோடும் சொல்ல வேண்டும் என்பதற்குப் பாணினி மஹரிஷி செய்த 'பாணினீய சிக்ஷா'வில் ஒரு அழகிய ஸ்லோகம் இருக்கிறது.

வ்யாக்ரீ யதா ஹரேத் புத்ரான்
தம்ஷ்ட்ராப்யாம் ந ச பீடயேத்|
பீதாபதனபேதாப்யாம்
தத்வத் வர்ணான் ப்ரயோஜயேத்||

வேத அக்ஷரங்களை சரியாகச் சொல்ல வேண்டும். சப்த ரூபம் கொஞ்சங்கூட குழறுபடியாகக் கூடாது. ஒலி நழுவி விடவே கூடாது. அதுப்போலவே, வேத எழுத்துக்களை கீழே நழுவாதபடியும் அழுத்தி கூறாமலும் உச்சரிக்க வேண்டும். எப்படியென்றால் ஒரு புலி அல்லது பூனை தன் குட்டிகளைக் கவ்விக் கொண்டு போவது போல, பட்டும், பாடாமலும் ஸ்லோகங்களை சரியாக உச்சரிக்க வேண்டும்.

இதே பாணினி முனிவர்தான், வேதாந்தங்களில் அடுத்ததான வியாகரணத்திலும் முக்கியமான நூலை கொடுத்திருக்கின்றார். இந்த பாணினியைத் தவிர மேலும் சில மஹரிஷிகளும் சிக்ஷா சாஸ்திரங்கள் எழுதியிருக்கிறார்கள். பாணினி முனிவரைப் போன்றே, யாக்ஞவல்கிய முனிவரும் சிக்ஷை உருவாக்கியுள்ளார், அவையும் விசேஷமானவை. மேலும், **"ப்ராதிசாக்யம்"** என்பதாக ஒவ்வொரு வேத சாகைக்கும் விசேஷமாகவும் வித்யாஸமாகவும் உள்ள வேத சப்தஸ்வரங்களை விரிவாக ஆராய்கிற நூல்களும் ஒவ்வொரு வேதத்துக்கும் உண்டு.

இவற்றில் சிலவும் இவற்றுக்குரிய பிராசீனமான வியாக்யானங்களும் கிடைத்திருக்கின்றன. இவையும் **"சீக்ஷா"** என்பதில் அடங்கியவையே.

**வர்ண** – உச்சாரணம் என்பதைத்தான் வர்ணம் என்றும் கூறப்படும். இது சமஸ்கிருத எழுத்துக்களின் உச்சரிப்பைக் கற்றுக்கொள்வது. ஒவ்வொரு எழுத்துக்களும் அசையும் வாயில் உள்ள பல்வேறு தொடர்பு புள்ளிகளால் உருவாக்கப்பட்ட தனித்துவமான உச்சரிப்பைக் கொண்டுள்ளது. அவைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. இது சமஸ்கிருதத்தை எப்போதுமே ஒலிப்பு மொழியாக ஆக்குகிறது.

**ஒலி:** ஒவ்வோர் எழுத்துக்கும் உரிய ஒலி சரியாக உச்சரிக்கப்படுதல்.

**ஏற்ற இறக்கம்:** இது பற்றி ஏற்கெனவே கண்டோம். ரிக், யஜுர், அதர்வண வேதங்களில் இவ்வாறு **மூன்று ஸ்வரங்கள்** பயன்படுத்தப்படுகின்றன. சாம வேதத்தில் **ஏழு ஸ்வரங்கள்** பயன்படுத்தப்படுகின்றன. அதாவது, ஏழு விதமான ஏற்ற இறக்கங்கள் பயன்படுகின்றன.

**நீட்டல்–குறுக்கல்:** குறில், நெடில் மற்றும் இரு மடங்கு நெடில் ஆகியவை வேத பாராயணத்தில் பயன்படுகின்றன.

**நிறுத்தும் விவரம்:** நிறுத்தும் இடங்களில் உரிய கவனம் செலுத்துதல்.

**தெளிவான உச்சரிப்பு:** ஒவ்வோர் எழுத்தும் தெளிவாக உச்சரிக்கப்பட வேண்டும். கும்பகர்ணன் நித்தியத்துவம் கேட்க விரும்பினான். ஆனால் அவன் கேட்டது, உச்சரிப்பில் தெளிவின்மை காரணமாக நித்திரத்துவம் ஆகிவிட்டது. அவன் தொடர்ந்து தூங்க வேண்டியவன் ஆனான் என்பார்கள். எனவே உச்சரிப்பு தெளிவாக இருக்க வேண்டும்.

இன்னொரு கதையும் உண்டு. இங்கு தத்புருஷர் என்ற தேவ புரோஹிதர் என்பவர் இந்திரன்மீது கொண்ட பகையால், அவனைக் கொல்ல நினைத்து, அதற்கான வரம் வாங்கும்போது, வார்த்தை மாறி, **"இந்திரன் கொலைக்கு எனக்கு ஒரு மகன் வேண்டும்"** என வேண்டினார். இதனால், தவறான உச்சரிப்பு காரணமாக அவரது மகன் கொல்லப்பட்டார்.

இந்த காரணத்திற்காகவே வேத மந்திரங்கள் மொத்தமாக அல்லது ஒரு புத்தகத்தில் இருந்து கூட உச்சரிக்கப்படவில்லை. இந்த சூழ்நிலைகள் வேதங்களை தவறாக உச்சரிப்பதற்கு வழிவகுக்கும், இதன் விளைவாக முதலில் நோக்கம் கொண்டவற்றிலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம். வெகுஜன கோஷங்களில் பிழைகள் மற்றவர்களால் மறைக்கப்படுகின்றன. இத்தகைய பிழைகள் நிஷ்காம கர்ம மந்திரங்களுக்கு ஏற்கத்தக்கவைகள். ஆனால், காமிய மந்திரங்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாது.

வேதங்களை ஓதும்போது இவையெல்லாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்த விளக்கங்கள் ஆசிரியரிடமிருந்து மாணவர்கள் நேரடியாக அறிய வேண்டியவை. எனவே இங்கே அவை விரிவாகக் கூறப்படவில்லை.

**ஸ்வரா** – என்பது ஒசை. உயர் தொணியில் உச்சரிக்கப்படும் ஒரு எழுத்து ஸ்வரிதா, நடுத்தர ஸ்வரம் உதாத்தா மற்றும் குறைந்த ஸ்வரம் அனுதாத்தா ஆகும். சில மரபுகள் இந்தக் குறிப்புகளை முற்றிலும் மாறுபட்டதாகக் குறிக்கின்றன, ஆனால் வேத மந்திரத்தின் அடிப்படைக் கொள்கை என்னவென்றால், இந்த குறிப்புகளுக்குள் சில வேறுபாடுகளுடன் 3 ஸ்வரங்களை மட்டுமே பயன்படுத்துகின்றன. சாம வேதத்தில் இசையைப் போலன்றி, 7 ஸ்வரங்களைப் பயன்படுத்துகிறது. எனவே, நாம் ரிக்வேதம் ஓதும்போது, வேத மந்திரங்களை **"பாடுவதில்லை",** ஆனால், அவற்றை ஜபிக்கிறோம். வார்த்தைகள் எதையும் மாற்றாமல், ரிஷியினால் கொடுக்கப்பட்ட மந்திரங்களை மாற்றமில்லாமல் பராமரிக்கிறோம்.

எனவே, இத்தகைய ஓதுதல் செயல்முறையின் மூலம், நமது கற்றல் மேலோங்கி நம்முடைய புலன்கள் சிறப்பாக பிரகாசிக்கக்கூடிய செறிவு மற்றும் செவிப்புலன் கூர்மையாக்கப்படுகின்றது.

**மாத்ரா** – இது உச்சரிப்புகளில் குறுகிய, நெடிய மற்றும் நீண்ட எழுத்துக்களை உச்சரிக்க எடுக்கும் அளவாகும். அந்த வகையிலே, மந்திரங்கள் ஸ்வரங்கள் முற்றிலும் பராமரிக்கப்படுகின்றது.

**பலம்** – பிரயத்தன விசேஷம், அதாவது, அந்த மந்திரங்களை உச்சாரணம் செய்ய ஒரு குறிப்பிட்ட முயற்சியை மேற்கொள்ளுதல், அவற்றை உச்சரிக்க அதிக உயிர் சக்தியைப் பயன்படுத்துதல். இது சக்தி வாய்ந்த, ஒழுங்கமைக்கப்பட்ட உயரிய பிராணாயாமம் போலவும் அமைகின்றது.

**சாமா** என்பது மந்திரங்களின் சமநிலை பராமரிக்கப்படுவதை குறிக்கின்றது. மந்திரங்களின் உச்சரிப்பின் நிலையான தொடர்ச்சி, மாத்ரா (அளவை) மட்டுமின்றி பாராயணத்தின் வேகத்தையும், அதன் ஸ்ருதியையும் பராமரிக்கிறது. நாம் மந்திரங்களை அவசரமாகச் சொல்வதில்லை, அதே சமயம் மிக மெதுவாகவும் உச்சரிப்பதில்லை. இதைப் பராமரிக்கத் தேவையான செறிவை நம்மால் கற்பனை செய்ய முடியுமா? என்றால், முடியாது, அது அனுபவத்தில் அடையப்பட வேண்டிய விசயம்.

**சந்தானம்** – என்பது இணைதல், இரண்டு வார்த்தைகள் ஒன்று சேரும் போது, சில சூழ்நிலைகளில் அவைகள் கலந்து காதுக்கு இதமாக இருக்க வேண்டும். இதை குறிப்பிட்ட கால இடைவெளியில் கற்றுக் கொள்ள வேண்டும். தொடக்க நிலையாளர்களுக்கு இது பயமுறுத்துவதாகத் தோன்றினாலும், வேத பாராயணத்தில், மீண்டும் மீண்டும் அதே விதிகளைப் பயன்படுத்தப்படுவதினால், நாளடைவில் அது சரியாக வரும்!

இந்த விதிகளுக்கு மேல், இன்னும் சில நுணுக்கமான உயிர் ஒலிகளைக் கையாள்வதற்கான சில விசயங்களும் உள்ளன. உயிர் ஒலிகளின் இடத்தைப் பொறுத்து ஒலியில் ஏற்படும் இடைவெளிகளும், அதன் இடைநிறுத்தங்களும் வேத மந்திரத்தின் முக்கிய அம்சமாகும். இவைகள் அனைத்திற்கும் மேலும் பல காரணங்களுக்காகவும், இந்த நடைமுறையை நிதானமாகவோ, மகிழ்ச்சியாகவோ அல்லது எளிதாகவோ செய்யக்கூடாது என்பதில் ஒரு முக்கிய நிலைப்பாட்டை மந்திரங்களை ஓதுபவர்கள் உண்டாக்கி வைத்திருக்கின்றார்கள். இந்த நடைமுறையானது கடினமான செயலாக இருப்பினும், அதைச் சரியாகச் செய்வதற்கு, தீவிரமான ஆர்வம் மற்றும் அதன் விவரங்களைக் கற்றுக் கொள்வது மாணவர்களுக்கு மிகவும் அவசியமாகின்றது.

இந்த மந்திரங்களை "பார்த்த" '**மந்த்ரதிருஷ்டா**' ஞானிகளான ரிஷிகளின் தீவிர சாதனைகள் மூலம் இந்த மந்திரங்கள் நமக்கு கிடைத்துள்ளன. அவர்கள் இனி வர இருக்கின்ற மக்கள் சமுதாயத்தின் நன்மைகளைக் கருதி, அந்த வேத மந்திரங்களை அவர்கள் சிஷ்யர்கள் வாயிலாக, வாழையடி, வாழையாக இன்று வரை நடைமுறையில் வைத்துக் கொண்டுள்ளார்கள். அவர்களது அத்தகைய முயற்சிகள் நம் வாழ்க்கையை ஒரு ஆசீர்வாதமாக மாற்றுவதற்கும், அவற்றைப் பிரதிபலிப்பதில் மூலமாக, சில முயற்சிகளை நாம் மேற்கொள்ளும்போது, அவைகள் நமக்கு அவர்களின் ஆசிர்வாதங்கள் கிடைப்பதாகவும் ஆகின்றது. ஆகவே, இத்தகைய வேத வழியில், நமது கவனம், செவிமடுத்தல், நினைவாற்றல், மன உறுதி, நம்பிக்கை, தெளிவு என இந்த பட்டியல் கொண்டு பயன்பாட்டில் இதைக் கொண்டு வந்தால் நமது பாரம்பரியம் பயனுள்ளதாக மாறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

தைத்திரீய உபநிஷத்தின் சிக்ஷா வல்லியின் விளக்கங்கள், சொற்களின் பொருள் மற்றும் அவற்றின் போதனையில் இந்த மந்திரங்கள் மிகவும் முக்கியமானது என்பதினால், மந்திரங்களை ஓதுவதில் உள்ள முயற்சியில் அலட்சியம் இருக்கக் கூடாது. எனவே, மந்திர ஒலிப்பு ஸ்வரம் மாறாமல், பொருள் மாறாமல் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

வேதத்தை படிக்கும் போது என்னென்ன விஷயங்களை கவனிக்க வேண்டும் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கின்றது. எழுத்துக்களை உச்சரிக்கும் முறையை சொல்கின்ற சீக்ஷா முறை, இந்த சாஸ்திரத்தை படிக்கும் முறையையும் சொல்கின்றது.

**மனப் பயிற்சி:**

'நம்மைப் பொறுத்தவரை கல்வியின் சாரம் மனஒருமைப்பாடே தவிர, தகவல்களைச் சேகரிப்பதல்ல. முதலில் **மன ஒருமைப்பாட்டையும், பற்றின்மையையும்** வளர்த்துக் கொண்டு, பின்னர் அந்தப் பரிபூரணமான மனம் எனும் மகத்தான கருவியால் நான் விரும்பும்போது தகவல்களைச் சேகரித்துக் கொள்வேன் என்பதில் நம்மிடம் நல்ல புரிதல் இருக்க வேண்டும். பொதுவாக, நாம் நம்முடைய குழந்தைகளை வளர்க்கும் போது, அவர்களிடம் கட்டாயம் இந்த இரண்டு ஆற்றல்களையும் கொடுத்து வளர்க்க வேண்டும்.' இந்த தைத்திரீய உபநிஷதம் காட்டும் வாழ்க்கைக் கல்வியின் ஓர் அம்சமாக இதில் மனப் பயிற்சி கூறப்பட்டுள்ளது.

'மன ஒருமைப்பாட்டின் மூலமாக எதையும் சாதிக்க முடியும். மலைகளைக் கூட அணுவாக உடைத்தெறிய முடியும். மன ஒருமைப்பாடே எல்லா அறிவின் அடிப்படை சாரமாகும். ஒருவனுக்கு மனம் குவியாமல் எதையும் அவனால் சரியாகச் செய்ய முடியாது.

பொதுவாக, சாதாரண மனிதனில் பலருக்கும், இத்தகைய மனக்குவிப்பு இல்லாத காரணத்தால், அவனது ஆக்கப்பூர்வமான எண்ணங்களின் தொண்ணூறு சதவீதம் ஆற்றல் வீணாகிறது. ஆகையால், அவன் அடிக்கடி தவறு செய்கிறான். அதுவே மனப்பயிற்சி பெற்ற மனிதனிடம் தவறு நிகழ்வதில்லை.

மனம் ஒருமுகப்பட்டு, தன்னை நோக்கித் திரும்பும்போது, நம்முள் உள்ள எல்லாமே நமது பணியாளர்களாகி விடுகின்றன. அவைகள் நமது எஜமானர்களாக இருப்பதில்லை.' எனவே, வாழ்க்கையில் உயர்ந்த எதையாவது சாதிக்க வேண்டுமானால், அந்த மனிதன் மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும். ஆனால், எடுத்த எடுப்பில் மனத்தை ஒருமுகப்படுத்த முயன்றால், அது பொதுவாக தோல்வியிலேயே முடியும். ஏனெனில் 'மன ஒருமைப்பாடு என்பது படிப்படியாக மனத்தை ஒரு எல்லைக்குள் கொண்டுவந்து கட்டுப்படுத்துதல்' என்பதை நாம் மறந்து விடுகிறோம். இங்கே, இந்த தைத்திரீய உபநிஷதம் மன ஒருங்கிணைப்பு, உணர்வின் விரிவு, தியானம் என்று மூன்று படிகளாக இதனைச் செய்யுமாறு கூறுகிறது. அனைத்திற்கும் அடிப்படையாக பிரார்த்தனையும், வேள்வியும் இதில் வைக்கப்பட்டுள்ளன.

**அனுவாகம் – 3.1**

இங்கு தியானம் ஒன்று கூறப்படுகின்றது. இதற்கு **ஸம்ஹிதா தியானம்** என்று பெயர். முதலில் சிஷ்யனின் பிரார்த்தனையுடன் தொடங்குகிறது. இந்த உபாஸனையானது சிஷ்யனால் உபாஸிப்பதால், குருவால் உபதேசிக்கப்படுவதால் வரும் புகழ் எங்களை அடையட்டும், தேஜஸ் இருக்கட்டும்.

வேதாந்த படிக்க வந்த மாணவன் இங்கு தனக்கு புகழ் என்று குறிப்பிடுவது ஸ்வாத்யாயம்– வேதாந்தத்தை படித்தல், ப்ரவசனம் – கற்றதை சொல்லிக் கொடுத்தல் என்பதையும், குருவினுடைய புகழால் அவரது உபதேசத்தை கேட்டு பயனடைவதற்கு சீடர்கள் வெவ்வேறு பகுதியிலிருந்து வருவார்கள் என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சீடன் தான் கற்றதை பிறருக்கு கற்றுக் கொடுக்க வேண்டும், தான் பெற்ற அறிவை பிறரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதனால் அவன் பெற்ற அறிவு மென்மேலும் வளரும், நிதித்யாஸனத்திற்கு பயன்படும்.

குரு–சிஷ்ய பரம்பரை (சம்பிரதாய ரக்ஷணம்) தொடர்ந்து வரும். ரிஷிகளுக்கு நாம் கடன்பட்டிருக்கின்றோம். அந்த கடனை அடைப்பதற்கு இந்த புகழ் உதவி புரியும்.

ஸம்ஹிதா என்ற பெயருடைய உபாஸனையை ஐந்துவிதமான விஷயங்களுடன் தெளிவாக விளக்கப்படுகின்றது.

அவைகளாவது இந்த உலக சம்பந்தப்பட்ட நான்கு தேவதைகளைக் குறித்து தியானித்தல், ஒளி சம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான உபாஸனை, அறிவு சம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான உபாஸனை, இனபெருக்கம் சம்பந்தமான தேவதைகளைப்பற்றியதான உபாஸனை, உடல் சம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான உபாஸனை. இவைகள் யாவும் மேலான ஸம்ஹிதா என்று வேதத்தை அறிந்தவர்கள் கூறுகின்றார்கள்.

**சங்கல்பம்:**

ஆசிரியரும் மாணவரும் செய்கின்ற சங்கல்பத்துடன் இந்தப் பயிற்சிகள் தொடங்குகின்றன.

அன்றாட வாழ்க்கையில் நாம் தவறுகளையும் தோல்விகளையும் சந்திப்பதுண்டு. இதற்குப் பொதுவாக மூன்று காரணங்களைச் சொல்லலாம் – 1 தன்னறிவு (SELF–AWARENESS) இன்றி ஒரு செயலைச் செய்வது; 2 ஒரு இலட்சியத்திற்காக அல்லாமல் ஏனோதானோ என்று ஒரு காரியத்தைச் செய்வது; 3 திட சங்கல்பம் (WILL) இல்லாமல் வேலை செய்வது. இது மற்ற இரண்டிற்கும் அடிப்படை. சங்கல்பத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்ற ஒரு பகுதியே யஜுர் வேதத்தில் உள்ளது.

(சங்கல்ப ஸூக்தம், சுக்ல யஜுர் வேதம், வாஜஸனேயி ஸம்ஹிதை). எனவே ஆசிரியரும், மாணவர்களும் அத்தகையதொரு சங்கல்பத்தை இந்த மந்திரத்தில் செய்து கொள்கிறார்கள்.

## ஸ்லோகம்: 3.1

संहितोपासनम्

सह नौ यशः । सह नौ ब्रह्मवर्चसम् ।
अथातः सꣳहिताया उपनिषदम् व्याख्यास्यामः ।

**சம்ஹிதோபாஸநம்**

ஸஹ நௌ யச: l ஸஹ நௌ ப்ரஹ்ம வர்ச்சஸம் l
அதாத: ஸ்ம்ஹிதாயா உபநிஷதம் வ்யாக்யாஸ்யாம: ll 3.1 ll

பொருள்:

'நாம் இருவரும் (அதாவது ஆசிரியரும், மாணவரும்) பெருமை பெறுவோம், நாம் இருவரும் புனிதப் பேரொளி பெறுவோம்' என்று மாணவர்கள் கூறுகின்றனர். பிறகு ஆசிரியர் 'இப்போது நாம் பயிற்சிகளை விளக்கத் தொடங்குவோம்' என்கிறார்.

உயர்ந்த சிந்தனைகளும், தூய வாழ்வுமே பெருமையையும் புனிதப் பேரொளியையும் தர முடியும். எனவே, அத்தகைய வாழ்க்கையை நாம் வாழ்வோம் என்று ஆசிரியரும், மாணவர்களும் சங்கல்பம் செய்துக்கொள்வதாக இந்த மந்திரம் அமைந்துள்ளது.

**விசாரம்:–**

சம்ஹிதோபாஸநம்

**ஸம்ஹிதா –** இரண்டு எழுத்துக்களுக்கிடையே இடைவெளியில்லாமல் இருப்பது.

**உபாஸனை** – மூன்று பகுதிகளை உடையது.

1. உபாஸகன் – உபாஸனை செய்பவன்.
2. உபாஸனா தேவதை – எந்த தெய்வத்தை குறித்து தியானிக்கின்றோமோ அதை குறிக்கின்றது.
3. ஆலம்பனம் – ஏதாவது ஒரு உருவத்தை (அ) தேவதைக்கான குறியை வைத்துக் கொண்டு அதன் மூலமாக கண்ணுக்கு தெரியாத அந்த தேவதையை தியானித்தல்.

இந்த உபாஸனையில் நான்கு எழுத்துக்களை ஆலம்பனமாக வைத்து நான்கு தேவதைகளை உபாஸனை செய்யப்படுகின்றது.

சந்தி என்பது இரண்டு சொற்களின் சேர்க்கை.

நம்மை, சார்ந்தது என்ற இந்த இரண்டு வார்த்தைகளை சேர்க்கும்போது **"நம்மைச்சார்ந்தது"** என்று ஒரு சொல்லாக வருகின்றது.

முதல் சொல்லின் கடைசி எழுத்து **பூர்வ ரூபம்**, இரண்டாவது சொல்லின் முதல் எழுத்து **உத்தர ரூபம்.** இதற்கிடையில் உள்ள இடைவெளி **சந்தி** என்றும், இரண்டையும் சேர்க்கின்ற எழுத்து **சந்தானம்** என்றும் அழைக்கப்படுகின்றது.

இஷேத்த்வா – **இஷே + த்வா.** இந்த மந்தரங்களுக்கு பிரஜாபதி ரிஷி மந்த்ர திருஷ்டா எனப்படுகின்றார். இஷேத்வா என்ற பிரபாடகத்தில் முதலில் சொன்னது, அத்வர்யு மந்திரம். அதில், **"ஸா த்வா ஸிஞ்சாமி"** என்பது யஜமான மந்திரம்.

அதாவது, யாகம் செய்கின்றவர்களைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்துக் கொள்ளலாம். யார் ஒருவன் பொருளைச் செலவழித்து தக்ஷிணை கொடுத்து யக்ஞம் செய்கிறானோ அவனுக்கு யஜமானன் என்று பெயர். **'யஜ்'** என்றால் **'வழிபடுவது'** என்று அர்த்தம். யஜமானன் என்பதற்கு யக்ஞம் செய்பவன் என்பதே பொருள்.

ரித்விக்குகள் என்ற பிராம்மணர்கள் (புரோஹிதர்கள்) யஜமானனிடம் தக்ஷிணை வாங்கிக்கொண்டு அவனுக்காக யக்ஞத்தை நடத்தித் தருகிறார்கள். ஸத்ர யாகங்கள் என்ற ஒரு யக்ஞம் இருக்கின்றது. இதை செய்கின்ற அத்தனை பேருமே யஜமானர்கள். அதாவது, இது இந்த யாகம் உலக சுபிக்ஷத்திற்காக செய்யப்படும் யாகம் ஆகும். இந்த ஒரு யக்ஞத்தினால் லோக க்ஷேமமும், அதில் கலந்து கொள்கிற எல்லோருக்கும் சித்தசுத்தியும், அதைத் தரிசிப்பவர்களுக்குக்கூட நன்மையும் ஏற்படுகின்றன என்பதினால், இதில் ஏற்படும் விசேஷமாகப் புண்ணியம் அடைவது யஜமானன் எனும் அனைவரும்தான்.

ஸத்ர யாகங்களில் ரித்விக்குகளே யஜமானர்களாக இருப்பதால், அத்தனைப் பேருக்கும் சமமான புண்ணியம் கிடைக்கும். **'இந்த யக்ஞம் தன்னுடையது'** என்ற உரிமை எல்லோருக்கும் இருக்கிற, அனைவருக்குமான ஒரு ஒருங்கிணைந்த யக்ஞம் எனலாம்.

யஜமானன் தரும் தக்ஷிணையை யக்ஞ முடிவிலே பெற்று அவனுக்காக அதை நடத்தித் தருகிற மற்ற பிராம்மணர்களுக்கு **ரித்விக்** என்று பெயர். ரித்விக்குகளில் **ஹோதா, உத்காதா, அத்வர்யு** என்ற மூன்று பிரிவுகள் உண்டு. ஹோதா என்பவர் ரிக் வேத மந்திரங்களைச் சொல்லி, தேவதைகளை ஸ்துதித்து ஆஹூதிகளை ஏற்பதற்காக அவர்களைக் கூப்பிடுகிறவர். இவருக்கு உள்ள உயர்ந்த ஸ்தானத்தினால்தான், இன்றைக்கும் யாராவது நல்ல ஸ்தானத்தில் இருந்தால், **"ரொம்பவும் ஹோதாவுடன் இருக்கிறார்"** என்று சொல்கிறோம். ரிக் வேதத்தில் தேவதாபரமான ஸ்தோத்திரங்கள் நிரம்பியுள்ளன.

காரிய ரூபத்தில் செய்யவேண்டிய யக்ஞ முறைகள் யஜுர் வேதத்தில் அதிகமாக இருக்கின்றன. இவற்றின்படி யக்ஞத்தை நடத்திக் கொடுப்பவர் **அத்வர்யு**. ஸாம கானம் என்பதாக ஸாம வேதத்தில் உள்ள மந்திரங்களை கானம் செய்வது, தேவதைகளை விசேஷமாக பிரீதி செய்விப்பதாகும். இதைச் செய்பவர் **உத்காதா.** இப்படி நடக்கிற யாகத்தை ஒருவர் மேற்பார்வை (ஸுபர்வைஸ்) பண்ணுகிறார். அவருக்கு **'பிரம்மா'** என்று பெயர்.

பிரம்ம என்றே வேதத்துக்கும் பெயர். வேதமான 'பிரம்ம'த்தில் விசேஷமாக சம்பந்தப்பட்டவருக்கே **'வேதியர்'** என்பது போல **'பிராம்மணர்'** என்ற பெயரும் ஏற்பட்டது. வேதம் பயில்பவனை **பிரம்மசாரி** என்று அழைப்பதும் இதனால்தான். இங்கே யாகத்தில் மேற்பார்வையாளராக இருப்பவருக்கு **பிரம்மா** என்று பெயர். அவர் அதர்வ வேதப்படி இந்தக் காரியத்தை செய்கின்றார். இப்படியாக, **ஹோதா, அத்வர்யு, உத்காதா, பிரம்மா** என்ற நான்கு பேகளும், நான்கு வேதங்களையும் முக்கியத்துவம் கொடுத்து வழி நடத்துகின்றார்கள் என்று பார்க்கின்றோம். இப்படி இவர்கள் செய்துக் கொண்டிருந்தாலும், ஹோதாவுக்கும், அத்வர்யுவுக்கும், உத்காதாவுக்கும், முறையே **ரிக், யஜுஸ், ஸாம** வேதங்களில் இருக்கிற ஸம்பந்தம், பிரம்மாவுக்கு அதர்வ வேதத்தில் இல்லை என்கிற ஒரு கருத்து தற்போது நடைமுறையில் உள்ளது.

ஆகவே, அவ்வாறு பார்த்தாலும், யக்ஞங்களில் பங்கெடுத்துக் கொள்பவர்கள் மற்ற மூன்று வேதங்களை **அத்யயனம்** செய்திருக்கிறார்களே தவிர, **அதர்வ அத்யயனம்** செய்தவர்கள் இருக்கவில்லை. அதனால் ரிக், யஜுஸ், ஸாம என்ற மூன்று வேதங்களையும் கொண்டே **ஸோமயாகம்** முதல் **அஸ்வ மேதம்** என்கின்ற வரையில், எல்லா யக்ஞங்களும் செய்யப்படுகின்றன என்றும் பார்க்கப்படுகின்றது.

ஆக, அதர்வ வேதத்துக்கு என்று தனிப்பட்ட யக்ஞங்கள் இருக்கின்றன. அதர்வத்தில் சொல்லியுள்ள யாகத்தை இந்திரஜித் நிகும்பிலையில் பண்ணினான் என்று வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மற்ற மூன்று வேதங்களுமே அதிகம் பிரசாரத்தில் இருப்பவைகள். நான்கு வேதங்கள், சதுர்வேதங்கள் என்று வித்யாஸ்தானங்களில் சொன்னாலும், அதர்வத்தை நீக்கி மற்ற மூன்றையுமே **"த்ரயீ"** என்ற பெயரில் வேதங்களாக விசேஷித்துச் சொல்வது வழக்கத்தில் உள்ளது.

(**"சாந்திகம்"** என்பதாக சாந்தியையும், **"பௌஷ்டிகம்"** என்பதாக புஷ்டியையும், சத்ருக்களுக்குக் கெடுதலை உண்டாக்குகிற **"ஆபிசாரகம்"** எனப்படுகின்ற மூன்று விதமான யாகங்கள் அதர்வத்தில் ஏராளமாக உள்ளன. பௌஷ்டிகம் என்பது சாந்தி பௌஷ்டிகம்

என்பது, ஒரு சமய விதிகளில் ஒன்றாகும். சாந்தி பௌஷ்டிகம் செய்வதற்கான சில விவரங்கள்: 120 வயது பூர்த்தியான பிறகு **சாந்தி பௌஷ்டிகம்** செய்யப்படும்.)

பொதுவாக, யாகங்களில் பிரம்மாவின் மேற்பார்வைக்கான கர்மா மிகக் குறைவானதே. கர்மாக்கள் செய்கையில், அவ்வப்போது அத்வர்யுவானவர் பிரம்மாவை அனுமதி கேட்பார். அதற்கு பிரம்மா **'ஓம்'** என்று சொல்லி அனுமதி தருவார். ஸோம யாகங்களில் பிரம்மாவுக்குச் சற்று அதிகப் பங்கு உண்டு. இவைகளை **அதர்வ வேதம்** விதிக்கிறது. ஸோமயாகத்தில் **ப்ராம்மணாச்சம்ஸி, ஆக்னீத்ரன், போதா** என்ற மூன்று ரித்விக்குகளுக்குத் தலைவராக பிரம்மா வருகையில் அவருக்கான காரியங்கள் அதர்வ வேத ஸம்ஹிதையில் 19–20 காண்டங்களிலுள்ளன.

அவ்வப்போது யக்ஞத்தில் ஏற்படக்கூடிய தவறுகளுக்கான பிராயச்சித்தத்தைக் கூறுவதும் பிரம்மாவின் பொறுப்பே.

அதர்வ வேதப்படியே பிரம்மாவின் ஸ்தானம் அமைந்திருப்பதாக அவ்வேதமே கூறுகிறது. மற்ற மூன்று வேதங்களைக் கொண்டு மட்டும் யக்ஞம் நடத்த முடியாது என்று அதர்வ வேதத்தின் **'கோபத ப்ராம்மணம்'** கூறுகிறது. அதர்வ வேதியாக இல்லாதவன் ப்ரம்மாவாக இருக்கக்கூடாது என்றும் அந்த ப்ராம்மணம் சொல்கிறது. ஆயினும் எக்காரணத்தாலோ **ஆபஸ்தம்பர்** முதலிய தர்ம சாஸ்திரக்காரர்கள் அதர்வ வேதத்தை விலக்கி, பிரம்மாவின் காரியங்களையும் மந்திரங்களையும் மற்றவர்களே செய்யும்படி இடமளித்து விட்டார்கள் என்பதாக நாம் நடைமுறையில் காண்கின்றோம். அதேசமயம், ஒட்டுமொத்தமாக அதர்வவேதி வேண்டாம் என்றும் கூறுவதில்லை.

பிரபாடகம் என்பது, கிருஷ்ண யஜுர் வேதத்தில் உள்ள ஒரு அங்கம். கிருஷ்ண யஜுர் வேதத்தின் முதல் பிரபாடகம் தைத்திரீய சம்ஹிதையாகும். **ஸத்யம் ப்ரபத்யே** என்பது ஹோதாவின் மந்திரம் என்பதாகவும் பார்க்கின்றோம்.

அப்படி மந்திரங்களை உச்சாரணம் செய்யும்போது, இஷேத்த்வா – **இஷே + த்வா** என்பதில்,

இஷே என்ற சொல்லின் கடைசி எழுத்து **"ஏ"** – பூர்வ ரூபம்.

த்வா என்ற சொல்லின் முதல் எழுத்து **"த்"** – உத்தர ரூபம்.

இரண்டிற்குமிடையே உள்ள இடைவெளி **சந்தி** என்று பெயர்.

**த்** என்ற எழுத்து இரண்டையும் இணைக்கும் இதுவே **சந்தானம்.**

ஒவ்வொன்றிலும் ஆலம்பனமாக வைத்து ஒவ்வொரு தேவதைகளை உபாஸிக்க வேண்டும். இதுபோல ஐந்து விதமான உபாஸனைகளைப் பற்றி விளக்கப்படுகின்றது.

**அத4** – பிறகு (வர்ண, ஸ்வர முதலியவற்றை உச்சாடனம் செய்த பிறகு) **அத** – ஆகவே,

1. உபாஸனை செய்வதால் மனம் ஒருமுகப்படும்,
2. மேலே குறிப்பிட்ட சப்தங்களை பயிற்சி செய்வதற்கு சப்தக்ரகணம்.

**ஞானத்தை அடைவதற்கு இரண்டு படிகள்**

1. சப்தக்ரகணம்,
2. அர்த்தக்ரகணம்.

முதலில் சொல்லைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். பிறகு, அதன் அர்த்தத்தை தெரிந்துக்கொள்ள வேண்டும். சப்த ஞானத்தை உபாஸனை செய்தபிறகு, அர்த்த ஞானத்திற்கு சென்றால், விரைவாக அர்த்தத்தை தெரிந்து கொள்வோம்.

**அனுவாகம் – 3.2**

மன ஒருங்கிணைப்புப் பயிற்சி:

**ஐந்து சிந்தனைகள்:**

அடிப்படை

ஜபம், தியானம் என்று மனம் சம்பந்தமான பயிற்சிகளை செய்ய அமர்ந்ததும், சாதாரணமாக அனைவரும் உணர்கின்ற உண்மை ஒன்று உண்டு. மனம் சிதறிக் கிடக்கின்ற உண்மைதான் அது. அலுவலகம், நண்பர்கள், வழியில் கண்ட காட்சிகள் என்று மனம் பல்வேறு துண்டுகளாகக் கிடக்கும். 'மனம் சிதறிக் கிடக்கிறது – ஒரு பகுதி அமெரிக்காவிற்குப் போயிருக்கிறது, இன்னொரு பகுதி இந்தோனேஷியாவிற்கு போகின்றது, மற்றொரு பகுதியோ இந்த பூமியைக் கடந்து செவ்வாய் கிரகத்தில் என்ன இருக்கும் என்று பார்க்கின்றது. இப்படி எல்லா பக்கங்களுக்கு பாய்கின்ற மனதை ஒன்று திரட்ட வேண்டும். ஒன்றாகத் திரட்டி ஓரிடத்தில் குவிக்க வேண்டும்.

அதாவது, 100/– ரூபாய் உள்ள ஒரு பொருளை வாங்க வேண்டுமென்றால், அதற்கு நூறு ரூபாயையும் கொடுக்க வேண்டும். அதைவிட குறைவாகக் கொடுக்க நினைத்தால், அந்தப் பொருள் மட்டும் கிடைக்காது. ஆனால், அதற்கு பதிலாக வேறு பல பொருட்களைப் பார்த்துவிட்டு, விலைக் குறைவான பொருளை நாம் வாங்கலாம்.

அதுப்போல, ஒன்றை மட்டும் முடிவு செய்துவிட்டால், அந்த ஒன்றிலேயே மனம் குவிக்கப்பட வேண்டும். அடைவிடுத்து, மனம் வேறு பல சிந்தனைகளை சிந்திப்பது சரியாக இருக்காது.

எனவே, சிதறிக் கிடைக்கின்ற மனத்தை ஒருங்கிணைப்பதே இங்கு முதற்படி. இதற்காக, இங்கே 5 சிந்தனைகள் தரப்பட்டுள்ளன. நாம் தொடர்பு கொண்ட பொருட்களிலும், மனிதர்களிலும், இடங்களிலும் சுற்றுகின்ற மனத்தை ஒரு குறிப்பிட்ட வட்டத்தில் கொண்டு வர இந்தச் சிந்தனைகள் துணை செய்கின்றன. ஒரு புள்ளியில் குவிப்பதற்கு முன்பு, மனத்தை, ஒரு வட்டத்தில் கொண்டு வருவதற்கான முயற்சி இது. இது மனப்பயிற்சியின் முதற்படி.

ஆக, நாம் இங்கு நம் மனதை ஒரு வட்டத்திற்குள் கொண்டுவர விரும்புவதினால், நம்முடைய பராபரம் பரம்பரையில், நமக்கான சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** ஆவார். இவர் காட்டும் ஞானப் பாதையில் நாம் பயணிக்கவேண்டுமானால், அவரை நாம் உபாசிக்க வேண்டும். அந்த வகையிலே, அவருக்கான அரிதான பத்துவிதமான சாதனைகளையும் நாம் **"ஸ்ரீ தத்தாத்ரேயர் தசாங்கம்"** எனும் நூலின் வாயிலாக உணர்ந்தோம்.

இங்கு சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** மந்திரங்கள் நிறைய இருந்தாலும், நாம் அதில் இந்த ஒரே ஒரு மந்திரத்தை மட்டுமே எடுத்துக் கொள்வோம். இது நாம ரூபங்களுக்கு அப்பாற்பட்டது. இந்த மந்திரத்தைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களைக் கூறினாலும், ஒரே வரியில் இந்த மந்திரத்தைப் பற்றி கூற வேண்டுமானால், இதை உபாசிக்கின்றவர்களின் அறம் தவறாத உண்மையான நோக்கத்தை உடனடியாக நிறைவேற்றும் மந்திரம் என்றே கூறலாம். இதை ஒரு சரியான சத்குருவின் வாயிலாகப் பெற்றே உபாசிக்கத் தொடங்க வேண்டும். அப்பொழுதே இதன் பலன் அபரிமிதமானதாக இருக்கும்.

ॐ ह्रीं नमः
Om Hreem Namaha
**ஓம் ஹ்ரீம் நமஹ**

இதை பீஜமந்திரம் (बीजमन्त्र) என்று கூறுகின்றோம். இது மிகவும் புனிதமான மற்றும் மங்களகரமான பீஜ மந்திரங்களில் ஒன்று. **ஹ்ரீம்** என்றால் சக்தி அல்லது ஆற்றல் என்றே

பொருள். அந்த அடிப்படையிலே, இங்கு நமது ஆற்றல் என்பது, இந்த பிரபஞ்ச ஆற்றலின் ஒரு கூறு அவ்வளவே. ஆகவே, அந்த **ஆற்றலை நமஸ்கரிக்கின்றேன்** என்றே இதற்குப் பொருள்.

ஒவ்வொரு பீஜ மந்திரத்தையும் உச்சரிக்கும்போது, அதனால் உருவாகும் ஒலி அதிர்வெண் இந்த பிரபஞ்ச சக்தியில் கலந்து, அதற்கான ஆற்றலைக் கொணர்ந்து, அவற்றின் சக்தி அல்லது ஆற்றல் அதை உச்சாரணம் செய்கின்றவர்களின் உள்ளத்தில் நிறைந்து, அவர்களது உடல் மற்றும் உள்ளம் ஆகிய இரண்டையும் இணைக்கும் பாலமாக உதவுகின்றது. அதாவது, இதை உபாசிக்கின்றவர்களின் மனம் மற்றும் உடல் ஆகிய இவைகள் இரண்டும் ஒருங்கிணைந்து இந்த உலகத்தில் பல நற்செயல்களை செய்யக்கூடிய வகையில் மாறும்.

இந்த மந்திரத்தை தினந்தோறும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் மனதினால் உச்சாரணம் செய்யலாம். இதனை செய்பவன் உபாசகன். இதற்கான உபாசனா தேவதை சத்குரு **பகவான் ஸ்ரீ தத்தாத்ரேயர்**, இவருக்கான ஆலம்பனம் அல்லது குறியீடு என்பது இந்த பிரபஞ்சம் என்பதினால், இவரே ஈஸ்வரன் ஆகின்றார். உண்மையில் இவருக்கு வேறாகவும் நாம் இல்லை.

ஆக, எல்லையற்ற ஈஸ்வரனின் ஒரு அங்கமாக இருக்கின்ற நம்முடைய சிறிய உணர்வும், அந்த மிகப்பெரிய பேருணர்வின் ஒரு அம்சமே என்பதினால், அங்கு இருமைகளற்ற ஏகத்துவ நிலையில் இணையக்கூடிய ஒரு **குறியீடு** என்று இந்த மந்திரத்தை சொல்லலாம்.

ஆக, ஒரு மந்திரத்தை நாம் உச்சாரணம் செய்யவேண்டுமானால், அதற்கான மொழி மிகவும் முக்கியம். அத்தகைய மொழிக்கு இலக்கணம் முக்கியம். இலக்கணத்தில், சந்தி அல்லது இரண்டு எழுத்துக்களின் சேர்க்கை ஒரு அடிப்படைப் பகுதி. மகேசுவரன் என்ற சொல், '**மகா**' என்ற சொல்லும் '**ஈஸ்வரன்**' என்ற சொல்லும் ஆகிய இரண்டும் சேர்ந்தது. இதில் '**மகா**' முற்பகுதி அல்லது கீழ்ப்பகுதி. '**ஈஸ்வரன்**' பிற்பகுதி அல்லது மேற்பகுதி. இந்தச் சேர்க்கையை அடிப்படையாகக் கொண்டு, இங்கு **சந்தி** மற்றும் **சந்தானம்** எனும் நிலையில் எழுத்துக்களின் இடைவெளி மற்றும் சேர்க்கை பற்றிய சிந்தனைப் பயிற்சிகளை இங்கே விவரிக்கிறார் இந்த உபநிஷத முனிவர்.

पञ्चस्वधिकरणेषु ।

अधिलोकमधिज्यौतिषमधिविद्यमधिप्रजमध्यात्मम् ।
ता महासꣳहिता इत्याचक्षते ।

பஞ்சஸ்வதிகரணேஷு ।

அதிலோக மதிஜ்யௌ திஷமதி வித்யமதிப்ரஜ–மத்யாத்மம் ।
தா மஹா சம்ஹிதா இத்யாசக்ஷதே ॥ 3.2 ॥

பொருள்:

சேர்க்கையை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பயிற்சி ஐந்து விதமாக விளக்கப்படுகிறது. **பிரபஞ்சம், ஒளிப்பொருள், கல்வி, உயிர்களின் உற்பத்தி, உடம்பு** ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திப்பதே அந்த ஐந்து முக்கியமான அம்சங்கள்.

நமது மனம் ஒருகணம் கூட இடையீடின்றி சிந்தித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால், அது பல்வேறு பொருட்களைப் பற்றி சிந்திக்கிறது. அவ்வாறு சிந்திப்பது சிரமமான காரியம் அல்ல. இருப்பினும், ஏதேனும் ஒரு பொருளைப் பற்றியோ, ஒரு கருத்தைப் பற்றியோ தொடர்ந்து சிந்திப்பது அவ்வளவு எளிதல்ல. அவ்வாறு ஒரு பொருள் அல்லது ஒரு கருத்தை எடுத்துக் கொண்டு, அதன் பல்வேறு அம்சங்களைத் தொடர்ந்து சிந்திக்கும்போது, பல்வாறாக போய்க் கொண்டிருந்த மனம் ஒரு வட்டத்திற்குள் சுழலுமாறு செய்யப்படுகிறது. இதன்மூலம் மனம் ஒருங்கிணைக்கப்படுகிறது.

(சேர்க்கையை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பயிற்சி **ஐந்து விதமாக** விளக்கப்படுகின்றது. பிரபஞ்சம், ஒளிப்பொருள், கல்வி, உயிர்களின் உற்பத்தி, உடம்பு ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திப்பதே அந்த ஐந்து முக்கியமான பயிற்சிகள்.)

இதை வேதத்தில் வேறுவிதமாகப் பார்க்கலாம். அவைகளை, பஞ்சமகா யக்ஞங்கள் என்று கூறுகின்றது. அவைகளாவன, தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம், ப்ரம்ம யக்ஞம், மனுஷ்ய யக்ஞம் மற்றும் பூத யக்ஞம் ஆகியவைகள் ஆகும்.

**தேவ யக்ஞம்:** இறைவனை வழிபடுதல். பூஜை, ஜபம், கோவிலுக்குச் செல்வது என எந்த வடிவத்திலும் இறைவனை வழிபடுவது தேவ யக்ஞம். இது பண ஆதாயத்திற்காக அல்ல, ஆனால், ஆன்மீக லாபத்திற்காக.

**பித்ரு யக்ஞம்:** நம்முடைய பெற்றோர்கள் மற்றும் பெரியவர்களை வணங்குதல். பித்ரு–யக்ஞம் என்றவுடனே ஏதோ இறந்தவர்களுக்கு செய்யக்கூடிய யாகம் என்று நினைத்து விடக்கூடாது. அதாவது, நமது பெற்றோரை மதிப்பதும், அவர்களைக் கவனித்துக் கொள்வதும் ஒரு வேள்வி ஆகும். பெரியவர்களை எப்போதும் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும்.

**பிரம்ம யக்ஞம்:** வேதம் என்றாலும் ப்ரம்மம் என்றாலும் ஒன்றே என்று பார்த்தோம். அந்த வகையிலே இந்த வேதங்களைக் கற்றல் மற்றும் வேதங்களை நமக்கு வழங்கிய ரிஷிகளை வணங்குதல் பிரம்ம யக்ஞம் எனப்படும். இதன் வாயிலாக, நாம் கல்வி கற்று கட்டாயம் ஒரு சரியான சமூகத்தை உண்டாக்க முடியும் என்பதிலிருந்து, நாம் நமது வேதங்களை முறையாகக் கையள்வதை உறுதி செய்வதாகும். வேதங்களை படிப்பதைத் தொடர்ந்து முடிந்தவரை அவற்றைப் படித்து மேம்படுத்துவதும் மிகவும் முக்கியம்.

**மனுஷ்ய யக்ஞம்:** மற்ற மனிதர்களை வணங்குதல் அல்லது அவர்களுக்கு சேவை செய்தல் மனுஷ்ய–யக்ஞம் எனப்படும். இது அனைத்து வகையான சமூக சேவைகளையும் குறிக்கின்றது. அதாவது, ஏழைகள், மாணவர்கள் மற்றும் நோயாளிகள் என நம்மால் இயன்ற உதவிகளை எவ்வாறாகிலும் அவர்களுக்குச் செய்ய வேண்டும்.

**பூத யக்ஞம்:** இது பஞ்சபூதங்களைக் குறிக்கின்றது, இயற்கையை நாம் போற்ற வேண்டும். இந்த இயற்கையின் அங்கங்கள்தான் எல்லாமே என்பதினால், மரங்கள், செடி, கொடிகள், புழு, பூச்சிகள், பறவைகள், மிருகங்கள் என எல்லாவற்றிற்குமே நம்மால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும். அதாவது, மற்ற அனைத்து உயிரினங்களின் வழிபாடு மற்றும் சேவை என்பதே பூத யக்ஞம் ஆகும்.

சரி! இவற்றை நாம் சரியாகச் செய்ய என்ன செய்ய வேண்டும்?

நமது மனம் ஒரு க்ஷணம் கூட இடைவெளியின்றி எப்போதும், எதையாவது சிந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றது. அதை நாம் முதலில் ஏதாவது ஒரு பொருள் அல்லது ஒரு கருத்து என எடுத்துக் கொண்டு, அதில் சிந்திப்பதற்கு கொண்டு வர வேண்டும். அவ்வாறு ஒரு பொருள் அல்லது ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு அதன் பல்வேறு அம்சங்களைத் தொடர்ந்து அது சிந்திக்கும் போது, அந்த மனம் ஒரு புள்ளியில் குவிக்கப்படவில்லை என்றாலும், ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் வந்து சுழலுமாறு செய்யப்படுகிறது. இதன் மூலம் மனம் படிப்படியாக ஒருங்கிணைக்கப்படுகிறது.

*(ஆக, வட்டப்பாதையில் ஆரம்பப்புள்ளியேதான் முடிவுப் புள்ளியும் என்ற உண்மை நமக்கு நன்றாக விளங்கும்போது, நாம் இந்த பிரபஞ்ச பேராற்றலின் ஒரு அங்கம் என்பதினால், நமக்கான நல் வாய்ப்பை நாம் தவறவிடாமல், நமக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கையை நம்முன்னோர்கள் காட்டிய வட்டப்பாதைக்குள் வந்து வாழத் தொடங்க வேண்டும். அப்போது மட்டுமே, நமக்கான வட்டத்தில் நாம் எங்கிருந்து தொடங்கினோம்? எங்கே போய் சேரப்போகின்றோம்? என்பதில் நம்முடைய இலக்கு அந்த ஆதியும், அந்தமும் அறிய முடியாத அவனது வட்டம் எனும் இந்த பிரபஞ்ச சக்கரத்தில் அவனே இரண்டுமாக

இருப்பதுப் போலத் தோன்றினாலும், இறுதியில் அந்த ஒரே புள்ளிதான் தொடக்கப்புள்ளியும், முடிவுறும் புள்ளியும் என்பது நமக்குப் புரிய வரும்.)

பொதுவாக, உபாசனை என்பதுவும் தியானம் என்பதுவும் ஒன்றே. மனம் ஏதாவது ஒன்றை தியானித்தல் என்பதைத்தான் தியானம் என்கின்றோம். இதன் நோக்கம் ஒரு குறிப்பிட்ட இஷ்ட தேவதையை அல்லது ஒரு குறிப்பிட்ட பொருளை மட்டுமே மனம் எப்போதும் சிந்தித்து, அதன்வாயிலாக, அங்கும், இங்கு அலைப்பாயும் மனம் பலவாறாக பிரிந்து, பல இடங்களுக்கும் அலைவதை நிறுத்திக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட வட்டப் பாதைக்கு வந்து சேர்கின்றது.

அந்த வகையிலே, நவீன அறிவியலாளர்களும் மனதின் ஆற்றலை அளவிட முயற்சித்து, அது முடியாமல் தோற்றுப் போயினர் என்றே நாம் பார்க்க வேண்டும். அதாவது, தற்போதைய தொழில் நுட்பம் காரணமாக நம்மிடம் நவீன ராக்கெட்டுகள் எல்லாம் இருந்தாலும், இதன் வாயிலாக இன்னும் சில கிரகங்களைக் கூட நம்மால் நெருங்க முடியவில்லை. ஆக, அறிவியல் அறிஞர்கள் காற்றின் வேகம் என்ன? ஒளியின் வேகம் என்ன? என்பதெல்லாம் நன்கு தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாலும், இவைகளின் வேகத்தைவிட இந்த மனதின் வேகம் இன்னும் அதிகமானது என்பது எல்லோருக்குமே நன்றாகத் தெரியும்.

உதாரணமாக, நாம் மின்சாரம் எடுக்க அணுமின் நிலையத்தில் 14 லட்சம் டன் நிலக்கரியை எரிப்பதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு எவ்வளவோ? அதைவிட அளவுக்கு அதிகமான மனதின் ஆற்றல் நம்மிடம் உள்ளது.

அதாவது, 'ஒரு பவுண்டு நிலக்கரியை எரித்து, எடுக்கின்ற ஆற்றலின் வாயிலாக உருவாக்கப்படும் அணுசக்தி ஒரு முழு மாதத்திற்கான இந்தியாவின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்கும். ஆனால், மகத்தான மனதின் ஆற்றலைக் கொண்டு, இந்த மகா சக்தியாகிய பிரபஞ்சத்தையே எளிதாகக் கடந்துப் போக முடியும்.

வேதங்கள் மனதை **ஜோதிஷாம் ஜோதி** (எல்லா ஒளிகளுக்கும் ஒளி) என்று விவரிக்கின்றன. மனம் என்பது மின்சார ஆற்றல் போன்று ஒரு **அறிவு ஒளியாற்றல்** எனலாம். எவ்வாறு சூரிய ஒளியை ஒரு குவி லென்ஸ் மூலமாக ஒரே இடத்தில் குவிக்கும்போது, பரவாலாக வருகின்ற சூரியக்கதிர்களின் வெப்பம் ஒரே இடத்தில் குவிக்கப்படுவதால், அதன் வெப்பம் ஒரு காகிதத்தை எரித்துவிடுகின்றதோ?

அதுப்போல, இந்த மனதை ஒரே இடத்தில் குவிக்கும்போது, இதன் ஆற்றல் அளவிட முடியாத அறிவு ஒளியாக மாறி, அனைத்தையும் பிரகாசிக்க வைக்கின்றது என்பதைப் பார்க்க முடிகின்றது.

ஆகவே, நமது மனம் ஆக்கப்பூர்வமான நடைமுறையில் இருந்தால் மட்டுமே, நம் வாழ்க்கையும் ஆக்கப்பூர்வமாக மாறி, இந்த மனித சமுதாயத்திற்கு நன்மை செய்ய முடியும். அத்துடன் மனம் கடந்த மகத்தான அறிவை அனுபவமாக நம்முள் உணரவும் முடியும்.

**அனுவாகம் – 3.3**

பிரபஞ்ச சிந்தனை:

अथाधिलोकम् ।
पृथिवी पूर्वरूपम् ।
द्यौरुत्तररूपम् ।
आकाशः सन्धिः ॥ १॥
वायुः सन्धानम् । इत्यधिलोकम् ।

அதாதிலோகம் ।
ப்ருதிவீ பூர்வரூபம் ।
த்யௌ ருத்தர ரூபம் ।
ஆகாச: ஸந்தி: ।
வாயு: ஸந்தானம் । இத்யதிலோகம் ॥ 3.3 ॥

பொருள்:

இனி பிரபஞ்ச சிந்தனையைப் பார்ப்போம். இதில் பூமி கீழ்ப்பகுதி, வானம் மேற்பகுதி. இரண்டும் இணைகின்ற இடம் வெளி (SPACE) என இரண்டையும் இணைப்பது காற்று. இவ்வாறு பிரபஞ்ச சிந்தனை செய்ய வேண்டும்.

வேலை, படிப்பு, குடும்பம், நண்பர்கள், அலுவலகம் என்று நம்மில் பலரது வாழ்வும் **'நான்', 'எனது',** என்ற வட்டங்களுக்குள் சுருங்கி விடுகிறது. இந்த வட்டத்திலிருந்து நாம் வெளியே வரவேண்டும். அப்போது மட்டுமே வாழ்க்கையை இரசிக்க முடியும். வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவித்து வாழ முடியும். நம்மைச் சுற்றிப் பிரபஞ்சம் என்ற ஒன்று எல்லையற்ற அழகுடனும், இனிமையுடனும் விரிந்து கிடக்கிறது. அதைக் காண வேண்டும், அதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதனையே இந்த மந்திரம் கூறுகிறது.

இந்தச் சிந்தனையின் இரண்டு முக்கிய அம்சங்களைக் காண்போம்:

1. வானமும், பூமியும் சந்திக்கின்ற தொடுவானப் பகுதி ஓர் அற்புதக் காட்சியாகும். மேலே வானம், கீழே பூமி இரண்டும் வெளியில் சந்திக்கின்றன. இயற்கையின் அழகுகளுக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டு இது.

இயற்கையையும், உலகையும் வெறுத்து ஒதுக்கத் தேவையில்லை. அதன் மகிமையைச் சிந்திப்பதும் **ஓர் ஆன்மீக சாதனையே** என்பதை வலியுறுத்துகின்றது இந்த மந்திரம்.

2. இந்தப் பிரபஞ்சம் எவ்வாறு படைக்கப்பட்டது என்பதை இந்த உபநிஷதம் பின்னால் வருகின்ற பகுதிகளில் (2:1.2) கூற இருக்கிறது. இங்கே அதன் ஆரம்பப் படிகளுள் ஒன்று சுட்டிக் காட்டப்படுகிறது. வெளியிலிருந்து காற்று தோன்றுகிறது. அதுப்பற்றி இங்கே கூறப்படுகிறது. படைப்பு பற்றி சிந்திக்கச் சொல்கிற பகுதியாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம்.

இதெல்லாம் நம் மனதிற்கான பரிணாம வளர்ச்சியின் வழிகாட்டுதல்கள் என்றே நாம் பார்க்க வேண்டும். மனதிற்கான புரிதல் நம்மிடம் மேம்பட வேண்டும். மனம் மற்றவர்கள் கூறுகின்ற மட்டமான சிந்தனைகளில் சிக்கிக் கொள்ளக்கூடாது. ஏராளமான புற விசய, சுகங்களில் நாட்டம் கொள்ளுகின்ற ஆர்வம் காட்டும் மனம் நம்மை அவைகளில் அடிமையாக்கக்கூடும் என்பதினால், எப்போதும், மனதின் விழிப்புணர்வுத் தன்மையில் நாம் விவேகத்துடன் நடந்துக் கொள்ள வேண்டும்.

**அனுவாகம் – 3.4 (ஒளிப் பொருள் சிந்தனை)**

अथाधिजौतिषम् ।
अग्निः पूर्वरूपम् ।
आदित्य उत्तररूपम् । आपः सन्धिः ।
वैद्युतः सन्धानम् ।
इत्यधिज्यौतिषम् ।

அதாதி ஜ்யௌதிஷம் ।
அக்னி: பூர்வ ரூபம் ।
ஆதித்ய உத்தரரூபம் । ஆப: ஸந்தி: ।
வைத்யுத: ஸந்தானம் ।
இத்யதி ஜ்யௌதிஷம் ॥ 3.4 ॥

பொருள்:

இனி ஒளிப்பொருள் சிந்தனையைப் பார்ப்போம். இதில் அக்கினி முற்பகுதி, சூரியன் பிற்பகுதி. இரண்டும் இணைவதால் தண்ணீர் உண்டாகிறது. இரண்டையும் இணைப்பது மின்னல். ஒளிப்பொருள் சிந்தனை இவ்வாறு செய்யப்படுகிறது.

பிரபஞ்சத்தின் அழகில் மனத்தை ஒருங்கிணைக்க வேண்டுமானால் முதலில் அதன் அழகை ரசிக்க வேண்டும், அதில் இலயிக்க வேண்டும். அதற்கு அடிப்படைத் தேவை ஒளி. ஒளியின்றி எதையும் காண முடியாது. ஒளிர்கின்ற பொருட்களை மட்டுமே நாம் காண முடியும். எனவே அக்கினி, சூரியன், மின்னல் போன்ற சில பொருட்கள் இங்கே எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இந்தச் சிந்தனையின் இரண்டு முக்கிய அம்சங்கள்:

1. ஒளிர்கின்ற பொருட்கள் தாம் ஒளிர்வதுடன் பிற பொருட்களையும் ஒளிரச் செய்கின்றன. அதாவது, பிற பொருட்களை நாம் காணுமாறு செய்கின்றன. பிறருக்கும் பயன்படுமாறு நம்முடைய வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்வதற்கு இது ஓர் உதாரணமாக அமைகிறது.

2. அக்கினியிலிருந்து தண்ணீர் உருவாகிறது. இது படைப்பின் அடுத்தக் கட்டம். இயற்கையின் நிகரற்ற ஆற்றலுக்கு மின்னல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இயற்கையின் ஆற்றலால் அக்கினியிலிருந்து தண்ணீர் உருவாகிறது.

ஒளியைச் சிந்திப்பது கடினமாகும். எனவே, இது பிரபஞ்ச சிந்தனையை விட சற்று உயர்நிலைச் சிந்தனை ஆகும்.

(இப்பொழுது ஒளி சம்பந்தமான உபாஸனை துவங்குகின்றது. பூர்வ எழுத்தில் நெருப்பை தியானிக்க வேண்டும். உத்தர எழுத்தில் சூரியனை தியானிக்க வேண்டும். இடைவெளியில் மழைநீரை தியானிக்க வேண்டும். சேர்க்கும் எழுத்தில் மின்னலை தியானிக்க வேண்டும். இவ்விதம் ஒளி சம்பந்தமான இரண்டாவது வகை தியானம் முடிவடைகின்றது.)

பிரபஞ்சத்தின் அழகில் மனத்தை ஒருங்கிணைக்க வேண்டுமானால், முதலில் அதன் அழகை ரசிக்க வேண்டும். அதில் லயிக்க வேண்டும். அதற்கு அடிப்படைத் தேவை ஒளி.

ஒளியின்றி எதையும் காண இயலாது. இனி, ஒளியை நாம் நேரடியாகக் காண முடியாது. ஒளிர்கின்ற பொருட்களை மட்டுமே நாம் காண முடியும். எனவே அக்கினி, சூரியன், மின்னல் போன்ற சில பொருட்கள் இங்கே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்தச் சிந்தனையின் இரண்டு முக்கிய அம்சங்கள்.

1. ஒளிர்கின்ற பொருட்கள் தாம் ஒளிர்வதுடன் பிற பொருட்களையும் ஒளிரச் செய்கின்றன. அதாவது, பிற பொருட்களை நாம் காணுமாறு செய்கின்றன. பிறருக்கும் பயன்படுமாறு வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு இது உதாரணமாக அமைகிறது.

2. அக்கினியிலிருந்து தண்ணீர் உருவாகிறது. இது படைப்பின் அடுத்த கட்டம். இயற்கையின் நிகரற்ற ஆற்றலுக்கு மின்னல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இயற்கையின் ஆற்றலால் அக்கினியிலிருந்து தண்ணீர் உருவாகின்றது.

ஒளியை சிந்திப்பது கடினமாகும். எனவே, இது பிரபஞ்ச சிந்தனையை விட சற்று உயர்நிலைச் சிந்தனை ஆகும்.

**அனுவாகம் – 3.5**

**கல்விச் சிந்தனை**

अथाधिविद्यम् ।
आचार्यः पूर्वरूपम् ॥ २॥

**அதாதிவித்யம் । ஆசார்ய: பூர்வ ரூபம் । அந்தேவாஸ்யுத்தரரூபம் ।**
**வித்யா ஸந்தி: । ப்ரவசனக்ம் ஸந்தானம் । இத்யதிவித்யம் ॥ 3.5 ॥**

பொருள்:

இனி கல்வி பற்றிய சிந்தனையைக் காண்போம். இதில் ஆசிரியர் முற்பகுதி, மாணவன் பிற்பகுதி. இருவரும் கல்வியில் இணைகின்றனர்; கற்பித்தல் இணைதலுக்குக் காரணமாக உள்ளது. கல்விச் சிந்தனை இவ்வாறு செய்யப்படுகிறது.

இது இன்னும் உயர்ந்த சிந்தனை. சிந்தனைக்கு ஒரு பொருள் எடுத்துக் கொள்ளப்படாமல், ஒரு கருத்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. கல்வியை, அதாவது கல்வியின் பல்வேறு அம்சங்களைச் சிந்திக்குமாறு இந்தச் சிந்தனை கூறுகிறது.

(இப்பொழுது அறிவு சம்பந்தமான உபாஸனை துவங்குகின்றது. பூர்வ எழுத்தில் குருவை தியானிக்க வேண்டும். உத்தர எழுத்தில் சிஷ்யனை தியானிக்க வேண்டும். இடைவெளியில் அறிவை தியானிக்க வேண்டும். சேர்க்கும் எழுத்தில் உபதேசித்தலை தியானிக்க வேண்டும். இவ்விதம் அறிவு சம்பந்தமான இரண்டாவது வகை தியானம் முடிவடைகின்றது.)

**அனுவாகம் – 3.6**

உயிர்ச் சிந்தனை:

அதாதிப் ப்ரஜம் । மாதா பூர்வரூபம் । பிதோத்தரரூபம் । ப்ரஜாஸந்தி: ।
ப்ரஜனனக்ம் ஸந்தானம் । இத்யதிப்ரஜம் ॥ 3.6 ॥

பொருள்:

உயிர்களின் உற்பத்தி பற்றிய சிந்தனையை இனி பார்ப்போம். இதில் தாய் முதற்பகுதி, தந்தை பிற்பகுதி. இருவரும் ஒன்றாக இணைவதால் மற்றொரு உயிர் பிறக்கிறது. இவர்கள் இருவரையும் இணைப்பது உடலுறவு. உயிர்களின் உற்பத்தி பற்றிய சிந்தனை இவ்வாறு செய்யப்படுகிறது.

பண்டைய சமுதாயம் ஒரு சிறந்த, ஆரோக்கியமான சமுதாயமாக விளங்கியதற்கான முக்கியக் காரணங்களுள் ஒன்றை இங்கே காண்கிறோம். காமம், உடலுறவு போன்றவை தகுந்த ஒருவரால் சிறு வயதிலேயே கற்பிக்கப்படுவது மட்டுமின்றி, அதைச் சிந்திக்குமாறும் இங்கே கூறப்படுகிறது. கல்விக் காலம் முடிந்து வெளியேறும்போது ஒருவன் நல்ல மனிதனாக வாழ்வதற்கு இந்தக் கல்வி, இந்தச் சிந்தனை வழிவகுத்தது. வாழ்க்கையின் ஓர் அடிப்படை அம்சமான காமம் பற்றி உரிய வேளையில், உரிய முறைப்படி, தகுந்த ஒருவர் கற்பிப்பதன் மூலம், அன்பு கொண்ட நல்ல மனிதன் உருவாகிறான். நல்ல சமுதாயத்திற்கு அது வழிகோலுகிறது. உயிரை உருவாக்குகின்ற இந்த உறவை கீதை தெய்வீகமாகப் போற்றுவது இங்கு நினைவு கூறத்தக்கது.

आयुधानामहं वज्रं धेनूनामस्मि कामधुक् |
प्रजनश्चास्मि कन्दर्पः सर्पाणामस्मि वासुकिः || 10.28||

ஆயுதா நாமஹம் வஜ்ரம் தேனு நாமஸ்மி காமதுக் |
ப்ரஜஞ்ச் சாஸ்மி கந்தர்ப: சர்ப்பா நாமஸ்மி வாசுகி: || – கீதை, 10.28.

ஆயுதங்களில் வஜ்ரமாகவும், பசுக்களில் காமதேனுவாகவும் நான் இருக்கிறேன். இனப்பெருக்கத்திற்கான அனைத்து காரணங்களிலும் அன்பின் இறைவன் காமதேவன் நான். பாம்புகளில் நான் வாசுகி.

(இப்பொழுது சந்ததி சம்பந்தமான உபாஸனை துவங்குகின்றது. பூர்வ எழுத்தில் தாயையும் தியானிக்க வேண்டும். உத்தர எழுத்தில் தந்தையையும் தியானிக்க வேண்டும். இடைவெளியில் குழந்தையை தியானிக்க வேண்டும். சேர்க்கும் எழுத்தில் புணர்ச்சியை தியானிக்க வேண்டும். இவ்விதம் சந்ததி சம்பந்தமான இரண்டாவது வகை தியானம் முடிவடைகின்றது.)

பண்டைய சமுதாயம் ஒரு சிறந்த ஆரோக்கியமான சமுதாயமாக விளங்கியதற்கான முக்கியக் காரணங்களுள் ஒன்றை இங்கே காண்கிறோம். காமம், உடலுறவு போன்றவைகள் தகுந்த ஒருவரால் சிறுவயதிலேயே கற்பிக்கப்படுவது மட்டுமின்றி, அதைச் சிந்திக்குமாறும் இங்கே கூறப்படுகிறது.

கல்விக்காலம் முடிந்து ஒருவன் வெளியேறும்போது, அவன் நல்ல மனிதனாக இல்லற தர்மத்தில் வாழ்வதற்கு, இந்தக் கல்வி இந்தச் சிந்தனையை வழிவகுத்தது. வாழ்க்கையின் ஒரு அடிப்படை அம்சமான காமம் பற்றி உரிய வேளையில், உரிய முறைப்படி, தகுந்த ஒருவர் கற்பிப்பதின் மூலம் நல்ல பண்புகளை உடைய அன்பு கொண்ட மனிதன் உருவாகுகிறான். நல்ல சமுதாயத்திற்கு அது வழிகோலுகிறது. உயிரை உருவாக்குகின்ற இந்த உயரிய **இல்லறம் ஒரு நல்லறம்** என்பதாகவே நம் முன்னோர்கள் பார்த்தனர்.

**அனுவாகம் – 3.7**

வாக்குச் சிந்தனை:

அதாத்யாத்மம் । அதரா ஹனு: பூர்வரூபம் । உத்தராஹனுருத்தரரூபம் ।
வாக் ஸந்தி: । ஜிஹ்வா ஸந்தானம் । இத்யத்யாத்மம் ॥ 3.7 ॥

பொருள்:

உடம்பு பற்றிய சிந்தனையை இனி காண்போம். இதில் கீழ்த்தாடை முற்பகுதி, மேல்தாடை பிற்பகுதி. இரண்டும் இணையும்போது வாக்கு பிறக்கிறது. இணைக்கின்ற பொருளாக இருப்பது நாக்கு. உடம்பு பற்றிய சிந்தனை இவ்வாறு செய்யப்படுகிறது.

உடம்பு பற்றிய சிந்தனை என்று கூறப்பட்டாலும், இது உண்மையில் வாக்கு பற்றிய சிந்தனையாகும். '**பேச்சுக் கட்டுப்பாடே ஆன்மீக வாழ்வுக்கு முதற்படி**' என்கிறார் ஸ்ரீ சங்கரர்.

வாக்கின் ஆற்றலைக் கையாள்வதைக் கர்ம யோகத்தின் அடிப்படை நியதியாக முன் வைக்கிறார் சுவாமி விவேகானந்தர். *'வாக்கின் ஆற்றலை எண்ணிப் பாருங்கள்! உயர்ந்த தத்துவங்களிலும், அதுப்போலவே அன்றாட வாழ்விலும் அவைகள் ஒரு மாபெரும் சக்தியாக விளங்குகின்றன. நாம் எதையும் சிந்தித்துப் பார்க்காமல், நாம் பேசுபவைகளை ஆராய்ந்து பார்க்காமல், இரவும் – பகலும் என இந்த ஆற்றலைக் கையாண்டு கொண்டிருக்கிறோம். இந்தக் சக்தியின் இயல்பைத் தெரிந்து கொள்வதும், அதைச் சிறப்பாகப் பயன்படுத்துவதும் கூட கர்ம யோகத்தின் ஒரு முக்கியப் பகுதியாகும்.'*

தேவையற்ற பேச்சு உயர்வாழ்க்கைக்கு என்றல்ல, சாதாரண வாழ்க்கைக்கும் மிகப்பெரிய தடையாகும். நமது ஆற்றலில் கணிசமான பகுதி வீணான பேச்சில் செலவழிகிறது. அதனைச் செலவிடாமல் சேமித்தால், அகவாழ்க்கை போன்ற மிக உயர் தேவைகளுக்காக அதனைப் பயன்படுத்த முடியும். எனவே பேச்சுக் கட்டுப்பாட்டைப் பற்றி சிந்திக்கும்படியும், கடைப்பிடிக்கும்படியும் மாணவன் இங்கே அறிவுறுத்தப்படுகிறான்.

**அனுவாகம் – 3.8**

<u>பயிற்சியின் பலன்கள்:</u>

இதிமா மஹா ஸம்ஹிதா: । ய ஏவமேதா மஹா ஸம்ஹிதா வ்யாக்யாதா வேத: ।
ஸந்தீயதே ப்ரஜயா பசுபி: । ப்ரஹ்ம வர்ச்சஸேனான் னாத்யேன
ஸுவர்க்யேண லோகேன ॥ 3.8 ॥

பொருள்:

இங்கே கூறப்பட்ட இந்த முக்கியமான சேர்க்கைகள் பற்றி அறிபவன் மக்கட்செல்வம், கால்நடைச் செல்வம், புனிதப் பேரொளி, உணவு முதலானவற்றைப் பெறுகிறான். மேலான உலகங்களில் வாழ்வதற்கான வாய்ப்பும் அவனுக்குக் கிடைக்கிறது.

இத்தகைய ஐந்து சிந்தனைகளின் பலனாக, பிரபஞ்சம், புனிதப் பேரொளி, கல்வி, மக்கட்செல்வம், மற்றும் நமது உடல் போன்றவற்றைக் கொண்டு, இதன் சிந்தனைகளைத் தெரிந்து கொள்பவனுக்கு இந்தப் பலன்கள் கிடைப்பது மட்டுமல்ல, இவற்றைத் தெரிந்து கொண்டு, முறையாகச் செயல்பட வேண்டும் என்பதும் மிக முக்கியம். அதாவது, *'தெரிந்துக் கொள், தெரிந்த உண்மைகளை மீண்டும் மீண்டும் நினைவுகுக் கொண்டு வந்து அவற்றை மனத்தின் ஒரு பகுதியாக்க வேண்டும். பிறகு ஆழ்ந்து சிந்தனை செய்'* என்கின்றார் இந்த உபநிஷத ரிஷி.

இதனால், சிந்திக்கின்ற மனம் தெளிவு பெறுகிறது. மனத் தெளிவு பெற்றவனுக்குத் தனது நோக்கம் என்ன? அதை அடைவதற்கு எந்த வழியில் செல்ல வேண்டும்? போன்றவைகள் சந்தேகத்திற்கு இடமின்றி தெரிகின்றன. அவன் தனது நோக்கத்திற்குப் பாதகமானவற்றை விலக்கி, சாதகமானவற்றை மட்டுமே ஏற்றுக்கொண்டு செயல்படுகிறான். அவைகளில் வெற்றி காண்கிறான். குருகுல நாட்களுக்குப் பிறகு அவன் இல்லற வாழ்வில் ஈடுபடலாம் அல்லது துறவு வாழ்வை ஏற்கலாம். அவனால் இரண்டிலும் இந்த வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ முடிகிறது.

மேலும், இத்தகைய உயரியச் சிந்தனைகளின் மூலம் மனம் **'நான்', 'எனது'** என்ற குறுகிய வட்டங்களிலிருந்து வெளிவர முடிகின்றது. அத்துடன், அலுவலகம், வேலை என்று பலவாறாகப் பிரிந்துக் கிடந்த மனம் ஒரு வட்டத்திற்குள் குவிக்கப்படுகிறது. இந்தச் சிந்தனைகளை உரிய முறையில் தொடர்ந்து செய்யும்போது, அவனது மன அழுத்தம் (MENTAL TENSION) குறைகிறது. மனம் மிகவும் இலேசாகிறது. செய்கின்ற செயல்களில் ஒரு நேர்த்தி உண்டாகின்றது. அவனது அகவாழ்க்கைக்கான ஆரம்பம் அதுவே.

இதன் வாயிலாக, வெற்றிகரமான வாழ்க்கையின் அடிப்படைத் தேவையான மனத் தெளிவைத் தருகிறது. இதனால்தான் வாழ்க்கைக் கல்வியின் ஆரம்பப் படிகளுள் ஒன்றாக இது வைக்கப்பட்டுள்ளது.

(இவ்விதம் இந்த மேலான உபாஸனைகள் விளக்கப்பட்டிருக்கின்றது. யாரொருவன் இத்தகைய ஐந்து வித்மான வேள்விகளை சரியாக முறைப்படி புரிந்துக் கொண்டு, இந்த மேலான உபாஸனைகளை செய்கிறானோ? அவனுக்கு இந்த உலகில் செல்வங்களையும், ஒளிபொருந்திய தேகத்தையும், வயிறார உண்ண உணவும் கிடைக்கப் பெற்றவனாக

இருப்பான். அவன் இந்த வாழ்க்கையை வாழும்போதே அதை அனுபவித்து ஆனந்தமாக வாழவும் முடியும் என்பதாகப் பார்க்கப்படுகின்றது.)

இதுவரை நாம் பார்த்த ஐந்துவிதமான **உபாசனைகள்** அல்லது **யக்ஞம்** என்பது நமக்கான மனத்தூய்மையின் நல் வாய்ப்புகள் என்றாலும், நம்முன்னோர்கள் அன்றைய நடைமுறையில் இதுப்போல, நாற்பது வகையான **ஸம்ஸ்காரங்கள்** கொண்டிருந்தனர்.

அவைகள், கர்ப்பாதானம், பும்ஸவனம் (பும்ஸவனம் என்பது, திருமணமான பெண் முதன்முதலில் கருவுறுற்ற பின்பு, மூன்றாவது அல்லது நான்காவது மாதத்தில் செய்யப்படும் சடங்கு), வளைகாப்பு அல்லது சீமந்தம், ஜாதகர்மா (குழந்தைப் பிறந்த 11 வது நாளில் செய்யப்பட வேண்டிய வேள்வி – இது குழந்தைக்கு ஆரோக்கியமான உடல், நீண்ட ஆயுள், அளவு கடந்த பொருள், செல்வாக்கு, புத்தி கூர்மை என எல்லாவற்றையும் வேண்டி செய்யப்படுவது), குழந்தைக்கு பெயர் சூட்டுதல் அல்லது நாமகரணம், அன்ன ப்ராசனம், சௌளம் (மொட்டை – தலை முடி மழித்தல் சடங்கு), உபநயனம் (8 வது வயதில் பூணூல் போட்டு, பிரம்மச்சர்ய வித்யாவை கற்றுக் கொள்ள ஆசிரியரிடம் ஒப்புவித்தல்), குருகுலவாஸத்தில் செய்ய வேண்டிய பிரஜாபத்தியம் (பிரம்மச்சரிய தர்மத்தில் ஒழுகுதல்) முதலிய நான்கு வேத விரதங்கள், அத்துடன் கல்வி முடிந்ததும் செய்கின்ற **'ஸ்நானம்',** பிறகு விவாஹம், அதன்பின் கிருஹஸ்தன் செய்யவேண்டிய ஐந்து நித்ய கர்மாக்களாகிய பஞ்ச மஹா யக்ஞங்கள் ஆக, இதுவரை மொத்தம் பத்தொன்பது ஆகின்றது.

இதோடு இன்னும் கிருஹஸ்தன் செய்ய வேண்டிய **பாக யக்ஞங்கள் ஏழும், ஹவிர் யக்ஞங்கள் ஏழும், ஸோம யக்ஞங்கள் ஏழும்** ஆக இந்த மூவேழு யக்ஞங்கள் ஆகிய இருபத்தொன்றும் என மொத்தம் 19+21= 40 வகையான ஸம்ஸ்காரங்களை நம் முன்னோர்கள் அக வாழ்க்கைக்கான வழிகளாகக் கடைப்பிடித்தனர்.

உலகில் உள்ள பெரும்பாலான மக்கள் மனித வாழ்க்கையின் மகத்தான நோக்கத்தை சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை. அவர்களால், ஏன் நம்முடைய வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்துக்கொள்ள முடியவில்லை என்பதைக்கூட விசாரிக்க அவர்கள் முயற்சிப்பதில்லை.

ஒரு கோடி மனிதர்களில் ஒருவர் மட்டுமே, அத்தகைய விசாரணையை மேற்கொள்கிறார். அவரது விழித்துக்கொண்ட புத்தி சக்தி, இந்த விசாரணை முறையை மேற்கொள்ளும் ஆவலை அவருக்கு தூண்டுகின்றது. ஆக, மனித வாழ்க்கையைப் பற்றிய அடிப்படை யதார்த்தத்தைக் கண்டறியும் அருமையான செயல்பாட்டின் முதல் படி என்பதே தன் மனதை தான் விசாரித்து அறிவது ஆகும்.

பெரும்பான்மையான மனிதர்கள் உண்பது, உறங்குவது, சம்பாதிப்பது, சொத்துக்களை சேர்ப்பது, தன் குடும்பத்தை வளர்ப்பது போன்றவற்றையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதுகிறார்கள். இது அப்படியல்ல. இதெல்லாம் சாதாரண வாழ்க்கையின் வழக்கம். சந்தேகத்திற்கு இடமின்றி, இதுவும் அவசியம் என்றாலும், வெறும் வெளிப் பொருள்களைத் தேடுவதில் மட்டுமே, வெறி கொண்ட இத்தகைய மனிதர்கள் ஆத்மாவின் அக வாழ்க்கையை ஆராய முயலுவதில்லை.

கடலோரத்தில் நின்று பார்த்தால், கடலின் மேற்பரப்பில் அலைகள் மட்டுமே தெரியும், அதே கடலின் கீழே ஆழமாக கிடக்கும் முத்துக்கள் அவர்களுக்குத் தெரியாது. கடலில் ஆழமாக மூழ்கும் துணிச்சலான மனிதனால் மட்டுமே அந்த முத்துக்களை சேகரிக்க முடியும், மற்றவர்களால் முடியாது. அதுப்போலவே ஆத்மா – ஆத்மஞானத்தைப் பற்றிய அறிவை அடைய, இந்த உலகத்தை ஆராய்வதிலிருந்து விலகி, ஆத்மாவின் உண்மையை உள்நோக்கி ஆராய்பவர்களால் மட்டுமே பெற முடியும். மற்றவர்களால், இந்த ஆன்மிக அறிவை அவ்வளவு எளிதில் பெற முடியாது.

**அனுவாகம் – 4.1**

**பிரார்த்தனை**

வாழ்க்கைக் கல்வி என்றல்ல; வேத கால வாழ்க்கைக்கே அடிப்படையாக நாம் காண்பது பிரார்த்தனையும் வேள்வியும். இங்கே சில பிரார்த்தனைகளைக் காண்கிறோம். 'பிரார்த்தனையால் நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன. தன்னுணர்வுடன் (SELF–CONSCIOUSNESS) பிரார்த்தனை செய்தால் எல்லா விருப்பங்களும் நிறைவேறும்' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

மனப் பயிற்சிகள் ஆனாலும் சரி, சாதாரண வாழ்க்கையானாலும் சரி, எதையாவது சாதிக்க வேண்டுமானால், அதற்கு சரியான ஆற்றல் வேண்டும். பிரார்த்தனை மட்டுமே அந்த ஆற்றலைத் தருகிறது. அதனால்தான் அது முக்கிய அடிப்படையாக பிரார்த்தனை வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இனி வர இருக்கின்ற 4.2 – 4.5 மந்திரங்களில் சில பிரார்த்தனைகளைக் காண்கிறோம். இவை ஒவ்வொன்றும் **'ஸ்வாஹா'** என்பது யாகங்களில் பயன்படுத்தப்படும் மந்திரம். தேவர்களுக்கும் தெய்வங்களுக்கும் ஒன்றை அர்ப்பணம் செய்யும்போது, இந்த மந்திரத்துடன் அந்தப் பொருளை அக்கினியில் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஸ்வாஹா** என்ற சொல்லைப் பயன்படுத்தியதன் மூலம் இந்தப் பிரார்த்தனைகளின் சிறப்பும் நோக்கமும் காட்டப்படுகின்றன. அது என்ன நோக்கம்? பிரார்த்தனைகளின் மூலம் பெற்றவற்றைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் அந்த நோக்கம்.

பிரார்த்தனைகள் மூலம் செல்வம், கல்வி போன்றவற்றைப் பெற்றுக் கொண்டு, அவைகளை தனக்காக மட்டும் வைத்துக் கொள்ளாமல், அவைகளை மற்றவர்களுக்கும் அவசியம் திருப்பிக் கொடுக்க வேண்டும். பெற்றவற்றை திருப்பிக் கொடுத்தல் என்பது வேத வாழ்க்கையின் அடிப்படை நியதி.

அதாவது பிரார்த்தனை என்பது சுய தேவைகளுக்காக மட்டுமின்றி, பிறர் நலத்தையும் கருத்தில் கொண்டதாக அமைய வேண்டும். இந்த உண்மை '**ஸ்வாஹா**' என்ற மந்திரத்தின் வாயிலாகக் காட்டப்படுகிறது.

## அறிவொளி வேண்டும்

யச்சந்தஸாம் ரிஷபோ விச்வரூப: ।
சந்தோப்யோ(அ)த்யம்ருதாத் ஸம்பபூவ ।
ஸ மேந்த்ரோ மேதயா ஸப்ருணோது ।
அம்ருதஸ்ய தேவ தாரணோ பூயாஸம் ।
சரீரம் மே விசர்ஷணம் ।
ஜிஹ்வா மே மதுமத்தமா ।
கர்ணா ப்யாம் பூரி விச்ருவம் ।
ப்ரஹ்மண: கோசோ(அ)ஸி மேதயா பிஹித: ।
ச்ருதம் மே கோபாய ॥ 4.1 ॥

பொருள்:

எந்த நாதம் வேதங்களின் மிகச் சிறந்த பகுதியோ, எல்லாமாக இருக்கிறதோ, அழிவற்றதான வேதங்களிலிருந்து தோன்றியதோ, அந்த **ஓங்காரம்** எனக்கு அறிவொளியைத் தரட்டும். இறைவா, நான் அழிவற்ற பரம்பொருளைப் பற்றிய அறிவைப் பெறுவேனாக. எனது உடல் ஆரோக்கியமாக இருக்கட்டும். எனது நாக்கு மிகவும் இனிமையானவற்றைப் பேசட்டும். காதுகள் ஏராளமாக நல்லவற்றைக் கேட்கட்டும். ஓங்காரப் பரம்பொருளே! உலகப் பொருட்களைப் பற்றிய அறிவால் நீ மறைக்கப்பட்டுள்ளாய். இறைவனின் இருப்பிடம் நீ. கற்றவற்றை நான் மறந்து விடாமல் காப்பாய்!

வாழ்க்கைக் கல்வி என்றல்ல, வேதகால வாழ்க்கைக்கே நாம் அடிப்படையாக காண்பது பிரார்த்தனையும், வேள்வியும் ஆகும். இங்கே சில பிரார்த்தனைகளை

காண்கிறோம். 'பிரார்த்தனையால் நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன. தன்னுணர்வுடன் (Self Consciousness) பிரார்த்தனை செய்தால் எல்லா விருப்பங்களும் நிறைவேறும்' என்கின்றார் சுவாமி விவேகானந்தர். மனப் பயிற்சிகள் ஆனாலும் சரி, சாதாரண வாழ்க்கையானாலும் சரி, எதையாவது சாதிக்க வேண்டுமானால், அதற்கு ஆற்றல் அவசியம் இருந்தாக வேண்டும். இத்தகைய பிரார்த்தனை அந்த ஆற்றலைத் தருகிறது. அதனால்தான் அது முக்கிய அம்சமாக பார்க்கப்படுகின்றது.

இது ஒரு பிரார்த்தனை, **மேதா பிரார்த்தனை** என்று அழைக்கப்படுகின்றது.

வேதாந்த மாணவர்களுக்கு இது மிக முக்கியமான பிரார்த்தனை. இது ஓங்காரத்தை ஆலம்பனமாக கொண்டு ஈஸ்வரனிடம் சில வேண்டுதல்களை அடைவதற்காக செய்யப்படுகின்ற உபாஸனை ஆகும்.

இந்த ஓங்காரம் ஏன் உயர்ந்ததாக கருதப்படுகின்றது என்றால், இது எல்லா சப்தத்திற்கும் ஆதாரமாக இருக்கின்றது, வேதத்திற்கே ஆதாரமாக இருக்கின்றது. பதார்த்தமில்லாமல் பதங்கள் கிடையாது. எனவே, இது பதார்த்தத்திற்கும் ஆதாரமாகவே இருக்கின்றது. **ஓம் = அ + உ + ம்** இவைகள் முறையே **தோற்றம், ஸ்திதி, லயம்** இவைகளை குறிக்கின்றது.

1. ஓங்காரம் வேத மந்திரங்களில் சிறந்தது மேலும் அனைத்துமாகவும் விளங்குகின்றது.

2. இதை ஆலம்பனமாக கொண்டு தியானிக்கும் ஈஸ்வரன் எனக்கு அடைந்த அறிவில் நிலைப்படுவதன் மூலம் வலிமைப்படுத்து, காப்பாற்று. கற்றதை நினைவில் வைக்கும் சக்தி, ஞாபக சக்தியைக் கொடு.

3. ஓங்கார ரூபமாக இருக்கும் இறைவா, மரணமில்லா பெருவாழ்வு தரும் பிரஹ்ம ஞானத்தை உடையவனாக இருப்பேனாக. என்னுடைய உடல் ஆரோக்கியமாக இருக்கட்டும், பிரஹ்ம ஞான முயற்சிக்கு ஒத்துழைக்கும் அளவுக்கு சக்தியுடையதாக இருக்கட்டும்.

4. என்னுடைய நாவிலிருந்து வெளி வரும் வாக்கானது இனிமையாக, மிருதுவாக இருக்கட்டும். நாம் நம்மையறியாமல் மற்றவர்களை சொல்லால் துன்புறுத்தி விடுகின்றோம். என் நாவிலிருந்து வரும் வார்த்தைகள் யாரையும் துன்புறுத்தாத

வகையில் இருக்கட்டும். மனதில் இருக்கும் அறிவை தெளிவாக மற்றவர்களுக்கு வாக்கின் மூலமாக சொல்லும் திறமை வேண்டும்.

5. என்னுடைய இரண்டு காதுகளினால் வேத சாஸ்திரத்தை பலமுறை கேட்கவும், எனக்கு புரியும் வரை விடாமல் அதை தொடரவும், அத்துடன் சரியான அறிவு அடையும் வரையும் அவைகளை கேட்க வேண்டும்.

6. பிரம்மத்திற்கு உறையாக இருக்கும் ஓங்காரமே! நான் உன்னை விசாரம் செய்வதன் மூலம் மறைத்துக் கொண்டிருக்கும் பிரம்மத்தை நான் அறியும் வகையில் என்னுடைய மறைப்பை எடுத்து விடு.

ஓங்காரமே ஆலம்பனமாக இருப்பதால், அது அறியாமைகளை அகற்றி மறைப்பை நீக்குகின்றது.

7. குருமுகமாக நான் பெற்ற வேத சாஸ்திர உபதேசம் என்னிடமே நிலையாக இருக்கட்டும்.

இந்த பிரார்த்தனைகளை ஜபம் மூலமாக ஈஸ்வரனிடம் கேட்க வேண்டும்.

இந்த ஸ்லோகத்தை நன்கு புரிந்துக் கொண்டு, அதில்கூறப்பட்டுள்ள அர்த்தத்தை அவசியம் புரிந்துக் கொண்டு தியானிக்க வேண்டும்.

## வளமும் நலமும் வேண்டும்

ஆவஹந்**தீ** விதன்வானா | குர்வாணா சீரமாத்மண: |
வாஸாம்ஸி மம காவச்ச | அன்னபானே ச ஸர்வ**தா** |
ததோ மே ச்ரியமாவஹ | லோமசாம் பசு**பி**ஸ் ஸஹ ஸ்வாஹா || 4.2

4.2. பரம்பொருளே! துணிகள், பசுக்கள், உணவு, குடிநீர் போன்றவைகள் தடையின்றி எனக்குக் கிடைக்க வேண்டும். கிடைத்தவைகள் மேன்மேலும் பெருக வேண்டும். ஒரு போதும் வற்றாத செல்வம் எனக்கு கிடைக்க வேண்டும். அத்துடன், ஆடு, மாடுகள் போன்றவையும் எனக்கு கிடைக்க வேண்டும்.

ஆமாயந்து ப்ரமசாரிண: ஸ்வாஹா |

விமாஸ்யந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா |

ப்ரமா(அ)யந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா |

தமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா |

சமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா || 4.3

4.3. பரம்பொருளே! புலனடக்கமும், மனக்கட்டுப்பாடும், நல்லொழுக்கமும் உடைய நல்ல மாணவர்கள் ஏராளமாக எல்லா திசைகளிலிருந்தும் என்னிடம் வரவேண்டும்.

பிரார்த்தனைகளின் கூடவே **'ஸ்வாஹா'** என்ற மந்திரம் இணைந்து வருவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் இறைவனிடம் **'கேட்டது கொடுப்பதற்காகவே'** என்பது இதன் உட்பொருள் என்பதை ஏற்கெனவே கண்டோம். பொருட்செல்வமாகட்டும், அறிவுச் செல்வமாகட்டும், பெற்றதை மற்றவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதாவது, பொருளாதார உதவிகளை ஏழைக் குழந்தைகளுக்கான கல்வி மற்றும் ஏழை நோயாளிகளுக்கான உதவிகள் என ஏதாவது ஒரு வகையில் ஆக்கப்பூர்வமாக செலவுகள் செய்யப்பட வேண்டும்.

அத்துடன், நாம் கற்றுக் கொண்ட இந்த **அத்யாத்ம யோகம்** எனும் அறிவுச் செல்வத்தை, புதியதாக வருகின்ற மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதின்மூலம், கல்வி அறிவையும் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதற்காகவே இந்தப் பிராத்தனை என்பதையும் எளிதாகப் புரிந்துக் கொள்ள வேண்டும். ஆக, இது ஒரு பொதுநலன் சார்ந்த பிரார்த்தனை என்பது நினைவில் இருக்கட்டும்.

## <u>புகழ் வேண்டும்:</u>

யசோ ஜனே(அ)ஸானி ஸ்வாஹா l ச்ரேயான் வஸ்ய ஸோ(அ)ஸானி
ஸ்வாஹா ll 4.4 ll

பொருள்:

மக்களிடையே நான் புகழ் பெறுவேனாக. செல்வந்தர்களுள் சிறந்தவனாக ஆவேனாக. செல்வந்தர்களுள் சிறந்தவன் என்றால், அனைவரையும் விட அதிக பணம் வாய்ந்தவன் என்பது பொருள் அல்ல. பிறருக்குக் கொடுத்துத் தானும் அனுபவிப்பவனே

'**சிறந்தவன்**'. அதிகம் செல்வம் இருப்பதால் மட்டும் ஒருவன் மக்களிடையே புகழ் பெறுவதில்லை. மற்றவர்களுக்கு கொடுப்பவனே அதிகம் புகழ் பெறுகிறான்.

## உணர்வின் ஒளி வேண்டும்

தம் த்வா பக ப்ரவிசானி ஸ்வாஹா | ஸ மா பக ப்ரவிச ஸ்வாஹா |
தஸ்மின் ஸஹஸ்ர சாகே | நிபகா ஹம் த்வயி ம்ருஜே ஸ்வாஹா |
யதா ப்ரவதா யந்தி | யதா மாஸா ஹர்ஜரம் |
ஏவம் மாம் ப்ரஹ்மசாரிண: | தாதராயந்து ஸர்வதஸ் ஸ்வாஹா |
ப்ரதிவேசோ(அ)ஸிப்ரமா பாஹி ப்ரமா பத்யஸ்வ || 4.5 ||

பொருள்:

பரம்பொருளே உன்னில் நான் இணைவேனாக. என்னில் நீ இணைவாயாக. ஆயிரம் கிளைகளுடன் (வளர்ந்திருக்கின்ற மரம் போல் எங்கும்) பரந்திருக்கின்ற உன்னில் இணைவதன் மூலம் நான் புனிதம் பெறுவேனாக. இறைவா! தண்ணீர் எப்படிக் கீழ்நோக்கிப் பாய்கிறதோ, மாதங்கள் எப்படி வருடமாகப் பரிணமிக்கின்றனவோ அப்படியே நல்ல மாணவர்கள் எல்லா இடங்களிலிருந்தும் என்னை நாடி வரட்டும். நீயே என் அடைக்கலம். எனக்கு உணர்வின் ஒளியைக் கொடு. என்னை ஏற்றுக் கொள்.

ஆன்மீகத்திற்கு அடிப்படையான ஒரு பண்பு புனிதம். அந்தப் புனிதத்தை எப்படிப் பெறுவது என்பது இங்கே சுட்டிக் காட்டப்படுகிறது. '**இறைவனில் இணைவதன் மூலம்**' என்கிறது இந்த மந்திரம். அதாவது, நமது வாழ்க்கையை இறை மயமாக ஆக்கிக் கொள்ளும்போது நாம் புனிதம் பெறுகிறோம்.

இது **ஸ்ரீ காமாஸ்ய ஹோமம்** என்றும் **ஆவஹந்தி ஹோமம்** என்றும் அழைக்கப்படும்.

மனிதனின் வாழ்வில் எல்லா செல்வங்களும் இன்ன பிற சுகபோகங்களும் இளமைக்காலத்திலேயே கிடைப்பதே சிறந்ததாகும். ஆனால் தற்காலத்தில் உலகம் இருக்கும் நிலையில் பலருக்கும் தங்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதே ஒரு மிகப்பெரும் சாதனையாக இருக்கிறது. பலர் தாங்கள் அனுபவிக்க வேண்டிய வாழ்வின் இன்பங்களை அனுபவிக்காமலேயே போய்விடுகின்ற நிலையும் பரவலாக காணப்படுகிறது. இத்தகைய பாதகமான நிலையை போக்க பிரபஞ்சமெங்கும் இருக்கின்ற தெய்வீக சக்தியின் அருள் நமக்கு தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட தெய்வீக

சக்தியை நமக்குள் ஈர்த்துக் கொள்ள உதவும் ஒரு விஞ்ஞான பூர்வமான பூஜை ஹோமம் ஆகும். பல வகையான ஹோம பூஜைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று தான் அவஹந்தி ஹோமம் ஆகும். இந்த அவஹந்தி ஹோமத்தை செய்வதால் நமக்கு ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்.

அவஹந்தி ஹோமம் என்பது, ஒரு குரு வழிபாடாகும். இந்த ஹோம வழிபாட்டை நடத்தி குருவை கௌரவிப்பதன் மூலம், நாம் அறியாமையைப் போக்கி, ஞானத்தை வளர்த்துக் கொள்ளவும் முடியும் என்கிறது இந்த தைத்திரீய உபநிஷதம். ஈஸ்வரனாகிய சத்குருவிடமிருந்தே, சகலவிதமான ஞானமும், புத்தி கூர்மையும் நம்மை வந்தடைகின்றன. எனவே, குருவின் நலனுக்காக செய்யப்படும் பிரார்த்தனைகள், அவஹந்தி ஹோமத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஒருவர் அடையக்கூடிய மிகப் பெரிய செல்வம் அறிவு மட்டும்தான். **அவஹந்தி ஹோமத்தின் முக்கிய நோக்கம், இந்த அறிவைப் பெற்றுப் பயனடைவது தான்.**

எனவே, **அத்யாத்ம ஞானக் கல்வியில்** முன்னேற்றம் காண இந்த **ஆவஹந்தி ஹோம வழிபாடு** மிகவும் பயனுள்ளதாக விளங்குகிறது.

முன்பு சொல்லப்பட்ட பிரார்த்தனையின் பலனை அடைந்தபிறகு, நற்பண்புகளை அடைந்தபிறகு, எனக்கு நிறைய செல்வங்களையும், செழிப்பையும் அடைய அருள் புரிவாயாக. இத்தகைய செல்வங்கள் நம்மிடம் வந்து குவிந்தாலும், அவைகளைப் பற்றிய நிலையாமை நமக்குப் புரிய வேண்டும். காரணம், நமக்கு கொடுக்கப்பட்டவைகள் எல்லாம் ஒரு நாள் நம்மிடமிருந்து எடுக்கப்படும். அல்லது நம்மை எடுத்துக் கொள்வான். ஆக, இதை நாம் நம் மனதில் நன்றாக உள்வாங்கிக் கொண்டு, எல்லாவற்றையும் ஈஸ்வரனுக்கு **அர்பணம்** செய்ய வேண்டும்.

न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्वमानशुः।
परेण नाकं निहितं गुहायां वेभ्राजदेतद्यतयो विशन्ति॥

ந கர்மணா ந ப்ரஜயா தனேன த்யாகே னைகே அம்ருதத்வ மானஸு: |
பரேண நாகம் நிஹிதம் குஹாயாம் விப்ராஜ–தேதத் யதயோ விஸந்தி ||

நாங்கள் செய்த நற்கருமங்களாலோ, நாங்கள் பெற்ற பிள்ளைச் செல்வங்களாலோ? அல்லது அடையப்பெற்ற அத்தனை செல்வ வளங்களாலோ? நமது மனம் ஈர்க்கப்படாமல், எல்லாவற்றையும் ஈஸ்வரனுக்கு தியாகம் செய்யக்கூடிய மனப்பாங்கினாலேயே ஒருவன் **மரணமில்லாப் பெருவாழ்வை** அடைய முடிகின்றது என்பதை இங்கு பார்க்க முடிகின்றது.

அத்தகைய, அர்பணிப்பின் வாயிலாக, உண்மையான இலட்சியத்தை அறிந்த பிறகு, ஆத்ம ஞானத்தை அடைந்து, அதன் வாயிலாக கிடைக்கபெற்ற அத்தனை செல்வங்களும் ஒருவனுக்கு அலங்காரமாக மாற வேண்டும். அதுவே, ஆத்ம ஞானத்தை அடையாமல் வரும் அத்தனை செல்வங்கள் அவனை அழித்து விடும். அவனிடம் செல்வம் இருந்தும் சந்தோஷம் இருக்காது.

ஆகவே, இந்த ரிஷி செய்யும் பிரார்த்தனையின் நோக்கம் மற்றவர்களுக்கு நன்மை செய்யும் பொருட்டே என்பதை நாம் நன்கு உணர வேண்டும். எல்லா காலங்களிலும் எனக்கு ஆடைகளையும், பசுக்களையும், செல்வங்களையும், உணவையும், நீரையும், ரோமங்களுடன் கூடிய ஆடு, மாடுகளையும் என்னிடம் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்க வேண்டும், அதிக காலம் இருக்க வேண்டும் அதுவும் உடனே கிடைத்திட வேண்டும்.

எதற்காக இந்த செல்வங்களை கேட்டு பெற வேண்டும்?

நல்ல கர்மத்தை செய்வதற்காகத்தான் இவைகளைப் பயன்படுத்த வேண்டும், தன்னுடைய சுயநலமான போகத்திற்கு மட்டும் பயன்படுத்தக் கூடாது. உபாஸனம் சுதந்திரம், கர்மம் தனதந்திரம். தியானம் செய்ய வேண்டுமென்றால். அதற்கான பொருளாதாரம் எதுவும் தேவை கிடையாது. ஆனால், புறத்திலே ஒரு யாகம் செய்ய வேண்டுமென்றால் பணமும், மற்றவர்கள் உதவியும் தேவைப்படுகின்றது.

சத்துவகுண பிரதானமுடையவர்களால்தான் தியானம் செய்ய முடியும். இந்த மனத்தூய்மையை அடைவதற்காக கர்மம் செய்ய வேண்டும். இந்த கர்மத்தை செய்வதற்காகத்தான் செல்வத்தை வேண்டுகின்றான்.

கர்மம் எதற்கு செய்ய வேண்டும்?

மனத்தூய்மையை அடைவதற்கு கர்மம் செய்தாக வேண்டும். சுயநலமான போகத்திலிருந்து விடுபட மற்றவர்களுக்கு தான, தர்மங்கள் கட்டாயம் செய்ய வேண்டும், இவைகளுக்காகத்தான் செல்வம் சேர்க்கப்பட வேண்டும்.

"பணமிருந்து பிறருக்கு **தானம்** செய்யாதவனையும், பணமில்லா விட்டாலும், ஈஸ்வரனை **தியானம்** செய்யாதவனையும் கல்லைக்கட்டி நீரில் போட வேண்டும்". என்பது முன்னோர் மொழி.

மனத்தூய்மை எதற்காக பயன்படும்?

இந்த மனத்தூய்மை ஆத்ம ஞானத்தை அடைவதற்காகத்தான் தேவை. குருவின் உபதேசம் ஒருவனுக்கு ஞானமாக மாற வேண்டுமானால், அதற்கு அவசியம் அவனிடம் மனத்தூய்மை இருக்க வேண்டும். அதனால்தான் இந்த உபநிஷத முனிவர் வேதம் படிக்க விரும்பும் மாணவர்கள் என்னை நோக்கி வரட்டும். விதவிதமான தேசத்திலிருந்து, விதவிதமான தகுதிகளை உடையவர்கள் என்னிடன் வர வேண்டும். புத்திக்கூர்மை உடைவர்கள், அறிவுத்திறமையுடைவர்கள் அனைவரும் என்னிடம் வரட்டும். இந்திரிய ஒழுக்கமுடையவர்கள், மனக்கட்டுபாடுடையவர்கள் என்னிடம் வரட்டும்.

புகழ் பெற்ற ஆசிரியனாக இருப்பேனாக. செல்வந்தர்களுக்குள் மேலானவனாக இருப்பேனாக. எப்படி நீரானது கீழேயுள்ள பிரதேசத்தை நோக்கி இயற்கையாக ஒடுகின்றதோ? அதுப்போல மாணவர்கள் விரும்பி, வேகமாக என்னிடம் ஓடிவர வேண்டும். எவ்விதம் மாதங்கள் வருடத்தை நோக்கி ஓடுவதுப்போல, மாணவர்கள் என்னைத்தேடி வரவேண்டும். இறைவா எல்லா திசைகளிலிருந்து மாணவர்கள் என்னிடம் வரட்டும்.

ஆக, இதுவரை பார்த்த பிரார்த்தனைகள் அனைத்தும் **சாதனா பிரார்த்தனை என்று கூறப்பட்டுள்ளது**. ஏனென்றால், இவைகள் வெறும் சாதனங்கள் மட்டும்தான், இதைக் கொண்டுதான் சாத்தியத்தை அடைய வேண்டும். இவைகளை சாத்தியமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

அடுத்து, சாத்தியப் பிரார்த்தனை என்னவென்று பார்க்கலாம்.

**சாத்திய பிரார்த்தனை:**
**—————————————**

இங்கு நாம் அடைய வேண்டியதை பிரார்த்திக்கப்படுகின்றது.

இது ஜீவ – ஈஸ்வர ஐக்கிய பிரார்த்தனையாக கருதப்படுகின்றது. சாதனங்கள் அடைந்தாலும் அவைகளை பயன்படுத்தி சாத்தியத்தை அடைவதற்கு மிகவும் கடினம். எனவே சாத்தியத்தையையும் இறைவனிடம் வேண்டுகின்றேன்.

ஆத்மஞானம் சாதனம் என்றால், சாத்தியம் என்பது மோக்ஷம் (ஜீவ–ஈஸ்வர ஐக்கியம்)

சகஜ தாதாத்மியம், பிராந்திஜ தாதாத்மியம், கர்மஜ தாதாத்மியம், என்று தாதாத்மியங்கள் மூன்று உள்ளன. இவைகளில் அகங்காரம் சீவனுடனே பொருந்தியிருப்பது **சகஜ தாதாத்மியம்** ஆகும். நான் கர்த்தா/போக்தா என்ற மனதின் மயக்கம் **பிராந்திஜ தாதாத்மியம்** ஆகும். இந்த உடலை நான் என்று கருதிக் கொண்டு காரியமாற்றுவது **கர்மஜ தாதாத்மியம்** ஆகும்.

இவைகளை நீக்கும் ஒரே வழி அனைத்தையும் ஈஸ்வரார்ப்பணம் செயப்பட வேண்டும். ஓங்கார ரூபமாக இருக்கின்ற இறைவா நான் உங்களிடத்தில் நுழைந்து விடுவேனாக, கலந்துவிடுவேனாக, அப்படிபட்ட நீங்களும் என்னிடத்தில் கலந்து விடுவீர்களாக, நுழைந்து விடுவீர்களாக. இது **ஜீவ – ஈஸ்வர** ஐக்கியத்தை வேண்டுவதாக புரிந்துக் கொள்ள வேண்டும். ஆயிரக்கணகான நாம, ரூபங்களாக உள்ள உங்களிடத்தில் நான் ஒன்றாக இணைந்து என்னை தூய்மையடைய செய்ய வேண்டும்.

இந்த பிரார்த்தனையால் உலகத்தின் மீதுள்ள **ராக – துவேஷம்** (அதாவது விருப்பு வெறுப்பு) நீங்கிவிடும்.

'**ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்**' என்பது, இருப்பதல்லாம் இறைவனே! என்பதினால், இங்கு நாம் வாழும் வாழ்க்கையில், நமக்கு உதவும் எல்லாமாகவே அந்த ஈஸ்வரன் இருக்கின்றான் என்பதை முதலில் நாம் நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். ஒருவன் தன்னுடைய இலட்சியத்தை அடைய முயற்சிக்கும்போது, அதில் தோல்வியுற நேர்ந்தால், அதற்கான ஆற்றலை அவன் மீண்டும் அந்த எல்லையற்ற ஈஸ்வர சக்தியின் வாயிலாகவே பெற வேண்டும்,

அத்துடன் அவனது நம்பிக்கைகள் குறையும்போது, அந்த ஈஸ்வரனிடமிருந்துதான் மீண்டும் அவன் புதிய சக்தியைப் பெற முடியும் என்பதினால், நம் பகவான் ஸ்ரீ தத்தாத்ரேயர் பரம்பரையில் வருகின்றவர்கள் அதனைப் பெறுவதற்காகப் பயன்படுத்துகின்ற உபாசனா மந்திரமாகிய **ॐ ह्रीं नमः (ஓம் ஹ்ரீம் நமஹ)** என்பதை எப்போதும் மனதினால் தியானித்துக் கொண்டே இருக்க வேண்டும். இதன் பொருள், '**எப்போதும் உங்கள் ஆற்றலை எனக்கு கொடுத்துக் கொண்டே இருங்கள்**' என்பதாக நம்முடைய பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

பரமனே! எனக்கு உங்களைப்பற்றி இன்னும் ஆழமாக விளக்குங்கள், உங்கள் ஸ்வரூபத்தை எனக்குப் எல்லாவற்றிலும் வெளிப்படுத்துங்கள். எல்லையில்லாத உங்களை நாம் ஒவ்வொருவரும் உணருமாறு செய்யும் சிறப்பான செயல் திறனை எங்களுக்கு எப்போதும் கொடுங்கள். இதற்கான என்னுடைய முயற்சிகள் எல்லாமே முழு பலனை கொடுக்க வேண்டும்.

## ஆழ் நிலைச் சிந்தனைகள்

### அனுவாகம் – 5.1 (உணர்வின் ஒளிக்கான பயிற்சி)

வாழ்க்கைக் கல்வியின் அடுத்த அம்சம் ஆழ்நிலைச் சிந்தனைகள். '**எனக்கு உணர்வின் ஒளியைக் கொடு**' என்ற பிரார்த்தனையைக் கண்டோம்.

உணர்வு (CONSCIOUSNESS) என்றால் என்ன?

குழந்தை, வாலிபன், வயோதிகன் ஆகிய மூவரும் ஒரே உலகில்தான் வாழ்கிறார்கள். ஆனால், குழந்தை காண்கிற உலகம் ஒன்று, வாலிபன் காண்கின்ற உலகம் வேறு, வயோதிகன் காண்கின்ற உலகம் வேறு. இந்த மாற்றத்தைத் தருவது உணர்வுநிலை. உணர்வு நிலை மாற, மாற நமது பார்வையின் கோணம் மாறுகிறது.

வீட்டினரை மட்டுமே சுயநலமாக நேசித்துக் கொண்டிருந்த நாம், நமது உணர்வு எல்லையற்றதாக ஈஸ்வர உணர்வாக விரிய, விரிய அதன் வாயிலாக, படிப்படியாக சுற்றத்தினரை, நண்பர்களை, பிறரை, நாட்டை, ஏன் இந்த உலகையே நேசிக்கத் தொடங்குவோம். இதில் நாம் என்ன அறியவேண்டுமென்றால், நம்மை சுற்றியிருப்பவர் களிடம் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஏற்பட்ட மாற்றங்கள் எல்லாமே நம்மிடமே நிகழ்ந்தது – ஆம்! நமது தனித்த உணர்வு, ஈஸ்வர உணர்வாக விரிந்தது. அதனால் எல்லாம் ஒன்றாக உணரப்பட்டது என்பதை அறிகிறோம்.

### வியாஹ்ருதிகள்

பூர்புவஸ் ஸுவரிதி வா ஏதாஸ்திஸ்ரோ வ்யாஹ்ருதய: I
தாஸா முகஸ்மை தாம் சதுர்த்தீம் I மாஹாசமஸ்ய: ப்ரவேதயதே I
மஹ இதி I ஸ ஆத்மா I அங்கான்யன்யா தேவதா: II 5.1 II

பொருள்:

பூ: புவ: ஸுவ: ஆகிய மூன்றும் **வ்யாஹ்ருதிகள்** எனப்படும். நான்காவதாக ஒன்று உள்ளது என்பதை ரிஷி **மஹாசமர்** அறிவித்தார். அது **மஹ:** அதுவே **இறைவன்.** அவரே **ஆத்மா.** மற்ற தேவர்கள் அவரது அங்கங்களாக உள்ளனர்.

யாகம் முதலானவற்றில் பயன்படுகின்ற மூன்று மங்கல வார்த்தைகள் இங்கே சிந்தனைக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. **பூ: புவ: ஸுவ:** ஆகிய இந்த வார்த்தைகள் **வ்யாஹ்ருதிகள்** என்று அழைக்கப்படுகின்றன.

இது ஒரு வகையான உபாஸனையை கூறுகின்றது. இதற்கு **வ்யாஹிருதி** என்று பெயர். இந்த உபாஸனையில் தேவதை ஹிரண்யகர்ப்பன், ஆலம்பனமாக வ்யாஹிருதிகள் வைத்துக் கொள்ளப்படுகின்றது. ஹிரண்யகர்பன் (हिरण्यगर्भ) அல்லது பேரண்ட புருஷன் என்பது வேதாந்த சாத்திர நூல்களில், சூக்கும நிலையிலுள்ள, படைப்பிற்கு முற்பட்ட உலகமானது, ஒளிர்ந்து கொண்டிருக்கும் தங்க முட்டைக்கு உவமையாக காட்டப்படுகிறது. பிரபஞ்சத்தை தன்னுடைய கர்ப்பத்தில் வைத்துக் கொண்டிருக்கும், படைப்புத் தொழிலைச் செய்யும் பிரஜாபதியான நான்முகன் எனும் பிரம்மாவே **ஹிரண்யகர்பன்** ஆவார்.

பூ: என்றால் பூமி, அதாவது நாம் வாழும் உலகம். புவ: என்றால் பித்ரு லோகம், அதாவது, இறந்த முன்னோர் வாழும் உலகம். ஸுவ: என்றால் சொர்க்க லோகம் அதாவது தேவர்கள் வாழும் உலகம். இவைகள் ஒன்றை விட அடுத்தது நுண்ணியது. இந்த உலகங்கள் வேறு எங்கோ இருப்பவைகள் அல்ல. இவைகள் எல்லாம் இங்கேயே உள்ளன. ஆனால், அவைகள் நம்முடைய வேறு ஒரு உணர்வு நிலைகளில் உள்ளன.

பூமியிலிருந்து மாறுபட்ட, நுண்ணிய உணர்வுநிலையில் பித்ரு லோகம் உள்ளது. அதுப்போலவே, பித்ரு லோகத்திலிருந்து மாறுபட்ட நுண்ணிய உணர்வு நிலையில் உள்ளது சொர்க்க லோகம். இத்தகைய உலகங்களைச் சிந்திக்கச் சொல்வதன் மூலம் பல்வேறு உணர்வுநிலைகளைச் சிந்திக்குமாறு நமக்கு இங்கு உணர்த்தப்படுகிறது.

மூன்று உணர்வு நிலைகளைக் கூறி விட்டு, **மஹ:** என்ற நான்காவது ஒன்றை **மஹாசாமர்** என்ற ரிஷி அனுபூதியில் உணர்ந்து கூறியதாக இந்த மந்திரம் தெரிவிக்கிறது.

**மஹ:** என்ற இந்த நான்காவது உணர்வுநிலை எது?

அது மற்ற மூன்றையும் உள்ளடக்கியது; அதே வேளையில் அவற்றைக் கடந்தது.

எப்படி?

உடம்பையும் அங்கங்களையும் போல், கை, கால், காது என்ற பல அங்கங்களைத் தொகுத்தால் உடம்பாகி விடாது. அதே வேளையில் உடம்பு என்றால், இவைகள் அனைத்தும் சேர்ந்தது. அங்கங்கள் இணைவதுடன் உயிரும் சேரும் போதுதான் அதை உடம்பு என்று கூற முடியும். அதாவது, உடம்பு என்றால் அங்கங்கள் சேர்ந்தது. அதே வேளையில் அவற்றைக் கடந்ததும் கூட.

அதுப்போல, **மஹ:** என்ற இந்த நான்காம் உணர்வு நிலை மற்ற மூன்றும் ஒன்று சேர்ந்தது என்றாலும், அவற்றைக் கடந்ததும்கூட. **அதுவே இறைவன்**. எங்கும் நிறைந்த அந்த இறைவனே மனிதர்களாகிய நம்மிடம் ஆத்மாவாக உள்ளார். எனவே, மூன்று உணர்வுநிலைகள், அவற்றின் மொத்தமும் அவற்றைக் கடந்தவருமான இறைவன், நம்முள் உள்ள ஆத்மா ஆகியவற்றைச் சிந்திக்கச் சொல்கிறது இந்த மந்திரம்.

பிரம்ம தேவர் மூன்று சப்தங்கள் எழுப்பினார். அவைகள் **பூ, புவ, ஸுவ** இவைகளை மூன்று **வ்யாஹிருதிகள்.** இவற்றைக் கடந்து **மஹாசமர்** என்ற ஒரு ரிஷி **மஹ**: என்ற நான்காவது வ்யாஹிருதியை வெளிப்படுத்தினார். யாக்ஞவல்கிய ஸ்மிருதியின்படி, காயத்ரி மந்திரத்திற்கு முன் 7 வ்யாஹ்ருதிகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு வ்யாஹ்ருதியிலும் **"ஓம்"** என்ற எழுத்து கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும்.

**வ்யாஹிருதி** என்ற சொல்லுக்கு நான்கு அர்த்தங்கள் உண்டு.

அவைகள்:

1. உச்சாரணம் – பிரம்மாவின் வாயினால் உச்சரிக்கப்பட்டதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.
2. விதவிதமான கர்மங்களில் உபயோகப்படுத்தப்படும்.
3. ஹரதி பாபானி – இதை உச்சரிப்பதால் நமது பாவங்கள் நீங்கி விடுகின்றது.
4. மேலும், இவைகள் எல்லாமே மங்கல சப்தங்கள்.

**அனுவாகம் – 5.2**

முதல் சிந்தனை: **சமுதாயம்**

பூரிதி வா அயம் லோக: । புவ இத் யந்தரிக்ஷம் ।
ஸுவரித்யஸௌ லோக: । மஹ இத்யா தித்ய: ।
ஆதித்யேன வாவ ஸர்வே லோகா மஹீயந்தே ॥ 5.2 ॥

பொருள்:

பூ: என்பது பூமி. புவ: என்பது வானம். ஸுவ: என்பது மறு உலகம்; மஹ: என்பது சூரியன். சூரியனால்தான் எல்லா உலகங்களும் வாழ்கின்றன.

**இது அதிலோக தியானம்.**

பூ என்ற வ்யாஹ்ருதியில் இந்த உலகத்தையும், புவ என்பதில் இடையிலுள்ள உலகங்களையும், ஸுவ என்பதில் சுவர்க்க லோகத்தையும், மஹ என்பதில் சூரியனையும் தியானிக்க வேண்டும்.

**பூமி, வானம், மறு உலகம், சூரியன்** ஆகியவைகள் இங்கே சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக இனி வரும் மந்திரங்கள் சிந்தனை செய்வதாகவும் பார்க்கின்றோம், மேலும் அவைகள் இந்த சமுதாயத்தைப் பற்றிய சிந்தனைகள் என்பதாகவும் பார்க்க முடிகின்றது.

எப்படி?

பூமி என்பது ஒரு ஜடப்பொருள் அல்ல, இதில் மற்ற சீவர்களுடன் மனித சமுதாயம் வாழ்கின்றது. அந்த வகையிலே, நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களுடன் நமது உறவு ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். அப்போது மட்டுமே, உயர் வாழ்வைப் பற்றிய உண்மையை நாம் சிந்திக்க முடியும். நம்மைச் சுற்றிலும் வாழ்பவர்களின் எண்ணங்களும், சிந்தனைகளும் நம்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன.

அவர்கள் நம்மை பற்றி நல்லெண்ணம் கொண்டால், அவைகள் நமது உயர் சிந்தனைகளுக்கு சாதகமாக அமையும். இல்லாவிடில் பாதகமாகிவிடும். எனவே, மனித சமுதாயத்துடன் நல்லுறவு கொள்ள வேண்டும் என்பது இந்தச் சிந்தனையின் முதற்பகுதி.

வானமும், மறு உலகமும் மரணத்திற்குப் பின்னால் உள்ள வாழ்க்கையைக் குறிக்கின்றன. இந்த உலகுடன் எல்லாம் முடிந்து விடுவதில்லை. மரணம் என்பது மனித உடலுக்கான ஒரு நிலை மாற்றம் மட்டுமே. மரணத்திற்குப் பின்பும், நமது வாழ்க்கை தொடர்கிறது. மரணத்தைப் பற்றி சிந்திப்பது இப்போதைய வாழ்க்கையை நெறிப்படுத்த வகை செய்கிறது.

கண்கண்ட கடவுளாக சூரியன் போற்றப்படுகிறான். வானமும், பூமியும் எல்லா உயிரினங்களும் வாழ்வதும், வளம் பெறுவதும் சூரியனால்தான். சூரியனைப் போற்றுகின்ற பல துதிகளை வேதங்களில் நாம் காண்கிறோம். எனவே, சூரியனைத் துதிப்பதும் இந்தச் சிந்தனையின் ஓர் அங்கமாக வைக்கப்பட்டுள்ளது.

**அனுவாகம் – 5.3**

இரண்டாம் சிந்தனை: **இயற்கையுடன் இயைந்த வாழ்வு**

பூரிதி வா அக்னி: I புவ இதி வாயு: I ஸுவரித்யாதித்ய: I மஹ இதி
சந்த்ரமா: I சந்த்ரமஸா வாவ ஸர்வாணி ஜ்யோதீகம்ஷி மஹீயந்தே II 5.3 II

பொருள்:

பூ: என்பது நெருப்பு. புவ: என்பது காற்று. ஸுவ: என்பது சூரியன். மஹ: என்பது சந்திரன். சந்திரனால்தான் எல்லா உயிரினங்களும் வளர்கின்றன.

நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன் ஆகியவை இங்கே சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவை இயற்கையின் பல்வேறு அம்சங்கள். எனவே, இது இயற்கையுடன் இணைந்த வாழ்வு பற்றிய சிந்தனை எனலாம்.

சந்திரனுக்கும் உயிரினங்களின் வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. 'உயிர்ச்சக்தி வடிவாகிய சந்திரனாக ஆகி செடிகொடிகளை எல்லாம் வளர்க்கிறேன்' என்று கீதை இதை விளக்குகிறது. செடிகொடிகள் மட்டுமல்ல, உயிரினங்கள் அனைத்தும் வளர்வதற்கான சக்தியைச் சூரியனிலிருந்து பெறுகின்றன. தனித்தன்மைக்கான உயிர்ச்சக்தியை – உதாரணமாக மூலிகைச் செடிகள் தங்கள் குணப்படுத்தும் ஆற்றலை – சந்திரனிடமிருந்து பெறுகின்றன. சூரிய சக்தியும் சந்திர சக்தியும் சேர்ந்து செடிகளை வளர்க்கின்றன. அந்த இரண்டும் இறைவனிடமிருந்தே வருகின்றன. எனவே முந்தின மந்திரம் சூரியனையும் இந்த மந்திரம் சந்திரனையும் சிந்திக்குமாறு கூறுகின்றன.

**இது அதிதெய்வ தியானம்.**

பூ என்ற வ்யாஹ்ருதியில் அக்னியையும், புவ என்பதில் வாயுவையும், ஸுவ என்பதில் சூரிய தேவதையையும், மஹ என்பதில் சந்திரனையும் தியானிக்க வேண்டும்.

நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன் ஆகியவை இங்கே சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவை இயற்கையின் பல்வேறு அம்சங்கள். எனவே, இது இயற்கையுடன் இயைந்த வாழ்வு எனலாம்.

சந்திரனுக்கும் உயிரினங்களின் வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. 'உயிர்ச்சக்தி வடிவாகிய சந்திரனாக ஆகி, செடி கொடிகளை எல்லாம் வளர்க்கிறேன் என்று கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்.

செடி கொடிகள் மட்டுமல்ல, உயிரினங்கள் அனைத்தும் வளர்வதற்கான சக்தியைச் சூரியனிலிருந்து பெறுகின்றன. தனித்தன்மைக்கான உயிர்ச் சக்தியை உதாரணமாக, மூலிகைச் செடிகள் தங்கள் குணப்படுத்தும் ஆற்றலை சந்திரனிடமிருந்து பெறுகின்றன.

சூரிய சக்தியும், சந்திர சக்தியும் சேர்ந்து செடி, கொடிகளை வளர்கின்றன. அந்த இரண்டும் இறைவனிடமிருந்தே வருகின்றன. எனவே, முந்தின மந்திரம் சூரியனையும், இந்த மந்திரம் சந்திரனையும் சிந்திக்குமாறு கூறுகின்றன.

**அனுவாகம் – 5.4**

மூன்றாம் சிந்தனை: **அறிவு**

பூரிதி வா ரிச: I புவ இதி ஸாமானி I ஸுவரிதி யஜும்ஷி I மஹ இதி
ப்ரஹ்ம I ப்ரஹ்மணா வாவ ஸர்வே வேதா மஹீயந்தே II 5.4 II

பொருள்:

பூ: என்பது ரிக் வேதம். புவ: என்பது சாம வேதம். ஸுவ: என்பது யஜுர் வேதம். மஹ: என்பது ஓங்காரம். ஓங்காரத்தால்தான் எல்லா வேதங்களும் மகிமை பெறுகின்றன.

ரிக், சாம, யஜுர் வேதங்களும் ஓங்காரமும் இங்கே சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. வேதம் என்றால் அறிவு. இது அறிவின் முக்கியத்துவத்தைப் பற்றிய சிந்தனை எனலாம்.

அறிவு, உணர்ச்சிகள் இரண்டும் மனித வாழ்வின் அடிப்படையாக உள்ளன. சாதாரண மனிதனின் வாழ்க்கை அன்பு, பாசம், கோபம், வெறுப்பு என்று உணர்ச்சிகளுடன் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. அறிவு அவனது வாழ்க்கையில் மிகவும் அபூர்வமாகவே ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால், அறிவை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்ற செயல்கள் மட்டுமே சிறந்த பலனைத் தருகிறது என்று சாந்தோக்ய உபநிஷதம் கூறுகிறது.

செயல்கள் மட்டும் என்றல்ல, உணர்ச்சிகள் கூட அறிவைப் பின்னணியாகக் கொள்ளும்போது மட்டுமே மனிதனைச் சரியான பாதையில் செலுத்த முடியும்.

ஓங்காரம் என்பது உலகின் ஒட்டுமொத்த அறிவின் சின்னம். **அ+உ+ம்=ஓம்**. வாயைத் திறக்கும் போதே 'அ' உச்சரிக்கப்பட்டு விடுகிறது' 'ம்' என்பதுடன் வாய் மூடப்படுகிறது. அதன் பிறகு எந்த வார்த்தையையும் உச்சரிக்க முடியாது. எனவே, அனைத்து வார்த்தைகளும் ஓம் என்பதில் அடக்கம். வார்த்தையின்றி சிந்தனையில்லை. சிந்தனையின்றி அறிவு இல்லை. எனவே, **ஓம்** என்பது அறிவின் சின்னமாகக் கொள்ளப்படுகிறது.

அறிவிற்கான தாகம் வேண்டும். அது பற்றிய சிந்தனை இது.

**இது அதிவேத தியானம்.**

பூ என்ற வ்யாஹிருதியில் ரிக் வேதத்தையும், புவ என்பதில் சாம வேதத்தையும், ஸுவ என்பதில் யஜுர் வேதத்தையும், மஹ என்பதில் பிரம்மத்தையே ஓங்காரமாக அங்கியாக தியானிக்க வேண்டும்.

ரிக், சாம, யஜூர் வேதங்களும் ஓங்காரமும் இங்கே சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. வேதம் என்றால் அறிவு. எனவே இது அறிவின் முக்கியத்துவம் பற்றிய சிந்தனை எனலாம்.

அறிவு, உணர்ச்சிகள் இரண்டும் மனித வாழ்வின் அடிப்படையாக உள்ளன. சாதாரண மனிதனின் வாழ்க்கை அன்பு, பாசம், கோபம், வெறுப்பு என்று உணர்ச்சிகளுடன் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. அறிவு அவனது வாழ்க்கையில் மிகவும் அபூர்வமாகவே ஆதிக்கம் செலுத்துகிறது.

ஆனால் **அறிவை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்ற வேலை மட்டுமே மிகச் சிறந்த பலனைத் தருகிறது** என்று சாந்தோக்ய உபநிஷதம் கூறுகின்றது.

வேலை என்றல்ல, உணர்ச்சிகள் கூட அறிவைப் பின்னணியாகக் கொள்ளும் போது மட்டுமே மனிதனைச் சரியான பாதையில் செலுத்த முடியும்.

ஓங்காரம் என்பது உலகின் ஒட்டு மொத்த அறிவின் சின்னம். **அ+உ+ம் = ஓம்**. வாயைத் திறக்கும் போதே 'அ' உச்சரிக்கப்பட்டு விடுகிறது. 'ம்' என்பதுடன் வாய் மூடப்படுகிறது. அதன் பிறகு எந்த வார்த்தையையும் உச்சரிக்க முடியாது. எனவே அனைத்து வார்த்தைகளும் **'ஓம்'** என்பதில் அடக்கம். வார்த்தையின்றி சிந்தனை இல்லை. சிந்தனையின்றி அறிவு இல்லை. எனவே **ஓம்** என்பது அறிவின் சின்னமாகக் கொள்ளப்படுகிறது.

**அனுவாகம் – 5.5**

நான்காம் சிந்தனை: **உடம்பு**

பூரிதி வை ப்ராண: இ புவ இத்யபான: । ஸுவரிதி வ்யான: ।
மஹ இத்யன்னம் । அன்னேன வாவ ஸர்வே ப்ராணா மஹீயந்தே ॥ 5.5 ॥

பொருள்:

பூ: என்பது பிராணன். புவ: என்பது அபானன். ஸுவ: என்பது வியானன். மஹ: என்பது உணவு. உணவினால்தான் எல்லா பிராணன்களும் இயங்குகின்றன.

பிராணன், அபானன் போன்றவை இங்கே சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளபடுகின்றன. இவை உடம்பிலுள்ள இயக்க சக்திகள். பிரபஞ்சத்தை இயக்குகின்ற பிராண சக்தியே நம்மில் நமது உடலையும் மனத்தையும் இயக்குகின்ற பிராணனாகச் செயல்படுகிறது. இந்தப் பிராணன் பத்து விதமாக நமது உடம்பையும் மனத்தையும் இயக்குவதாகக் கூறப்படுகிறது:


எனவே, இது உடம்பு பற்றிய சிந்தனை எனலாம். உடம்பு பற்றி ஒரு சிந்தனையா? ஆம், ஏனெனில் உடல் சீர்கெட்டால் உயர்ஞானம் பெற வழியில்லை என்கிறார் திருமூலர். உடம்பு ஆரோக்கியமாக இருப்பதில் நம்மிடமுள்ள பிராணசக்தி பெரும்பங்கு வகிக்கின்றன. இந்த பிராண சக்தியைத்தான் **உயிர் ஆற்றல்** என்கிறோம்.

இந்த பிராணனை தியானித்தல் இங்கு அறிவுறுத்தப்படுகின்றது. அதாவது, நம் உள்ளேயும், வெளியேயும் போய்வந்துக் கொண்டிடுக்கின்ற மூச்சுக் காற்றில் கவனத்தை வைத்து அதை சிந்திப்பது ஒரு வகை தியானம் என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

**இது அதிப்ராண தியானம்.**

பூ என்ற வ்யாஹ்ருதியில் பிராணனையும் (வெளியே செல்லும் காற்று), புவ என்பதில் அபானனையும் (உள்ளே செல்லும் காற்றையும்), ஸுவ என்பதில் வியானனையும் (ரத்தத்தை உடல் முழுவதும் எடுத்து செல்லும் காற்று), **மஹ** என்பதில் அன்னத்தையே அங்கியாக தியானிக்க வேண்டும். பிராணன், அபானன் போன்றவை இங்கே சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவைகள் உடம்பிலுள்ள இயக்க சக்திகள்.

பிரபஞ்சத்தை இயக்குகின்ற பிராண சக்தியே நம்மில் நமது உடலையும், மனத்தையும் இயக்குகின்ற பிராணனாகச் செயல்படுகிறது. இந்தப் பிராணன் பத்து விதமாக நமது உடம்பையும், மனத்தையும் இயக்குவதாகக் கூறப்படுகிறது.



*உடலில் பிராண சக்திகள்*
*நிலைகொண்ட இடங்கள்*

**பிராணன்** – மேல் நோக்கிய இயக்கம்

**அபானன்** – கீழ் நோக்கிய இயக்கம்

**வியானன்** – எல்லா பக்க இயக்கம்

**உதானன்** – மரண வேளையில் உயிர் வெளியேற உதவுதல்
**ஸமானன்** – உணவு ஜீரணம், உணவை ரத்தம் போன்றவையாக மாற்றுதல்
**நாகன்** – வாந்தி, ஏப்பம்
**கூர்மன்** – கண் இமைகளின் இயக்கம்
**க்ருகலன்** – பசி
**தேவதத்தன்** – கொட்டாவி
**தனஞ்ஜயன்** – உடம்பிற்கு ஆரோக்கியம் அளித்தல். எனவே, இது உடம்பு பற்றிய சிந்தனைகள் எனலாம்.

ஆம்! உடம்பு நோயினால் சீர் கெட்டால் உயர் ஞானம் பெற வழியில்லை. என்கிறார் திருமூலர். உடம்பு ஆரோக்கியமானதாக இருப்பதில் மூச்சு எனும் பிராணசக்தி பெரும் பங்கு வகிக்கின்றன. மூச்சுக் காற்றின் சம நிலை குலையும்போது நோய் உண்டாகிறது. ஆகவே, மூச்சை முறையாகப் பரிமாரித்தல் என்பது, நுரையிரலுக்கு சென்றுவரும் பிராண – அபான காற்றை கவனம் வைத்து செய்யப்படும் வேள்வி மனதையும் அமைதிப்படுத்தி, நம்மை ஆரோக்கியமாக வாழ வைக்கின்றது என்பதையும் நாம் காண்கின்றோம்.

பிராணனைக் கையாள்வது எப்படி?

பொதுவாக, பிராணாயாமம் என்பது நல்லொழுக்க வாழ்வின் அடிப்படையில் செய்ய வேண்டிய சாதாரண நாடி சுத்தி முறையில் செய்யப்படுகின்ற மூச்சுப் பயிற்சிகள். மேலும், இத்தகைய பிராணன்கள் நம் உடலில் இயங்குவதற்கு உணவு தேவை. உணவிலிருந்து பெறப்படும் ஆற்றல் இல்லையென்றால், பிராணனின் இயக்கம் இல்லை, நமக்கு வாழ்க்கையும் இல்லை. அதனால்தான் உபநிஷதம், பகவத்கீதை என்று நமது சாஸ்திரங்களில் மிகப் பெரும்பாலானவையும் உணவு பற்றி விரிவாக ஆராய்கின்றன.

'உணவு தூயதாக இருக்குமானால் மனம் பற்றின்றி, பொறாமையின்றி, மன மயக்கமின்றி மற்ற பொருட்களுடன் அறம் சார்ந்து தொடர்பு கொள்ள முடியும். அப்போது மனமும் தூய்மை அடைகிறது. இதன் காரணமாக, இடைவிடாத இறைநினைவு மனதில் எழுகிறது.

மனதின் உணவு எது?

சிந்தனைகள் மட்டுமே மனதின் உணவுகள். அதனால், நல்ல உணவு என்பதின் அடிப்படையில், நல்ல சிந்தனைகளை மட்டுமே நம் மனதில் கொள்ள வேண்டும் என்பது இங்கே குறிப்பிடப்படுகிறது.

உடம்பு பற்றிய இந்த ஆழ்நிலைச் சிந்தனையில் நல்லொழுக்க வாழ்வு, உணவு இரண்டும் சிந்தனைப் பொருட்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**'தேஹம் அன்னமயம்'** என்று நம் சாஸ்திரங்கள் சொல்கின்றன. இதன் பொருள் உடல் அன்னத்தால் ஆனது. வேறெதற்கும் இல்லாத ஒரு பெருமை அன்னத்துக்கு உண்டு. ஒரு மனிதனுக்கு இயங்கும் தன்மையை உணவு மட்டுமே கொடுக்க முடியும். அத்தகைய உணவிலும் சத்துவகுணம் பிரதானமாகக்கொண்ட **காய்கறிகள், கீரைகள்** மற்றும் **பழங்கள், தானியங்கள்** என இருப்பது சிறப்பு. மேலும், நாம் சமைத்து உண்ணும் உணவுகளில் உப்பு, காரம் குறைவாக இருக்க வேண்டும்.

ஆழ்நிலைச் சிந்தனைகளின் பலன்:

தா வா ஏதாச்சதஸ்ரச் சதுர்தா । சதஸ்ரச்சதஸ்ரோ வ்யாஹ்ருதய: ।
தா யோ வேத । ஸ வேத ப்ரஹ்ம । ஸர்வேஅஸ்மை தேவா
பலிமாஹவந்தி ॥ 5.6 ॥

பொருள்:

இவையே நான்கு சேர்க்கைகள். நான்கு வ்யாஹ்ருதிகளும் நான்கு வழிகளில் சிந்திக்கப்படும்போது பதினாறு வகையான ஆழ்நிலைச் சிந்தனைகள் ஆகின்றன. இந்த பதினாறு வகைச் சிந்தனைகளை அறிந்தவன் இறைவனை அறிய வல்லவன் ஆகிறான். அவனுக்கு எல்லா தேவர்களும் பரிசுகளைக் கொண்டு செல்கிறார்கள்.

வ்யாஹ்ருதி சிந்தனைகள் நான்கு உள்ளன.

**பூ:** பூமி, நெருப்பு, ரிக் வேதம், பிராணன்
**புவ:** வானம், காற்று, சாம வேதம், அபானன்
**ஸுவ:** மறுவுலகம், சூரியன், யஜுர் வேதம், வியானன்
**மஹ:** சூரியன், சந்திரன், ஓங்காரம், உணவு

இங்கே, ஒவ்வொரு வ்யாஹ்ருதியும் நான்கு, நான்கு விஷயங்களாக உருவகிக்கப்பட்டு, மொத்தம் **பதினாறு விஷயங்கள்** உள்ளன. இந்தச் சிந்தனைகளில் தேர்ச்சி பெறுபவன் வெற்றியை அடைபவன் இறைவனை அறிய வல்லவன் ஆகிறான்.

இதன் பொருள் என்ன?

வாழ்க்கைக் கல்வியின் அடிப்படை அம்சங்கள் பற்றி படிப்படியாகக் கூறி வருகின்ற நிலையில் இங்கு இந்த உபநிஷதம் 16 வகையான சிந்தனைகள் தியானத்தைப் பற்றிக் கூறுகிறது. இதுவரை கூறிய ஆழ்நிலைச் சிந்தனைகளில் வெற்றி பெறுபவன் உண்மையாக தியானம் செய்ய வல்லவன் ஆகிறான். தியானம் என்பது மனத்தளவில் செய்யப்படுகின்ற பயிற்சி மட்டுமல்ல. நமது ஆளுமையின் எல்லா அடுக்குகளிலும் செயல்பட்டு, நம்மை இறையனுபூதிக்கே தகுதியாக்க வல்ல ஒரு கருவியாகும். ஆனால், அதை உண்மையான பரிமாணங்களை உணர்ந்து, உரிய ஆயத்தங்களைச் செய்தபிறகு, அதில் ஈடுபட வேண்டும். ஆழ்நிலைச் சிந்தனைப் பயிற்சிகள் அந்தத் தகுதியை நமக்குத் தருகின்றன.

நாம் ஏன் அதுப்போல செய்ய இயலவில்லை?

சித்தர் பெருமக்கள் மற்றும் ஞானிகள் உடம்பின் சக்தியை சேமித்து வைத்து அதைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடப் பயிற்சி பெற்றுள்ளனர். அதுப்போல மனதின் சக்தி அதிகரிப்பதற்கும், உடல் தூய்மை பெறுவதற்கும், மிக முக்கியமான ஒன்று பிராணாயாமம் எனலாம். இத்தகைய பிராணாயாமத்தின் மூலமே பண்டைய ரிஷிகள் நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் என்று பார்க்கப்படுகின்றது.

இதன் பின்னணி என்ன?

ஒரு மனிதன் பிறக்கும் போதே, அவன் இறக்கும் நேரமும் எழுதப்பட்டு விடுவதாகச் சொல்லப்படுகிறது அல்லவா? அது உண்மையில் வயதி அடிப்படையில் கூறமுடியாது என்கின்றனர் பண்டைய ரிஷிகள். அதாவது, ஒவ்வொரு மனிதனுக்கும் இத்தனையாவது மூச்சு முடிவடையும்போது, அவன் உடல் மரணமடைகின்றது என்பதை நம் ரிஷிகள் ஆராய்ந்து அறிந்து வைத்திருந்தார்கள். அந்த வகையிலே, நம்முடைய சுவாசம் ஒரு விநாடிக்கு இத்தனை முறை மூச்சுக்காற்று உடலின் உள்ளே போய் வருகின்றது. அந்த மூச்சைக் கையாளும் முறையில் நமது மனம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

அதாவது, மனம் எப்போதும் பரபரப்பாக இருக்குமாயின் நமது மூச்சும் தாறுமாறாக உடலின் உள்ளே போய் வந்துக் கொண்டிருக்கும், அதுவும் அடிக்கடி கோபம் வந்தால், அந்த மூச்சானது இன்னும் வேகமாக உடலின் உள்ளே போய்வரும். இதன் காரணமாக, அதிகமாக மூச்சுக்காற்று விரையமாகி, இந்த உடல் விரைவில் அழிகின்றது. அதுவே, விழித்துக் கொண்ட விவேகத்தினால், மனிதன் தன் வாழ்க்கையை சரியாக வாழும்போது, அவனது மூச்சுக் காற்றும் பரமாரிக்கப்படுகின்றது. அதாவது, தேவையிலாமல் மூச்சு, தஸ், புஸ் என்று வெளியேறி, அவனுக்கு வீணான மன உழைச்சலை கொடுக்காமல் பார்த்துக் கொள்ளும்.

ஆக, ஒருவனுக்கு மரணம் என்பது, இத்தனையாவது வயதில் என்பதைவிட, இத்தனையாவது மூச்சில் என்றால், அது சரியாக இருக்கும் என்பதாகவே நம் சித்தர் பெருமக்கள் பார்த்தனர். அந்த வகையிலே, நாம் ஒரு நிமிடத்திற்கு இருபது சுவாசத்தை உள்ளேயும், வெளியேயும் விடுவதாகக் கொள்வோம். அதையே நம்முடைய பண்டைய ரிஷிகள் பிராணனைக் கையாளும் விதமாக, சுவாசத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து ஒரு நிமிடத்திற்கு நான்கு சுவாசமாக ஆக்கிக் கொண்டார்கள், அதன் வாயிலாக நீண்ட நெடு நாட்கள் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம்.

சாதாரண மனிதன் அறுபது வயதில் இறக்க நேர்ந்தால், அதே அளவு சுவாசத்துடன் பிறக்கக் கூடிய ஒரு ரிஷி சுவாசத்தை சரியாகக் கையாள்வதின் மூலம் தன் வாழ்நாளை அதிகப்படுத்திக் கொண்டு வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறிய முடிகின்றது. உதாரணமாக, ஒரு நாழிகைக்கு 360 சுவாசங்கள் என்பது திருமூலம் கணக்கு. அதாவது, 24 நிமிடங்களுக்கு 360 சுவாசங்கள் என்றால் 60 நிமிடங்கள் ஒரு மணி நேரம் எனும்போது, 900 சுவாசங்கள் வீதம் ஒரு மணி நேரத்திற்கு நாம் மூச்சைக் கையாளுகின்றோம். ஆக, ஒரு நாள் என்பது 24 மணி நேரம் எனும்போது, 24 X 900 = 21,600 சுவாசங்களை நாம் சுவாசிக்கின்றோம் என்பது எல்லோருக்கும் இருக்கும் நடைமுறை உண்மை.

ஆனால், எல்லோரும் இதுப்போன்றே சுவாசிக்கின்றோமா? என்றால் இல்லை. சிலருக்கு வேலைப்பளு, மன உழைச்சல் மற்றும் கோபம் போன்றவைகளால் இவைகள் மாறி, 21,600 சுவாசங்களுக்கு மேலாக இன்னும் அதிகமாகவும் மூச்சு விரையம் ஆகலாம் என்பதைப் பார்க்க முடிகின்றது. இதன் அடிப்படையில் ஒரு மனிதனுக்கு 120 ஆண்டுகள் ஆயுட்காலம் என்றால், அவனது மூச்சு அதிகமாக விரையமாக்கப்படுவதால், அவனது ஆயுள் 120 லிருந்து பாதியாக 60, 70 என்பதாகவும் குறைந்து விடுவதைக் காண முடிகின்றது.

திருமூலர் கூறிய முறையில் மூச்சுப்பயிற்சி செய்யும் பொழுது, 12 அங்குலம் காற்றை உள்ளிழுத்து 8 அங்குலம் உள்ளே நிறுத்தி, 4 அங்குலம் வெளிவிட வேண்டும். இதே முறையில் ஒருவனுக்கு சுவாசம் தொடர்ந்தால், அவனது ஆயுள் 120 ஆண்டுகள் என்பது அவரது ஆய்வு. அதிலே 1 அங்குலம்=2.54 சென்டிமீட்டர் அல்லது 1 இஞ்ச் எனலாம்.

**நம்முள் நடக்கும் சுவாச அளவுகள்:**

அமர்ந்திக்கும்போது 12 அங்குலம்
நடக்கும்போது 16 அங்குலம்
ஓடும்போது 25 அங்குலம்
உறங்கும்போது 36 அங்குலம்
உடலுறவு கொள்ளும்போது 64 அங்குலம் என மூச்சு செலவாகின்றது.

**நம்மிடம் சுவாசம் குறைத்தால் ஏற்படும் நன்மைகள்:**

11 அங்குலமாக குறைந்தால் உலக இச்சை நீங்கும்.
10 அங்குலமாக குறைந்தால் ஞானம் உண்டாகும்.
9 அங்குலமாக குறைந்தால் விவேகி ஆவான்.
8 அங்குலமாக குறைந்தால் தூர திருஷ்டி காண்பான்.
7 அங்குலமாக குறைந்தால் ஆறு சாஸ்திரங்கள் அறிவான்.
6 அங்குலமாக குறைந்தால் ஆகாய நிலை அறிவான்.
5 அங்குலமாக குறைந்தால் காயசித்து உண்டாகும்.
4 அங்குலமாக குறைந்தால் அட்டமாசித்து உண்டாகும்.
3 அங்குலமாக குறைந்தால் நவகண்ட சங்காரம் உண்டாகும்.
2 அங்குலமாக குறைந்தால் கூடுவிட்டு கூடுபாய்தல்.
1 அங்குலமாக குறைந்தால் ஆன்ம தரிசனம்.
உதித்த இடத்திலேயே நிலைத்தால் சமாதி நிலை.

பொதுவாக, நாம் மூச்சை சுவாசப்பயிற்சிகளாகக் கையாண்டு, நம் ஆயுளை நீடிக்க எடுக்கின்ற முயற்சிக்கூட நம் அன்றாட உடல் அசைவின் காரணமாக மூச்சு இன்னும் அதிகமாக விரையம் ஆவதைத்தான் நடைமுறையில் பார்க்கின்றோம். அதுவே, ஸ்தூல மூச்சின் சூக்கும மனம் ஆசைகளை அறியும்போது, அடைகின்ற சாந்தி மட்டும்தான் மூச்சையும் முறையாகக் கொண்டிருக்கும் என்பதையும் பார்க்கின்றோம்.

மனமென்னும் மாடடங்கில் தாண்ட வக்கோனே, முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்ட வக்கோனே.

சினமென்னும் பாம்பிறந்தால் தாண்டவக்கோனே யாவும்
சித்தியென்றே நினையேடா தாண்ட வக்கோனே.

ஆக, நமது மனம் அடங்கினால் நமது மூச்சு அடங்கும் என்பதும் தெளிவாகின்றது.

முன்னொரு காலத்தில் ஒரு மன்னனுக்கு சித்தர்களின் மனதை அடக்கும் இரகசியத்தை கற்கவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. உடனே தனது படை பரிவாரங்களோடு காட்டிலே வாழும் முனிவர் ஒருவரை சந்திக்க அவரது ஆசிரமம் சென்றான். பொன் மற்றும் நவரத்தினங்களை அவரது பாதத்தில் காணிக்கையாக வைத்து, தமக்கு மனதை அடக்கும்சித்த வித்தையை கற்றுத்தருமாறு வேண்டினான்.

முனிவரும் கற்றுத்தருவதாக வாக்களித்தார். **"சரி முதலில் இந்த மண் சட்டியில் தண்ணீர் கொண்டு வா"** என்று, அருகில் இருந்த ஒரு சட்டியைக் காட்டினார்.

அரசனும் அடிபணிந்து சட்டியை கையிலேந்தினான், குரு வாயிற்றே! *"நேராக சென்று தடாகத்திலே பூத்திருக்கும் ஒரு தாமரை மலரை கொய்து இதிலே போட்டு எடுத்து வா"* என்றார். மன்னனும் அவ்வாறே செய்தான். சட்டியை கீழே வைக்கச் சொன்னார். பின்னர் மன்னனிடம் *"இந்த தாமரையைத் தொடாமல் உன்னால் அசைக்க முடியுமா?"* என்றார். மன்னன் சற்று யோசித்து விட்டு லேசாக காற்றை ஊதி அந்த தாமரையை அசைத்தான். அனால் முனிவரோ *"காற்றை ஊதினாலும் நீ அதை நேராக தொடுவதற்கு சமம்"*. ஆதனால், நீ **"வேறுவழியை யோசி"** என்றார்.

சிலநேரம் யோசித்த மன்னன், முனிவர் எதோ வித்தை கண்பிக்கப்போகிறார், அதனால் அவரிடமே சரணடைந்து விடுவோம் என்று எண்ணி, *"குருவே தாங்களே தாமரையை அசைக்கும் கலையைக் கூறுங்கள்"* என்றான். லேசாகப் புன்னைகத்தவரே முனிவர் அந்த தாமரையை தொடாமல் மண் சட்டியைப் பிடித்து ஆட்டினார். அதனுடன் சேர்ந்து தாமரையும் அசைந்தது!. முனிவர் எதோ வித்தை கற்பிப்பார் என்று எண்ணிய மன்னனுக்குஇது பெரும் ஏமாற்றமாகத் தோன்றியதால் சற்று கோபத்துடன், *"குருவே தாங்கள் என்னை ஏளனம் செய்கிறீர்களா?"* என்றான் .உடனே, எந்த ஒரு சலனமும் இல்லாமல் குருவும் பேச ஆரம்பித்தார்.

"நமது உடல் இந்த சட்டியைப் போன்றது, அதிலே உள்ள தாமரைதான் நமது மனம். இந்த இரண்டையும் இணைக்கும் நீர்தான் நமது உடலிலே சதா நேரமும் இயங்கும் பிராணன். இந்த மனதை நேரிடையாகத் தொட முடியாது. ஆனால் சட்டியை அசைத்து எவ்வாறு தாமரையை அசைத்தோமோ? அதுப்போல, நமது மூச்சின் அசைவைக் கொண்டு மனதைக் கையாள முடியும்" என்ற அழமான ஒரு உண்மையை அரசனுக்கு அந்த முனிவர் உணர்த்தினார். அதாவது, *நமது உடல் எனும் சட்டியை அசைப்பதினாலும், பிராணன் எனும் நீர் அசைந்து, அந்த நீருடன் தொடர்பில் இருந்த மனம் எனும் தாமரை மலர் அசைக்கப்படுகின்றது* என்ற ஒரு உண்மையை உணர்ந்துக் கொண்ட அரசனும் தனது அறியாமையை ஒப்புக்கொண்டு, அன்றுமுதல் அனாவசியமான செயல்களைத் தவிர்த்தான்.

(ஆக, **பூ, புவ: சுவ: மஹ:** ஆகிய இவைகளே நான்கு சேர்க்கைகள். நான்கு வியாஹ்ருதிகளும் நான்கு வகைகளில் சிந்திக்கப்படும்போது, பதினாறு வகையான ஆழ்நிலைச் சிந்தனைகள் ஆகின்றன. இந்தப் பதினாறு வகைச் சிந்தனைகளை அறிந்தவன் இறைவனை அறிய வல்லவன் ஆகிறான். அவனுக்கு எல்லா தேவர்களும் பரிசுகளைக் கொண்டு செல்கிறார்கள்.)

இதை சந்தியாவந்தனம் மூலம் பார்க்கலாம். அதாவது சந்தியாகாலம் என்பது அதிகாலை, மதியம் மற்றும் மாலை நேரம் என்னும் மூன்று காலங்கள் ஆகும்.

ஸந்தியாவந்தனம் செய்ய கற்றுக் கொண்டவன் **துவிஜன்** அல்லது **இருபிறப்பாளர்** என்று அழைக்கப்படுகிறான்.

தர்ம சாஸ்திரங்கள் கூறும்போது, **"ஜன்மனா ஜாயதே சூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ:** என்று கூறுகின்றது. இதன் பொருள், எல்லோரும் பிறப்பால் சூத்திரர்களே என்றும், யாருக்கு ஞானக்கண் திறக்கப் பெறுகின்றதோ? அவனே மறுபிறப்பாளன் எனப்படுகின்றது.

ஆகவே, எல்லாவற்றையும் ஈஸ்வரார்ப்பணமாக கர்மானுஷ்டானம் செய்யத் தொடங்கிய பின்னரே, அவனை **"த்விஜன்"** என்கிறது சாஸ்திரம்.

"ஸந்த்யா விஹீநோ ஶுசிர்நித்யம் அநர்ஹ: சர்வகர்மஸு
யதன்யத் குருதே கர்ம ந தஸ்ய பலபாக்பவேத்"

ஸந்த்யாவந்தனம் செய்யாதவன் அபவித்ரன். அதாவது, பாவி எனப்படுவான். அவர்கள் ஆன்மிக கர்மாக்களில் ஈடுபடத் தகுதியில்லை. அவர்கள் எந்த யாகத்தைச் செய்தாலும் அதன் பலனை அடையமாட்டார்கள்.

ஆக, பகவத் ஞானம் கிடைக்கவேண்டுமென்றால், முதலில் மனிதானகப் பிறக்க வேண்டும். அவ்வாறு பிறந்தவன் இந்த அத்யாதம கல்வியைக் கட்டாயம் கற்க வேண்டும். அதாவது, வேதாத்யயனம் மற்றும் ஸந்த்யா உபாசனைகளைச் செய்யத் தொடங்குபவன் **"த்விஜன்"** என்ற இருபிறப்பாளன் ஆகின்றான். (அதாவது, இவனை இரண்டாவது முறை பிறந்தவன் என்கின்றோம். முதலில் தாயின் வயிற்றிலிருந்தும், இரண்டாவது முறையாக உபநயனம் செய்து கொண்டபொழுதும் என இவனது இரண்டாவது பிறவியையே இங்கு இவ்வாறு கூறப்படுகின்றது.)

ஓம் பூ: ஓம் புவ: ஓம் சுவ: ஓம் மஹ: ஓம் ஜன: ஓம் தப: ஓம் சத்யம்
ஓம் தத்சவிதுர்வரேண்யம் | பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ ந: பரசோதயாத் ||

என்ற மந்திரத்தை ஸ்மரித்துக் கொண்டு, உபாசனை செய்து முடிந்ததும், அடுத்து, நாடிசுத்தி **பிராணாயாமம்** செய்ய வேண்டும்.

இந்த மந்திரத்தின் பொருள் என்னவெனில், ஓங்காரமே பூலோகம், ஓங்காரமே புவர்லோகம், ஓங்காரமே சுவர்லோகம், ஓங்காரமே மஹர்லோகம், ஓங்காரமே ஜனலோகம், ஓங்காரமே தபோலோகம், ஓங்காரமே சத்தியலோகம், ஓங்கார பொருளான எந்தப் பரமாத்மா நம்முடைய புத்தி சக்திகளைத் தூண்டுகிறாரோ? அந்த அனைத்தையும் படைக்கிறவரான

பகவானுடைய மேலான தூய அறிவை தியானிப்போமாக. ஓங்காரமே ஜலமும் ஒளியும் ரசம் பொருந்திய அனைத்தையளிக்கும் பூமியும், உயிருக்கு ஆதாரமான வாயுவும், எங்கும் பரந்த ஆகாசமும், **பூ: புவ: சுவ:** என்ற **வ்யாஹ்ருதிகள்** குறிப்பிடும் **மனம், புத்தி, அஹங்காரம்** என்ற தத்துவங்களும் ஆகும்.

இவைகளெல்லாம் நான்கு வியாஹிருத்திகள் நான்கு விதமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு தியானத்திலும் **நான்கு வ்யாஹிருதிகள்** நான்கு விதமாக தியானிக்கப் படுகின்றது. இங்கே எந்த வரிசைப்படி சொல்லப்பட்டிருக்கின்றதோ அதே வரிசையில்தான் தியானம் செய்ய வேண்டும்.

எந்த உபாஸகர்கள் இந்த வ்யாஹிருதிகளை அறிந்து உபாஸனை செய்கிறார்களோ அவர்கள் ஹிரண்யகர்ப்பனை அறிவார்கள். இந்த உபாஸனைகளோடு அடுத்த உபாஸனையும் சேர்த்து செய்ய வேண்டும். அப்போதுதான் இது முழுமையடையும். இந்த உபாஸகனுக்கு எல்லா தேவதைகளும் பொருளைக் கொடுப்பார்கள்.

ஏனென்றால், இவன் உபாஸனை முடிவில் ஹிரண்யகர்ப்பனிடத்தில் ஐக்கியமாகி விடுகின்றான். ஹிரண்யகர்ப்பர் எல்லா தேவதைகளுக்கும் தலைவனாக இருப்பதால், அவருக்கு எல்லா தேவதைகளும் பரிசுகளைக் கொடுப்பார்கள்.

தேவர்கள் தரும் பரிசு எது?

ஆழ்நிலைச் சிந்தனைகளில் வாயிலாக தன்னுடனும் இயற்கையுடனும் இயைபுடன் வாழ மனிதன் பக்குவப்படுகிறான். அவ்வாறு பக்குவப்பட்டவனுக்காக இயற்கை தன்னைத் திறக்கிறது. தன் இரகசியங்களை வெளியிடுகிறது. இயற்கை என்று சொல்லும்போது நாம் பொதுவாக மரங்கள், மலைகள், புல்வெளிகள், நதிகள் போன்றவற்றையே கற்பனை செய்கிறோம். ஆனால், இவைகள் எல்லாம் இயற்கையின் புறவுடம்புகள் மட்டுமே. இந்தப் புறவுடம்பில் திளைக்கின்ற அகவுணர்வு ஒன்று உள்ளது. மேதைகளாகத் திகழ்ந்தவர்கள் இயற்கையின் அகவுணர்வுடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். அந்தத் தொடர்பின் மூலம் அவர்கள் இயற்கையின் இரகசியங்களை எல்லாம் அறிந்தார்கள். அத்தகைய மகரிஷிகள் அரும்பெரும் காரியங்களை எல்லாம் இந்த பூவுலகில் சாதித்தார்கள்.

'**அவர்களுக்கு தேவர்கள் பரிசுகளைக் கொண்டு செல்கிறார்கள்**' என்று இந்த மந்திரம் கூறுவது இதையே ஆகும். இங்கு கூறப்பட்டுள்ள ஆழ்நிலைச் சிந்தனைகளின் வாயிலாக நமக்கு இந்தப் பரிசுகள் கிடைக்கின்றன. அதைவிட முக்கியமாக, நமது உணர்வு விரிந்து, எல்லையற்ற ஈஸ்வர தியான வாழ்விற்கு ஏற்றதாகிறது. இத்தகைய ஆழ்நிலைச்

சிந்தனைகளின் மூலம் தன்னுடனும், இயற்கையுடனும் இணைந்து வாழ மனிதன் பக்குவப்படுகிறான்.

அவ்வாறு பக்குவப்பட்டவனுக்காக **இயற்கை தன்னைத் திறக்கிறது. தன் இரகசியங்களை வெளியிடுகிறது** என்றும் பார்க்கின்றோம். இயற்கை என்பது, ஈஸ்வரனின் பேருணர்வு என்பதினால், நாம் நம்முடைய தனித்த அடையாளங்களை இழந்து, அந்த ஈஸ்வரனுடன் இணைந்து வாழ்தல் என்றே பொருள்.

**தியானம்**

வாழ்க்கைக் கல்வியின் அடுத்த அம்சமாக அமைவது தியானம். தியானம் அகத்தில் செய்யப்படுகிறது. இதுவரை நாம் கண்ட பல்வேறு சிந்தனைகளும் (3.2 – 3.6) ஆழ் நிலைச் சிந்தனைகளும் (5.2 – 5.5) மனத்தை ஒருங்கிணைப்பதற்கும், உணர்வின் ஒளியைப் பெறுவதற்குமான பயிற்சிகளைக் கண்டோம். அந்தப் பயிற்சிகளின் மூலம் ஒருமுகப்பட்ட மனம் தியானத்தில் அகமுகப்படுத்தப்படுகிறது. அதற்காக '**இதயம்**' என்ற ஒன்றை இந்த மந்திரம் அறிமுகப்படுத்துகிறது.

**அனுவாகம் – 6.1**

ஸ ய ஏஷோச்ந்தர்ஹ்ருதய ஆகாச: |
தஸ்மின்னயம் புருஷோ மனோமய: |
அம்ருதோ ஹிரண்மய: || 6.1

இதயத்தின் உள்ளே வெளி ஒன்று உள்ளது. அதில் ஆத்மா விளங்குகிறது. அது உணர்வுமயமானது. அழிவற்றது, பொன்னொளி வீசுவது. இங்கு ஆன்மீக இதயம் பற்றிப் பேசப்படுகிறது. பொதுவாக, நம் உடலில் '**லப்டப்**' என்று துடித்துக்கொண்டிருக்கின்ற பௌதீக இதயம் இருப்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால், இது அது அல்ல. இது, ஆன்மீக இதயம். இந்த இதயத்தின் உள்ளே உள்ளது ஒரு வெளி – '**தாமரை**' மொட்டுப் போன்ற இதயம் நாற்புறங்களிலும் நாடிகளால் சூழப்பட்டு தொங்குகிறது. அதன் உள்ளே நுண்ணிய ஆகாயம் உள்ளது. அனைத்தும் அதில் நிலைபெற்றுள்ளது.

**சாந்தோக்கிய உபநிஷதம்** இதனை மிக அழகாகக் கூறுகின்றது.

*"இந்த உடம்பினுள் தாமரை போன்ற சிறு மாளிகை உள்ளது. அதனுள் அக வெளி உள்ளது. அதில் இருப்பதைத் தேடவேண்டும். புறத்தில் காணப்படுகின்ற வெளி (பிரபஞ்சம்) எவ்வளவு பெரியதோ, அதே அளவு பெரியது அகத்தில் காணப்படுகின்ற இந்த வெளியும் ஆகும்".*

வானுலகும், பூவுலகும் இதனுள் அடங்கும். அக்கினி, வாயு, சந்திரன், சூரியன், மின்னல், நட்சத்திரங்கள் இன்னும் இந்த உலகில் என்னென்ன உண்டோ, என்னென்ன இல்லையோ அவையெல்லாம் இதனுள் உள்ளன.

**நாடிகள்**

மனத்தை அகமுகப்படுத்துவதற்கான வழியில் பிரபஞ்சம், சமுதாயம் போன்ற பெரிய சிறிய வட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட மனத்தின் எல்லை இங்கே இன்னும் சுருக்கப்படுகிறது. அதற்காக அகத்திலுள்ள பல்வேறு விஷயங்கள் இங்கே அறிமுகப்படுத்தப் படுகின்றன. முதலில் இதயம் பற்றி கண்டோம். இங்கே நாடிகள் பற்றி பேசப்படுகிறது.

ஆன்மீக இதயம், நாடிகள் போன்றவைகள் சாதாரணக் கண்களாலோ, கருவிகளாலோ அறியப்படுபவைகள் அல்ல. பிரார்த்தனை, தெய்வீக வாழ்க்கை, ஆழ்நிலைச் சிந்தனைகள் போன்றவைகளின் மூலம் தூய்மையான மனத்தினை பெற்று, அதன் பிறகு அறியத்தக்கவை.

**அனுவாகம் – 6.2**

அந்தரேண தாலுகே | ய ஏஷஸ்தன இவாவலம்பதே |

ஸேந்த்ர யோனி: | யத்ராஸௌ கேசாந்தோ விவர்த்ததே |

வ்யபோஹ்ய சீர்ஷ கபாலே || 6.2

நமது முகத்தில் வாய்க்கு உள்ளே அண்ணாக்கு எனும் பசுவின் காம்பு போன்ற உள் நாக்கு தொங்குகிறது. இதற்கு மேலே ப்ரஹ்ம ரந்திரம் என்ற நமது மண்டை ஒட்டின் மேற்பகுதியில் ஒரு இடம் உள்ளது. இதனை ஆகாஸம் என்கின்றோம். இந்த இடத்தில்தான் அறிவியல் ரீதியாகக் கூறப்பட்ட பிட்யூட்டரி மற்றும் பீனியல் சுரப்பிகள் உள்ளன. இவைகளே நம் மூளை எனும் உடல் உறுப்பும், உள்ளம் என்ற மனமும் இயங்க ஆதாரமாக உள்ளன. இதுவே, ஒருவன் '**நான் இருக்கின்றேன்**' என்று தன்[பரம]னை உணரக்கூடிய மிக உயரிய இடமாக இந்த மனித உடலில் பார்க்கப்படுகின்றது.

இதைத்தான் '**சகஸ்ரஹாரம்**' என்று யோகக் கல்வியில் அழைக்கப்படுகின்றது. இது நமது உடலில் இறைவன் மையம் கொண்டுள்ள இடம். அதனால்தான் நம் பெரியவர்கள் "எண்சான் உடம்புக்கு சிரசே பிரதானம்" என்று கூறிவைத்தனர். அதுவே. மனிதப் பிறவியின் மகத்துவம் வாயிலாக, இறைவனை அடைவதற்கான ஒரே வழி. இதன் வழியாகச் செல்கின்ற நாடி ஒன்று முடிகளின் அடிப்பாகம் பிரிந்து நிற்கின்ற இடத்தில் மண்டையோட்டை பிளந்து செல்கிறது.

'இதயத்தின் நாடிகள் நூற்றி ஒன்று. அவற்றுள் ஒன்று உச்சந்தலையை பிளந்து செல்கிறது. அதன் வழியாக மேலே செல்பவன் மரணமற்ற நிலையை அடைகிறான். மற்ற நாடிகளின் வழியே வெளியேறுபவன் பல்வேறு கீழ் உலகங்களை அடைகிறான்' என்பதாகக் கட உபநிஷதம் கூறியதையும் ஏற்கனவே கண்டோம். ஆக, இந்த இதயத்திலிருந்து நூற்றியோரு நாடிகள் புறப்படுகின்றன. இவற்றின் மூலமே கட்டளைகள் இடப்படுகின்றன. அனுபவங்கள் பெறப்படுகின்றன. இவற்றுள் ஒன்று உச்சந்தலை வழியாகச் செல்கிறது. உச்சந்தலையில் **பிரம்ம ரந்திரம்** என்ற ஒரு வாசல் உள்ளது.

## எட்டும் இரண்டும்

இந்த பத்தாம் வாசல் எனும் பிரம்ம ரந்திரத்தின் வழியாக ஒரு நாடி தலைக்குச் செல்கிறது. இதுதான் நமது உடலில் உள்ள **அறிவு ஆகாசம்** எனும் இறைவனின் இருப்பிடம். இதைப்பற்றி நமது பண்டைய ரிஷிகள் பரிபாஷயில் பல உண்மைகளை நமக்கு உணர்த்தி இருக்கின்றார்கள். அவைகளில் ஒன்றுதான் எட்டும், இரண்டும் என்கின்ற பத்து எனும் பத்தாம் வாசல் ஆகும்.

அகரம் 8, உகரம் 2. இவைகள் இரண்டையும் சேர்த்தால் வருவது 10. இதுவே, **பத்தாம் வாசல்** எனும் தசதீட்சையாக நமது சித்தர் பெருமக்களால் முன் மொழியப்படுகிறது. இதன்வழியாக, உயிரை விடுபவன் மரணமற்ற பெருநிலையை அடைகிறான்.

நமது தமிழ் மொழொயின் சிறப்பு தமிழ் எழுத்துக்கள். ஆம்! இவைகளை நாம் உயிர், மெய்யெழுத்துக்கள் என்கின்றோம். அதாவது, உயிர் எழுத்துக்கள் எனும் **அ, ஆ, இ** போன்றவைகளையும், மெய் எழுத்துக்களாகிய **க், ங், ச்** போன்றவைகளையும் கொண்டு, இந்த உயிரையும், உடலையும் ஒன்றாக்கும் ஒரு உயரிய வித்தை நம் பண்டைய சித்தர்கள் வசம் இருந்தது.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு. –** திருக்குறள்.

இந்த உலக இயக்கத்திற்கு முதன்மையானவன் இறைவனே. அதுப்போல எழுத்துக்களின் இயக்கத்திற்கு முதன்மையானது அகரமே. ஒருவன் உணர்ச்சி மேலீட்டால் வாயைத் திறந்து எழுப்புகின்ற சபதம்கூட அகரத்தில்தான் தொடங்கும். அகரம் தனித்து இயங்கவல்லது. அவ்வாறே இறைவன் தனித்தியங்க வல்லவன். "**ஓம்**" என்ற அண்டத்தின் முதல் ஒலியின் மூன்றெழுத்துகளில் முதலாவதாக நிற்பது அகரமே.

அகரம் என்றால் புள்ளி என்று பொருள். எல்லா எழுத்துக்களும் புள்ளியை முதலாக கொண்டே எழுதப்படுகின்றன. பல புள்ளிகளின் தொடர்ச்சியே கோடாகும். ஆக, வரி வடிவங்களுக்கு முதலெழுத்து புள்ளி. எழுத்துக்கள் இல்லாத மொழிகளுக்கு புறத்திலே எழுத்தை எழுதத் தொடங்கும்போது, முதலில் புள்ளி வைத்துத்தான் எந்த ஒரு வரி வடிவ எழுத்துக்களையும் எழுத முடியும். அதுப்போலவே, அகத்தில் வாயிலிருந்து சொல்லாய் வெளிவருவதற்கு முன்பு, அது எண்ணமாய் இருந்தது. அந்த எண்ணமானது முதல் எண்ணம் நினைவு என்ற ஒரு புள்ளியிலிருந்து தோன்றுகின்றது. இந்த முதல் நினைவே **அகரம்** என்றழைக்கப்படுகிறது.

உயிரிருந்தது எவ்விடம் உடம்பெடுப்பதின் முன்னம்?
உயிரதாவது ஏதடா உடம்பதாவது ஏதடா?
உயிரையும் உடம்பையும் ஒன்றுவிப்பது ஏதடா?
உயிரினால் உடம்பெடுத்த உண்மைஞானி சொல்லடா! (சிவவாக்கியர் பாடல் 215)

உடம்பில் உயிர் நுழைவதற்கு முன்னர் அது எங்கே இருந்தது? ஆகவே, **உயிர் எது? உடம்பு எது?** இந்த உயிரையும், உடலையும் ஒன்றாக்குவது எது? உயிரைக் கொண்டு, உடம்பெடுத்த உண்மை ஞானி இதை விளக்க வேண்டும் என்று கேள்விகள் பல கேட்டு, நம்மை சிந்திக்க வைப்பதின் மூலம் சித்தர் சிவவாக்கியர் நம் அறிவை தூண்டுகின்றார்.

கட்டறுத்தெனை யாண்டு கண்ணார நீறு
இட்ட அன்பரொடு யாவருங் காணவே
பட்டிமண்டபம் ஏற்றினை – ஏற்றினை
எட்டினோடு இரண்டும் அறியேனையே. (திருவாசகம் – திருச்சதகம் பாடல். 49)

இது மணிவாசகப் பெருமானின் வாசகங்கள். அதுப்போலவே, நமது வள்ளல் பெருமானும் பின்வருமாறு பாடுகின்றார்.

எட்டு இரண்டு என்பது இயலுமுற்படி என
அட்ட நின்று ஓங்கிய அருட்பெரும்ஜோதி

எட்டிரண்டு அறிவித்து எனை தனியேற்றிப்
பட்டிமண்டபத்தில் பதித்த மெய் தந்தையே. – வள்ளல் பெருமானார்.

அடுத்து, திருமூலரும் தமது திருமந்திரப் பாடல்களில் பாடும்போது,

எட்டும் இரண்டும் அறியாத என்னை
எட்டும் இரண்டும் அறிவித்தனன் என்நந்தி
எட்டும் இரண்டும் அறிவால் அறிந்தபின்
எட்டும் இரண்டும் இலிங்கம தாமே. – திருமந்திரம். இவ்வாறு பாடுகின்றார்.

என்னடா இது? எட்டும், இரண்டும் சேர்த்தால் பத்து என்பது பள்ளியில் படிக்கின்ற முதல் வகுப்பு மாணவனுக்கே தெரியும்போது, இதைச் சொல்ல திருமூலர் எதற்கு? என்றால், பொதுவாக, ஞானிகள் கூறும் கூற்றுக்கள் எல்லாமே மறைபொருள் இரகசியம் கொண்ட பரிபாஷைகள் என்பதினால், அவைகளின் ஆழ்ந்த பொருளை அறிய வேண்டுமானால், அதற்கான, சரியான சத்குரு மூலமாக மட்டுமே அறிய முடியும்.

எட்டு என்பது, எண்களில் "8" என்றும் தமிழில் **"அ"** என்றும், **"சிவம்"** என்றும், மறைபொருளாக உணர்த்தியதாகும். இரண்டு என்பது, எண்களில் "2" என்றும், தமிழில் **"உ"** என்றும், **"சக்தி"** என்றும் மகான்கள் கூறுவர்.

**"அ"** என்பது **'அடி'** என்ற பதத்திலும், **"உ"** என்பது **'உச்சி'** என்ற பதத்திலும் மற்றொரு அர்த்தமும், சூரியன் – சந்திரன், நாதம் – பிந்து, அகரம் – உகரம், இடகலை – பிங்கலை, வலது கண் – இடது கண் என்று ஏராளமாக, இந்த அ மற்றும் உ என்ற எழுத்துக்களுக்கு பொருள் கூறியிருப்பதை நம்முடைய நடைமுறையில் நம்மால் பார்க்க முடிகின்றது. இது அவரவர்களுக்கான பாதைகளில். அவர்களாகவே அதை உண்டாக்கி வைத்துள்ளனர் என்றும் பார்க்கின்றோம். இருப்பினும், இங்கு பண்டைய ரிஷிகளின் புரிதலின்படி, இருப்பது இறைவன் மட்டுமே என்பதினால், அவனை அறிவதிலுள்ள ஆழமான உண்மை நம்மிடம் மட்டுமே உள்ளது என்பதினால், நமக்குக் கொடுக்கப்பட்ட பிரத்யேக பகுத்தறிவைக் கொண்டு, விசாரத்தின் மூலம், விழித்துக் கொண்ட விவேகத்தின் அடிப்படையில், அறிவும், மனமும் ஒன்றாகுமானால், அங்கே அந்த தூய உணர்வு பிரகாசிக்கின்ற அதன் இருப்பை எளிதாக ஏற்றுக் கொள்ள முடியும் என்பதே நம்முடைய பண்டைய ஆன்மீக அறிஞர் பெருமக்களின் ஆழமான கருத்து என்றே இங்கு நாம் அறிவ வேண்டும்.

ஆக, இந்த எட்டும், இரண்டும் ஒன்றானால் பத்து வரும். 8 + 2 = 10, **அ + உ = ய,** அறிவும், மனமும் நம் சாதனையால் ஒன்று பட்டு, உள்முகமாக சென்று பத்தாகிய "ய" என்ற தலையில் உள்ள ஆகாசத்தில் இருக்கின்ற இறைவனை உணர்வுக் கயிற்றினால் கடையும்போது, இந்த **சீவன்** (நான்) என்பவனே, **சிவன்** (அவன்) என்பது உணரப்படும். ஆக, **நானே அவன்!** அல்லது **அவனே நான்!** என்ற மெய்ப்பொருள் விளங்கும். அதுவே **ஸோஹம்** அல்லது **ஹம்ச மந்திரம்** என்ற உயிர்க்காற்றின் உன்னதம் ஆகும். இதுதான் கிடைத்த உடலையும், எடுத்த உயிரையும் கொண்டு **பிறவிப் பயனை அடைவது** ஆகும்.

அதாவது, இந்த படைப்பிலுள்ள எல்லா உயிர்களும் அகரத்தில் தொடங்கி, உகரத்தில் உழன்று, மகரத்தில் அடங்கும் தன்மை உடையவைகள்.

பொதுவாக, நமது பிழைப்பு சார்ந்த சமூக வாழ்வில் சிக்கியுள்ள உயிர்கள், அன்னையின் கர்ப்பத்தில் (*அகரம்*) தொடங்கி, உலக வாழ்க்கையில் (*உகரம்*) உழன்று, மரணத்தின் பின் மண்ணுள் (*மகரம்*) அடங்கும்.

படைப்பிலுள்ள உயிரானது உயிர்மெய் (*ஞானோதயம்*) அறிந்து, **வீடுபேறு** என்ற முக்தி நிலையை அடையும் வரை, இத்தகைய பி**றப்பு–இறப்பு** சுழற்சி தொடரும்.

ஆன்மீகப் பாதையில் செல்லும் சாதகர்கள், **அ**(கரம்)+**உ**(கரம்)+**ம**(கரம்) என்பது படைத்தலின் ஆதாரமானது **ஓங்காரம்** என்ற பிரணவ ஒலி என்பதை சரியான சத்குருவின் அருளால் உணர்ந்து, படைத்தவனின் ஆற்றலாகிய ஒலிவடிவமாகிய (*நாதப்பிரம்மம்*) ஆகிய **"ஓம்"** எனும் ஒலி அதிவெண் கொண்ட அதிர்வுகள் (*vibration*) மூலம், ஒத்திசைவு (*resonance*) அடைவதற்கான வழிகாட்டுதலில், இந்த படைப்பு வேறு, படைத்தவன் வேறு என்ற அறியாமையால் விளைந்த இருமை நிலையைக் கடந்து, ஓங்காரத்துடன் ஒன்றி, பிறப்பு–இறப்பு என்ற சம்ஸார சக்கரத்தின் சுழற்சியிலிருந்து விடுதலை பெறுவதையே **மனிதராகப் பிறவியெடுத்தலின் பயன்** என்பதை எல்லோருக்கும் எடுத்துக்கூறுவதுதான் இந்தப் பாடத்திட்டத்தின் நோக்கம்.

சிவனிடம் இருக்கும் **சூலாயுதம்** எனும் தத்துவம் பற்றி கொஞ்சம் சிந்தித்து பார்போம். **"ய"** – முனை மூன்றாக உள்ளது. அவைகள் மூன்றையும் ஒன்று சேர்த்தாலே ஞானசாதனை. சிவனிடம் இருக்கின்ற சூலாயுதம் என்பது ஒரு தத்துவம். அதில் "ய" என்ற எழுத்தின் ஆழமான உண்மை ஒழிந்துக் கொண்டுள்ளது. அப்படி அவைகளை ஒன்று சேர்க்கும்போது, சூலாயுதம் போல் மூன்று கூறாக இருக்கின்ற அந்த ஆயுதம் வேல்போல் ஒன்றாகக் குவிந்து விடும். அது, அன்னை பார்வதி தேவியால் முருகனுக்கு சுட்டிக்காட்டப்படு, முருகனிடம் கொடுக்கப்பட்டதால், முருகனிடம் உள்ள வேல் ஞானத்தை குறிப்பிடும் தத்துவம், நாம் ஒவ்வொருவரும் ஞான வேலாக மிளிர வேண்டும்! ஒளிவிட்டு பிரகாசிக்க வேண்டும் என்பதே இந்த தத்துவத்தின் தாத்பரியம். ஆக, அந்த ஆத்ம ஞானத்தை அடைவதே முருக வழிபாட்டின் முக்கிய நோக்கம்.

இந்த ரகசியத்தை யாரவது சுட்டிக் காட்டினால்தான் நம்மால் புரிந்துக் கொள்ள முடியும். அதனால்தான் **"சுட்டிக்காட்டாத வித்தை, சுட்டுப் போட்டாலும் வராது"** என்ற பழமொழி நம் முனோர்களிடம் காணப்பட்டது.

எல்லா மகான்களும் இதைத்தான் சொன்னார்கள். ஆகவே, எல்லா ஞானிகளின் நூற்களையும், அவற்றின் மறை பொருள்களையும் – பரிபாசையாக அவர்கள் சொன்னவைகளையும், நாம் நன்கு உணர்ந்துக் கொண்டு, அஞ்ஞான வாழ்க்கையை துறந்து, ஞான வாழ்வுக்கு முயற்சித்தவன் மீண்டும் பிறந்தவனாக கருதப்படுகிறான். அவனே **"துவிஜன்"** என்றும் அழைக்கப்படுகின்றான்.

ஆகவே, இத்தகைய இரண்டாவது பிறவியை இந்த மனித உடல் இருக்கும்போதே, அதன் சக்தியாகிய உயிரைக் கொண்டு, உத்தமனை உணர்ந்தால், அவன் மட்டுமே இந்த **பத்தாம் வாசல்** எனும் ப்ரஹ்ம ரந்திரம் வழியே உடலை விடுகின்றான். அவன் இனி இதுப்போன்ற உடல்களில் எப்போதுமே பிறக்க மாட்டான். மேலும், இத்தகைய சீவன் – சிவம் ஆனதினால், அவன் என்றும் பிறவா நிலையாகிய பரமனாகவே பிரகாசிகின்றான்.

மற்ற சீவர்கள் எல்லாம் உடலில் உள்ள மற்ற நூறு நாடிகளையும், மீதியுள்ள ஒன்பது வாசல்களையும் வைத்துக் கொண்டு, உணர்வை பிடிக்கத் தெரியாமல், மற்ற வாசல்களில் ஏதாவது ஒன்றின் வழியே உயிரை விடுகின்றார்கள். அவர்கள் மீண்டும், மீண்டும் பிறவிக்கு வருகின்றார்கள். ஆகவே, ஆசைகளற்ற யோகிகளால் மட்டுமே பிரம்மரந்திரத்தின் வழியாக உயிரை வெளியேற்ற முடியும் என்று சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன.

ஆக, இந்த பிரம்மரந்திரத்தின் வழியாக உயிரை விடுபவன் மீண்டும் பிறப்பதில்லை. அதனால்தான் இதனை **'இறைவழி'**, அதாவது **இறைவனை அடையும் வழி,** மீண்டும் பிறப்பற்ற வழி என்று இந்த மந்திரம் கூறவருகின்றது.

**தியானத்தின் பலன்**

——————————————

பூரித்யக்னௌ ப்ரதிதிஷ்ட்டதி | புவ இதி வாயௌ |
ஸுவரித்யாதித்யே | மஹ இதி ப்ரஹ்மணி |
ஆப்னோதி ஸ்வராஜ்யம் | ஆப்னோதி மனஸஸ்பதிம் |
வாக்பதி சக்ஷுஷ்பதி: | ச்ரோத்ரபதிர் விஜ்ஞானபதி: |
ஏதத் ததோ பவதி ஆகாச சரீரம் ப்ரம | ஸத்யாத்ம ப்ராணாராமம் மன ஆனந்தம் |
சாந்தி ஸம்ருத்தம அம்ருதம் | இதி ப்ராசீன யோக்யோபாஸ்வ || 6.3

நான்கு வியாஹ்ருதிகளையும் தியானம் செய்பவன் முறையே அக்கினி, காற்று, சூரியன் ஆகியவற்றில் நிலைப் பெறுகிறான். இறைவனில் நிலைப் பெறுகிறான். அவன்

தனக்குத்தானே தலைவன் ஆகிறான். மனம், வாக்கு, கண்கள், அறிவு ஆகியவற்றிற்குத் தலைவனாகிறான். அதன்பிறகு, வெளியே உடம்பாகவும், சத்தியத்தை ஆத்மாவாகவும், ஆனந்தத்தை மனமாகவும் கொண்டு பிராணனில் செயல்படுகின்ற, அமைதி நிறைந்த, அழிவற்ற பிரம்மமாக ஆகிறான். தகுதி உடையவனே இவ்வாறு தியானம் செய்வாயாக.

தியானத்தினால் கிடைக்கின்ற முக்கியமான நான்கு பலன்களை இந்த மந்திரம் கூறுகிறது. இயற்கையில் நிலை பெறல், இறைவனில் நிலைபெறல், தனக்குத் தலைவனாதல், இறைவனுடன் இணைதல்.

1. **இயற்கையில் நிலைபெறல்:**

   ---------------------

அக்கினி, காற்று, சூரியன் ஆகியவை இயற்கையின் சின்னங்கள் முன்பு கண்ட ஆழ் நிலைச் சிந்தனைகள்மூலம் ஒருவன் அவற்றில் நிலை பெறுகிறான். அதாவது, அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்த வல்லவன் ஆகிறான்.

2. **இறைவனில் நிலைபெறல்:**

   ---------------------

தியானத்தின் இரண்டாவது பலன் இறைவனை ஆதாரமாகக் கொண்ட வாழ்க்கை. வாழ்க்கையில் நல்லது, கெட்டது எது நடந்தாலும் அது இயற்கையின் நியதிப்படி நடக்கிறது என்ற திட நம்பிக்கையுடன் அவன் இரைவனைச் சார்ந்து வாழ வல்லவன் ஆகிறான்.

3. **தனக்கு தலைவனாதல்:**

   -------------------

சாதாரண மனித வாழ்க்கை புறச் சூழ் நிலைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. அதாவது, சாதாரண மனிதன் சூழ் நிலையின் கைதியாக வாழ்கிறான். தியான வாழ்க்கையில் வெற்றி பெற்றவன் சூழ் நிலைகளின் அடிமையாக அல்லாமல் தனக்குத்தானே தலைவனாக வாழ முடிகிறது. மனம், வாக்கு, கண்கள், அறிவு என்று ஒவ்வொன்றும் அவனது கட்டளைப்படி இயங்குகிறது. அவன் தன்னை வென்றவன் ஆகிறான்.

## 4. இறைவனுடன் இணைதல்:

______________________

தியானத்தில் மிக முக்கியமான பலன் இதுவே. ஆழ்நிலைச் சிந்தனைகளின் மூலம் மனத்தை ஒருமுகப்படுத்தி, இதய வெளியில் பொன்னொளி வீசிப் பிரகாசிக்கின்ற ஆத்மாவை தியானத்தின் மூலம் காண வல்லவன் இறைவனுடன் இரண்டற இணைகிறான்.

பூ என்ற வ்யாஹிருதியில் அக்னி தேவதையை உபாஸிப்பவன் அந்த தேவதையுடன் கலந்து விடுகின்றான். புவ என்ற வ்யாஹிருதியில் உபாஸிக்கப்பட்ட வாயு தேவதையுடன் கலந்து விடுகின்றான். ஸுவ என்ற வ்யாஹிருதியில் உபாஸிக்கப்பட்ட சூரிய தேவதையுடன் கலந்து விடுகின்றான். மஹ என்ற வ்யாஹிருதியில் உபாஸிக்கப்பட்ட ஹிரண்யகர்ப்பனாக மாறி விடுகின்றான். தனக்குத்தானே அதிபதியாக இருக்கும் நிலையை அடைகின்றான். அனைத்துக்கும் அதிபதியாகின்றான். எல்லா மனங்களுக்கும் அதிபதியாக இருக்கும் நிலையை அடைகின்றான். எல்லா வாக்கிற்கும் தலைவன் ஆகின்றான். எல்லோருடைய கண்களுக்கும் தலைவனாகின்றான். எல்லோருடைய செவிகளுக்கும் தலைவனாகின்றான். எல்லோருடைய புத்தியிலும் இருந்துக்கொண்டு தூய அறிவை அடைகின்றான்.

அந்த ஹிரண்யகர்ப்பனின் லட்சணங்களனைத்தும் இந்த சாதகனுக்கு வந்து விடுகின்றது. ஆகாசத்தைப் போல சூக்ஷ்மமான உடலையடைகின்றான், எங்கும் வியாபித்து இருப்பான். உருவமாகவும், அருவமாகவும் இருக்கின்றான். இந்திரியங்கள் விளையாட்டு மைதானமாக இருக்கின்றது. எல்லா இந்திரியங்களும் இவனை சார்ந்து இருக்கின்றது. எல்லா மனங்களையும் தனக்கு ஆனந்தம் தருவதாக வைத்திருக்கின்றான். அமைதியாகவும், செழிப்பாகவும் இருக்கின்றான். இருமைகளற்றவனாகவும், செழிப்பை உடையவனாகவும் இருக்கின்றான். மன அமைதியால் அந்த தூய அறிவாகிய பிரம்மத்தை அடைகின்றான். இந்த பூமியில் நீண்ட காலம் வாழ விரும்புபவர் – பிரளயம் வரும் வரை இருக்க விரும்புபவர் இவ்வாறு உபாஸனை செய்வீராக.

### வேள்வி

வாழ்க்கைக் கல்வியின் அடுத்த அம்சமாகவும் முக்கியமானவையாகவும் வருவது வேள்வி அல்லது **யக்ஞம்** ஆகும். இங்கு வேள்வி என்ற கருத்து மிகவும் இன்றியமையாதது. இந்தக் கருத்து வேதகாலத்திலிருந்தே நிலவி வருகின்ற ஒன்றாகும். பிரபஞ்சம் ஒரு வேள்விக் கூடம்.

வாழ்கையின் ஒவ்வொரு க்ஷணமும் பல்வேறு பரிமாணங்களில், பல்வேறு வேள்விகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த வேள்வியில் பங்கெடுக்க ஒவ்வோர் உயிருக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் அவகாசம் தரப்படுகிறது. அந்த உயிர் தனக்குரிய காலம்வரை அத்தகைய சரியான வேள்வியில் ஈடுபட்டபிறகு, அந்த உயிர் தன்னையே வேள்விப்பொருளாக அந்த மாபெரும் வேள்வியில் சமர்பித்துவிட்டு மறைந்து விடுகின்றது. இவ்வாறு, உயிர் மனித உடல் எடுத்த நோக்கம், இந்த மனித வாழ்க்கையை ஒரு மாபெரும் வேள்வியாகக் கண்டு, வீடுபேறு அடைவது மட்டும்தான் என்கிறது நம்முடைய சனாதன தர்மம்.

வேள்வி என்பது என்ன?

பிரபஞ்சத்திலிருந்து நாம் பெற்றதைத் திருப்பிக் கொடுக்கும் வகையில், நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதே உண்மையான **வேள்வி** எனப்படும். அதாவது, ஒரு தெய்வத்தை உத்தேசித்து நெய், நைவேத்தியம், மலர் போன்றவைகளை அக்கினியில் சமர்பிப்பத்து செய்யப்படுகின்ற புற வேள்வியின் மூலம், இந்த மனித சமுதாயத்தை ஒருங்கிணைந்து வாழவைக்கின்ற வழி வகைகளைக் கற்றுக் கொடுத்து, அதன் நோக்கம் மனித மனதை தூய்மையாக்கி, துயருறுகின்ற மற்ற சீவர்களுக்கு உதவி புரியும் வகையில், பஞ்சபூதங்களை திருப்தி செய்து, இந்த இயற்கையுடன் இணைந்து வாழ்வது பற்றிய ஒரு விழிப்புணர்வை மக்களுக்கு கொடுப்பதற்காக மட்டுமே ஆகும்.

இதன் வாயிலாக, விழித்துக் கொண்ட விவேகத்தைக் கொண்டவன் மகத்தான மனிதப் பிறவியின் நோக்கம் புரிந்து, இந்த இயற்கையின் படைப்பிலுள்ளவைகளை நமது தேவைக்காக மட்டும் சுயநலமாக எடுத்துக் கொள்ளாமல், எல்லாருக்கும், எல்லா சீவர்களுக்கும் சரிசமமாகக் கிடைக்கும் வகையில், அவைகளுக்கும் அர்பணித்து வாழ்வதே உண்மையான வேள்வி என்பதாகப் பார்க்கப்படுகின்றது. அதாவது, மனிதன் தனக்கு மட்டும் வைத்துக் கொண்டு வாழாமல், திருப்பி செலுத்துவது என்பதே வேள்வியின் நோக்கம் ஆகும்.

இதன் பொருள் என்ன?

நாம் இந்த பிரபஞ்சத்தின் ஓர் அங்கம். நாம் நன்றாக வாழ வேண்டுமானால், இந்த பிரபஞ்சத்திலிருந்து சிலவற்றை எடுத்தேயாக வேண்டும். அந்த வகையிலே, பௌதீக நிலையில் உணவு, உடை, காற்று என்பது மட்டுமில்லாமல், இன்னும் சற்று உயர்ந்த நிலையில் அறிவு, அன்பு என்று பலவற்றைப் பலரிடமிருந்தும் பெறுகிறோம். அவ்வாறு நாம் பெற்றவற்றை மற்றவர்களுக்கும், மற்ற சீவர்களுக்கும் திருப்பிக் கொடுக்கும் விதமாக, நமது

வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ வேண்டும். அப்படி வாழ்வது மட்டுமே மனிதப் பிறவியின் மகத்துவம் ஆகும். அதுப் புரியாமல், அப்படி நம்மால் வாழ முடியாமல் போன காரணத்தினால்தான் நாம் மற்றவர்களுக்கு கட்டுண்டு வாழ நேர்வதாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தமது பகவத்கீதையிலும் வலியுறுத்துகின்றார்.

**அனுவாகம் – 7**

ப்ருதிவ் யந்தரிஷம் த்யௌர் திசோவாந்தர திசா: |
அக்னிர் வாயு ஆதித்யச் சந்த்ரமா நஷத்ராணி |
ஆப ஒஷதயோ வனஸ்பதய ஆகாச ஆத்மா |
இத்யதி பூதம் | அதாத்யாத்மம் | ப்ராணோ வ்யானோபான உதானஸ் ஸமான: |
சஷு: ச்ரோத்ரம் மனோ வாக் த்வக் | சர்ம மாம் ஸம்ஸ்னா வாஸ்த்தி மஜ்ஜா |
ஏதத திவிதாய ரிஷி ரவோசத் | பாங்க்தம் வா இதம் ஸர்வம் |
பாங்க்தேனைவ பாங்க்தம் ஸ்ப்ருனோதீதி || (7)

பூமி, இடைவெளி, வானம், முக்கிய திசைகள், இடைப்பட்ட திசைகள் ஆகியவைகளும், நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவைகளும், தண்ணீர், மூலிகைகள், மரங்கள், வெளி, பிரபஞ்சம் ஆகியவைகளும் என இந்த மூன்று தொகுதிகளும் புறப்பொருட்கள் பற்றியவைகள்.

இது ஒரு **பாங்க்தம் உபாஸனம்** எனப்படும். அதாவது, பாங்க்தம் என்றால், **ஐந்தின்தொகுதி** என்று பொருள். இது ஒரு அபேத உபாஸனம். அதாவது இருமைகள் இல்லாத, பேத புத்தி கொள்ளாத, சமஷ்டி – வியஷ்டி ஐக்கிய உபாஸனம் எனப்படும். இதில் மூன்று வெளி விஷயங்களைக் கொண்டு, இந்த மனித சரீரத்திலுள்ள மற்ற விஷயங்களுடன் ஐக்கியப்படுத்தும் உபாஸனை என்பதாகவே பார்க்கப்படுகின்றது.

இனி அகப்பொருட்கள் பற்றிய ஐந்தின் தொகுதிகளைக் காண்போம்:

பிராணன், வியானன், அபானன், உதானன், சமானன் ஆகியவைகளும், கண்கள், காதுகள், மனம், பேச்சு, தொடுவுணர்ச்சி ஆகியவைகளும், தோல், சதை, தசை, எலும்பு, மஜ்ஜை ஆகியவைகளும் ஆகும்.

**பாங்க்தம்** – ஐந்து வகையானவைகளின் சேர்க்கை, யாகங்களையும் இவ்வாறு அழைக்கப்படுகின்றது. யாகத்திற்கு ஐந்து விஷயங்கள் உண்டு அவைகள் எஜமானன், பத்தினி, புத்திரன், மானுஸ வித்தம் (பணம் – செல்வம்), தெய்வ வித்தம் (மந்திரங்கள்).

**லோக பாங்க்தம்** – ஐந்து விதமான உலகங்கள். (பிரபஞ்சம், ஆகாசம், சுவர்க்க லோகம், திசைகள், திசைகளுக்கு இடையே உள்ள மற்ற திசைகள்.)

**தேவதா பாங்க்தம்** – ஐந்து விதமான தேவதைகள் (அக்னி, வாயு, சூரியன், சந்திரன், நட்சத்திரம்.)

**பூதா பாங்க்தம்** – ஐந்து விதமான பூதங்கள். அதாவது தண்ணீர், தாவரங்கள், மரங்கள், ஆகாசம், விராட் என்ற பஞ்சபூத உடல்கள் சம்பந்தப்பட்டவைகள்.

**பிராண பாங்க்தம்** – பிராணன், வியானன், அபானன், வியானன், உதானன்.

**இந்திரிய பாங்க்தம்** – கண், காது, மனது, சொல், தோல்.

**சர்ம பாங்க்தம்** – உள்தோல், சதை, தசைகள், எலும்பு, எலும்புக்குள் உள்ள திரவம். இவைகளை ரிஷி ஒருவர் எடுத்துச் சொல்லிவிட்டு மேலும் கூறலானார். இவைகள் அனைத்தும் ஐந்து அங்கங்களின் சேர்க்கையாக இருக்கின்றன. வியஷ்டி பாங்க்தம் மூலம், சமஷ்டி பாங்க்தத்தை தியானிக்க வேண்டும் என்று கூறினார். இதன்பலனாக, மனம் விரிவடைகின்றது. பொதுநோக்கு பார்வை மனிதனிடம் வருகின்றது. இதன் வாயிலாக இவன் ஹிரண்யகர்ப்பனோடு ஐக்கியமாகி விடுவான் என்பதாகவே இந்த ரிஷி இங்கு எடுத்துக் கூறுகின்றார்.

**பிரணவ தியானம்**

**அனுவாகம் – 8 (ஓங்கார உபாஸனை)**

ஓமிதி ப்ரஹ்ம | ஓமிதீதம் ஸர்வம் |

ஓமித்யேதத அனுக்ருதி ஹஸ்ம வா அப்யோச்ரா வயேத்யாச்ரா வயந்தி |

ஓமிதி ஸாமானி காயந்தி | ஓம் சோமிதி சஸ்த்ராணி சம்ஸந்தி |

ஓமித்யத் வர்யு: | ப்ரதிகரம் பிரதிக்ருணாதி |

ஓமிதி ப்ராஹ்மண: ப்ரவஷ்யன்னாஹ ப்ரஹ்மோ பாப்னவானீதி |

ப்ரஹ்மைவோ பாப்னோதி || (8)

இங்கு உபாஸ்ய தேவதை ஹிரண்யகர்ப்பன் அல்லது ஈஸ்வரன். இந்த இடத்திலே **ஓம்** என்ற சொல்லில் பிரம்மத்தை தியானம் செய்ய வேண்டும். இங்கு பிரம்மா என்பது, ஹிரண்யகர்ப்பனையோ அல்லது ஈஸ்வரனையோ உபாஸனா தேவதையாகக் கருதப்படுகின்றது.

இங்கு, **ஓம்** என்ற இந்த சொல்தான் முக்கியம். இந்த ஓங்காரத்திற்கும் பிரம்மத்திற்கும் ஒரு ஒற்றுமை சொல்லப்படுகின்றது. ஏன் இதை ஆலம்பனமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றது? என்றால், அது மேலானதாகவும், சிறப்பானதாகவும் கருதப்படுவதால்தான், இந்த **"ஓம்"** இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. மேலும், இந்த ஒருசொல் எல்லா சொற்களையும் உள்ளடக்கியதாக எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றது.

அதாவது, இந்த **"ஓம்"** என்ற ஒற்றை சொல்லின் மூலம், அந்த ஈஸ்வரனே எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றார். நம்மால் நடைமுறையில் எல்லாப்பொருட்களுக்கும் ஒரு பெயரைக்கொடுத்து, ஏதாவது ஒரு சொற்களால் அழைக்கப்படுகின்றது. எனவே, இத்தகைய சொற்களை வியாபித்திருக்கும் வார்த்தைகள் எல்லாமே, அந்த **ஓங்காரம்** எனும் ஈஸ்வரனையே குறிக்கின்றது. ஆகவே, இந்த உலகமே ஓங்காரமாக கருதப்படுகின்றது.

**ஓம் இதம் ஸர்வம்.**

இந்த அனுவாகத்தில் மற்ற சொற்களெல்லாம் ஓங்காரத்தின் பெருமையை எடுத்து உரைக்கின்றது.

• **ஓம் இத்யேத் அனுக்ருதி** – இது நமக்கு அனுமதியை குறிக்கின்றது

• **அபி ஓம் ஸ்ராவய** – மேலும் **"ஓம்"** என்று நீ தெரிவிப்பாயாக, (தேவர்களுக்கு அவிஸ் கொடுக்க வேண்டிய காலம் வந்தவுடன்) இவ்வாறு ஆணையிடப்படுகின்றது.

• **ஓம் இதி ஸாமானி காஉயந்தி** – சாம வேதத்தை உச்சரிப்பவர்களும் **"ஓம்"** என்று சொல்லித்தான் உச்சரிக்கின்றார்கள்.

• **ஓம் சோமிது ச2ம்ஸந்தி** – ரிக் மந்திரங்களை ஓதுபவர்களும் **"ஓம்"** என்றும் **சோம்** என்ற சொல்லை உச்சரிக்கின்றார்கள்.

• **ஓம் இதி அதி3வாயு** – யஜுர் வேதம் ஒதுபவர்களும் இந்த **"ஓம்"** எனும் சொல்லின் மூலம் தங்கள் அனுமதியை குறிக்கின்றார்கள்.

அதர்வண வேதம் ஒதுகின்ற வேத ரிக்குகளும் **"ஓம்"** எனச்சொல்லித்தான் ஆணையிடுகின்றார்கள். மேலும், அக்னிஹோத்ர யாகத்தை செய்யலாம் என்று அனுமதி அளிப்பதையும் **"ஓம்"** என்ற சொல்லினால் குறிப்பிடுகின்றார்கள்.

அத்துடன் வேதத்தை படிக்க ஆரம்பிக்கின்ற ப்ரம்மச்சாரியும் இந்த **"ஓம்"** என்று சொல்லிய பிறகுதான் வேதாத்யயனம் தொடங்குகின்றான். வேதத்தை நான் அடைவேனாக என்ற குறிக்கோளுடன் வேதத்தை உச்சரிக்கின்றான். அவன் கண்டிப்பாக இறைவனை அடைவான் என்று வேதமே உறுதி செய்கின்றது. ஆகவே, பிரம்மத்தை அடைய வேண்டும் என்று விரும்பும் சாதகர்கள் இந்த **"ஓம்"** என்று ஒன்றை சொல்லித்தான் அதை அடைய முயற்சிக்கின்றார்கள். ஆகவே, அவன் பிரம்மத்தை அடைவான் என்று வேதம் உறுதி கூறுகின்றது. இந்த வகையிலே ஓங்காரத்தின் மகத்துவம் நமக்குப் புரிய வருகின்றது.

மாணவப் பருவத்திலிருந்து வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்குப் புகுமுன் மனத்தில் பதித்துக் கொள்ளவேண்டிய ரத்தினங்கள் போன்ற பத்து நல்லொழுக்கக் கோட்பாடுகள் இனி வருகின்ற மந்திரங்களில் கூறப்படுகின்றன. இந்த பத்து விதமான தகுதிகளுடன் ஒருவன் சமுதாயத்தில் வாழும் பொழுது, அவனால், நல்ல சமுதாயம் உருவாக்கப்படுகிறது. எனவேதான் இந்தப் பத்து கோட்பாடுகளும் மனித வாழ்க்கைக் கல்வியின் முக்கிய அம்சமாக வைக்கப்பட்டுள்ளன.

ரிதம் ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச | ஸத்யம் ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச |

தபச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச | தமச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச |

சமச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச | அக்னயச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச |

அக்னிஹோத்ரம் ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச | அதிதயச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச |

மானுஷம் ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச | ப்ரஜா ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச |

ப்ரஜனச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச | ப்ரஜாதிச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச |

ஸத்யமிதி ஸத்யவசா ராதீதர: | தப இதி தபோ நித்ய: பௌருசிஷ்ட்டி: |

ஸ்வாத்யாய ப்ரவசனே ஏவேதி நாகோ மௌத்கல்ய: | தத்தி தபஸ் தத்தி தப: || (9)

**அனுவாகம் – 9**

கற்றலும் கற்பித்தலும் முக்கியக் கடமைகள். அவற்றுடன் ரிதம், சத்தியம், தவம், புலக்கட்டுப்பாடு, அமைதி ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். வேள்விகளும், அக்னிஹோத்திரமும் செய்யப்பட வேண்டும். விருந்தினரை பேணவேண்டும். மனித குலத்திற்கு நன்மை தரும் செயல்களைச் செய்ய வேண்டும். நல்ல மக்களைப் பெற வேண்டும். நல்ல பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று நல்ல சந்ததியை உருவாக்க வேண்டும்.

சத்தியவாக்கு உடையவரான ராதீதரன் முனிவர் **"சத்தியமே முக்கியம்"** என்றார்.

தவத்தில் நிலைப்பெற்றவரான பௌருசிஷ்ட்டி முனிவர் **"தவமே முக்கியம்"** என்றார்.

முத்கலரின் மகனான நாக முனிவர் **"கற்றலும் கற்பித்தலுமே முக்கியம்"** என்று கூறினார்.

**ஏனெனில் அதுவே தவம், அதுவே தவம்.**

இதில் சில பண்புகளும், கர்மங்களும் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலே கூறிய உபாஸனைகளனைத்தும் நற்பண்புகளுடனும், நல்ல செயல்களுடனும் செய்தால்தான் அதன் பலனை அடைய முடியும்.

வேதத்தை கற்றல், பிறருக்கு கற்றுக்கொடுத்தல், கற்றதை சரியாக புரிந்து கொள்ளுதல், உண்மையை பேசுதல், தவம், விரதம், போகத்தை அனுபவிக்காதிருத்தல், உணவில் கட்டுபாடு, உடலுக்கும், மனதுக்கும் நன்மையை கொடுக்கக்கூடியதை சாப்பிடவேண்டும். அளவுடன் சாப்பிட வேண்டும். புதியதாக சமைத்து சாப்பிட வேண்டும், புலனடக்கம், மனவடக்கம், யாகத்திற்கு பயன்படுத்தும் அக்னியை பாதுகாத்தல், இல்லறத்தில் இருப்பவர்களுக்கு விதிக்கப்பட்ட யாகங்களை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது.

அக்னிஹோத்ரம் காலையும், மாலையும் செய்ய வேண்டும். விருந்தினரை உபசரிக்க வேண்டும், மனிதர்களுக்கு சேவை செய்ய வேண்டும், சந்ததியை வளர்த்தல், தன் புத்திரனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை தவறாது செய்தல், சந்ததி உற்பத்திக்கு கணவன் – மனைவி சேர்தல், பேரக்குழந்தைகளை அடைவதற்கு புத்திரர்களுக்கு திருமணம் செய்வித்தல் போன்ற எல்லா கடமைகளையும், விதிகளையும் கட்டாயம் இல்லறத்தான் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும், **ராதீதரன்** என்ற ரிஷி வாய்மையே மேலானதாக கருதுகின்றார் என்றும், தவத்தில் ஈடுபட்டுள்ள பௌருசிஷ்ட்டி ரிஷி தவத்தை மேலானதாகவும் கூறுவதாக இங்கு சொல்லப்பட்டிருக்கின்றது. நாகரிஷி **வேதத்தை கற்றலும், கற்பித்தலும்தான்** மேலான தவமாக இங்கு கூறுகின்றார்.

**பத்து முக்கியமான கடமைகள்**

கற்பதும், கற்பிப்பதும்தான் மாணவப் பருவத்தில் ஒருவன் செய்ய வேண்டிய மிக முக்கியமான கடமை. அவன் கற்க வேண்டும், இளையவர்களுக்கு கற்பிக்க வேண்டும். இது ஒவ்வொருவனது முக்கிய கடமை என்பதை வலியுறுத்துவதற்காக மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது.

பாடங்களை கற்பதுடன் அவன் தன்னை ஒரு நல்ல மனிதனாக உருவாக்கிக் கொள்ளவும், அதற்கு அடிப்படை தேவைகளாக இந்த உபநிஷதம் கூறுகின்ற ரத்தினங்கள் போன்ற பத்து கோட்பாடுகளையும் ஒவ்வொன்றாக காண்போம்.

1. **ரிதம்:**

சற்றே அமைதியாக நின்று இந்த உலகை கவனிப்பவர்களுக்கு, இந்தப் பிரபஞ்சம் ஒரு மாறாத ஒழுங்குமுறையுடன் இயங்கிக் கொண்டிருப்பது நன்கு தெரியவரும். இந்த ஒழுங்குமுறையே **ரிதம்** என்பதாக சாஸ்திரம் கூறுகின்றது. அதாவது, இந்த இயற்கையின் படைப்புக்கள் எல்லாமே ஒரு ஒழுங்கு நியதியுடன், பஞ்சபூதங்களின் கட்டுப்பாட்டில் கட்டாயம் கையாளப்படுகின்றது.

இந்த பிரபஞ்சத்தை நாம் நன்கு உற்று நோக்கும்போது, அதிலுள்ள கோடானுகோடி ஒளிக்கோளங்களும், நட்சத்திரக் கூட்டங்களும் ஒன்றின்மீது ஒன்று மோதிவிடாமல், ஒரு ஒழுங்கு முறையுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படியே, இந்த பிரபஞ்சத்தின் ஒரு அங்கமான நாம் வாழுகின்ற இந்த பூமியை எடுத்துக் கொண்டாலும், இதில், உரிய காலங்களில் பருவங்கள் மாறுவதும், காற்று வீசுவதும், மழை பொழிவதும் என எல்லாமே ஓர் ஒழுங்கு முறையுடன் நிகழ்வதையும் நம்மால் பார்க்க முடிகின்றது.

ஆகவே, இந்த இயற்கையின் நியதியை சரியாகப் புரிந்துக்கொண்டு, இந்த பூமியில் வாழுகின்ற சீவர்களில், அறிவுப் பரிமாணத்தில் உயர்ந்து வந்த நிலையில், மனிதன்

மட்டுமே தன்னிடம் உள்ள பகுத்தறிவைக் கொண்டு, நன்மை, தீமைகளை சரியாகப் புரிந்துக் கொண்டு, அதன் வாயிலாக, நம் மனித சமுதாயத்தை நல்ல வழிகளில் கொண்டு சென்று, எல்லோரும் இன்புற்று வாழ வழிவகை செய்ய வேண்டிய சேவைகளாகப் பார்க்கின்றோம். இவ்வாறு, இந்த இயற்கையை நேசித்து, இயற்கையோடு, இணைந்து வாழும்போது மட்டுமே, இயற்கை வளம் அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டு, மனிதன் மட்டுமின்றி, மற்ற உயிரினங்களும் மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய வாழ்க்கை முறையாக மாறி, இந்த பூமி தாயும் மகிழ்ச்சியடைந்து, மக்களுக்கு இன்னும் எல்லா வளங்களையும் சிறப்பாகத் தருகின்ற நிலை உண்டாகும். அதன் மூலமாக, மனித சமுதாயம் மட்டுமின்ற மற்ற எல்லா உயிரினங்களும், வளம்பொருந்திய வல்லமைக் கொண்ட வாழ்க்கையாக வாழும்.

ஆகவே, மனிதன் மட்டுமே, இயற்கையை அரவணைத்து, அவைகளை தனக்காக, தன் சுயநலத்துக்காக அழிக்காமல் காப்பாற்றி, அனைத்து உயிரினங்களும் இந்த உலகில் இன்புற்று வாழ வழி வகைகள் செய்ய முடியும். எனவே, இதனைப்புரிந்துக் கொண்டு வாழும்போது, இந்த இயற்கை அன்னை நமக்கு எல்லாவகையிலும் அனுகூலமாக அமைகிறது. மாறாக, இந்த இயற்கையை நாம் அழிக்கும்போது, இயற்கையின் ரிதம் (ஒழுங்கு) பாதிக்கப்பட்டு, இயற்கை அன்னையின் கோபமாக மாறி, இயற்கை சீற்றமாக சுனாமி, நிலநடுக்கம், புயல், சூறாவளி போன்ற பலவகைப்பட்ட துயரங்களை மனித சமுதாயம் மட்டுமின்றி மற்ற பல உயிரினங்களும் அழிவுக்கு உட்பட நேர்கின்றது.

2. **உண்மை:**

உண்மை என்பதை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். '**யாருக்கும் தீமை விளைவிக்காத சொல்லும், அதன் வாயிலாக வெளிப்படுகின்ற நல்ல செயலும்தான் நன்மை எனும் உண்மை**' என்பதாகவே நம் முன்னோர்களால் பார்க்கப்பட்டது. இதற்கு ஆதாரமாக, நம் திருக்குறளில், திருவள்ளுவர் கூறும்போது,

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.**

என்கின்றார். ஆக, எப்போதும் உண்மை பேசவேண்டும், எல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசவேண்டும், இனிமையல்லாத வார்த்தைகளை பேசவே கூடாது. இப்படி, வாக்கினால் வார்த்தைகளை சரியாகக் கையாளுவது என்பது, '**வாக்கினால்செய்கின்ற தவம்**' என்றே நமது சாஸ்திரங்கள் அழைக்கின்றது. இதுவே, அன்றைய சான்றோர்களால் காலம் காலமாக கடைப்பிடிக்கின்ற தர்மமாகும்.

### 3. தவம்:

தவம் என்றாலும் பிற உயிர்களுக்கு துன்பம் நேராத, தனக்கு வருகின்ற துயரங்களைப் பொருத்துக் கொள்கின்ற இதுப்போன்ற உயரிய விசயங்களை உள்ளடக்கிய வாழ்க்கையை வாழ்வதுதான் உண்மையான தவம். இதனுடன், இந்த உடலுக்கு ஆரோக்கியம் அளிக்கக்கூடிய உபவாசம், மௌன விரதம், உபாசனை, ஜபம் போன்றவைகளை செய்வது என்பது, இன்னும் நம்முடைய தவ வாழ்க்கையை சரியாக வாழ வைக்கின்ற சரியான வழிமுறையாகும். இதன் காராணமாக, நமது ஆசைகளால் எழுந்த அனாவசியமான தேவைகளைக் குறைத்தல், அனாவசியமான அரட்டை அடிக்கக்கூடிய **பேச்சைக் குறைத்தல்** போன்ற நன் நடத்தைகள் மூலம், நமது புலன்கள் நம்முடைய கட்டுப்பாட்டில் வந்துவிடுவதையும் நாம் நடைமுறையில் பார்க்கலாம். இதுவே, தவம் எனப்படும்.

### 4. தமம்:

தமம் என்றால், புலனடக்கம். "**புலன்கள் புற உலகை அனுபவிப்பதற்காகவே படைக்கப்பட்டுள்ளன**" என்கிறது கட உபநிஷதம். புலன்களை அலையவிட்டு அதன் பின்னால் செல்பவன் அழிகிறான் என்று கட உபநிஷதமே எச்சரிக்கையும் செய்கிறது. எனவே, புலன்கள் எதில் ஈர்க்கப்படுகின்றன என்பதில் எல்லோருக்கும் கவனம் தேவை. புலன்களின் பயன் புறத்தில் உள்ளவைகளை மனம் அறிந்துக் கொண்டு, அறிவால் அனைத்தையும் செய்யக்கூடிய நிலையில் நம் படைப்பு இருப்பதினால், இந்த புலன்கள் விசயத்தில் நாம் அனைவரும் கட்டுப்பாடுடன் இருப்பது எப்படியெனில், தீயவை பார்க்காதே! தீயவை பேசாதே! தீயவை கேட்காதே! என்ற இந்த மூன்றையும் தாரக மந்திரங்களாகக் கொள்ள வேண்டும். இதுவே **தமம்** எனப்படும்.

### 5. சமம்:

சமம் என்றால், மனவடக்கம்.

வ்ரஜ்ய விஷய வ்ராதாத் தோஷ–த்ருஷ்ட்யா முஹுர்முஹு:|
ஸ்வலக்ஷ்யே நியாதாவஸ்தா மனஸ: சம உச்யதே||1

இந்த சமஸ்க்ருத செய்யுளுக்கு பொருள் என்னவெனில், **சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்** என்பதாக ஐம்புலன்களும் அநுபோகம் செய்ய விரும்புகிற எல்லா விசயசுகங்களும் '**விஷய வ்ராதம்**' எனப்படும். நமது விவேகத்தாலும், வைராக்யத்தாலும் புலன்களின்

போக்கை அடிக்கடி அலசிப் பார்த்து, இவைகள் யாவும் ஆத்மாவை அறிவதற்கு தடையாக உள்ளன என்பதை தெரிந்துக் கொண்டு, இவைகளின் விசயத்தில் விழிப்புணர்வோடு நாம் நடந்துக் கொள்வதை இங்கு '**முஹுு முஹுு:**' என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

பொதுவாக, நமது மனம் எப்போதும் இன்பம் என்று நினைக்கின்ற ஏதாவது ஒரு விசயத்தில் சிக்கிக்கொண்டு, அங்கும், இங்கும் அலைப்பாய்ந்தபடி பரப்பரப்பாகவே எப்போதும் இருப்பதினால், எல்லோருக்குமே இந்த நிலையில், இறைவனை தன்னுள் உணர்வது என்பது என்றுமே சாத்தியமாகாது. ஆகவே, யார் ஒருவன் இதைப் புரிந்துக் கொண்டு, விழித்துக் கொண்ட விவேகத்தினால், மனதை பரப்பரப்பின்றி அமைதியாக வைத்துக் கொள்ள முடியுமோ? அவனுக்கு அவன் நினைப்பது அத்தனையும் அதே மனதினால், சரியான சாதனையாக மாறி, அதன் சாத்தியத்தை நிலை நாட்டுகின்றது என்பதை வலியுறுத்துவதுவே, மனதின் சம நிலை என்பதாக சமம் என்று பார்க்கப்படுகின்றது. ஆகவே, மனதின் அமைதி, திருப்தி மட்டுமே மனிதனை மகத்தான தெய்வீக மனிதனாக மாற்றும்.

### 6. வேள்விகள்:

பிரபஞ்சத்திலிருந்து நாம் பெற்றதைத் திருப்பிக் கொடுக்கும் வகையில், நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதே உண்மையான வேள்வி என்பதாக ஏற்கனவே பார்த்தோம்.

### (i) தேவ யக்ஞம்:

தேவ யக்ஞம் என்பது, நம்முடைய தேவர்களாக நாம் பார்க்கின்ற பஞ்சபூதங்களை சரியாகப் புரிந்துக் கொண்டு, அண்டத்தில் உள்ளது, பிண்டத்தில் உள்ளது என்பதற்கேற்ப, நமது தெய்வீக பிரார்த்தனைகள், பூஜைகள் போன்றவைகளை நாம் செய்வதின் மூலம், நமது மனம் தூய்மையாக்கப்பட்டு, இந்த இயற்கையை வணங்கி போற்றி வாழ்வதினால், இதிலுள்ள கல், மண், மரங்கள், மலைகள் என எல்லாவற்றையும் தெய்வீகம் பொருந்திய கண்ணோட்டத்தில் காண்பதினால், இயற்கை வளங்களை அழிக்காமல், அவைகளை அரவணைத்து வாழுகின்ற வாழ்க்கை முறையில் உண்டாகும் முதல்படிதான் இந்த வழிபாடு, பூசைகள், பிரார்த்தனைகள் என எல்லாமே எனலாம்.

ஆக, நாம் செய்கின்ற பூசை, புனஸ்காரங்கள் மூலம் நமது செயல் விளைவுகள் எல்லாமே சரியாக மாறி, இந்த மனிதகுலத்திற்கு இயற்கை அன்னையின் இன்றியமையாத பொக்கிசங்களை எல்லாம் காப்பாற்றி, இனிவரும் மனித சமுதாயத்திற்கு பயன்படும்படி

மனிதன் வாழ்கின்ற வாழ்க்கையைத்தான் வேத ரிஷிகள் பஞ்சமகா யக்ஞம் என்று எடுத்துரைத்தார்கள். அதை சரியாகப் புரிந்துக் கொண்டு வாழ்வதில்தான் மனித மகத்தான நோக்கம் உள்ளது.

அதைவிடுத்து, வழிபாட்டின் நோக்கம் புரியாமல், இந்த கல்லையும், மலைகளையும், மரங்களையும் வணங்குவது என்பது, மூட பக்தியாக மாறி, மனிதன் மனம்போன போக்கில், சுய நலமாக போய்க்கொண்டு, சில, சடங்கு, சம்பிரதாயங்களில் சிக்கிக்கொண்டு, சிறுமதி படைத்தவனாக மாறி, சுய நலம் கொண்டவனாக இதுதான் சரி! என்பதாக வாதிட்டுக் கொண்டு வாழக்கூடாது.

நம்முடைய இறை வழிபாட்டின் இன்றியமையாத மிக உயரிய நோக்கம் என்பது, எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கும் வகையில், அவைகளுக்கான மனத்தூய்மையை உண்டாக்கும் பொருட்டு, வழிபாடுகள் இருக்க வேண்டும் என்பதே எல்லா ரிஷிகளின் ஒருமித்த கருத்து என்றே நாம் சாஸ்திரங்கள் வாயிலாக பார்க்க முடிகின்றது.

ஆக, மனிதனுக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேக பகுத்தறிவைக் கொண்டு, நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து, யாருக்கும், எதற்கும் தீமைகள் செய்யாத வாழ்க்கை முறை மட்டுமே, மனித மனம் அடைந்த உயர்பரிமாணத்தின் உன்னதம் என்றே பார்க்க முடிகின்றது. ஆகவே, இயற்கையை அல்லது இறைவனை வணங்குவது என்பது, உண்மையான அனன்ய பக்தியின் வாயிலாக மட்டுமே இருக்க வேண்டும்.

இறைவனும், இயற்கையும் எனக்கு வேறாக இல்லை என்ற உணர்வு எப்போதும் நம்மிடம் பிரகாசிக்க வேண்டும். இதுவே, **தேவ யக்ஞம்** எனப்படும். ஆக, நாம் இயற்கையிடமிருந்து பெற்றதை, இத்தகைய இறை வழிபாட்டின் மூலம் மற்றவர்களுக்கும் திருப்பிக் கொடுக்கிறோம்.

**(ii) ரிஷி யக்ஞம்:**

சாஸ்திரங்களைப் படித்தல், கற்பித்தல் என்பதைத்தான் **ரிஷி யக்ஞம்** என்கிறோம். நமது ரிஷிகளிடமிருந்து பெற்ற வேதத்தின் அறிவைச் சரியான வழியில் செலவிட்டு, அதன்மூலம் அவைகளை மற்றவர்களுக்கும் கொண்டு சேர்ப்பதின் மூலம், நாம் அந்த ரிஷிகளுக்கு நன்றி செலுத்துவதாகும். இதுவே, நாம் ரிஷிகளுக்கு செய்யக்கூடிய உண்மையான கைமாறு என்பதினால், இதற்காக ரிஷிகளுக்கு கடன் பட்டவைகளை நாம் திருப்பிக் கொடுத்தல் மூலம் இந்த **ரிஷி யக்ஞம்** செய்யப்படுகின்றது.

**(iii) பித்ரு யக்ஞம்:**

பெற்றோருக்கான கடமைகளைச் செய்தல், முன்னோர் பெருமையை நிலை நாட்டுகின்ற வகையில் வாழ்க்கையை சரியாக வாழ்தல். நம்முடைய பெற்றோரிடமிருந்தும், முன்னோர்களிடமிருந்தும் பெற்றவற்றை இதன் மூலம் திருப்பிக் கொடுத்தல் என்பதுதான் நாம் பித்ருக்களுக்கு செய்யக்கூடிய உண்மையான **பித்ரு யக்ஞம்** ஆகும்.

**(iv) நர யக்ஞம்:**

பிற மனிதர்களுக்கு உதவுதல். சமுதாயத்திடமிருந்து நாம் பெற்றதை இதன்மூலம் திருப்பிக் கொடுக்கிறோம்.

**(v) பூத யக்ஞம்:**

பிற உயிரினங்களுக்கு உதவுதல். இயற்கையிலிருந்து நாம் பெற்றதை இதன்மூலம் திருப்பிக் கொடுக்கிறோம் இந்த ஐந்து வேள்விகளின் மூலம் நாம் பிற உயிர்களுடன், பிற மனிதர்களுடன், பெற்றோருடன், பெரியவர்களுடன், இயற்கையுடன் இணைந்து வாழ்கிறோம்.

**7. அக்னிஹோத்ரம்:**

இல்லறத்தானின் தினசரிக் கடமைகளுள் ஒன்று இது. வீட்டில் அக்கினியை நிறுவி, உரிய மந்திரங்களுடன் உரிய பொருட்களைச் சமர்பித்து தேவர்களையும், இறந்த முன்னோர்களையும் வழிபடுவதே அக்னிஹோத்ரம்.

**8. விருந்தினரைப் பேணுதல்:**

'**விருந்தினரும் தெய்வமே**' என்று இதே உபநிஷதம் இனி வரும் பகுதிகளில் கூறவுள்ளது. முந்தைய காலங்களில் விருந்தினரை உபசரித்தல் என்ற இந்தப் பண்பு இந்தியாவில் மிகவும் போற்றப்பட்டது. ஆனால், தற்பொழுது வேகமாக மறைந்து வருகிறது என்று சுவாமி விவேகானந்தர் மிகவும் வருந்தினார்.

## 9. மனிதகுல நன்மை:

எப்போதும் தனக்கு நன்மை தரவல்ல செயல்களையே ஒரு மனிதன் செய்ய விரும்புவான். அப்படி தனக்கு மட்டுமே நன்மை உண்டாகவேண்டுமென்று அவன் விரும்பிபாலும், தன்னைப் போன்றே தான் மற்றவர்களும் என நினைக்கும்போது மட்டுமே, அவன், தனக்கான '**நான்**' என்ற எல்லையைக் கடந்து இன்னும் சிலருக்காவது நன்மை தருகின்ற செயல்களைச் செய்ய அவன் கற்றுக்கொள்கின்றான். அத்தகைய நல்ல பல சேவைகள் மூலம், இந்த மனித சமுதாயம் மகிச்சி நிறைந்த சமுதாயமாக அன்றைய காலங்களில் காணப்பட்டது.

ஆனால், இன்று, இளமைப் பருவத்திலேயே மாணவர்களின் மதி மயக்கும் செயல்களை செய்யத்தூண்டுகின்ற மது, கஞ்சா, புகையிலை, பான்பராக் போன்ற போதை வஸ்துக்களின் வரவால், மனித சமுதாயம் தள்ளாடுவதையும் பார்க்க முடிகின்றது. ஆகவே, நல்ல கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். கற்றபடி கட்டாயம் மாணவர்கள் வாழக்கூடிய வழி வகைகளை செய்யப்பட வேண்டும். சமுதாய அக்கரைக் கொண்டவர்கள் இதற்காக இன்றைய நிலையில் முன்வர வேண்டும். இதுவே, மனித குல நன்மைக்கான நலம்பயக்கும் பாதை என்றே நாம் பார்க்க முடிகின்றது.

## 10. நல்ல சந்ததியை உருவாக்குதல்:

ஓவ்வொரு இல்லறத்தானின் தலையாய கடமை இது. இதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவதற்காகவே இந்தக் கருத்து மூன்று கோணங்களில் இங்கு சொல்லப்படுகிறது. நல்ல மக்கள், நல்ல பேரப்பிள்ளைகள், நல்ல சந்ததி என்று மூன்று முறை சொல்லப் பட்டுள்ளது. நல்ல சந்ததியை உருவாக்க வேண்டுமென்றால், ஒருவன் தான் நல்லவனாகவும், நல்ஒழுக்கம் நிறைந்தவனாகவும், அறவழியில் வாழ்பவனாகவும் கட்டாயம் இருக்க வேண்டும்.

அப்பொழுது மட்டும்தான் தன்னுடைய விட்டில் தன் பிள்ளைகளை நல்லவர்களாக வளர்த்து, தன்னை சார்ந்த உற்றார் உறவினர்களை நல்லவர்களாக மாற்றி, அருகாமையில் பழகும், நம் பக்கத்து வீடுகளில் உள்ளவர்களையும், நம்மை பார்த்து நல்ல பழக்க வழக்கங்களுக்கு கொண்டுவந்து, அந்த வீதியை நல்வழி படுத்தி, பிறகு நாம் வசிக்கும் ஊரை நல் மக்களாக மாற்றி, இந்த சமுதாயத்தினை ஓர் நல்ல சமுதாயமாக மாற்ற முடியும் என்று நல்வழியின் முக்கியத்துவத்தை இங்கே கூறப்படுகிறது.

இவ்வாறு சமுதாயத்தில் ஒரு நல்ல குடிமகனாக உருவாவதற்கான அடிப்படைப் பண்புகள் மாணவப் பருவத்திலேயே புகட்டப்பட்டன. நன்கு வளர்க்கப்பட்டன.

**சுயதூண்டுதல்**

வாழ்க்கைக் கல்வியின் அடுத்த அம்சம் சுயத்தூண்டுதல். ஒரு இலட்சியத்தை எடுத்துக்கொண்டு முன்னேறும்போது, சில வேளைகளில் இலட்சியம் மறந்து போவதுண்டு, சில வேளைகளில் இலட்சிய நாட்டம் நீர்த்துப்போவதும் உண்டு. **எனவே தினமும் அதனை நினைவூட்டிக் கொள்வது நல்லது**. இது சுயத்தூண்டுதல் எனப்படுகிறது.

இத்தகைய மந்திரங்கள் நமது வேதங்களிலும், உபநிஷதங்களிலும் ஏராளம் உள்ளன. உபநிஷதங்களைப் படிக்கும்போது மட்டுமல்லாமல், இவற்றைப் பொருளுணர்ந்து அவ்வப்போது ஓதுவது நாம் நமது இலட்சியத்தில் உறுதியாக இருக்க உதவும். இத்தகைய மந்திரங்கள் நம்மை நமது சுய கௌரவத்தில் நிலைபெறச் செய்கின்றன. அத்தகையதொரு மந்திரம் இது.

**அனுவாகம் – 10**

அஹம் வ்ருஷஸ்ய ரேரிவா |
கீர்த்தி: ப்ருஷ்ட்டம் கிரேரிவ |
ஊர்த்வ பவித்ரோ வாஜினீவ ஸ்வம்ருதமஸ்மி |
த்ரவிணம் ஸவர்ச்சஸம் |
ஸுமேதா அம்ருதோஷித: |
இதி த்ரிசங்கோர் வேதானு வசனம் ||

ஆத்ம ஞானத்தை அடைந்தபிறகு **திரிசங்கு** என்ற ரிஷி கூறியவைகள் இந்த அனுவாகத்தில் கூறப்பட்டுள்ளது. இதை ஜபம் செய்ய நல்ல ஸம்ஸ்காரங்கள் மனதில் வந்து சேரும். த்வைத வாஸனைகள் அழிந்து, அனைத்தும் ஒன்றே என்ற அத்வைத உண்மை விளங்கும்.

நம்மிடத்தே இருக்கின்ற சம்சார பாவனைகள் நீங்கி, திரிசங்கு கூறிய வசனங்கள் நமக்கு ஆத்ம ஞானத்தையும் கொடுக்கும். இதன்வாயிலாக, நமது கண்ணுக்கு தெரியாத

பாவங்களும் நீங்கிவிடும். பொதுவாக, நம்மிடமுள்ள பாவங்கள் நம்மை இதுப்போன்ற அத்யாத்ம யோகம் எனும் கல்வியை தொடர்ந்து கற்றுக் கொள்ள முடியாமல் தடையாக வந்து சேரலாம்.

ஆகவே, ஏற்கனவே கூறப்பட்ட '**ஓம் ஹ்ரீம் நம:**' என்ற இந்த மந்திரத்தை அனுதினமும் சிரத்தையுடன் ஜபம் செய்வதால், நமக்கு வருகின்ற தடைகள் நீங்கும். இந்த மந்திரத்தின் பொருள் '**எல்லையற்ற பரமனின் ஆற்றலை பணிகின்றேன்**' என்று அர்த்தத்தை புரிந்துக் கொண்டு ஜபம் செய்ய வேண்டும்.

**திரிசங்கு ரிஷி கூறியது.**

நானே அனைத்து பிரபஞ்சத்திற்கும், சம்சாரத்திற்கும் ஆதாரமாக இருக்கின்றேன். நான் சம்சாரத்தை நாசம் செய்தவன். அவர் அடைந்த வைராக்கியம், ஆத்மஞானத்தினால் அந்த ரிஷி இதை செய்திருக்கின்றார்.

என்னுடைய புகழானது மலை உச்சி அளவுக்கு ஓங்கி இருக்கின்றது. தேவலோகம் வரை என்னுடைய புகழ் வளர்ந்த்திருக்கின்றது. இது இவரிடத்தில் உள்ள மனநிறைவை எடுத்துக் காட்டுகின்றது. எவனொருவன் தன்னையே நேசிக்கின்றானோ? அவனுக்கு மற்றவர்கள் தன்னை புகழ வேண்டும் என்ற எண்ணமே வராது.

உதாரணமாக கர்ணன் தான் சத்திரியன் என்று குந்திதேவி மூலம் அறிந்துக் கொண்டபின் மற்றவர்கள் அவனை தேரோட்டி என்று சொல்லும் போதும் கூட அவன் வருந்தவில்லை.

நான் முழுமையானவனாகவும், தூய்மையானவனாகவும் இருக்கின்றேன்.

சூரிய தேவதைப் போல, நான் அழியாத ஆத்ம தத்துவமாக இருக்கின்றேன். ஒளிப்பொருந்திய பிரம்ம தத்துவமாக இருக்கின்றேன், அதை அடைந்தவனாக இருக்கின்றேன். நான் பிரம்ம ஸ்வரூபம் என்ற அறிவுடனே செயல்படுகின்றேன். எப்பொழுதும் பிரம்ம ஞானத்தில் நிலைபெற்று இருக்கின்றேன். மரணமற்றவனாகவும், மாற்றமில்லாதவனாகவும் இருக்கின்றேன். நான் மரணமற்ற நிலையில் எப்போதும் என்னுள்ளேயே இலயித்திருக்கின்றேன். இவ்வாறு திரிசங்கு என்ற ரிஷி கூறினார்.

**கடமைகள்**

கல்வி முடிந்து வெளியேறுகின்ற மாணவர்களுக்கு, பாடசாலையை விட்டுப் பிரியும் வேளையில் ஆச்சாரியர் அளிக்கும் செய்திபோல் அமைகிறது இந்தப் பகுதி. குருகுல வாசம் முடிந்த பின் மாணவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான 15 கடமைகள் இங்கு கூறப்பட்டுள்ளன.

**அனுவாகம் – 11.1**

வேத மனுஸ் ஆச்சார்யோந்தே வாஸின மனுசாஸ்தி |

ஸத்யம் வத | தர்மம் சர| ஸ்வாத்யாயான்மா ப்ரமத: |

ஆசார்யாய ப்ரியம் தனமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச் சேத்ஸி: ||

இதில் சில பண்புகள், கடமைகள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த பண்புகள் இருந்தால்தான் ஆத்ம ஞானத்தை அடைய வேண்டும் என்ற ஆசையே மனதில் எழும். வேதத்தை ஓதும் முறையை மாணவர்களுக்கு ஆச்சாரியர் புகட்டிய பின் மாணவனிடத்தில் கீழ்க்கண்டவாறு உபதேசிக்கின்றார்.

உண்மையை பேசு, தர்மத்தை பின்பற்று, வேதத்தில் கூறப்பட்டுள்ள தர்மத்துடன் வாழ்ந்து கொண்டிரு. அதர்மத்தை எப்போதும் செய்யாதே. வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள கர்மங்களை செய், நிஷித்த கர்மங்களை செய்யாதே. சாஸ்திரம் படிக்கும்போது கவனக் குறைவாக இருக்காதே. குருவிடம் கேட்ட சாஸ்திரத்தை கவனக்குறைவாக கூட படிக்காமல் இருந்து விடாதே. குருவுக்கு தேவைப்படும் பொருளாதாரத்தைக் கொடுக்க வேண்டும். வம்சத்தொடரை அறுத்துவிடாதே என்பதாக இந்த மந்திரம் கூறுகின்றது.

**அனுவாகம் – 11.2**

ஸத்யான்ன ப்ரமதி தவ்யம் | தர்மான்ன ப்ரமதி தவ்யம் |

குசலான்ன ப்ரமதி தவ்யம் | பூத்யை ந ப்ரமதி தவ்யம் |

ஸ்வாத்யாய ப்ரவசனாப்யாம் ந ப்ரமதி தவ்யம் |

தேவபித்ரு கார்யாப்யாம் ந ப்ரமதி தவ்யம் ||

உண்மை பேசுவதிலும் கவனக்குறைவாக இருந்து விடாதே. வேதத்தில் விதிக்கப்பட்ட கடமைகளிலிருந்து விலகி விடாதே. உன்னைப் பாதுகாத்துக் கொள்வதில் கவனக்குறைவாக இருந்து விடாதே. வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டிரு. வாழும் வாழ்வின் தரத்தை உயர்த்தி கொண்டிரு. **சாஸ்திரத்தை கற்பதிலிருந்தும், கற்றதை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்காமலும் இருந்துவிடாதே**. தேவர்களுக்கும், பித்ருகளுக்கும் செய்ய வேண்டிய காரியங்களை தவறாமல் செய்ய வேண்டும்.

**அனுவாகம் – 11.3**

மாத்ரு தேவோ பவ |

பித்ரு தேவோ பவ |

ஆசார்ய தேவோ பவ |

அதிதி தேவோ பவ ||

தாயையும், தந்தையையும், ஆசிரியரையும், விருந்தினரையும் கடவுளாகக் கருதி, அவர்களை எப்போதும் போற்றுபவனாக இரு. இவர்களிடன் என்ன குறைகள் இருந்தாலும் அவைகளை கவனத்துக்கு எடுத்துக்கொள்ளாமல், எந்தவித நிபந்தனையின்றி இவர்களை தெய்வமாக வணங்க வேண்டும். இவர்களிடமிருந்துதான் பலவிதமான பலன்களை அடைய முடியும். ஆகவே, இவர்கள் அனைவரையும் வணங்கு, போற்று, நமது இல்லம் தேடி வருகின்ற முன்பின் அறிமுகமில்லாத விருந்தினர்களையும் வணங்கி, தெய்வமாகப் போற்ற வேண்டும்.

**அனுவாகம் – 11.4**

யான்யன வத்யானி கர்மாணி |

தானி ஸேவிதவ்யானி | நோ இதராணி |

யான் யஸ்மாகம் ஸுசரிதானி |

தான் த்வயோ பாஸ்யானி | நோ இதராணி ||

எது தர்மம், எது அதர்மம் என்பதை அறிந்து கொள்ள **மூன்று வழிகள்** உண்டு.

1. வேத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டது.

2. ரிஷிகளால் எழுதப்பட்ட ஸ்மிருதிகள், தர்ம சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், இவைகளில் சொல்லப்பட்டது.

3. இப்பொழுது உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சான்றோர்களின், மகான்களின் வாழ்க்கை முறை என்ற இந்த மூன்று வழிகளாலும் தர்ம அதர்ம நெறிகளை அறிந்துக் கொள்ளலாம்.

எந்தச் செயல்கள் குற்றமற்றதாக இருக்கின்றதோ, மேற்கூறிய மூன்று பிரமாணங்களினாலும் நிந்திக்கபடாததாக அவைகளை பின்பற்ற வேண்டும்.

மற்றவற்றை பின்பற்றக் கூடாது. பெரியோர்களிடத்தில், சான்றோர்களிடத்தில் காணப்படும் நல்ல விஷயங்களை மட்டுமே நாம் நடைமுறையில் பின்பற்ற வேண்டும். மற்றவற்றை எப்போதுமே பின்பற்றக் கூடாது.

**அனுவாகம் – 11.5**

யே கே சாஸ்மச் ச்ரேயாக்ம்ஸோ ப்ராஹ்மணா: |
தேஷாம் த்வயாஸனேன ப்ரச்வஸி தவ்யம் ||

நம்மை காட்டிலும் வயதிலும், அனுபவத்திலும்,, அறிவிலும் பெரியோர்கள், பண்பாளர்கள் வந்தால், அவர்களுக்கு அமர இருக்கை கொடுத்து, அவர்கள் களைப்பை அவசியம் போக்க வேண்டும். அவர்களோடு அதிகம் பேசாமல், அவர்கள் கூறும் நல்ல விஷயங்களினால் தூய அறிவை அடைய வேண்டும்.

**அனுவாகம் – 11.6**

ச்ரத்தயா தேயம் | அச்ரத்தயா தேயம் |
ச்ரியா தேயம் | ஹ்ரியா தேயம் |
பியா தேயம் | ஸம்விதா தேயம் ||

இல்லறத்தில் இருப்பவர்கள் எப்படி தானம் செய்ய வேண்டும் என்று இங்கு கூறப்படுகின்றது. சிரத்தையுடன் தானம் செய்ய வேண்டும், மனமுவந்து கொடுக்க வேண்டும். சிரத்தையில்லாமல் தானம் செய்யக்கூடாது. அதிகமாகக் கொடுக்க வேண்டும். இவ்வளவுதான் கொடுக்க முடிகின்றதே என்ற வெட்கத்துடன் கொடுக்க வேண்டும். அக்கறையுடன், பயந்து கொண்டு கொடுக்க வேண்டும். சரியான அறிவுடன் தானம் செய்ய வேண்டும். அதாவது தேவைப்படும் இடத்தில், காலத்தில், தகுதியுடையவருக்கு தானம் செய்ய வேண்டும்.

**அனுவாகம் – 11.7**

அத யதி தே கர்ம விசிகித்ஸா வா வ்ருத்த விசிகித்ஸா வா ஸ்யாத் |
யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்சின: | யுக்தா ஆயுக்தா: |
அலூக்ஷா தர்ம காமாஸ்யு: | யதா தே தத்ர வர்த்தேரன் | ததா தத்ர வர்த்தேதா: ||
அதாப்யாக் யாதேஷு | யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்சின: | யுக்தா ஆயுக்தா: |
அலூக்ஷா தர்ம காமாஸ்யு: | யதா தே தேஷு வர்த்தேரன் | ததா தேஷு வர்த்தேதா: ||

ஒருவேளை கடமையைப் பற்றிய சந்தேகம் வந்தால், வாழ்க்கையில் கையாளும் விஷயத்தில், சில விவகாரத்தில் சந்தேகம் வந்தால், அந்த நேரத்தில் சான்றோர்கள், சாஸ்திரத்தை நன்கு அறிந்தவர்கள், கற்றதை தமது வாழ்வில் கடைபிடிப்பவர்கள், எப்பொழுதும் நடுநிலைமையோடு வாழ்பவர்கள், தீயபண்புகள் இல்லாதவர்கள், மென்மையான மனதையுடையவர்கள், தர்மத்தில் நிலை பெற்றவர்கள், எவ்வளவு கஷ்டம் வந்தாலும், தர்மம் தவறாமல், அதை எப்போதும், எந்த சூழ்நிலையிலும் பின்பற்றுபவர்கள், ஆகிய இப்படிப்பட்ட குணங்களையுடையவர்களிடம், அவர்கள் எப்படி நடைமுறையில் நடந்து கொள்வார்களோ? அவ்விதம் நீ நடந்து கொள்ள வேண்டும்.

மேலும், அதர்மப்படி வாழ்பவர்களிடத்தில், குற்றம் சுமத்தப்பட்டவர்களிடத்தில் அவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ? அதைப் பார்த்து, அவர்களிடமிருந்து ஒதுங்கி இருக்கக் கற்றுக் கொள்.

உதாரணமாக நம்மை உதாசீனப்படுத்துபவர்களை நாமும் உதாசீனப்படுத்த நினைப்போம், நமக்கு தீமை செய்பவர்களுக்கு நாமும் தீமை செய்ய நினைப்போம் இந்த நிலையில் நம்முடைய தவறான எண்ணத்தை நீக்கி, நல்ல நெறியில் வாழுகின்ற சான்றோர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்களோ? அதுப்போல நடந்து கொள்ள வேண்டும்.

**அனுவாகம் – 11.8**

ஏஷ ஆதேச: | ஏச உபதேச: | ஏஷா வேதோபநிஷத் |

ஏததனுசாஸனம் | ஏவமுபாஸிதவ்யம் | ஏவமுசைதது பாஸ்யம் ||

இதுதான் வேதத்தினுடைய கட்டளை (ஆதேஷம்). இதுவே ஸ்மிருதியின் உபதேசம். இதுதான் வேதத்தினுடைய ஸாரம் (சுருக்கமான நீதி). இது (அனுசாஸனம்) இறைவனுடைய கட்டளை. இவ்விதத்தில் நம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு செல்ல வேண்டும்.

**உபநயனம் – யக்ஞோபவீதம்**

மனித வாழ்க்கையின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று கல்வி. கல்வித் துறையில் அடியெடுத்து வைப்பதற்கு முன், ஒருவர் சில உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், கல்வி என்பது அன்றைய காலங்களில் வேதாத்யயனம் என்ற வேதக்கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டுமானால், உபநயனம் என்பது அத்தகைய உறுதிமொழிகளில் ஒன்றாகும்.

உபநயனம் என்பது மாணவன் தன்னுடைய ஆசிரியருடன் மிக நெருக்கமாக இருப்பது. குழந்தை குருகுலத்திற்குச் செல்லத் தயாராக இருக்கும்போது, குழந்தையின் பெற்றோரும் ஆசிரியரும், அந்தக் குழந்தைக்கு முதல் போதனையை வழங்குகிறார்கள். இந்த விழாவைத்தான் நாம் உபநயனம் என்று அழைக்கிறோம்.

இந்த உபநயனம் பிரம்மோபதேசம் என்றும் அழைக்கப்படுகிறது – அதாவது **"பிரம்மத்தைப் பற்றிய அறிவுறுத்தல் "**.

**"நீயே பிரம்மம் (தெய்வீகம்)"** என்ற உயர்ந்த அறிவு குழந்தையின் முதல் கற்றலாகும்.

உபநயனத்தில் கூறப்படுகின்ற நயன் என்ற சொல்லுக்கு **வழிநடத்துதல்** என்று பொருள். குழந்தைக்கு முதலில் உண்மை சுட்டிக் காட்டப்படுகிறது. அதாவது, **"நீயே பிரம்மம்"** என்று கூறப்படுகின்றது. அதன்பின்னர் குரு அந்த உண்மையை குழந்தையின் யதார்த்தமாக்குவது எப்படி? என்பதை அவனுக்கு கற்றுக்கொடுக்கிறார்.

இங்கே நமது பார்வை என்பது, அதாவது கண்ணோட்டம் என்பது மிகவும் முக்கியமானது. வாழ்க்கையைப் பற்றிய சரியானப் பார்வை இல்லாமல் வாழ நேர்ந்தால்,

நமது வாழ்க்கை பல தேவையற்ற விஷயங்களில் சிதறடிக்கப்பட்டு வீணாகிவிடும். குரு இந்த பார்வையை குறித்து மாணவனுக்கு விழிப்புணர்வு வழங்குகிறார். மேலும் அதன் மூலம் அவரிடம் வருகின்ற மாணவனுக்கு ஒரு சரியான வாழ்க்கைப் பாதையையும் காட்டித் தருகின்றார்.

அடுத்து, உபநயனத்தின் மிக முக்கிய அம்சம், மாணவனுக்கு ஜானுவை கொடுப்பது, இதை யக்னோபவீதம் அல்லது புனித நூல் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நூல் மூன்று நூல்களை இணைப்பதன் மூலம் உருவாக்கப்பட்டது. இது ஒரு முடிச்சைக் கொண்டுள்ளது மற்றும் மாணவனின் தோளில், இந்த உடலின் குறுக்கே அணியப்படுகிறது.

பூணுல் அணியும் உபநயனத்தில், இத்துடன் மாணவனுக்கு காயத்ரி மந்திரமும் கற்பிக்கப்படுகிறது. காயத்ரி மந்திரம் என்பது கூர்மையான புத்திக்காக ஜெபிக்கும் ஒரு மந்திரம். பெற்றுக் கொண்ட புற அறிவுத் தகவல்களை எவ்வாறு செயலாக்குவது என்பது மட்டுமல்லாமல், தன்னிடமுள்ள உள்ளுணர்வு திறன்களையும், புத்திசாலித்தனத்தையும் கொண்டு இந்த சமுதாயத்தை அணுகுவது. அதாவது, மாணவனது உள்ளுணர்வால் பிரகாசிக்கும் கூர்மையான புத்திக்கான மிக முக்கிய பிரார்த்தனை மந்திரம் இந்த **காயத்ரி மந்திரம்** எனப்படுகின்றது.

இந்த பூணூல் அணிந்துக் கொண்டு, காயத்திரி மந்திர உபாசனையுடன் கூடிய, மூன்று நூல்களும் மாணவனின் வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய மூன்று முக்கிய பொறுப்புகளைக் குறிக்கின்றன.

இந்த மூன்று பொறுப்புகளும் என்னென்ன?

1. தன்னை பெற்றெடுத்த பெற்றோருக்கு நன்றியுடன் இருத்தல்
2. ஆசிரியருக்கு நன்றியுடன் நடந்துக் கொள்ளுதல்
3. சமூகத்திற்கு நன்றியுடன் நடந்துக் கொள்ளுதல்.

இந்தக் கடமைகளை மாணவன் சரியாக முடித்தவுடன், அவன் அந்த பூணுலை நீக்க முடியும். அப்போதுதான் ஒருவர் வாழ்க்கையின் அடுத்த கட்டமான மனமற்ற மார்க்கம் என்கின்ற மனித வாழ்வின் மகத்துவமான வேதக்கல்வியின் பெருமையை மற்றவர்களுக்கும் உணர்த்தக்கூடிய மிக உயரிய விசயங்களை இந்த சமுதாயத்திற்கு வழங்குதல் எனும், அந்த தூய அறிவு நிலையில் சன்யாசத்தில் நுழைகிறார். அதாவது, பிரம்மச்சரியம், இல்லறம், வாணப்பிரஸ்தம் என்ற மூன்று நிலைகளையும் கடந்த, அனைத்து கடமைகளையும் துறந்த **சந்நியாஸம்** என்ற நிலைக்கு உயர்கின்றார்.

பொதுவான நம்பிக்கைக்கு மாறாக, பெண்களும் பெண்களும் காயத்ரி மந்திரத்தை ஜபிக்கலாம். வைதீக மரபு பெண்கள் இந்தப் பயிற்சியிலிருந்து ஒருபோதும் தடை செய்ய வில்லை. உண்மையில், பண்டைய காலங்களில் பெண்களும் உபநயனம் செய்வது பொதுவான நடைமுறையாக இருந்தது. உபநயனத்தில் தீட்சை பெறுவதற்கும் காயத்ரி மந்திரத்தைக் கற்றுக்கொள்வதற்கும் வயது, பாலினம், சாதி, நிறம் அல்லது மதம் போன்ற எந்தத் தடையும் இல்லை.

**நன்றி கொள்க!**

**அனுவாகம் – 12**

ஓம் சன்னோ மித்ரஸ் ஸம் வருண: | சன்னோ பவத்வர்யமா |
சன்ன இந்த்ரோ ப்ருஹஸ்பதி: | சன்னோ விஷ்ணு ருருக்ரம: |
நமோ ப்ரஹ்மனே | நம்ஸ்தே வாயோ |
த்வமேவ ப்ரத்யஷம் ப்ரஹ்மாஸி |
த்வாமேய ப்ரத்யஷம் ப்ரஹ்மவாதிஷம் |
ரிதமவாதிஷம் | ஸத்யமவாதிஷம் |
தன்மாமாவீத் | தத் வக்தாரமாவீத் |
ஆவின்மாம் | ஆவீத் வக்தாரம் ||
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

**சாந்தி மந்திர விளக்கம்:**

இந்த மந்திரம் முதல் சாந்தி மந்திரம் போன்றது. ஆனால் அங்கே '**போற்றுகிறேன்**' (விதிஷ்யாமி), '**காப்பாராக**' (ஆவது) என்று இருந்தது. இங்கே '**போற்றினேன்**' (அவாதிஷம்), '**காத்தார்**' (ஆவீத்) என்று உள்ளது. ஆரம்ப மந்திரத்தில் பிரார்த்தனை செய்யப்பட்டது. இங்கே அந்தப் பிரார்த்தனை நிறைவேறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

**சீக்ஷாவல்லி முடிவுற்றது.**

# அத்தியாயம் – 2 (மனிதன்)

## (ப்ரஹ்மானந்தவல்லி)

வாழ்க்கையைத் தன் போக்கில் போக விடாமல், எப்படி வாழவேண்டும் என உணர்ந்து, அனுபவித்து வாழுமாறு இந்த தைத்திரீய உபநிஷதம் கூறுகிறது. எந்தெந்த அம்சங்களால், அத்தகையதொரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு மனிதன் அமைதியாகவும், ஆனந்தமாகவும் வாழலாம் எனப் பார்த்ததில், இதுவரை நாம் கற்றுக் கொண்ட சிக்ஷா வல்லியில், மனிதனுக்கான சரியான அறிவைப் பெரும் கல்வி வேதக் கல்வி என்ற முறையில், வாழ்க்கைக் கல்வியைப் பற்றி பார்த்தோம். அடுத்து வருகின்ற இந்த இரண்டாம் பகுதியில் நம்மை இன்னும் ஒரு படி மேலே செல்லத் தூண்டுகிறது.

உலகின் சிந்தனையாளர்களுள் மிகப் பெரும்பாலானவர்கள் தங்கள் சிந்தனையை தூண்டி விட்ட கேள்வி இது – மனிதன் என்பவன் யார்? அதாவது நாம் யார்? உண்மையில் நாம் இந்த உடம்பா? மனமா? அல்லது இவற்றின் சேர்க்கையா? இவைகள் தவிர வேறு ஏதாவது உள்ளதா? என இத்தகைய கேள்விகளுக்கு கிடைத்த விடைகள் பலவாக இருப்பினும், அவற்றுள் மிக முக்கியமான ஒன்றை இந்த அத்தியாயத்தில் காண இருக்கின்றோம்.

மொத்தத்தில் மனிதனைப் பற்றிய, அதாவது நம்மைப்பற்றிய ஒரு சிறந்த ஆராய்ச்சியாக இந்த அத்தியாயம் அமையப்போகிறது, இனி வருகின்ற இந்தப் பாடங்கள் எல்லாமே, இந்த பிரபஞ்சப் படைப்பில் நாம் யார்? நமது இடம் எது? நாம் அனுபவிக்கத் தக்க ஆனந்தத்தின் உயர்ந்த எல்லை எது? என்பவற்றைப் பற்றி ஆராயப்போகின்றது.

பரம புருஷார்த்தமான மோட்சத்தை அடையும் சாதனத்தை பற்றிய மிக உயரிய விசாரம்தான் இனி நாம் பார்க்க இருக்கின்ற பாடங்கள்.

கர்மம், வித்யா இரண்டைப்பற்றிய விசாரம்.

கர்ம காண்டத்தில் கர்மமே சாதனமாக சொல்லப்படிருக்கின்றது.

ஞான காண்டத்தில் ஞானமே சாதனமாக சொல்லப்படிருக்கின்றது.

இந்த இரண்டிலும் சாத்தியம் என்ன?

கர்மம் செயலில் ஈடுபட தூண்டுவது. ஆகவே, அதை செய்! இதை செய்யாதே! என்று எடுத்துரைப்பது. அந்தவகையிலே, கர்மம் என்ற சாதனத்தின் மூலமாக சரியான ஞானத்தை அடைவதற்கு சாதகனை தகுதிப் படுத்தப்படுகிறது. அத்தகைய ஞானத்தின் சாத்தியம் அந்த சாதகனை நேரடியாக மோட்சத்தையடைய உதவுகின்றது.

இதிலே, ஒரு சிலர் கர்மத்தை மட்டுமெ கொண்டு மோக்ஷத்தை அடையளாம் என்று கருதுகின்றனர். ஆனால், அவ்வாறு இருக்குமாயின் கர்ம காண்டத்தின்படி வேத அத்யயனம் செய்துவிட்டு, அந்த சாதகன் கர்ம காண்டப் பாடங்களை படித்துவிட்டு, வெறும் புறத்திலே பூசைகள், பஜனைகள், யாக, யக்ஞங்கள், தியானம் என எதையாவது செய்துக் கொண்டிருப்பானாயின், அதைப்பற்றி வேதம் விளக்க வரும்போது, **சிரவணம்** என்பது மட்டுமின்றி, மேலும் **மனனம், நிதித்யாஸனம்** என்ற இன்னும் இரண்டு சாதனங்களை சொல்லியிருக்கின்றது. ஒருவன் வெறும் கர்மத்தை மட்டும் செய்துக் கொண்டு, மோட்சத்தை அடையலாம் என்றால், இந்த இரண்டும் பயனற்றதாகி விடும். ஆகவே, வேதம் பயனற்ற எதையும் உபதேசிக்காது. மேலும், கர்மம் என்பது அழியக்கூடிய நிலையற்ற பொருட்களைக் கொண்டு செய்யப்படுகின்ற வேள்விகள். ஆனால், நித்யமான பரவஸ்துவை பரம்பொருளை உணர இந்த புற கர்மங்கள் மட்டும் பயனைத் தராது என்பதினால், இறுதியில் *வீடுபேறு* எனும் நித்யமான மோட்சத்தை அடைய மனனமும், நிதித்யாஸனமும் சாதகனுக்கு அவசியம் தேவை.

விதவிதமான உபாஸனைகள் மூலமாக பிரம்மலோகத்தை அடையலாமே?

இதன்மூலம் சகுண பிரம்மனை அடையலாம். ஆனால், நிர்குண பிரம்மத்தை அடைய முடியாது.

**ஞான–கர்ம சமுச்சயத்தின் மூலமாக மோட்சத்தை அடையலாமே?**

சமுச்சயம் என்றால் தொகுப்பு அல்லது சேர்க்கை என்ற நிலையிலே, இங்கு சிலர் ஞான–கர்ம சமுச்சயத்தின் மூலமாக மோட்சத்தை அடையலாமே? என்ற கேள்வியை முன் வைக்கின்றனர்.

ஆனால், ஞான – கர்ம சமுச்சயமே நடக்க முடியாது. இந்த இரண்டையும் சேர்க்கவே முடியாது. கர்மத்தின் ஸ்வரூபம் வேறு, ஞானத்தின் ஸ்வரூபம் வேறு. ஞானத்தின் ஸ்வரூபம் அகர்த்தா, இது பேதத்தை ஏற்படுத்திவிடும். அதனால்தான் கர்மத்தை விட்டு விட்டுத்தான் ஞானத்திற்கே செல்ல வேண்டும். எனவே ஞான – கர்ம ஸமுச்சயம் ஒரே நேரத்தில் நடக்க முடியாது. கர்ம காண்டம் அக்ஞானிகளுக்கு பயன்படும், முமுக்ஷுகளுக்கு மனத்தூய்மையை மட்டுமே கொடுக்கும். ஆனால், ஞான காண்டம் தன்னிருப்பை காட்டிக் கொடுக்கும்.

**ஞான – கர்ம –சமுச்சாய– வாதம்** என்பதன் நேரடி அர்த்தம் 'ஞானம்' அல்லது அறிவு மற்றும் 'கர்மம்' அல்லது சடங்கு போன்ற செயல்களை இணைக்க முடியும் என்பதை ஏற்றுக்கொள்ளும் வழிமுறையாகும்.

வேதாந்த இலக்கியம் வளர்ந்தபோது, ஆத்மாவின் ஞானத்தையும் கர்மாவையும் இணைக்க முடியுமா இல்லையா? என்பது ஒரு குழப்பமாக இருந்தது. இந்த இணைப்பின் சாத்தியத்தை ஆதரித்த சிலர் 'ஞானகர்மசமுச்சயவாத' என்பதில் சில விசயங்களை முன்னிருத்திக் கொண்டு, ராமானுஜர் போன்றவர்கள் **விஷிஷ்ட த்வைதம்** என்ற தனி ஒரு கோட்பாட்டைக் கொண்டு வந்தனர். ஆனால், பகவான் ஸ்ரீ சங்கரர் போன்ற அத்வைதிகள் இதை ஏற்கவில்லை.

காரணம், இந்த உடலோடு, உயிர் வாழுகின்ற வரைக்கும், நமது வாழ்க்கைக்கான லோகசங்கிரகம் அல்லது இந்த உலகிற்கு செய்யக்கூடிய **தன்னலமற்ற சேவை** என்பது எப்போதும் தேவை என்பதினால், எல்லாவற்றிலும் தன்னைக் காணுகின்ற உயரிய ஈஸ்வர நோக்கத்தினால் மட்டுமே, காரியங்களை மனிதன் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே, அனாவசியமான ஆசைகளால் அவன் தூண்டப்படாமல், சுயநலமான செயல்களை செய்யாமல் இருப்பான் என்ற நோக்கில், ஒரு ஞானிக்கு கர்மம் கட்டாயமில்லை என்பதாகக் கருதினார்.

ஞானத்தோடு கர்மத்தையும் துணையாக வைத்துக் கொள்ளலாமே?

மோட்சத்திற்கு தடையாக இருப்பது அக்ஞானம்தான். இந்த அக்ஞானத்தை நீக்குவதற்கு ஞானம் மட்டும் போதும். கர்மத்தின் துணை தேவையில்லை. உலகில் அனாத்மாவை பார்த்துக் கொண்டிருப்பவனுக்கு அடிக்கடி ஆசைகள் வரும். அவைகளை நிறைவேற்றுவதற்கு அடிக்கடி கர்மத்தை செய்வான். ஆனால், ஆத்மாவை பார்ப்பவனுக்கு ஆசைகளே எழுவதில்லை. அதனால், கர்மத்தை செய்ய வேண்டிய அவசியமும் அவனுக்கு இல்லை.

எனவே, வேதாந்தத்தை படிக்க வந்து விட்டால், கர்மத்தை விட்டுவிட்டு, **சிரவணம், மனனம், நிதித்யாஸனம்** என்ற முறையின் வேதத்தை கற்றல், கற்றவற்றில் உள்ள அறியாமைகள விசாரம் மூலமாகக் கண்டு, விழித்துக் கொண்ட விவேகத்தினால், கற்றவற்றில் நிலைப்பெற்று இருத்தல் என்பதாகும். இதன் மூலம் எளிதாக மோட்சத்தை அடைந்து விடலாம்.

ஆக, கர்ம காண்டம் ஒருவனை ஞான காண்டத்திற்கு அழைத்துச் செல்லும், அதன்பிறகு அந்த சாதகன் கர்மத்தை விட்டு விட்டு, ஆத்ம விசாரம் மட்டுமே செய்து, இந்த வாழ்க்கையை வாழும்போதே ஆனந்தமாக மோட்சத்தை அனுபவித்து வாழலாம் என்பதே வேதாந்தம் உணர்த்த வருகின்ற மிக உயரிய உண்மை என்பதாகும்.

அந்த வகையிலே, இந்த அத்தியாயத்தில், **ஜீவ – ஈஸ்வர ஐக்கியம்** ஆனந்தத்தின் அடிப்படையில் விளக்கப்படுகின்றது.

இங்கு ஆனந்தத்தை விசாரம் செய்யப்படுகின்றது. எனவே, இந்த வல்லியில் எல்லா அனுவாகங்களும் முக்கியமானவைகள். இதில், **ஆத்ம விசாரம்** செய்யப்படுவதால் இன்னொரு சாந்தி–பாடத்துடன் இந்த அத்தியாயம் தொடங்குகிறது

**பிரார்த்தனை**

**சாந்தி பாடம்:**

ஸஹ நாவவது | ஸஹ நௌ புனக்து |
ஸஹ வீர்யம் கரவாவஹை |
தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை: ||
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

அந்த ஈஸ்வரன் குரு–சிஷ்யர்களான எங்கள் இருவரையும் காப்பாற்றட்டும். இங்கு காப்பாற்று என்பது சிஷ்யனான என்னை அக்ஞானத்திலிருந்து விடுவித்து ஆத்ம ஞானத்தை கொடு என்றும், இதைக் கற்றுக் கொடுக்கின்ற குருவுக்கு ஆயுளையும், ஆரோக்கியத்தையும் கொடு என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

அந்த ஈஸ்வரன் எங்களிருவரையும் காப்பாற்றட்டும். இங்கே காப்பாற்று என்பது ஞானத்தை அடைந்து அதன் பலனை அனுபவிப்பவனாக இருக்க வேண்டும். அதாவது,

ஞான நிஷ்டை அடைந்திட வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டும். நாங்கள் இருவரும் சேர்ந்து முயற்சி செய்வோமாக. இங்கே சிஷ்யனின் முயற்சி என்பது வித்யாவை கவனமாக கேட்டல், சிந்தித்தல், அவ்வாறு கற்றவற்றை நன்கு புரிந்து கொள்வது, குருவின் முயற்சி பிரம்ம வித்யாவை சரியாக உபதேசித்தல், சிஷ்யர்கள் நன்றாக புரிந்து கொள்ளும் வகையில் உபதேசித்தல். எங்கள் இருவரால் படிக்கப்பட்டது ஒளி பொருந்தியதாக இருக்கட்டும், எங்கள் நினைவில் நன்றாக பதிய வேண்டும். நாங்கள் ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக. சிஷ்யனின் வெறுப்பு படிப்பில் கவனக்குறைவை கொடுக்கும். குருவின் வெறுப்பு சிஷ்யர்களுக்கு மன அழுத்தம் கொடுக்கும்.

**அனுவாகம் – 1.1**

**வாழ்க்கையின் இலட்சியம்:**

நமது வாழ்க்கை என்பது ஒரு மாபெரும் பயணம். எங்கிருந்து புறப்பட்டோம், எங்கே போகிறோம்? என்பது நமக்கு தெரியாத ஒரு புதிரான பயணம். இதனை அறிவதற்கான ஒரு ஆழமான முயற்சியே ஆன்மிகம். ஆக, நாம் புறப்பட்ட இடம் இறைவன், நாம் சேர வேண்டிய இடமும் அவரே! என்று இத்தகைய உபநிஷதங்கள் கூறுகின்றன. அப்படியானால், அவரைத் தேட வேண்டும். அதுவே, மனித வாழ்க்கையின் மகத்தான இலட்சியமாக இருக்க முடியும்.

சரி! அவரை எங்கே தேடுவது? இந்த அகண்ட பிரபஞ்சம் முழுவதும் அவரை வெளியே தேடி அடைவது என்பது என்றுமே சாத்தியம் ஆகாது, ஆக, அவரை எளிதாகத் தேடுவது என்பது, நமது பிண்டமாகிய இந்த உடல் எனும் பிரபஞ்சத்திலுள்ள ஹிருதயக் குகை எனும் இதயத்தில் இருப்பதை தேடி அடைவது.

இந்த இடத்தில், *"தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொனா தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்"* என்ற திருநாவுக்கரசர் பாடிய தேவாரம் பாடலை நினைவு கொள்வது நன்று.

ஓம் ப்ரஹ்மவிதாப்னோதி பரம । ததேஷாப்யுக்தா ।
ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம ।
யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் ।
ஸோஅச்னுதே ஸர்வான் காமான் ஸஹ ।
ப்ரஹ்மணா விபச்சிதேதி ॥ 1.1 ॥

பொருள்:

இறைவனை அறிந்தவன் மிக மேலான நிலையை அடைகிறான். அதுப்பற்றி இவ்வாறு சொல்லப்படுகிறது. மேலும், இறைவன் உண்மை வடிவினர். உணர்வு வடிவினர். எல்லையற்றவர். அனைத்தையும் கடந்தவரான அவர் இதயக் குகையில் வீற்றிருக்கிறார். இந்த உண்மையை உணர்பவன், அனைத்தையும் அறிபவரான அந்த இறைவனை அடைகிறான். அவனுடைய எல்லா ஆசைகளும் நிறைவேறுகின்றன.

**1. உண்மை வடிவினர்:**

உலகில் எண்ணற்ற பொருட்களைக் காண்கிறோம். அந்தப் பொருட்களில் உள்ள உண்மை இறைவன். அதாவது அந்தப் பொருட்களின் அடிப்படையாக அவர் இருக்கிறார். அவர் இல்லையென்றால் அந்தப் பொருட்கள் பொருட்களாக இருக்காது. ஒரு பொருள் என்று நாம் காண்கின்ற ஒன்று, அதற்கு பொருள் என்ற தன்மையைக் கொடுக்கின்ற ஒன்று என்ற ஒவ்வொரு பொருளும் மற்றொன்றால் அடங்கியுள்ளது. உதாரணமாக, பாலை நாம் காண்கிறோம்; ஆனால் பாலுக்குப் பால் தன்மையைத் தருகின்ற சுவையை நாம் காண்பதில்லை. அந்தச் சுவை இல்லாவிட்டால் அது பால் ஆகாது. இவ்வாறே ஒவ்வொரு பொருளிலும் அந்தப் பொருள் தன்மையைக் கொடுப்பதாக அதனுடன் மற்றொன்று சேர்ந்துள்ளது. அந்த மற்றொரு தன்மையாக இறைவன் இருக்கிறார்.

(இந்த ஸ்லோகத்தில் வரும் பொருளுக்கு ஆழமான பொருளை பார்க்கும்போது, பெரும் பிரபஞ்ச உண்மைகளை அனாயாசமாக வெளிப்படுத்தும் பாடல்கள் இவைகள். ஆனால், இவற்றை நேரடியாகப் பொருள் கொண்டுப் பார்த்தால், அது சாதாரணப் பொருளாகவே நமக்குத் தோன்றும். ஸ்தூலமான கண்ணுக்கு எந்தப் பொருளைக் கண்டாலும், அதன் உள்ளீடான தன்மை உண்மையில் புரியாது.

பார்ப்பதற்கு அது வெறும் பொருள் மட்டுமே என்பதாகத் தெரியும். ஆனால், அவற்றின் சூட்சமமான நிலையில் அவற்றுக்கான இன்னும் விரிவான பொருளைக் கண்டறியலாம். உதாரணமாக, நம்முடைய அறிவியல் ஆய்வுகள் மூலம், எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும், அவைகள் எல்லாம் அணுக்களால் ஆனது என்பது எல்லோருக்கும் தெரியும். அத்தகைய ஒவ்வொரு அணுவுக்குள்ளேயும், அவைகளைக் கையாளும் உட்பொருள் ஒன்று (பரமாணு) உள்ளது.

ஒரு பொருளின் ஒரு அணுவை எடுத்துக் கொண்டால், அதனுள்ளே குறிப்பிட்ட ஒரு வரிசையில் அந்த உட்பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் ஒரு கட்டுக்குள்

அமைந்ததாக அந்த அணு உள்ளது. இவ்வாறான பல கோடி அணுக்கள் சேர்ந்து ஒரு பொருளாக நம் கண்ணில் தெரிகிறது. நாமும் கூட பல அணுக்களால் ஆனவர்கள்தான். நம் உடலில் உள்ள அணுக்களும் கூட அப்படித்தான் அமைந்துள்ளன. இந்த அணு உட்பொருட்கள் எப்படி இணைந்து அணுவை உருவாக்குகின்றன, ஒரு பொருள் ஏதேனும் இயற்பியல் அல்லது வேதியியல் மாற்றத்துக்கு உள்ளாகும் போது எப்படி அந்த அணு உட்பொருட்கள் வினையாற்றுகின்றன என்பதையெல்லாம் இந்த சிந்தனைகள் மூலம் நமக்கு உணர்த்தும், இவையே கடவுளின் இயக்கமாக நமக்கு வர்ணிக்கப்படுகின்றன.)

"அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவில் அணுவை அணுகவல் லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும் ஆமே" – திருமந்திரம்.

அணுவிற்குள் அணுவாகவும் அதற்கப்பாலும் இருப்பவன்தான் இறைவன். அப்படி அணுவிற்குள் அணுவாய் உள்ளதை ஆயிரம் கூறு செய்து, அவ் ஆயிரத்தில் ஒரு கூறினை நெருங்க வல்லார்க்கு அணுவிற்குள் அணுவாய் இருக்கின்ற இறைவனை அணுகலாம்.

"மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவியது கூறது ஆயிரமானால்
ஆவியின் கூறு நூறாயிரத்தொன்றாமே" – திருமந்திரம்.

அதாவது, ஒரு மாட்டின் முடியை ஆயிரம் கோடி இழைகளாகப் பகுத்துப் பார்க்கும்போது, அதற்கு நுண்ணோக்கி வேண்டும். அந்த அளவுக்கு மயிரானது மிக சூக்குமமாக, நுண்ணியதாக ஆகிவிடும் அல்லவா? அதுப்போலத்தான் நாமும், ஆமாம்! நாம் உயிராகிய இந்த உடல் எடுப்பதற்கு முன்பு, கண்களுக்குப் புலப்படாத வகையில், மிக நுண்ணிய, சூக்கும வடிவில், அப்பாவின் விந்துவில் உயிரணுவாக இருந்தோம். இப்போது, தாயின் கற்ப வாசத்தால், இந்த பிண்டம் எனும் உடல் கொண்டு உலாவிக் கொண்டிருக்கின்றோம் என்ற ஆழமான உண்மையைப் பற்றிப் பேசுகிறார். இவர் அறிவியல் வளர்ச்சியுறாத பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே அணுவைப் பிளப்பதை மனக்கண்ணில் ஆராய்ந்து வெளிப்படுத்தி இருக்கின்றார் என்று பார்க்கும்போது, நம் முன்னோர்களின் ஆறிவியல் அறிவு ஆச்சரியம் அளிப்பதாகவே இருக்கும்.

ஆக, மனிதப்பிறவின் மகத்துவம் உணர்ந்து, உடலைக் கொண்டு உத்தமனைக் காண்பவன் மனிதனில் புனிதனாக மதிக்கப்படுகின்றான்.

**பிரஹ்மவித்3 ஆப்னோதி பரம்** – பிரஹ்மத்தை அடைந்தவன் மேலானதை அடைகின்றான். இது இந்த உபநிஷத்தின் மையக்கருத்து.

எனவே, இதற்கு சூத்ர வாக்கியம் என்று கூறலாம். முழு உபநிஷத்தின் சாரமாக இருக்கின்றது. இதில் மூன்று கருத்துக்கள் இருக்கின்றது.

**அவைகள்**

1. **விஷயம்** – இது எதை குறித்து பேசுகின்றதோ,
2. **சாதனம்** – அந்த விஷயத்தை அறிய உதவும் கருவி,
3. **பலன்** – விஷயத்தை அறிவதனால் அடையும் பலன்.

1. **விஷயம்** – பிரம்மம் – பெரியது என்று பொருள், வரையறுக்கப்படாதது. நிரதிஸய வ்ருத்தி –எதனோடும் வரையறுக்கபடாத பெரிய ஒன்று.
2. **சாதனம்** – வித் (வேதனம்) – அறிதல், அந்த பெரிய ஒன்றை அறிந்து கொள்ள வேண்டும்.
3. **பலன்** – பரம் ஆப்னோதி – பிரம்மத்தை அடைகின்றான்.

ஒரு இடத்தை அடைவதற்கு அதை அடையும் வழி மட்டும் தெரிவதால் அடைய முடியாது. ஏனென்றால், அது வரையறுக்கப்பட்டது. ஆனால், பிரம்மம் வரையறுக்கப் படாததாக இருப்பதால், அதை அறிந்தவுடனே அடைந்து விடுவோம்.

இங்கு, ஞானத்திற்கும், மோட்சத்திற்கும் **சாதன – சாத்தியம்** சம்பந்தம் பேசப்படுகின்றது.

**கேள்விகள்.**

பிரம்மம் என்பது எது, அதன் லட்சணம் என்ன?

அதை எப்படி அறிந்துக் கொள்வது?

பலன் என்றால், அது எத்தகையது? இந்த கேள்விகளுக்கு ஒரு ரிக் மந்திரத்தின் மூலமாக பதிலளிக்கப்படுகின்றது.

<u>**பதில்**</u>

**உணர்வு வடிவினர்:**

உயிருள்ளவற்றையும் உயிரற்றவைகளையும் வேறுபடுத்திக் காட்டுவது உணர்வு. *'தண்டவாளத்தின் மீது ரயில் விரைந்து ஓடுகிறது. வழியில் வருகின்ற ஒரு நாயோ அல்லது மாடோ அந்த ரயிலைக் கண்டவுடன் வழி விட்டு, நகர்ந்து செல்கின்றது'.* ஆக, ரயில் உயிரற்ற ஜடப் பொருள், வெறும் யந்திரம் என்பதினால், அதற்கு அறிவு இல்லை. எனவே, அதைப் பொருத்தவரை மற்றவைகளின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்காது என்றாலும், இதிலே, உயிருள்ள உணர்வுள்ள ஒரு மிருகம் அந்த நியதியை விட்டு, மீற அதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, தன்னை தற்காத்துக் கொள்ள அதனால் முடியும் என்பதை இதிலிருந்து பார்க்க முடிகின்றது. அதற்குக் காரணம் அதனிடம் அறிவு உள்ளது.

ஆக, அந்த ரயில் எவ்வளவு பலமும், ஆற்றலும் நிறைந்ததானாலும், அது ஒருபோதும் அதன் நியதியை மீற முடியாது. அதற்கு அறிவு இல்லை. ஆனால், அறிவுள்ள மிருகம் தான் விரும்புகின்ற திசையில் தன் வாழ்க்கையை வாழுமாறு மாற்றி அமைத்துக் கொள்ள அதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த பூமியில் படைக்கப்பட்டவைகள் எல்லாமே உயிருள்ள உணர்வுள்ள எல்லாமே, அதன்போக்கில் அதன் வாழ்க்கையை வாழுமாறு அதற்கான நியதி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவ்வாறு நியதி மாறிய நிலையில் ரயில் எதுவும் செய்ய இயலாது.

ஆனால், மிருகம் அந்த ரயிலைவிட சிறியதாகவும், சாதாரணமானதாகவும் இருந்தாலும், அதனால் நியதியை மீறி, அபாயத்திலிருந்து தப்ப முயற்சி செய்தது. நியதியை மீறி தன்னை, தனது சுதந்திரத்தை நிலைநிறுத்த முயன்றது. அதனுள் இறைவன் (அறிவு – உணர்வு) இருக்கிறார்.

ஆக, அதுவே இறைவன் என்பதை அறியாமல் இருக்கின்றது. இதை கற்றலின் வாயிலாக தன்னுள் உணர்ந்தவன் மனிதன் என்பதை நாம் அறிகின்றோம். ஆக, அந்த **உணர்வே இறைவன்** என்பதுதான் வேதம் கூறுகின்ற உண்மை.

ஞானிகளும், மகான்களும் **'இறைவனைக் கண்டுகொண்டேன்'** என்று கூறுவது அவர்களுடைய எதார்த்த இயல்பாகும். அவர்கள் காண்பது புறக்காட்சியாகவும் இருக்கலாம். அகக்காட்சியாகவும் இருக்கலாம். ஆனால், இந்த அண்ட சராசரமெலாம் பரந்து நிற்கும் பரமனை நம்மிடம் உள்ள கருவி, கரணங்களைக் கொண்டு, நாம் காணும் வகையில் புறத்திலே உருவத்தில் அவர்கள் காண்பதில்லை.

புறத்திலே அவர்கள் காணும் ஒவ்வொன்றிலும், அந்த பரமனின் பவித்ரமான உணர்வைக் கொண்டே, அதன் சூக்கும வடிவத்தைக் காண்பார்கள், அது அவர்களுடைய புலன்களின் அடிப்படையில் அனுபவத்திற்கு வராது. அது உணர்வின் அடிப்படையில் உணரக்கூடிய அனுபவம் ஆகும். மாகான்கள் பெறுகின்ற மகத்தான இறை அனுபவம் என்பது, புறத்திலே ஏற்றி வைத்துக் கொண்ட புறஅறிவின் அடிப்படையில் எப்போதும் இல்லை. அது, அக உணர்வின் அடிமட்டத்திலிருந்து, அவர்களிடம் வெளிப்பட்ட உணர்வுப் பிரவாகம் என்பதினால், அவைகளை வடிவங்களில் விளக்கவே முடியாது என்பதே உண்மை.

பொதுவாக, நாம் நம்மிடமுள்ள கருவி, கரணங்கள் மூலமாகத்தான் இறைவனைப் பார்க்க விரும்புகின்றோம். அதன் வாயிலாக இறை அனுபவத்தைப் பெற விரும்புகின்றோம். ஆனால், நம்மிடமுள்ள அத்தகைய கருவி, கரணங்கள் எல்லாமே ஆற்றல்மயம் என்ற நிலையில் செயலாற்றி கொண்டிருக்கின்றன. அதன்காரணமாக, அந்த தூய அறிவு உணர்வின் அகண்ட எல்லைக்குள் நுழைய முடியாத, இந்த கருவி கரணங்களைக் கொண்டு, **கண்டதே காட்சி! கொண்டதே கோலம்!** என்பதாக நம்முடைய நிலைப்பாடுகள் இருக்கின்றன.

பொதுவாக, உயர் ஞான உத்தமர்கள் இறைவனைக் கண்டேன், தொட்டேன், கடித்தேன், விழுங்கினேன் என்றும் கூறிக்கொள்வார்கள். இதுப்போன்ற சொற்கள் அவர்கள் பெற்ற உணர்வு வெளி அனுபவத்தின் அளவையும், ஆழத்தையும் எந்த அடிப்படையிலே நமக்குச் சுட்டிக்காட்டப்படுகின்றது என்றால், அவர்கள் உள்ளத்தில் உணர்ந்தவைகளின் வெட்டவெளியின் வெளிப்பாடுகள் என்பதினால், அவைகளின் சூக்குமத்தை உணரும் நிலையில் அங்கு ஒன்றுமற்ற வெளியில், உணர்வு ஒளியில், தன்னிருப்பை தான் உணர்ந்தார்கள் என்றுதான் பார்க்க வேண்டும்.

ஆனால், நாமோ எப்போதும் நம் உடலின் சேஷ்ட்டைகளிலேயே ஈடுபட்டுக் கொண்டு, உடலிலேயே சிக்கிக் கொண்டிருக்கும் நமக்கு நம்முடைய உள்ளத்தின் உண்மை நிலை மறைக்கப்படுகின்றது.

உதாரணமாக, தற்போது தைப்பூசத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. முருகப் பெருமானின் வைபவம் மக்கள் மனதினில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. காவடி, அலகு, பஜனை, பக்திப்பாடல்கள், இசை, நடனம், நாட்டியம், வாத்தியம் என ஏராளமான புற அனுபவங்கள் புலன்களுக்கும், மனதிற்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. முருகப் பெருமானை அலங்காரம் செய்து, திருவுலா பவனி கொண்டு வருகிறார். பூக்களாலும், ஆபரணங்களாலும், பட்டாடைகளாலும் அலங்கரிக்கப்பட்ட முருகன் திருவுலா வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

ஏராளமான பக்தர்கள் புடைசூழ, எல்லோரும் முருகனின் திருவுலா பவனியைக் கண்டு, முருகா, முருகா என்று கன்னத்தில் போட்டுக் கொள்கின்றார்கள். பக்தி இரசம் எங்கும் சுரக்கின்றது. முருகனின் அழகும், அலங்காரமும் பார்க்கின்றவர்களை சொக்க வைக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் காட்சியைப் பார்க்கிறார்கள்.

அவர்களுடைய உள்ளங்களில் பலவிதமான எண்ணங்கள் தோன்றுகின்றன. பலர் முருகனின் பூ வேலையையும், சிலர் முருகனின் நகைகள், உடை அலங்கார எழிலைக் கூறிக் கொள்கின்றார்கள். அவர்களுடைய கண்களுக்கு முருகன் சிலையின் எழிலும், அலங்காரத்தின் அழகும் மட்டுமே தென்படுகிறது. இன்னும் சிலர் திருவுலாக் காட்சியைக் காண்கிறார்கள். திருக்கோலத்தைக் கண்டு மகிழ்கிறார்கள்.

ஆனால், அவர்கள் அத்துடன் நிற்கவில்லை. அவர்களுடைய பார்வையில் வடிவழகு மட்டும் நிற்கவில்லை. *"நமக்கெல்லாம் இறைவன் நம்மை ஆண்டு கொண்டவன். அவனைத் தொழுவோம்"* என்று அவர்கள் கருதுகிறார்கள். கருதலுடன் அவர்களுடைய கைகள் இறைவனைக் கும்பிடுகின்றன.

வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் இறை வடிவத்தைப் பார்க்கின்றார்கள். அலங்காரத்தைப் பார்க்கிறார்கள், இறைவனைப் பார்க்கிறார்கள். அதற்கு மேலும் அவர்கள் உள்ளம் உள்ளே இறைவனைக் கொண்டு செல்கின்றார்கள். இறைவன் மீது அழிவிலாத அன்பினால், காதலினால் உந்தப்பட்டவர்களாக அவர்கள் இருப்பினும், அந்த இறைவனை இவர்களுக்கு வேறாகவே பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்னும் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் புலன்கள் அடிப்படையில் வெறும் கண்களால் மட்டும் முருகனைக் காண வேண்டியதில்லை. புறக் கண்களை மூடிக்கொண்டாலும் அவர்களுடைய மனக் கண்களினால், மனத்திலே, சிந்தையிலே, உள்ளத்திலே முருகன் எனும் இறைவன் நிறைந்து நிற்பதை உணர்கின்றார்கள். இவர்கள் இன்னும் சிறப்பானவர்கள்.

இருப்பினும் இவர்களைக் காட்டிலும் ஞானிகள், மகான்களின் பார்வை வேறுவிதம்.

எப்படி?

காரைக்கால் அம்மையார் விடை அளிக்கின்றார். அவர் முருகனாகக் காணவில்லை. முருகனின் திருவுலாவைக் காண வந்த மற்றவர்கள் போல, அந்த இறைவனை புறத்திலே காணவில்லை. அவர் இருந்த இடத்திலேயே அகத்திலே அந்த இறைவனைக் கண்டார்.

இறைவனை எப்படிக் கண்டார்?

இறைவனைத் தம்முள்ளே தானாகவே கண்டார். அவருடைய உள்ளத்திலே இறைவன் இருதயக் குகையில், உணர்வு வெளியில் அறிவு ஒளிப்பிரகாசமாய், சோதிப் பிழம்பாகத் தோன்றுகின்றான். திருமாலும், அயனும் சென்று, முயன்று கண்டறிய முடியாத இந்த பிரபஞ்சத்தின் முதன்மைப் பொருளாகிய பரம்பொருளை காரைக்கால் அம்மையார் தனது சிந்தையுளே நிறைந்த உணர்வு வெளியில், அறிவு ஒளியில் சோதி வடிவில் தன்னையே காண்கிறார். தன்னை என்றால், உருவத்தில் இல்லை உணர்வு நிலையில் காண்கின்றார் என்று அறிய வேண்டும்.

ஆக, தன்னை உணர்கின்ற சிவனும், சீவனும் உணர்வு வெளியில் ஒன்றுதான் என்றாலும், அந்த சிவனே உடலெடுத்து சீவனாக வந்த காரணத்தினால், இந்திரியங்கள் வயப்பட்டு, மனமயக்கத்தில் கட்டுண்டு, அறியாமை வசப்பட்டு, தூய அறிவாகிய தன்னை மறந்து, அறியாமையில் அவல நிலைக்குட்பட்டு, அஹங்காரத்தினாலே அழியக்கூடிய அற்ப உடலை நான் என்பதாக அபிமானித்துக் கொண்டிருக்கும் நிலையில் அதன் உண்மை சொரூபம் மறைக்கப்பட்டு உள்ளது.

அதுவே, ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, இந்த உடலையும், உயிரையும் சேர்த்து, உயிரின் இயக்கத்திற்கு உதவி புரிகின்ற இந்த உடலைக் கொண்டு, உள்ளத்தில் தூய அறிவு உணர்வாய் சிவன் ஒழிந்துக் கொண்டிருப்பதைக் கண்டு, சீவ ஒளியும், சிவ ஒளியும் ஒன்றாய் பொருந்தி நிற்கின்ற இருதயக்குகையில் விளக்கிக் கொண்டிருக்கும் இறைவன் இருக்குமிடத்தை உணர்வினால் உற்று நோக்கி, தன்னைத் தான் உணருகின்ற பேரின்பத்திளைப்பு ஒன்றே பரமனை உணர்தல் ஆகும்.

இறைவன் நமது உடலில் உயிருக்கு உயிராக உணர்வாய் நிற்கிறான். நமது உயிரும் அறிவு மயம், இறைவனும் அறிவு மயம் என்பதை நமக்கு அறிவிக்கின்றான். அத்தகைய அறிவுமயமான உயிர் பேரறிவான, பேருணர்வான இறைவனுடன் ஒன்றாக இணைந்து கொள்வது ஒன்றே, நம்முடைய இந்த ஸ்தூல உடலில் இருக்கின்ற இருதயக் குகை எனும் சூக்கும உடலாகிய சிற்றம்பலத்தில் நடைபெறுகிறது. இதை அனுபவத்தால் அறிவதே இறையனுபூதி.

ஆக, பல காலம் எனது கருவி கரணங்கள் தங்களுடைய இயல்பான பணியைச் செய்து வந்தன. இறைவனுடைய அருள் கிட்டியது. புறக்கண்கள் மூடின. அகக்கண்கள் விழித்துக் கொண்டன. அகக்கண்களால் நான் பார்க்கும்பொழுது என்னுடைய தலைவனை, ஒப்பற்றவனைப் பொன்போன்ற திருமேனியை உடைய, அறிவுப் பிரகாசத்தில் உணர்வு வெளியில் என்னிடம் பொருந்தக் கண்டேன்.

பசு, பாசம் இவைகளுக்கு அப்பால் இருக்கின்ற பதி ஞானம் மட்டுமே இந்த **சீவன்** எனும் உயிரையும், **சிவன்** என்ற உணர்வையும் ஒன்றாக்குகிறது என்பதையறிந்து, அந்த தூய உணர்வு வெளியில், சிவமயமான பேருணர்வினைப் பிரகாசிக்கின்ற சிவமயமாய் எங்கும் தானாகி 'தானே அந்த தூய அறிவுமயமானவன்' என்று தன்னைத் தன்னுள் உணர்த்திய சிவனும், சீவனும் ஒன்றி நிற்பதை உணர்வது ஒன்றே மனிதப் பிறவியின் மகத்துவம் ஆகும்.

**எல்லையற்றவர்:**

அனைத்து உலகங்களுக்கும், எல்லா உயிர்களுக்கும் அடிப்படையாக இருப்பதால் எந்த எல்லையையும் இறைவனுக்குக் கற்பிக்க முடியாது. அதாவது ஆண், பெண், மனிதன், மிருகம், தாவரம் போன்ற எல்லைகளைக் கடந்தவர் அவர்.

இறைவன் என்பது அறுதியான உணர்வு நிலையே தவிர கடவுளுக்கு உருவம், குணம், நிறம், பாலின வேறுபாடு போன்றவைகள் எல்லாம் எதுவும் கிடையாது. பரம்பொருள் என்பது உணர்வு நிலையாக இருந்த ஒன்று. அத்தகைய உணர்வாகிய பரம்பொருள் ஆனவன் பருப்பொருள் ஆனதன் இரகசியம் என்ன?

ஆரம்பத்தில், ஆதியில், அப்போது, வெளி இல்லை. அதாவது, இந்த உலகங்கள் படைக்கப்படவில்லை. உயிரினங்கள் எதுவும் இல்லை. உயிரினம் என்ற ஏதாவது ஒன்று இருந்தால்தான், அது இருக்க ஒரு இடமிருக்க வேண்டும். அதாவது, அது கடவுளாகவே இருந்தாலும், உடல் எடுத்தால், அவர் இருக்க ஒரு இடம் இருக்க வேண்டும்.

ஆனால், ஆத்மா என்னும் உணர்வு நிலையிலுள்ள இருப்புத் தன்மை என்பது, தன்னிருப்பைத் தான் உணர்ந்துக் கொண்டே இருந்தாலும், அதன் இருப்பு என்ற **'சத்'** என்பது எப்படி உணரப்படுகின்றது? என்றால், அது **'சித்'** என்ற அறிவு நிலையில் மட்டுமே தன்னிருப்பைத் தான் உணர்வதாக இருக்கின்றது என்பதையே இங்கு நாம் அறிந்துக் கொள்ள வேண்டிய அரிய உண்மை ஆகும்.

அத்தகைய சித் எனும் அறிவு நிலையில் எல்லாவற்றையும் படைத்து, அனுபவித்து அறுதியில் அழித்தும் விடுகின்றது என்ற ஆழமான உண்மையை உணர்வதுதான் இங்கு வேதம் காட்டுகின்ற வழிமுறையாகும். இறைவன் நிலையில் பரமாத்மா என்று கூறுகையில் அதற்கு இருப்புத் தன்மையே அதன் உணர்வு நிலைதான்! மனிதன் இறந்த பின் அவனுடலில் இருந்து கர்ம வினைகளை சுமந்த படி வெளியேறும் உயிரும், இதுப்போல உணர்வு நிலை மாத்திரமே ஆகும்.

அந்த பரம்பொருள் தன்னைத் தானறிய, அதன் ஆற்றலாக வெளிப்பட்ட அத்தனை அம்சங்களையும் கொண்ட பருப்பொருட்கள் எல்லாமே, அணுக்களின் கூட்டுச்சேர்க்கையில் இந்த வெட்ட வெளியில், ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என உண்டானது. அந்த வகையிலே, இந்த உலகங்களை எல்லாம் படைத்து பிரபஞ்சத்தில் அண்டசராசரங்களையும் இயங்கச் செய்யும் ஒன்றாக உணர்வு நிலையாக மட்டுமே இருந்த ஒன்று தன் நிலை மாறி, பலவாக உருவுள்ளதாக ஆகி நின்றது என்பதையே வேதம் எடுத்துரைக்கின்றது.

அவ்வாறு பலவானதையே நாம் பற்பல பிரஜாபதிகளாகவும், கடவுளராகவும் உருவம் கொடுத்து வணங்குகிறோம். ஆக, இந்த பிரபஞ்சம் இல்லாமல் போகின்ற நிலையில், இந்த பிரபஞ்சத்தில் இருக்கின்ற எல்லாமே, மீண்டும் உணர்வு நிலையிலேயே சென்று ஒடுங்கும் என்றுதான் கூற வேண்டுமே தவிர, உண்மையில் உருவமுள்ள எதனிடமும் சென்று ஒடுங்க முடியாது என்பதையும் அறியவும்.

**சத்யம், ஞானம், அனந்தம் ப்ரஹ்ம** என்ற இந்த வாக்கியம் பிரம்ம லட்சணத்தைக், ஸ்வரூபத்தைக் குறிக்கின்றது. சத்யம் என்றால் என்றும் இருப்பது, ஞானம் என்பது அறிவு ஸ்வரூபம், அனந்தம் என்பது எல்லையற்றது.

இந்த லட்சணம் அனாத்மாக்களிலிருந்து பிரம்மத்தை பிரித்துக் காட்டுகின்றது.

இரண்டு விதத்தில் ஒரு பொருளை பிரித்துக் காட்ட முடியும்.

1. **தடஸ்த லட்சணம் –** ஒருப் பொருளை அறிவதற்கு துணைப்புரியும் வேறொரு பொருளை கொண்டு அறிதல். ஆனால், அது அறியும் பொருளை சார்ந்ததல்ல. உதாரணமாக காகம் அமர்ந்துள்ள வீடுதான் ரகுவின் வீடு, என்று சொல்லுதல், காகம் பறந்து சென்றாலும், இருந்தாலும் அந்த வீட்டை அடையாளம் கண்டு கொள்வது.

2. **ஸ்வரூப லட்சணம் –** எந்தப் பொருளை கூறி அதன் மூலம் மற்றொன்றை விளக்குதல், அந்தப் பொருள் அறியப்படும் பொருளிடத்தே இருக்கின்றது. அதன் தன்மையாகவே இருக்கின்றது. இங்கு பிரமத்தை விளக்கக்கூறும் லட்சணம் ஸ்வரூப லட்சணம்.

**ஸத்யம் பிரம்மஹ:–**

வாச்யார்த்தம் என்பது ஒரு சொல்லை கேட்டவுடனே மனதில் தோன்றும் அர்த்தம். எல்லா விவகாரங்களும் இதன் அடிப்படையில்தான் இருக்கும்.

இலட்சியார்த்தம் என்பது சில சமயம் இந்த வாச்யார்த்தம் பயன்படாமல் போகலாம் அந்த நேரத்தில் அதற்கு சம்பந்தபட்ட வேறு ஒன்றை எடுத்துக் கொண்டு புரிந்து கொள்கின்றோம். இதையையே இலட்சியார்த்தம் என்று கூறப்படுகின்றது.

ஸத்யம் பிரஹ்ம என்ற வாக்கியத்தில் வாச்யார்த்தத்தை எடுத்து கொள்ளக்கூடாது, லட்சியார்தத்தை வைத்துப் பொருள் புரிந்துக் கொள்ள வேண்டும். எல்லா பொருட்களிடத்தும் ஸத் + நாமரூபம் என்ற இரண்டு அம்சங்கள் உள்ளது. மாற்றமடையும் பொருட்களின் நாமரூபங்கள் மாறிக் கொண்டிருந்தாலும், இருத்தல் என்ற அம்சம் என்றும் நிலையாக இருக்கும். ஆகவே, இந்த வாக்கியத்தின் அர்த்தம் நிலையாக இருத்தல் என்று இலட்சியார்தத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இங்கு ஸத்யம் என்பது ஸத்–இருத்தல் என்பதைக் குறிக்கின்றது. காரணம் எப்போதும் ஸத்யம், காரியம் மித்யா.

களிமண்ணிலிருந்து உருவான பொருட்கள் அனைத்தும் மித்யா, களிமண் ஸத்யமாக, காரணமாக இருக்கின்றது. அதுப்போல, இந்த பிரபஞ்சத்திற்கு காரணமாக இருப்பது பிரம்மம். எனவே அது ஸத்யமாக இருக்கின்றது.

**ஞானம் பிரம்மஹ:–**

பிரம்மன் ஸத்யமாகவும் இருக்கின்றது அதே சமயம் அறிவு ஸ்வரூபமாகவும் இருக்கின்றது. வாச்யார்த்தமாக பார்க்கும் போது ஞானம் என்பது மனதில் வரும் ஒன்றை பற்றிய அறிவு. இதற்கு **விருத்தி ஞானம்** என்று அழைக்கப்படும்.

மனதில் தோன்றும் ஒரு பொருளைப்பற்றிய எண்ணம். நம் மனதில் தோன்றும் எண்ணங்கள் இரண்டு அம்சங்களாக உள்ளது.

1. அறிவு (சித்)
2. நாம–ரூபங்கள் (பொருட்கள்) (அ) எண்ணங்கள் (விஷயங்கள்).

இதில் அறிவானது எல்லா நிலைகளிலும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. எனவே இதுவே பிரம்மத்தின் ஸ்வரூபமாக லட்சணமாக புரிந்து கொள்ள வேண்டும். எல்லா எண்ணங்களுக்கும் சாட்சியாக இருப்பது, எல்லா அறிவுக்கும் அறிவு ஸ்வரூபமாக இருக்கின்றது.

**அனந்தம் பிரம்மஹ:–**

அனந்தம் என்பது எல்லையற்றது, பூரணமானது, வரையறுக்கப்படாதது என்று பொருட் கொள்ளப்படுகிறது.

இந்த வாச்யார்த்தமே அதன் ஸ்வரூபத்தை உறுதிபடுத்துகிறது. ஒரு பொருள் மூன்று விதத்தில் வரையறுக்கப்படலாம். அவைகள் இடம், காலம், மற்றும் வேறொன்றினால்.

1. தேச பரிச்சேதஹ – ஒரு பொருள் தேசத்தினல் வரையறுக்கப்படும். அதாவது ஒரு பொருள் ஒரே நேரத்தில் வெவ்வேறிடத்தில் இருக்க முடியாது.

2. எல்லாப்பொருட்களுக்கும் தோற்றம்–மறைவு இருப்பதால் அவைகள் காலத்தால் வரையறுக்கப்பட்டிருக்கின்றது.

3. ஒரு பொருளுக்கு குணங்கள் கொடுக்க கொடுக்க அதனுடைய வியாபிக்கும் விஸ்திரம் குறைந்து கொண்டே போகும்.

உதாரணமாக, வெறும் மனிதர்கள் என்று கூறும்போது உலகிலுள்ள எல்லா மனிதர்களை குறிக்கும். இந்தியர்கள் என்று சொல்லும் போது இந்தியாவில் வசிக்கும் மக்களை மட்டும் குறிக்கின்றது. தமிழர்கள் என்று சொல்லும்போது தமிழ்நாட்டில் வசிப்பவர்களை மட்டும் குறிக்கின்றது. இவ்வாறு எண்ணிக்கை குறைந்து கொண்டே போகின்றது.

பிரம்மத்தை தவிர வேறொரு பொருள் இருந்தால் அது வரையறுக்கப்பட்டதாகி விடும்.அது வரையறுக்கப்படாதது என்றால் அதைத் தவிர்த்து வேறொன்றும் இல்லை என்று நிரூபிக்க வேண்டும்.

ஸத்துக்கு (உண்மைக்கு) வேறாக இருக்கின்றது என்றாலே அதை அஸத் (பொய்) என்று எடுத்துக் கொண்டால் அது மாதிரி ஒன்றில்லை புரிந்து கொள்ளலாம்.

ஸத்தும் அல்ல, அஸத்தும் அல்ல என்ற நிலையையே மித்யா என்று கூறப்படுகின்றது. இந்த பிரபஞ்சம் மித்யா. அது இருப்பதுப்போல காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. அதனால் இந்த பிரம்மத்தை ஒன்றும் செய்ய முடியாது எப்படி கயிற்றில் தோன்றும் பாம்பினால் கயிற்றுக்கு எந்த பாதிப்பும் இல்லையோ அதுப்போல.

மூன்று குணங்களை உடையதாக இருப்பது இந்த பிரம்மம்.

அனந்தம் என்பது முடிவற்று இருத்தலையே குறிக்கின்றது. நாம் அடைய வேண்டிய அறிவுதான் இந்த அனந்தம். இதை தெளிவாக உறுதியுடன் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அனந்தம் முழு மன நிறைவு என்றும் புரிந்து கொள்ளலாம்.

பிரம்மத்தை எப்படி, எங்கே, எதுவாக அறிய வேண்டும். என்ற வினவினால் அதை ஸத்யம், ஞானம், அனந்தமாக அறிய வேண்டும், தன்னுடைய புத்தியில், மனதில் அறிய வேண்டும், நானாக அறிய வேண்டும் என்று பதிலளிக்கப்படுகின்றது.

*யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் ஸோஷ்னுதே ஸர்வான்*
*காமான் ஸஹ ப்ரஹ்மணா விபஸ்சிதேத்*

எவனொருவன் பிரம்மத்தை மேலான ஹ்ருதய ஆகாசத்திற்குள் இருக்கின்ற அந்தக்கரணத்திற்குள் இருப்பதாக அறிகின்றானோ அவனுக்கு ஆசைப்படுகின்ற எல்லா பொருட்களையும் அடைந்தவனாகின்றான்.

இவன் அறிவு ஸ்வரூபமான பிரம்மனாக இருந்து உடனடியாக எல்லா ஆசைகளையும் நிறைவேற்றிக் கொண்டவனாக இருக்கின்றான். பிரம்மத்தை அறிந்தவன் அதுவாகவே இருப்பதால், எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் இருப்பதால் ஒரே சமயத்தில் எல்லா ஆசைகளையும் நிறைவேறப் பெற்றவனாகின்றான்.

மனதில் இருப்பிடமாக நம்முடைய ஹ்ருதயத்திலுள்ள ஆகாசம் இருக்கின்றது. புத்திக்கு **குஹா** என்று கூறக்காரணம், அந்தக் காலத்தில் மனிதன் புதையலை குகைக்குள்

ஒளித்து வைத்திருந்ததை போல, போகமும், மோட்சமும் இந்த புத்தியில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதால் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.

பிரம்மத்தை அறிபவனாக (பிரமாதாவாக) அறிய வேண்டும். அறியப்படும் பொருளாக (பிரமேயமாக) அறியக்கூடாது. நம் புத்தியில் பிரம்மத்தை தவிர எல்லாவற்றையும் அறியப்படும் பொருளாகத்தான் அறிகின்றோம். பிரம்ம அறியப்படும் பொருளாக இல்லாததற்கு நான்கு காரணங்கள் இருக்கின்றது.

**அவைகள்**

1. அது எதனாலும் வரையறுக்கப்படாதது.
2. அது இருமையற்றதாக இருப்பதால், பிரமேயமாக அறிய முடியாது. இருமை முதலில் அறிபவன், அறியப்படும்பொருள் என்பதிலிருந்துதான் தொடங்குகிறது. நேஹ நானாஸ்தி கிஞ்சன என்ற உபநிஷத் வாக்கியம் இதை புரிய வைக்கின்றது.
3. இதன் ஸ்வரூபம் அறிபவனாக இருப்பதால் அது அறியப்படும் பொருளாக இருக்க முடியாது.
4. சேதனவாத் – அறிவு ஸ்வரூபமாக இருப்பதால் அறியப்படும் பொருளாக இருக்க முடியாது. எப்பொழுதும் எது அறியப்படுகின்றதோ அது ஜடமாகத்தான் இருக்க முடியும்.

**கேள்வி**

பிரம்மன் ஏன் இரண்டாக இருக்க கூடாது? நான் என்னையே (ஸ்தூல உடலை) பார்க்கின்றேனே!

**பதில்**

இந்த உடல் நீயல்ல என்று தெரிந்துக்கொள், பிரம்மன் அவயங்களற்றது எனவே சாத்தியமல்ல. எனவே பிரம்மன் அறியப்படும் பொருள் அல்ல என்று திடமான அறிவை அடைய வேண்டும்.

**கேள்வி**

பிரம்மன் அறிபவனாக (பிரமாதாவாக) இருக்க முடியாதா?

**பதில்**

அறிபவன் என்றும் சொல்ல முடியாது. அப்படி சொன்னால் அதில் குறையுண்டு. அறிபவன் விதவிதமான பொருட்களை அறியும்போது அவனிடத்தில் மாற்றம் இருந்து கொண்டே இருக்கும். எனவே இது மாற்றத்திற்கு உட்பட்டதாக இருக்கின்றது.

சாஸ்திரத்தில் இரண்டு வகையான அறிபவன்கள் கூறப்பட்டிருக்கின்றது.

**அவைகள்**

1. நம்முடைய புத்தி – இதுதான் எண்ணங்களினால் மாற்றங்கள் அடைந்து அறிவை அடைகின்றது. சிதாபாஸத்தின் உதவியால் இது நடைபெறுகின்றது.

2. சாஸ்திரத்தின் உபதேசப்படி புத்தியும் ஜடம்தான், ஆனால், அறிவுடன் எப்படி செயல்படுகின்றது. இந்த புத்தியை அறிந்து கொண்டிருப்பவன் இன்னொரு பிரமாதா. இந்த ஆத்மா என்ற பிரமாதாவிற்கு புத்தியானது அறியப்படும் பொருளாகின்றது. புத்தியானது விகாரமடைந்து பிரமாதாவாக இருக்கின்றது. ஆத்மாவானது நிர்விகாரமாக இருந்து கொண்டு பிரமாதாவாக இருக்கின்றது. எனவே, அறிபவன் நான் என்று சொல்லும்போது புத்தியை புரிந்துக் கொள்ளாமல் அதை பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்மாதான் அறிபவன் என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

**கேள்வி**

எங்கும் இருக்கின்ற பிரம்மத்தை எப்படி அடைய முடியும்?

**பதில்**

ஒன்றை அறியாமலிருந்தால், அதை அடையாமல் இருத்தலாகும். அதே சமயம் அதை அறிந்துக் கொண்டால், அதை அடைந்தவனாகின்றான். உதாரணமாக பத்தாவது மனிதனை தெரிந்தவுடன் அவனை அடைந்தவனாகின்றான்.

(ஒரு ஆற்றை கடந்த 10 நபர்கள் ஆற்றின் மறு கரையை அடந்த உடன் அவர்களை எண்ணிப்பார்க்கின்றனர். எண்ணிக்கையில் எண்ணுபவன் தன்னை விட்டு விட்டு மீதமுள்ள 9 நபர்களை மட்டுமே எண்ணிவிட்டு ஒருவனை காணவில்லை என்பது கருத்து)

எல்லா பொருட்களையும் அடைந்து விட்டான் என்பதற்கு அவன் முழு மனநிறைவை அடைந்தான் எனப் புரிந்துக் கொள்ள வேண்டும். நானேதான் எல்லா ஜீவர்களுக்குள்ளும் இருந்துக்கொண்டு எல்லா ஆசைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன். நம்மிடத்தே இருக்கும் பொறாமை, கோபம் நமக்கே தெரியாமல் இருக்கும். வெளிப்பட வேண்டிய நேரத்தில் நம்மையும் மீறி வெளியே வந்து நம்மை துயரத்தில் ஆழ்த்தி விடும். நம்மை மூடனாக மாற்றி விடும், தகாத செயலுக்கு தூண்டி விடும். ஆகவே, எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

அவனுடைய மனதிலிருக்கும் எல்லா ஆசைகளும் நீக்கப்படுகின்றது. உதாரணமாக கார் வாங்க வேண்டும் என்ற ஆசை அதை வாங்கியவுடன் அதன் மீதுள்ள ஆசை நீங்கி விடுகின்றது. அதுப்போல பணத்தை அடைய வேண்டும் என்ற ஆசை அதை அடைந்ததும் நீங்கிவிடுகின்றது. இவ்வாறு எல்லா பொருட்களும் அவைகளை அடைந்தவுடன் நீங்கி விடுகின்றன.

ஆத்ம ஞானத்தால் எல்லா ஆசைகளும் நீங்கி விடும்.

ஆசை எழுவதற்கு காரணம் மனதிலுள்ள நிறைவற்ற நிலை. இந்த மனநிறைவற்ற தன்மைக்கு காரணம் நம் உடல், மனம், புத்தியில் இருக்கின்ற **நான்** என்ற அபிமானத்தினால்தான். இந்த சரீரத்தின் தேவைகள், மனதின் தேவைகள் என்னுடையதாகின்றது. இந்த தேவைகள் எப்பொழுதும் இருந்துக் கொண்டுதான் இருக்கும். இதனால்தான் நம் மனம் எப்பொழுதும் மனநிறைவற்று இருக்கின்றது.

ஆத்மாவை பற்றிய அறியாமை இந்த மனநிறைவற்ற நிலையில் வைத்திருக்கின்றது, மனநிறைவற்ற நிலை ஆசைகளை உருவாக்குகின்றது. எனவே ஆசைகளின் மூலமான அறியாமைகள் நீங்கிவிட்டால், ஆசைகளும் நீங்கிவிடும். பசியானது சாப்பிட்டவுடன் நீங்கிவிடுவதுப் போல, ஆசையானது ஆத்ம ஞானம் வந்தவுடன் நீங்கிவிடும்.

ஆசைகள் இரண்டு வகைகள்

1. பந்தப்படுத்துகின்ற ஆசைகள்,
2. பந்தப்படுத்தாத ஆசைகள்.

எந்த ஆசையும் நிறைவேறினாலும், நிறைவேறாவிட்டாலும் மனநிறைவுடன் இருப்போம். எந்த ஆசைகள் நிறைவேறாவிட்டால் நாம் துயரம் அடைகின்றோமோ அவைகள் முதல் வகையான ஆசை.

பிராரப்த கர்மமானது சரீர அபிமானத்தில் வைத்திருக்கும். ஆனால், சரீரத்திற்கு வரும் நலம், கேடு அவனை பாதிப்பதில்லை. ஞானியிடத்து வரும் ஆசையானது ஈஸ்வரனின் சங்கல்பமாக இருக்கும். இவ்விதம் ரிக் மந்திரம் முடிவடைகின்றது. சூத்திரம் என்பது சுருக்கமான வாக்கியம், விருத்தி என்பது சுருக்கமான விளக்கம், வியாக்யானம் என்பது விரிவான விளக்கம்.

**எங்கே தேடுவது?**

இவ்வாறு எங்கும் நிறைந்த, எல்லாமான இறைவனை தேட வேண்டும், உணர வேண்டும். இது வாழ்க்கையின் இலட்சியம். அவரை எங்கே தேடுவது? இதயத்தில், **இதயக் குகையில், வேறு எங்கேயும் அல்ல.**

இதயத்தில் இறைவன் எப்படி இருக்கிறார் என்பது இங்கே சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. **'யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன்'** என்ற வாக்கியத்தில், **'நிஹிதம்'** என்ற வார்த்தை அதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. **'ஹிதம்'** என்றால் இருப்பது, 'நி' என்றால் **'நித்யம்'** என்பதினால் அது நித்யமாக இருப்பது, **'என்றும் உள்ளது'** என்று பொருள். அதாவது, இறைவன் நம் இதயக்குகையில் என்றும், எப்போதும் இருக்கிறார்.

எனவே, இந்த நேரத்தில் அவரை நாட வேண்டும், இந்த நேரத்தில்தான் அவரைத் தேட வேண்டும் என்பதேல்லாம் எப்போதுமே கிடையாது. அவர் நமது ஹிருதயக் குகையில் எப்போதும் இருப்பவர். எனவே, அவரை நம்முள் உணர்ந்தால்தான் கிடைப்பார்.

அந்த இறைவனை அடைபவனின் **'எல்லா ஆசைகளும் நிறைவேறுகின்றன.'** இதனை அற்புதமாக விளக்குகிறார் பகவான் ஸ்ரீசங்கரர். சாதாரண மனிதனிடம் இருப்பது போன்ற ஆசைகள், அதாவது பொருட்களை அனுபவிப்பதற்கான ஆசை, பதவி ஆசை போன்ற ஆசைகள் நிறைவேறுகின்றன என்பது இதன் பொருள் அல்ல. ஏனெனில், அத்தகைய ஆசைகள் இருப்பவன் இறைவனை நாடவே முடியாது. இங்கே கூறப்படுவது வேறு. இறையனுபவம் பெறுபவனிடம் வேறு எந்த ஆசைகளும் தோன்றுவதில்லை என்பதே இதன் பொருள். அவன் பெறுகின்ற இறையனுபவம் அவனது ஆளுமையின் ஒவ்வொரு பகுதியிலும் புகுந்து அவனிடம் வேறு எந்த ஆசைகளும் எழாத அளவுக்கு ஆனந்தத்தை நிறைக்கின்றது. அந்த ஆனந்தம் படிப்படியாக வருவதில்லை. திடீரென்று சூரியன் உதிப்பதுப்போல, அந்த அனுபவம் அவனில் தோன்றி நிறைகிறது. அதன் பிறகு சாதாரண ஆசைகள் எதுவும் அவனிடம் எழுவதில்லை.

சாதாரணமாக உலகியலில் நாம் துறவிகளாகக் காண்பவர்களை மேற்சொன்ன வரிகளில் இருந்து நாமே அளவிட முடியும். இறையனுபவம் பெற்ற துறவியர் உலகியலில் பணம் பற்றிய பிரக்ஞை ஏதுமின்றி இருப்பார்கள். அவர்களுக்கு எந்த விதமான உலகியல் சம்பந்தங்களும் இருக்காது. ஏதேனும் ஒரு ஆன்மீக அமைப்புக்கு அவர்கள் தலைவராக இருந்தாலும்கூட அதன் மூலம் சொந்தப் பயன் என்று எதையும் அவர்கள் அனுபவிக்க மாட்டார்கள்

**அனுவாகம் – 1.2**

இதில் பிரம்மத்தை பற்றி விரிவாக விளக்கப்படுகின்றது. **அத்யாரோப அபவாத நியாயம்** என்ற வேதாந்த முறையில் விளக்கப்படுகின்றது.

**அத்யாரோபம்** என்பது தெரிந்தே ஒன்றின் மீது வேறொன்றை ஏற்றி வைத்தல், **அபவாதம்** என்பது ஏற்றி வைத்ததை இல்லையென்று நீக்கி விடுதல். **அத்யாஸம்** என்பது அறியாமையினால் ஒன்றின் மேல் வேறொன்றை பார்த்தல்.

அத்யாரோபம் ஏன் செய்ய வேண்டும்? என்றால், ஒரு பொருள் ஏற்கனவே தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டிருப்பதால், அதை விளக்க வேண்டுமென்றால், முதலில் அதிலுள்ள தவற்றை புரிய வைக்க வேண்டும், பிறகு சரியானதை அறிய வைக்க வேண்டும்.

உதாரணமாக, கயிற்றில் பாம்பை பார்த்து கொண்டிருப்பவனுக்கு முதலில் பார்த்து கொண்டிருக்கும் பாம்பு உண்மையானதல்ல என்று புரிய வைக்க வேண்டும், பிறகு அது கயிறு என்று அறிய வைக்க வேண்டும்.

அதாவது, பாம்பு இருப்பதை ஏற்றுக் கொண்டு, அதன்பிறகு அது பாம்பாக காட்சியளிக்கும் கயிறு என்று சுட்டிக்காட்ட வேண்டும். ஒருவரிடத்தில் உள்ள இத்தகைய விபரீத ஞானத்தை போக்குவதற்கு இந்த முறையை தவிர வேறொன்றும் இல்லை.

அதுப்போல, நாம் அனுபவிக்கும் இந்த பிரபஞ்சத்தை இருக்கின்றது என்று முதலில் ஒப்புக்கொண்டு, அதன்பிறகு, அது பிரம்மத்தின்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்று புரிய வைக்க வேண்டும்.

பிரம்மம் பிரஞ்சத்திற்கு ஆதாரம் என்று முதலில் ஏற்றி வைக்கின்றது. அதாவது முதலில் இவ்வாறு அத்யாரோபம் செய்கின்றது. பிரபஞ்சத்திற்கு காரணமாக பிரம்மத்தை சொல்கின்றது. அதனால் அடையும் பயன்கள் கீழே கொடுக்கபட்டுள்ளன.

1. பிரம்மன் சத்யம் என்பது நிலை நாட்டப்படும். சத்யமாக இருப்பது மூன்று காலத்திலும் இருக்கும். களிமண் – காரணம் – ஸத்யம். பானையின் தோற்றத்துக்கு முன்னும், இருக்கும்போதும், உடைந்த பிறகும் களிமண் இருந்து கொண்டு இருக்கும்.

2. பிரம்மன் அனந்தம் என்று நிலை நாட்டப்படும். தேச, கால, வஸ்துவினால் வரையறுக்கபடாதது.

a. தேசத்தினால் வரையறுக்கப்படாதது – பிரம்மத்திலிருந்து முதலில் தோன்றியது ஆகாசம், இதிலிருந்து பிரம்மன் தேசத்தினால் வரையறுக்கப்பட முடியாதது என்று புரிந்து விடும்.

b. காலமும் பிரம்மத்திலிருந்து தோன்றியதால், அதனாலும் வரையறுக்கப்பட முடியாதது.

c. குணங்கள் அதிகமாகும்போது அதன் வியாபிப்பு குறைகின்றது. குணங்கள் உள்ள பொருட்கள் எல்லாம் வரையறுக்கப்படலாம்.

3. காரண காரியம் என்று சேரும்போது காரணத்தை மட்டும்தான் இருக்கின்றது என்று கூறமுடியும். பிரம்மன் காரணம், பிரபஞ்சம் காரியம். இரண்டும் ஒன்று என புரிந்துக் கொண்டால், அங்கு பிரம்மன் மட்டும்தான் இருக்கும். அதற்கு வேறாக ஒன்றும் இல்லை. எனவே, பரமனை வஸ்துவால் வரையறுக்க முடியாது.

4. அத்யாரோப முறையை பயன்படுத்துவதற்கு உதவும்.

5. இங்கு அத்வைதமானது நிலை நாட்டப்படுகின்றது. உதாரணமாக பானைகள் பலவாக இருந்தாலும், அவைகள் மித்யாவாக இருப்பதால் அதற்கு ஆதாரமான களிமண் மட்டும் இருப்பது உண்மை என்பதுப்போல, இந்த உலகம் என்ற ஜகத் மித்யாவாக (மாயையாக) இருக்கின்றது. பிரம்மம் ஒன்று மட்டும்தான் இருக்கின்றது.

பிரம்மமானது மாற்றமடையாமல் இந்த ஜகத்திற்கு காரணமாக இருப்பது மாயையின் சக்தியால்தான். இந்த மாயை இல்லாத ஒன்றை இருப்பதாக காட்சியளிக்கச் செய்வதுதான் அதன் சக்தி. இது பிரம்மத்தின் சக்தியாக இருக்கின்றது. மாயையுடன் கூடிய பிரம்மம்தான் **ஈஸ்வரன்** என்று அழைக்கப்படுகின்றது.

காரணம், இரண்டு வகையாக இருக்கின்றது.

**அவைகள்**

1. உபாதான காரணம், 2. நிமித்தக் காரணம்.

உபாதான காரணம், நிமித்த காரணம் என்று இரண்டு உண்டு. ஒரு பானை இருந்தால் அது உண்டாவதற்கு மண் என்று ஒரு வஸ்து இருக்க வேண்டும். மண்தான் பானைக்கு உபாதான காரணம். ஆனால், மண் எப்படிப் பானையாக மாறும்? தானே அது ஒன்று சேர்ந்து பானையாகுமா? இல்லை! குயவன்தான் மண்ணைப் பானையாகப் பண்ண வேண்டியிருக்கிறது. மண்ணினால் ஒரு பானை உண்டாக வேண்டுமானால், அதற்குக் குயவன் என்ற காரணமும் வேண்டியிருக்கிறது. குயவன்தான் நிமித்த காரணம்.

இங்கே பிரம்மனானது உபாதான காரணமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. ஸ்ருஷ்டி முதலில் சூட்சுமமாக வரும். அதன்பிறகு அதிலிருந்து ஸ்தூலமான படைப்புக்கள் தோற்றுவிக்கப்படும். இங்கு இரண்டும் சேர்ந்து தோன்றுவதாக கூறப்படுகின்றது.

இதில் அபவாதம் செய்யப்பட்டுள்ளது. அபவாதம் என்றால் நிராகரித்தல், நீக்குதல், ஒடுக்குதல். **அத்யாரோபம் – காரணம் + நாமரூபம் = காரியம்.** சூக்ஷ்மத்திலிருந்து ஸ்தூலமாக மாறுதல்.



**அபவாதம் = காரணம் = காரியம் – நாமரூபம்,** ஸ்தூலத்திலிருந்து சூக்ஷ்ம நிலைக்கு மாற்றுதல். ஸத்தை ஒரிடத்திலிருந்து வேறொன்றிற்கு மாற்றுதல். உதாரணமாக பஞ்சுவிலிருந்து நூல், பிறகு துணி, பிறகு தைக்கப்பட்ட விதவிதமான ஆடைகள் இருக்கின்றன. ஆடை இருக்கின்றது என்பதில் உள்ள இருத்தலை துணிக்கு கொடுத்து விட்டால் துணி இருக்கின்றதாகி விடும், பிறகு நூல் இருக்கின்றது –பஞ்சு இருக்கின்றது.

அதுப்போல பிரம்மனிலிருந்து ஆகாசம், பிறகு வாயு, பிறகு அக்னி, பிறகு நீர், பின்பு ப்ருதிவி, இவைகளிலுள்ள இருத்தல் கடைசியில் பிரம்மத்தை அடைகின்றது. இந்த அபவாதம் மனதில்தான் நடக்கும். காரியம் இருக்கின்றது என்று சொல்வதை விட்டுவிட்டு காரணம் இருக்கின்றது என்று சொல்வதுதான் அபவாதம்.

காரியமான ஆடையில் இருக்கும் ஸத்தை துணிக்கு கொடுக்கும்போது ஆடையில் இருத்தலை நிஷேதம் செய்யப்படுகின்றது. இப்படியே அந்த இருத்தல் கடைசியில் மூலக்காரணமான பஞ்சுக்கு சென்று விடும். அதுபோல கிரமமாக தோற்றுவிக்கப்பட்டிருக்கும் ஸ்ருஷ்டியை அதே கிரமத்தில் நிஷேதம் (நீக்குதல்) செய்துக் கொண்டு சென்றால் பிரம்மத்தை அடைவோம்.

இந்த அபவாதம் பஞ்ச கோசங்களை வைத்து செய்யப்படுகின்றது. ஸ்தூல சரீரம் அன்னமய கோஷம் என்றும், சூட்சும சரீரம் ப்ராணமய, மனோமய, விக்ஞானமய கோஷங்கள் என்றும், காரண சரீரம் ஆனந்தமய கோஷம் என்றும் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஆத்மாவானது இந்த கோஷங்களால் மறைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஐந்து நிலைகளில் நான் என்று புத்தியானது அபிமானம் கொண்டு ஆத்மாவை அறிய விடாமல் செய்கின்றது. ஏன் பஞ்சபூதங்கள் வழியாக அபவாதம் செய்யாமல் ஐந்து கோஷங்களின் மூலமாக அபவாதம் செய்யபட்டு பிரம்ம ஞானமானது கொடுக்கப்படுகின்றது?

பஞ்ச பூதங்களை வைத்து அபவாதம் செய்தால் வெளியே உள்ள விஷயமாக அறிந்து கொள்ள நேரிடும். பிரம்மத்தை தன்னிடத்திலுள்ள ஆத்மாவாக புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவதால் இவ்வாறு பஞ்ச கோஷத்தின் வழியாக அபவாதம் செய்யப்பட்டுள்ளது.

எந்தெந்த இடத்தில் நான் என்ற அபிமானம் இருக்கின்றதோ அவைகளை நீக்கித்தான் நமக்கு அறிவை புகட்ட வேண்டும் என்பதால் இந்த முறையை உபநிஷத் கையாண்டிருக்கின்றது. இவ்வாறு செய்யும்போது எவ்வளவு ஸ்தூல சரீரங்கள் இருக்கின்றதோ அவ்வளவு ஆத்மாக்கள் இருக்கின்றதா என்ற சந்தேகம் வந்துவிடும்.

அன்னமய கோஷமும், அன்னமய பிரபஞ்சமும் ஒன்றுதான் என்ற அறிவை கொடுத்து நம்முடைய ஸ்தூல சரீரத்தை நீக்கும்போது, ஸ்தூல பிரபஞ்சத்தை நீக்கி விடுவோம். இவ்வாறு ஒவ்வொரு கோஷத்திற்கும் ஸமஷ்டி கோஷத்திற்கும் உள்ள ஐக்கியத்தை எடுத்துக்காட்டி இந்த சந்தேகமானது நீக்கப்படுகின்றது.

**சமஷ்டி–வியஷ்டி ஐக்கிய விசாரம்:**

இந்த இரண்டுமே ஒன்றுதான். பலமரங்கள் உள்ள இடத்திற்கு வனம் என்று கூறப்படுகின்றது. இந்த மரங்கள் அழிந்து விட்டால் வனம் இல்லாது போகும். அதுப்போல மரம் போன்ற ஸ்தூல சரீரத்தை நீக்கினால் அதிலுள்ள அபிமான நீங்கி விடும். பிறகு சமஷ்டி பிரபஞ்சம் இல்லாமல் போய்விடும். கனவு நிலையில் இந்த ஸ்தூல சரீரத்தின் மேல் உள்ள அபிமானம் நீங்கி விடுவதால் இந்த பிரபஞ்சமே மறைந்து விடுகின்றது. ஆனால் சூட்சும ஸரீர அபிமானம் காரணமாக சூட்சும பிரபஞ்சம் தோன்றி விடுகின்றது.

ஒரு விஷயம் புரியவில்லையென்றால், அதையே திரும்ப திரும்ப விசாரம் செய்யும் போது கொஞ்ச கொஞ்சமாக நமக்கு புரிய தொடங்கும். இதற்கு உபாஸனம் என்று பெயர். இந்த முறையையும் உபநிஷத் விளக்குகின்றது. இந்த உபாஸனைக்கு ஆலம்பனமாக ஸ்தூல சரீரத்தை எடுத்துக் கொண்டு இந்த ஸ்தூல பிரபஞ்சத்தை (விராட் புருஷனை) தியானிக்க வேண்டும். இதுப்போல, ஒவ்வொரு கோஷமும் ஆலம்பனமாக இருக்கும் அதன் சமஷ்டியை தியானித்து இரண்டுக்குமுள்ள ஐக்கியத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

**படைப்பில் நம் இடம்:**

படைப்பு ஒரு மாபெரும் புதிர். இந்தப் படைப்பின் அடிப்படையாக ஐந்து மூலங்கள் அமைந்துள்ளன. அவைகள் வெளி, காற்று, நெருப்பு, நீர், பூமி. படைப்பின் அடிப்படை மூலங்களாக இந்த ஐந்தினைக் கண்டுபிடித்தது, தத்துவ உலகிற்கு தந்த நமது பாரதத்தின் பெருமை மகத்தானதாகும். இவைகள் ஐந்தும் பிரபஞ்சத்தின் அடிப்படை மூலங்களாக உள்ளன என்பதை உலகின் தத்துவ சிந்தனையாளர்களுள் பெரும்பாலோனோர் ஏற்றுக் கொள்கின்றனர். இந்த ஐந்தின் விளைவாக மனிதனைக் காண்கின்றன உபநிஷதங்கள்.

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச: ஸம்பூத: । ஆகாசாத் வாயு: ।
வாயோரக்னி: । அக்னேராப: । அத்ப்ய: ப்ருதிவீ । ப்ருதிவ்யா ஒஷதய: ।
ஒஷதீப்யோ அன்னம் । அன்னாத்புருஷ: ॥ 1.2 ॥

பொருள்:

நம்மில் ஆத்மாவாக விளங்குகின்ற அந்த இறைவனிலிருந்து வெளி தோன்றியது. வெளியிலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து பூமி, பூமியிலிருந்து செடி கொடிகள், செடி கொடிகளிலிருந்து உணவு, உணவிலிருந்து மனிதன் தோன்றினான்.

இறைவன், வெளி, காற்று, நெருப்பு, நீர், பூமி, செடிகொடிகள், உணவு, மனிதன் என்ற வரிசையில் படைப்பு நிகழ்ந்தது. இந்த வரிசைப்படி படைப்பின் சிகரமாக மனிதன் விளங்குகிறான். இறைவன், ஐந்து அடிப்படை மூலங்கள் என்பதினால், எல்லாமே அவனிடம் உள்ளன.

முதன் முதலாக, இந்த பஞ்சபூதத் தத்துவத்தைக் கண்டறிந்தது சனாதன தர்மமே என்பது பெருமைக்குரிய விஷயம். இன்றளவும் இந்தத் தத்துவத்தை தகர்க்கும் வேறெந்த தத்துவமும் இதுவரை இந்த உலகில் கண்டறியப்படவில்லை. பஞ்சபூதங்களின் உச்சக்கட்ட கலவையாக மனிதனே விளங்குகிறான். அதனால்தான் உலகில் பலதையும் கண்டறிந்து ஆராயும் ஆறாம் அறிவு என்ற தன்மை அவனுக்கு உள்ளது. மனிதனைத் தாண்டிய அறிவு நிலை உள்ள ஒரு உயிரினம் என்பது ஏதுமில்லை. இறைவன் கண்டிப்பாக உயிரினம் இல்லை. அவர் உயிரினங்களுக்கு எல்லாம் தலைவர்.

பரப்ரம்ம வர்ணனைகள் மிக நெருங்கினதாக உள்ள ஒரு ஸ்லோகம் ரிக் வேதத்தை சேர்ந்த ஒன்று! நான்கு வேதங்களில் இதர மூன்று வேதங்களையும் விடக்

காலத்தால் மிக மிக முற்பட்ட ஒன்று என்பது ரிக் வேதம்தான் என்பதை அனைவரும் அறிவர். அப்படி சொல்லப்படும் பரப்ரம்மம் என்பது உணர்வு நிலைதான் அவர் உருவக் இறைவன் அல்ல என்று சொன்னால் பலரது மனம் அதை ஏற்க மறுக்கிறது.

இந்த பிரபஞ்சத்தை படைக்கக் காரணமான பரமன் ஆதியில் சூக்கும ஆகாசம் என்ற அறிவு ஆகாச நிலையிலே அனைத்தையும் உணரக்கூடிய இருப்பாகவே இருந்திருக்கின்றான். அவனது, சத் எனும் இருப்புத் தன்மை சித் என உணர்வு வெளியாக வெளிப்பட்டு, ஸ்தூல பஞ்சபூதங்கள் படைக்கப்பட்டன. அந்த வகையிலே, இங்கு முதலில் ஆகாச பூதமும், அதன்பிறகு வாயு, அக்னி, நீர், நிலம் என இந்த ஸ்தூல பஞ்சபூதங்கள் வெளிப்பட்டன என்பதை அறிய வேண்டும்.

**மந்திர விளக்கம்**

பிரம்மம் என்பது, ஆத்மாவாக அறியப்படுகின்ற நிலையில், அதனிடமிருந்து ஆகாசம் தோன்றியது. மாயையுடன் சப்த குணத்தை சேர்த்து ஆகாசமாக தோன்றுகிறது. இங்கு ஈஸ்வரனே ஆகாசமாக காட்சியளிக்கின்றார்.

உபாதான காரணமே காரியமாக காட்சியளித்து கொண்டிருக்கும், ஆகாசத்துடன் ஸ்பர்சம் என்ற குணத்தை சேர்த்தவுடன் வாயு உருவாகின்றது. இப்போது ஈஸ்வரன் வாயுவாகவும் காட்சியளிக்கின்றார். வாயுவிடமிருந்து அக்னியானது தோன்றியது, உருவம் என்ற குணம் இதனுடன் சேர்ந்திருக்கின்றது. அக்னியிடமிருந்து நீர் தோன்றியது, இதனுடன் சுவை என்ற குணம் இருக்கின்றது. நீரோடு மணம் என்ற குணம் சேர்ந்தவுடன் நிலமாக தோன்றியது.

நிலத்திலிருந்து தாவரங்கள் தோன்றியது, தாவரங்களிலிருந்து உணவு தோன்றியது. உணவிலிருந்து ஜீவராசிகளின் ஸ்தூல சரீரம் தோன்றியது. ஈஸ்வரனே ஜீவராசிகளின் ஸ்தூல உடலாக காட்சியளிக்கின்றார். தன்னுடைய ஸ்வரூபத்தை இழக்காமல் மாயையின் சக்தியால் இவ்வாறெல்லாம் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது இந்த பிரபஞ்சம்.

**நாம் யார்?:**

படைப்பின் சிகரம் மனிதன். ஆனால் அந்த மனிதன் யார்? அதாவது நாம் யார்? இந்தக் கேள்வியைக் கேட்காத சிந்தனையாளர்களே இல்லை எனலாம். சாதாரண

மனிதர்களின் வாழ்க்கையிலும் எப்போதாவது இந்தக் கேள்வி எழுகிறது. ஆனால் விடை மட்டும் என்னவோ அனைவரது சிந்தனைகளையும் கடந்தே நிற்கிறது.

வேத காலத்திலிருந்தே நமது சிந்தனையாளர்களும் இது பற்றி சிந்தித்துள்ளார்கள். அவற்றிலிருந்து நம்மைப் பற்றிய மூன்று முக்கிய சித்திரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்றை இங்கு நாம் காண்கிறோம்.

**ஐந்து உடம்புகள், 2.1 –5.3**

ஐந்து உடம்புகள் கொண்ட ஆத்மாவே மனிதன் என்கிறது இந்த உபநிஷதம். ஓர் உடம்பு இருப்பது தெரியும். ஆனால் ஐந்து உடம்புகள் இருப்பதாக இந்த மந்திரங்கள் தெரிவிக்கின்றன. அன்னமய ஆத்மா (தூல உடம்பு), பிராணமய ஆத்மா (பிராண உடம்பு), மனோமய ஆத்மா (மன உடம்பு), விஜ்ஞானமய ஆத்மா (புத்தி உடம்பு), ஆனந்தமய ஆத்மா (ஆனந்த உடம்பு) என்பவையே அந்த உடம்புகள்.

உடம்பு என்பதைக் குறிப்பதற்கு 'சரீரம்' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் ஆத்மா என்ற சொல் பயன்படுத்தப்படுவது கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இந்த உடம்புகளை உயிரற்ற சட்டைகள் போல் காணாமல் ஒவ்வொன்றையும் ஒரு தனி வாழ்க்கை உள்ள ஓர் உயிர்ப் பொருளாகக் காண்கிறது உபநிஷதம்.

1. **தூல உடம்பு 2.1 – 2.2**

முதலாவதாக நாம் புறத்தில் காண்கின்ற உடம்பு, உடம்பின் செயல்பாடுகள், இயங்கும் முறைகள், அதன் அடிப்படை போன்ற எதுவும் பெரிதாக நமக்குத் தெரியாது என்றாலும் உடம்பு என்ற ஒன்று இருப்பது நமக்குத் தெரியும் நமக்குத் தெரியாதது உடம்பிற்கு ஒரு தனி வாழ்க்கை உண்டு என்பதுதான். இதைக் குறிக்கத்தான் '**ஆத்மா**' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உணவு செரிப்பது, ரத்த ஓட்டம், ரத்தம் சுத்தமாக்கப்பாடல், அடிபட்ட அல்லது நோயுற்ற பகுதிகளைப் பராமரித்தல், மூளை, இதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்றவற்றின் இயக்கம் என்று உடம்பின் செயல்பாடு பிரமிப்பூட்டக் கூடிய ஒன்று. ஆனால் இவற்றில் எதுவும் நமது கட்டுப்பாட்டில் இல்லை. இந்தச் செயல்பாடுகளை உடம்பே முடிவு செய்கிறது. இன்றைய விஞ்ஞானத்தின் துணையுடன் இதனைப் புரிந்து கொள்கின்ற நாம் ஆயிரக்கணக்கான

ஆண்டுகளுக்கு முன்பு இதனை அறிந்து உடம்பை ஒரு தனி வாழ்க்கை உடையதாகக் குறிப்பிட்ட முனிவரின் அறிவுக் கூர்மையைக் கண்டு ஆச்சரியம் அடைகின்றோம்.

**உணவால் ஆனவன்:**

ஸ வா ஏஷ புருஷோ அன்னரஸமய: | தஸ்யேதமேவ சிர: |
அயம் தக்ஷிண: பக்ஷ: | அயமுத்தர: பக்ஷ: | அயமாத்மா | இதம்
புச்சம் பிரதிஷ்ட்டா | ததப்யேஷ ச்லோகோ பவதி || 2.1 ||

பொருள்:

மனிதன் உணவால் ஆனவன். இது அவன் தலை. இது அவனது வலது பக்கம். இது இடது பக்கம். இது நடுப்பகுதி. இது உடம்பைத் தாங்குகின்ற கீழ்ப் பகுதி. இது பற்றி கீழ்வரும் ஸ்லோகமும் உள்ளது.

தலை, இடது பக்கம், வலது பக்கம், நடுப் பகுதி, கீழ்ப் பகுதி என்று உடம்பின் ஐந்து முக்கியப் பகுதிகள் இங்கே கூறப்பட்டுள்ளன. இதன் மூலம் பரு உடலாகிய ஸ்தூல–உடம்பு குறிப்பிடப்படுகிறது. இது அன்றைய ரிஷிகளின் மகத்தான கண்டு பிடிப்பு. அதுவும் இன்றைய நவீன அறிவியல் கூறுகின்ற முப்பரிமாண வடிவம் (3D Image) பற்றி அன்றே கூறியிருப்பது அன்றைய ரிஷிகளின் அறிவியல் அறிவை அறிய முடிகின்றது. அன்றைய ரிஷிகள்தான் **அணு, பஞ்சபூதங்கள்** என எல்லாவற்றையும் கண்டறிந்து கூறியவர்கள். அந்த வகையிலே, உணவுச் சக்கரம் பற்றியும் அறிந்து வைத்திருந்தனர். ஆக, உடம்பின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருப்பது உணவு. எனவேதான் மனிதன் உணவால் ஆனவன் என்று குறிப்பிடப்படுகிறது.

(தேஹம் அன்னமயம் என்ற சொற்றொடர் நினைவு கூறத்தக்கது. எதைப் பழித்தாலும் அன்னத்தைப் பழிக்காதே என்று பெரியவர்கள் கூறுவதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த உடல் இயங்குவதற்கு தேவையான அக்னி உணவிலிருந்துதான் கிடைக்கிறது. ஒரு மனிதனின் உணவுப் பழக்கம் சீராக இருந்தால், அவன் உடலை பிணி அண்டாது. வயிறு புடைக்கத் தின்றால் நோய் வரும். பசிக்கு உண்ணாமல் இருந்தாலும் நோய்கள் வரும். அதனால், உடலின் தேவையை அறிந்து, அதற்கான நல்ல உணவாகக் கொடுக்க வேண்டியது மனிதனின் கடமை. அதற்காகத்தான் மிக முக்கியத்துவம் வாய்ந்த உணவை நமக்காக இந்த இயற்கை கொடையாக அளிக்கிறது. அதை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டியது நமது கடமை.

இன்னும் மனோதத்துவ மற்றும் உடலியல் ரீதியில் பற்பல உணவுகள் குறித்து பல விளக்கங்களை நாம் படித்திருப்போம். அவையெல்லாம் விஞ்ஞானத்தில் தக்க காரணங்களைக் கொண்டுள்ளன. உதாரணமாக இரவில் தயிர் உண்ணக் கூடாது என்பார்கள். இதன் காரணம் இரவு நேரம் நாம் உறங்கும் போது உடல் உறுப்புக்கள் ஒய்வு நிலையில் தம்மைப் பராமரித்துக் கொண்டிருக்கும். தயிர் போல பதார்த்தங்களை அதிகளவில் உண்டால் அவற்றை செரிமானம் ஆக்குவதற்கு நிறைய சக்தியை உடல் செலவழிக்க வேண்டியிருக்கும்.

அதனால் உடல் பாகங்கள் சோர்ந்து போகும். அடுத்த நாள் எழுகையில் புத்துணர்வு இராது. இன்னும் உணவுகளிலேயே கார, சாரமான, மசாலா உணவுகள் ரஜோ குணத்தை தரும் உணவுகள் ஆகும். அதுப்போலவே, இறைச்சி, பால், பருப்பு வகைகள் என அதிகம் எடுக்கும்போது புரதம் காரணமாக இன்னும் சில சத்துக்கள் கிடைத்தாலும், **"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு!"** என்பதுப் போன்று, அவைகளினால் ஆபத்தான நோய்களைக் கூட வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும்.

ஆகவே, அதிகம் தீங்குகள் தராத மரக்கறி சார்ந்த உணவுகள் நமக்கு நன்மைகள் செய்யும் என்பதாக நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். நமது ஆத்மா உறையும் கோவிலாக உள்ள உடலை தகுந்த அளவான உணவின் மூலம் பராமரிக்க வேண்டியது நமது கடமை.)

**அனுவாக விளக்கம்:**

**"ஸ வா எஷ புருஷோ அன்னரஸமய"**

இது அன்னமய கோஷத்தை ஆத்மாவாக அறிமுகப்படுத்துகின்றது. இந்த ஆத்மாதான் அன்னமய கோஷமாக இருக்கின்றது. அன்னத்தை சுவைப்பதினால் அடைகின்ற ஸ்தூல உடல், அன்னமயமான மனித உடல் இதையை ஆத்மாவாக கற்பனை செய்யப்படுகின்றது.

ஆலம்பனத்தை தயார் செய்வதற்குதான் இந்த உடலை ஐந்தாக பிரிக்கப்படுகின்றது. அன்னமனமான இவனுக்கு தலையே தலைப்பாகம், வலது கை வலதுபாகம், இடது இடது பாகம், கழுத்திலிருந்து வயிறு வரை உள்ள பாகம் மத்திய பாகம், இடுப்பிலிருந்து பாதம் வரை உள்ள பாகம் இந்த உடலைத் தாங்கும் பாகம் என்று ஐந்தாக பிரிக்கப்படுகின்றது. அன்னமய விஷயத்தில் இனி வரும் ரிக் மந்திரம் விளக்குகின்றது.

**அனுவாகம் – 2.2**

உணவே ஆரம்பம்:

அன்னாத்வை ப்ரஜா: ப்ரஜாயந்தே I யா: காச்ச ப்ருதிவீம் ச்ரிதா: I
அதோ அன்னேனைவ ஜீவந்தி I அதைனதபியந்த்யந்தத: I
அன்னக்ம் ஹி பூதானாம் ஜ்யேஷ்ட்டம் I தஸ்மாத் ஸர்வெளஷதமுச்யதே I
ஸர்வம் வை தேஅன்னமாப்னுவந்தி I யேஅன்னம் ப்ரஹ்மோபாஸதே I
அன்னக்ம் ஹி பூதானாம் ஜ்யேஷ்ட்டம் I தஸ்மாத் ஸர்வெளஷதமுச்யதே I
அன்னாத் பூதானி ஜாயந்தே I ஜாதான்யன்னேன வர்தந்தே I
அத்யதேஅத்தி ச பூதானி I தஸ்மாதன்னம் ததுச்யத இதி II 2.2 II

பொருள்:

உணவிலிருந்தே மக்கள் தோன்றினர். பூமியில் யாரெல்லாம் உண்டோ, எவைகளெல்லாம் உண்டோ அவைகள் அனைத்தும் உணவிலிருந்தே உண்டாயின. அனைத்தும் உணவினாலேயே வாழ்கின்றன. கடைசியில் உணவிலேயே கலக்கின்றன. உணவே உயிர்களின் ஆரம்பம். அதனால்தான் உணவு அனைத்திற்கும் மருந்து என்று சொல்லப்படுகிறது.

யார் உணவை தெயவீகமாகப் போற்றுகிரார்களோ அவர்கள் தவறாமல் உணவைப் பெறுகின்றனர். உணவு கிடைப்பதில் அவர்களுக்கு ஒரு நாளும் குறை இல்லை. உணவே உயிர்களின் ஆரம்பம். அதனால்தான் உணவு அனைத்திற்கும் மருந்து என்று சொல்லப் படுகிறது. உணவிலிருந்து உயிர்கள் தோன்றுகின்றன. அவ்வாறு, தோன்றியவைகள் உணவினாலேயே வளர்கின்றன. ஆரம்பத்தில் உயிர்கள் உணவை உண்கின்றன. கடைசியில் உணவே உயிர்களை உண்கிறது. எனவே தான் உணவு **'அன்னம்'** என்று அழைக்கப்படுகிறது.

உணவின் பெருமை, முக்கியத்துவம் போன்றவற்றைகள் இவ்வளவு சிறப்பாகக் கூறுவதன் மூலம், அதனை நாம் எவ்வளவு கவனமாகக் கையாள வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது இந்த உபநிஷதம். ஆகவே, உணவை தெயவீகமாகப் போற்ற வேண்டும்.

எப்படி?

பொதுவாக, நாம் உணவு ஒரு மருந்து என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும். அதாவது, 'பசி என்னும் நோய்க்கான மருந்தே உணவு' என்கிறார் பகவான் ஸ்ரீசங்கரர். அதாவது, உண்ணும் உணவை ருசிக்காக உண்ணக் கூடாது. மருந்தை எப்படி அளவறிந்து உரிய வேளையில் மட்டும் உண்போமோ? அப்படி பசியறிந்து அளவுடன் உரிய வேளையில் மட்டும் உணவை உண்ண வேண்டும். இந்த நியதியைப் பின்பற்றி வாழ்பவனை மட்டுமே உணவு வளர்க்கிறது. அவனுக்கு உணவு தவறாமல் கிடைக்கிறது. இந்த நியதியை மறந்தால் 'ஆரம்பத்தில் உயிர்கள் உணவை உண்கின்றன. அதுவே, நாளடைவில், அவைகள் உண்ணும் உணவே அளவுக்கு மிஞ்சி கண்டதை எல்லாம் கண்டபடி உண்ணும்போது, அந்த உணவே உண்பவர்களை பல்வேறு நோய்களால் உண்டு விடுகிறது' என்று எச்சரிக்கிறது இந்த மந்திரம்.

அதாவது, ஒரு வேளை உண்பவன் **யோகி**. இருவேளை உணபவன் **போகி**. மூன்று வேளைகளும் உண்பவன் **ரோகி** என்பதும், நம்முடைய நடைமுறையில் இருக்கின்ற நம் முன்னோர்களின் வழிகாட்டுதல்கள் ஆகும்.

நாம் உணவை உண்ண ஆரம்பிக்கிறோம். 'உணவு உடம்பை வளர்க்க' என்ற நோக்கத்தை மறந்து 'உணவு சுவைக்காக' என்று உண்ண ஆரம்பிக்கும்போது, நாம் உணவை உண்கின்ற நிலைமை மாறி, உணவு நம்மை உண்கின்ற நிலைமை உண்டாகிறது. அதாவது, உணவிற்கும் அதன் சுவைக்கும் நாம் அடிமையாகி விடுகிறோம். அளவை மறந்து உண்டு நோயுறுகிறோம். எனவே உணவை ஒரு மருந்து போன்று, கையாள வேண்டும்.

அன்னம் என்ற சமஸ்கிருதச் சொல் 'அத்' என்ற மூலச் சொல்லில் இருந்து பிறந்தது. உண்ணுதல் என்பது இதன் பொருள். உண்ணப்படுவதாலும் உண்பதாலும் **அன்னம்** என்று அழைக்கப்படுகிறது.

விராட், இந்த ஸ்தூல பிரபஞ்சம் எல்லா ஜீவராசிகளுக்கும் காரணமாக, முதன்மையாக இருக்கின்றது. எனவே உணவே எல்லா ஜீவராசிகளுக்கும் மருந்தாக சொல்லப்–படுகின்றது. யார் உணவை பிரம்மனாக உபாஸிக்கின்றார்களோ அவர்களுக்கு அனைத்து விதமான உணவுகளையும் அடைகின்றார்கள். இதன் நிஷ்காம பலனானது இந்த உடலின் மீதுள்ள அபிமானம் சென்றுவிடும். உணவினால் தோன்றி, அதனாலே காக்கப்பட்டு கடைசியில் அதினிடத்தே லயம் அடைகின்றது. உணவாகவே மாறி விடுகின்றது. எவைகள் எல்லாம் நம்மால் சாப்பிடப்படுகின்றதோ? அவைகளை எல்லாம் அன்னம் என்று கூறப்படுகின்றது. இறந்தபிறகு, இந்த ஸ்தூல சரீரத்தை பஞ்சபூதங்களால் சாப்பிடப்படுதல் என்பதும்கூட அன்னம் என்றே சாஸ்திரத்தில் சொல்லப்படுகின்றது. இது ரிக் மந்திரத்தால் விளக்கப்படுகின்றது.

இதில் முதலில் அன்னமய **வியஷ்டியும், சமஷ்டியும்** ஒன்றுதான் என்று கூறுகின்றது. இந்த உடலும் மற்றனைத்து உடல்களும் ஒன்றுதான் என்று உபாஸனை செய்ய வேண்டும் என்று உபதேசிக்கப்படுகின்றது.

இங்கு அன்னம் – சமஷ்டி, அன்னமயம் – வியஷ்டி அன்னத்திலிருந்து (விராட்) தனித்தனி அன்னமய கோஷம் தோன்றியது. அதாவது இந்த பூமியை சார்ந்திருக்கின்ற அனைத்து விதமான உயிரினங்களும் தோன்றியது. அவைகள் உணவினாலேயே காக்கப்பட்டு வருகின்றது. வாழ்வின் முடிவில் இந்த சமஷ்டி அன்னத்தையே அடைகின்றது. இந்த சமஷ்டி உடலும், வியஷ்டி உடலும் ஒன்றுதான் என்ற கருத்தைப் புரிந்துக் கொள்ள வேண்டும். ஈஸ்வரன் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளிலும் தானாகவே இருக்கின்றார் என்றும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

**அனுவாகம் – 2.3**

**பிராண உடம்பு:**

தஸ்மாத்வா ஏதஸ்மாதன்ன ரஸமயாத் ।
அன்யோரந்தர ஆத்மா ப்ராண மய: । தேனைஷ பூர்ண: ।
ஸ வா ஏஷ புருஷவித ஏவ । தஸ்ய புருஷவிததாம் ।
அன்வயம் புருஷவித: । தஸ்ய ப்ராண ஏவ சிர: ।
வ்யானோ தக்ஷிண: பக்ஷ: । அபான உத்தர: பக்ஷ: । ஆகாச ஆத்மா ।
ப்ருதிவீ புச்சம் ப்ரதிஷ்ட்டா । கதப்யேஷ ச்லோகோ பவதி ॥ 2.3 ॥

பொருள்:

உணவினால் ஆன புறவுடம்பைத் தவிர மற்றொரு உடம்பு உள்ளது. அது இந்த உடம்பின் உள்ளே உள்ளது; பிராண சக்தியால் ஆனது. ஸ்தூல உடம்பு இதனால் நிறைக்கப்பட்டுள்ளது. இது புறவுடம்பைப் போன்றது; அதுப்போலவே தோற்றம் உடையது. பிராணன் அதன் தலை, வியானன் வலது பக்கம், அபானன் இடது பக்கம், வெளி இதன் உடம்பாக உள்ளது. பூமி இதன் கீழ்ப்பகுதியான ஆதாரமாக உள்ளது. இது பற்றி கீழ்வரும் ஸ்லோகமும் உள்ளது.

சமஷ்டியாக இருக்கின்ற வியஷ்டியாகவும் இருக்கின்ற அன்னமயத்திலிருந்து வேறாக ஸ்தூல உடலுக்குள் இருக்கின்ற பிராணமயம்தான் ஆத்மா என்று சொல்லும்போது, அன்னமய கோஷம் ஆத்மா இல்லையென்றாகின்றது, அது மித்யாவாகவும் காரியமாகவும்,

அனாத்மாவாகவும் உள்ள நிலைக்கு சென்று விடுகின்றது. அன்னமயம் ஆத்மாவல்ல என்று உறுதி செய்து அதைக்காட்டிலும் வேறாக ஒன்றை சொல்லுகின்றது.

இது அன்னமயத்தை விட ஆத்மாவுக்கு அருகிலும், சூட்சுமமாகவும், அதிகமாகவும் வியாபித்து இருக்கின்றது. ஒரு பொருள் சூட்சுமமாகும் போது அதிகமான இடத்தை வியாபிக்கும். இது அன்னமயத்தைக் கட்டுப்படுத்தும் நிலையில் இருக்கின்றது. ஸ்தூல உடல் சரியில்லையென்றால், பிராணனை சரி செய்தால் அது உடலை நல்ல நிலைக்கு கொண்டு வரும்.

ஆத்மா என்ற சொல் தோன்றிய விதம். இது அத3 என்ற வினையடியிலிருந்து வந்திருக்கின்றது. ஆத்மா என்றால், வியாபித்தல், ஆதாரமாக இருத்தல், பார்த்துக் கொண்டிருத்தல் (சாக்ஷி), என்றும், இருத்தல் என்று பல அர்த்தங்களை குறிக்கின்றது.

அன்னமய கோஷம் ஆத்மாவல்ல என்று சொல்லும்போது அன்னத்தை அதாவது இங்கு எல்லா ஸ்தூல சரீரங்களையும் சேர்த்து புரிந்து கொள்ள வேண்டும்,. அதேபோல நம்முடைய பிராணமயமும், சமஷ்டி பிராணமயமும் ஒன்றுதான் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த அறிவு ஏற்படவில்லையென்றால் இதை உபாஸனை செய்து அடைய வேண்டும். ஆலம்பனமாக இந்த உபாஸனையில் இருப்பது பிராணமயம், ஆனால் இது கண்ணுக்கு தெரியாமல் இருப்பதால் இதற்கு உருவத்தைக் கொடுக்கின்றது உபநிஷத்.

பிராணன் உடலுக்கு செல்வதால் அது உடலின் உருவத்தை அடைவதாக எண்ணிக் கொள்ள வேண்டும், பிராணன் ஐந்து வகையாக இருக்கின்றது. பிராணமயம் உடலாக இருக்கின்றது. இதில் வெளியே விடும் மூச்சுக்காற்றான பிராணன் தலைப்பாகமாகவும், வியானன், (சக்தியை, ரத்தத்தை உடல் முழுவதும் எடுத்துச் செல்கின்ற காற்று) உடலின் வலதுபாகம், அபானன் (உடலிலிருந்து வெளியேறும் காற்று) உடலின் இடது பாகமாகவும், சமானன் (சாப்பிடுகின்ற உணவை செரிக்க உதவுவது) நடுப்பாகமாகவும், உதானன் (எதிர்மறையாக வேலை செய்வது, வாந்தி வருவது, கண்ணில் நீர் வருவது, இறந்த பிறகு சூட்சும உடலை வெளியே எடுத்துச் செல்வது) வாலைப்போல பிராணமய உடலுக்கு ஆதாரமாக இருக்கின்றது. இவ்வாறு உபநிஷத் சொல்வதை சிரத்தையோடு எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த பிராணமய கோஷத்தை பின்வரும் ரிக் மந்திரம் விளக்குகின்றது.

**அனுவாகம் – 2.4**

ப்ராணம் தேவா அனுப்ராணந்தி I மனுஷ்யா: பசவச்ச யே I
ப்ராணோ ஹி பூதானா மாயு: I தஸ்மாத் ஸர்வாயுஷ முச்யதே I
ஸர்வ மேவதா ஆயுர்யந்தி I யே ப்ராணம் ப்ரஹ்மோ பாஸதே I
ப்ராணோ ஹி பூதானா மாயு: I தஸ்மாத் ஸர்வாயுஷ முச்யத இதி I
தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா I ய: பூர்வஸ்ய II 2.4 II

பொருள்:

புலன்கள் பிராணனைத் தொடர்கின்றன. மனிதர்கள் என்றல்ல, மிருகங்களின் விஷயத்திலும் அப்படியே. பிராணனே உயிர்களின் வாழ்க்கையாக உள்ளது. (அதாவது உயிர்களின் ஆயுளை நிர்ணயிக்கிறது.) அதனால் அது அனைத்தின் வாழ்க்கை என்று சொல்லப்படுகிறது.

முன்பு கூறப்பட்ட தூல உடம்பின் ஆதாரமாக இருப்பது இந்தப் பிராண–உடம்பே. எங்கும் நிறைந்து பிரபஞ்சத்தை இயக்குகின்ற பிராண சக்தி மனிதனில் பத்து வகை சக்திகளாக செயல்பட்டு மனித வாழ்க்கையை நடத்துகிறது என்று ஏற்கெனவே (1:5.5) கண்டோம். அந்தப் பிராண சக்தி இங்கே ஒரு தனி வாழ்க்கை உடைய உடம்பாக சித்தரிக்கப்படுகிறது.

புலன்கள் பிராணனின் ஆற்றலாலேயே இயங்குகின்றன. சாப்பிடாததின் காரணமாகவோ? நோயுறுவதாலோ? பிராண சக்தி குறையும்போது புலன்கள் செயலிழப்பதை உணர்கிறோம். அதனால்தான் புலன்கள் பிராணனைத் தொடர்வதாக இங்கே கூறப்பட்டது. பிராணனின் ஒழுங்கற்ற செயல்பாடே நோய்க்குக் காரணமாகிறது. எனவே, பிராணனாகிய மூச்சுக்காற்றை '**தெய்வீகமாகப் போற்ற வேண்டும்**' என்கின்றது சாஸ்திரம். பிராணன் நோய்க்குக் காரணமாகாமல் ஒழுங்காகச் செயல்படுமாறு, மனிதன் மூச்சை சரியாக கையாளும் வகையில் வாழ வேண்டும் என்பது இதன் பொருள். அத்தகைய மனிதர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்கிறார்கள்.

உண்ணும் உணவிலிருந்து பெறப்படுகின்ற ஆற்றலை ஆதாரமாகக் கொண்டே அந்தப் பிராண சக்தி மனிதனில் செயல்படுகிறது. அதனால்தான் இது '**உணவாகிய உடம்பின் ஆதாரம்**' என்று கூறப்பட்டது. ஆக, இந்த சமஷ்டி பிராணனும், வியஷ்டி பிராணமயமும் ஒன்றுதான் என்று கூறுகின்றது. நம்மிடத்து இருக்கும் பிராணமயமும் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளில் இருக்கும் பிராணமயமும் ஒன்றுதான் என்று உணர்ந்து செயல்பட வேண்டும்.

பசி–தாகம் பிராணனின் செயல்பாடுகள். நமக்கு ஏற்படும் இவைகளே அனைத்து ஜீவராசிகளுக்கும் ஏற்படுகின்றது. இந்த ஐக்கியத்தை புரிந்துக் கொள்ள முடியாவிட்டால், இதை மனதில் தியானம் செய்ய வேண்டும். இந்த தியானத்தின் பலன் இந்த ஐக்கியத்தை உணர்ந்து கொள்ளுதல், அந்த பிராணனுடன் அனுபவமாக இருக்க வேண்டும் என்பதினாலேயே மூச்சைக் கவனித்தல் போன்ற பயிற்சிகள் எல்லாம் நடைமுறையில் உள்ளது. ஆக, அந்த மூச்சு எனும் பிராணன் நம்முடைய சுபாவமாகவே இருக்கின்றது.

இதன் சகாம பலன் (பலனை எதிர்ப்பார்த்து செய்வது) மூலம், விதிக்கப்பட்ட முழு ஆயுளையும் அடைகின்றார்கள். துர் மரணம் ஏற்படாது. இவ்வாறு ரிக் மந்திரம் விளக்கத்தை முடிக்கின்றது. இந்த பிராணமயத்தை சாரீர ஆத்மா என்றும் அழைக்கப்படுகின்றது. எவனொருவன் இதற்கு முன் உள்ள அன்னமய கோஷத்தினுடைய சாரீர ஆத்மாவாக இருக்கின்றானோ? அவனே பிராணமயன்.

**அனுவாகம் – 3**

**மன உடம்பு:**

தஸ்மாத்வா ஏதஸ்மாத் ப்ராண மயாத் ।
அன்யோந்தர ஆத்மா மனோமய: । தேனைஷ பூர்ண: ।
ஸ வா ஏஷ புருஷவித ஏவ । தஸ்ய புருஷ விததாம் ।
அன்வயம் புருஷவித: । தஸ்ய யஜுரேவ சிர: ।
ரிக் தக்ஷிண: பக்ஷ: । ஸாமோ உத்தர: பக்ஷ: । ஆதேச ஆத்மா ।
அதர்வாங்கிரஸ: புச்சம் பிரதிஷ்ட்டா । ததப்யேஷ ச்லோகோ பவதி ॥ 3 ॥

பொருள்:

மூச்சுக் காற்று எனும் பிராணனால் ஆன இந்த உடம்பைத் தவிர மற்றோர் உடம்பும் உள்ளது. அதுவும் இந்த உடம்பினுள்ளேயே உள்ளது. இது மிகவும் நுண்ணிய வடிவம் கொண்டது. இது எண்ணங்களால் எழுந்த மனதால் ஆனது. பிராண உடம்பு இதனால் நிறைக்கப்பட்டுள்ளது. இது ஸ்தூல–உடம்பை புலன்களைக் கொண்டு கையாளக்கூடியது. யஜுர் வேதம் இதன் தலை. ரிக் வேதம் வலது பக்கம், சாம வேதம் இடது பக்கம். இறையாணை இதன் உடம்பாக உள்ளது. அதர்வண வேதம் இதன் கீழ்ப் பகுதியான ஆதாரமாக உள்ளது.

இங்கு மனம் பற்றிப் பேசப்படுகிறது. பிராண–உடம்பிற்கு அடுத்ததாக, அதை விட மிகவும் நுண்ணியதாக மன உடம்பு அமைந்துள்ளது. வேதங்கள் இதன் அங்கங்களாக

சொல்லப்பட்டுள்ளது. வேதங்கள் என்றாலே அறிவு என்றே பொருள் என்பதினால், வேதங்களை இதன் அங்கங்களாகச் சொல்வதின் மூலம், புறத்திலிருந்து ஏற்றி வைத்துக் கொள்கின்ற எத்தகைய அறிவானாலும், அத்தகைய அறிவே இந்த மன–உடம்பின் ஆதாரம் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது. நம்மால் ஏற்றி வைத்துக் கொள்ளப்படுகின்ற புற அறிவு மட்டுமல்ல. நம்முடைய உணர்ச்சிகள், பல்வேறு கருத்துக்கள், நம்முடைய அனுபவப் பதிவுகள் (சம்ஸ்காரங்கள்) என எல்லாவற்றின் இருப்பிடம் இந்த மனமே ஆகும்.

இந்த மந்திரம் மனோமய கோஷத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பேசுவதினால், ஏற்கனவே சொல்லப்பட்ட பிராணமயத்திற்கு வேறாகவும், இந்த அன்னமயத்திற்கு உள்ளேயும் உள்ள ஆத்மா மனோமயன் என்பதாக இங்கு பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் ஏற்கனவே பார்த்த பிராணமய கோஷம் அனாத்மா என்று நீக்கப்படுகின்றது. அதனால் மனோமய கோஷத்தினால், பிராணமயமானது வியாபிக்கப்படுகின்றது. இந்த மனோமயன் ஸ்தூல உடலை போன்றவன். அந்த பிராணமயனுடைய உடலமைப்பை ஒட்டியே இந்த மனோமயனுடைய உடலும் அமைகின்றது.

யஜீர்வேதமே தலைப்பாகம், ரிக்வேதம் வலதுபாகம், சாமவேதம் இடதுபாகம், வேதத்தின் கட்டளைகள் நடுப்பாகம், அதர்வண வேதம் உடலை தாங்கும் பாகமாக அமைகின்றது என்பதாக ரிக் மந்திரம் இதை விளக்குகின்றது.

**அனுவாகம் – 4**

யதோ வாசோ நிவர்த்தந்தே । அப்ராப்ய மனஸா ஸஹ ।
ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் । ந பிபேதி கதாசனேதி ।
தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா । ய: பூர்வஸ்ய ॥ 4 ॥

பொருள்:

யாரை அடைய இயலாமல் மனமும், வாக்கும் திரும்புகின்றனவோ? அவரே இறைவன். அவரை அனுபூதியில் உணர்கின்ற இறையானந்தத்தை அறிந்தவன் ஒருபோதும் பயப்படுவதில்லை. முன்பு கூறப்பட்ட பிராண உடம்பிற்கு ஆதாரமாக விளங்குவது இந்த மனம் ஆகும். புற அறிவுக்கு ஆதாரமாக இருப்பது மனம் என்றாலும், இந்த மனத்தால் இறைவனை அடைய முடியாது என்கிறது இந்த மந்திரம். அதாவது, புற அறிவினால் ஆண்டவனை அடைய முடியாது என்பது இங்கே சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆக, மனிதன் என்பவன் ஆத்மாவைத் தவிர்த்த உடல், உயிர், மனதின் சேர்க்கையாக கருதப்படும் நிலையில், இந்த மூன்றையுமே உடலாக உருவகப்படுத்தி இந்த மந்திரங்கள் கூறுகின்றன. இதன் பொருள் இந்த மூன்றுமே ஆத்மாவக் காட்டிலும் கீழ்நிலையில் உள்ளவைகள் என்பதேயாகும். பொதுவாக, நாம் புறத்தில் ஏற்றி வைத்துக் கொள்கின்ற அறிவு என்பதை மிகப்பெரிய விஷயமாக எண்ணுகிறோம். ஆனால், இறைவனை அடைய முடியாத அத்தகைய புற அறிவு என்பதுக்கூட உண்மையில் கீழ் நிலையில் உள்ளதேயாகும் என்பதாக இங்கு அறிவுறுத்தப்படுகின்றது. அதுப்போலத்தான், இந்த பரு உடல் இயக்கத்துக்கு ஆதாரமாக இருக்கும், பிராணன் என்பதும்கூட கீழ் நிலையில் உள்ள ஒன்றுதான்.

ஆனால், இவைகள் வெவ்வேறு அளவுகோல்கள் மூலம் அளவிடப்படுகின்றன. அதாவது, உடல் என்பது மிகக் கீழ்மை நிலையிலும், பிராணன் அதை விட சற்று மேம்பட்ட நிலையிலும், மனம் என்பது அதையும் விட இன்னும் மேம்பட்ட நிலையிலும் வைத்து இங்கு அவைகளின் பரிமாணங்கள் சொல்லப்படுகின்றன. இதன் காரணம், நம்முடைய பரு உடல் என்பதே ஸ்தூலமாக நமது கண்களால் காணக்கூடிய ஒன்றாக உள்ளது.

அதைத் தாண்டி, நம்மிடமுள்ள கண்ணால் காண முடியாத ஒன்றாக பிராணன் மற்றும் மனம் ஆகிய இவைகள் இரண்டும் உள்ளதால், இவைகள் நம்முடைய பரு உடலை விட சற்று மேம்பட்ட நிலையில் நுண்ணிய உடல்களாக இங்கு கூறப்பட்டன.

அந்த வகையிலே, மனம் என்பதும் கூட ஒட்டுமொத்த பிரபஞ்ச மனம் என்பதாகவே உள்ளது. அதாவது, வியஷ்டி மனோமயமும், சமஷ்டி மனோமயமும் ஒன்றுதான் என்று நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். அதாவது, நாம் கையாளுகின்ற நம்முடைய மனம் என்பது உண்மையில் நமது தனித்த மனம் அல்ல, அது ஈஸ்வர மனம் என்பதாகவே சாஸ்திரம் கூறவருகின்றது. ஏனென்றால், உபநிஷத் இதை மறைமுகமாகத்தான் கூறும்.

வாக்கானது மனதுடன் சென்று ஹிரண்யகர்ப்பனை அடையமுடியாமல் திரும்பி வந்து விடுகின்றது. சூட்சும பிரபஞ்சத்தின் உருவமாக இருக்கின்ற ஹிரண்யகர்ப்பனை விளக்க முடியாமல் வியஷ்டி மனமானது திரும்பி வந்துவிட்டது. இதிலிருந்து வியஷ்டியான தனித்த மனம், வாக்கு போன்றவைகளைக் கொண்டு, இந்த ஒட்டுமொத்த ஈஸ்வரன் எனும் சமஷ்டியை விளக்க முடியாது என்றும் தெரிகின்றது.

தனிமரம் தோப்பாகாது என்பதுப்போல இப்போது புரிந்துக் கொள்ள முடிகின்றது. இதிலிருந்து இரண்டும் ஒன்றுதான் என்ற அறிவு புகட்டப்படுகின்றது. எனவே, உபாஸகன் ஹிரண்யகர்ப்பனை ஆனந்த ஸ்வரூபமாக தியானிப்பதனால், அவனுக்கு எப்பொழுதும், எதனிடத்திலும் பயமில்லை.

அதாவது, இந்த ஹிரண்யகர்ம உபாசனை மூலம் பயமற்ற நிலையை அடைந்திடுவான். முன்பு கூறப்பட்ட பிராணமயத்திற்கு யார் ஆத்மாவாக இருக்கின்றானோ? அவனே இந்த மனோமயன் என்பதாக இந்த ரிக் மந்திரம் முடிவடைகிறது.

**அனுவாகம் – 5.1**

**புத்தி உடம்பு:**

தஸ்மாத்வா ஏதஸ்மான் மனோமயாத் ।
அன்யோ அந்தர ஆத்மா விஜ்ஞானமய: ।
ஸ வா ஏஷ புருஷவித ஏவ । தஸ்ய புருஷ விததாம் ।
அன்வயம் புருஷவித: । தஸ்ய ச்ரத்தைவ சிர: । ரிதம் தக்ஷிண: பக்ஷ: ।
ஸத்ய முத்தர: பக்ஷ: । யோக ஆத்மா । மஹ: புச்சம் பிரதிஷ்ட்டா ।
ததப்யேஷ ச்லோகோ பவதி ॥ 5.1 ॥

பொருள்:

மனத்தால் ஆன உடம்பைத் தவிர மற்றொரு உடம்பும் உள்ளது. அதுவும் இந்த உடம்பின் உள்ளேயே உள்ளது. மிகவும் நுண்ணிய அந்த உடம்பு புத்தியால் ஆனது. மன உடம்பு இதனால் நிறைக்கப்பட்டுள்ளது. இது புற உடம்பைப் போன்றது. அதுப்போலவே தோற்றம் உடையது. சிரத்தை இதன் தலை. ரிதம் வலது பக்கம். சத்தியம் இடது பக்கம். யோகம் இதன் உடம்பாக உள்ளது. மஹத் இதன் கீழ்ப்பகுதியான ஆதாரமாக உள்ளது.

மன–உடம்பிற்கு உள்ளே, அதைவிட நுண்ணியதாக அமைந்துள்ளது புத்தி–உடம்பு. பொதுவாக, எதிலும் நிலையாக நிற்காமல் அலைபாய்ந்து கொண்டிருப்பது மனதின் இயல்பு. அதேசமயம், எதையும் நிச்சயமாக முடிவு செய்வது புத்தி. இது சாதாரணமான மனிதர்களில் முழுமையாக செயல்படுவதில்லை. பெரும்பாலானவர்களுக்கு புத்தி விழித்துக் கொள்ளவே இல்லை. ஆகவே, பிரார்த்தனை, காயத்ரீ ஜபம், ஈஸ்வர உபாசனைப் போன்ற ஆன்மீக சாதனைகளால் இந்த புத்தி விழிப்புற்று, மனதை வழிநடத்தும்போது மட்டுமே மனிதன் செயற்கரியனவற்றைச் செய்யும் வல்லவனாகிறான். அப்போது மட்டுமே அவன் மனத் தெளிவு பெற்றவன் என்பதாக மற்றவர்களால் மதிக்கப்படுகிறான். அத்தகைய மனிதன் எதையும் ஆழ்ந்து சிந்தித்து, அறிவு தெளிவு பெறும் வல்லமை உள்ளவனாக இருக்கின்றான்.

இத்தகைய புத்தி விழிப்புற்ற மனிதர்களே இந்த மனித சமுதாயத்தில் மேதைகளாகவும், சிறந்த படைப்பாளிகளாகவும், உயரிய அறிஞர் பெருமக்களாகவும் பார்க்கப்படுகின்றார்கள். இவ்வாறு, விழிப்படைந்த புத்தியுடன் செயல்படுபவனின் புலன்கள் தேரோட்டிக்கு அடங்கிய குதிரைகள்போல அவன் வசப்படுகின்றன. அவன் வாழ்க்கைப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்கின்றான். ஆன்மீக வாழ்க்கையிலும் சரி, சாதாரண உலகியல் சார்ந்த வாழ்க்கையிலும் சரி, அத்தகைய புத்தி விழிக்கப்பெற்றவன் எதையும் சாதிக்கக் கூடியவன்.

சிரத்தை, ரிதம், சத்தியம், யோகம், மஹத் ஆகியவைகள் புத்தி–உடம்பின் அங்கங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

முன்பு சொல்லப்பட்ட மனோமயத்திலிருந்து வேறாகவும், அன்னமயத்திற்கு உள்ளேயும் உள்ள ஆத்மா **விக்ஞானமயன்** எனும் புத்தி சக்தியாக உள்ளது. இதனால் மனோமயமானது முழுவதுமாக வியாபிக்கப்பட்டுள்ளது.

இதனுடைய தலைப்பாகம் சிரத்தை, இது புத்தியை குறிக்கின்றது. ஆதலால், ஆத்மாவைப் பற்றிய அறிவை அடைவதற்கு தலையாயப் பங்கு வகிக்கும் சிரத்தை மிகவும் அவசியமாகின்றது.

சரியான அறிவு வலதுபாகம், சரியாக புரிந்ததை செயல்படுத்துதலான வாய்மையே இடது பாகம். மனஒருமுகப்பாடு நடுப்பாகம். மஹத் எனும் ஹிரண்யகர்ப்பன் எல்லாவற்றையும் தாங்குகின்ற கீழ்ப்பாகம். இதை இந்த ரிக் மந்திரம் கூறுகின்றது.

**ஸ்தூல சரீரம்** – அன்னமய கோஷம்

**சூட்சும சரீரம்** – பிராண, மனோ, விக்ஞானமய கோஷங்கள்.

**காரண சரீரம்** – ஆனந்தமய கோஷம்

சூட்சும சரீரத்தில் ஐந்துவகை பிராணன்கள், ஐந்துவகை ஞானேந்திரியங்கள், ஐந்துவகை கர்மேந்திரியங்கள், மனம், புத்தி போன்ற 17 தத்துவங்களைக் கொண்ட அங்கங்களாக இருக்கின்றன.

**பிராணமய கோஷம்** – 5 பிராணன்கள், 5 கர்மேந்திரியங்கள்

**மனோமய கோஷம்** – மனமும், 5 வகை ஞானேந்திரியங்கள்

**விக்ஞானமய கோஷம்** – புத்தியும் 5 வகை ஞானேந்திரியங்கள்

இத்தகைய புத்தி–உடம்பின் ஆதாரமாக இருப்பது மஹத்.

**மஹத் என்றால் என்ன?**

நமது ஐந்து உடம்புகளைப் பற்றி இந்த மந்திரங்கள் கூறி வருகின்றன. ஒவ்வோர் உடம்பும் அந்தந்த நிலையில் பிரபஞ்சத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அதாவது நாம் தனி நபர்களாகத் தோன்றினாலும் உண்மையில், இந்த **பிரக்ருதி** எனும் பிரபஞ்சத்தின் அங்கமாக உள்ளோம். நமது ஸ்தூல–உடம்பு ஸ்தூலப் பிரபஞ்சத்துடனும், மன–உடம்பு பிரபஞ்ச மனத்துடனும் இணைக்கபப்ட்டுள்ளன. 'எல்லா மனங்களும் ஒரே தன்மை உடையவைகள். அதாவது ஒரே பிரபஞ்ச மனமாகிய பெரிய மனத்தின் பகுதிகள் எனலாம்.

அந்த வகையிலே, தன் மனத்தை அறிந்து அடக்குபவன் ஒவ்வொரு மனத்தையும் பற்றிய இரகசியத்தை அறிகிறான். ஒவ்வொரு மனத்தையும் அடக்க வல்லவன் ஆகிறான். மனதைப்போலவே, தனி மனித புத்தியும், இந்த பிரபஞ்ச புத்தியும் ஒன்றாகவே உள்ளன. இருப்பினும், அதை அறியக்கூடிய நிலையில் தனி மனித மனம் இடம் தருவதில்லை. இது அறியப்படக்கூடிய நிலையில் மனிதன் தன் மனதை விசாரித்து, விவேகத்தினால் விழித்துக் கொள்ள வேண்டும். ஆக, இந்த ஒட்டுமொத்த பிரபஞ்ச புத்தியே **மஹத்** எனப்படும். இந்த ஒட்டுமொத்த புத்தி தனி–நபர் புத்திக்கு ஆதாரமாக உள்ளது.

பொதுவாக, இந்தப் பிரக்ருதி இரண்டு பாகமாக உள்ளது. அதாவது, புருஷ பாகம் மற்றும் ஸ்திரீ பாகம் என்று இரண்டாக இருப்பதினால், இதை சைவ சித்தாந்தம் சிவம் – சக்தி என்று கூறுகின்றது.அதாவது, மேட்டர் என்ற பொருள் நம்முடைய சனாதன தர்மத்தில் கூறப்பட்ட பரம்பொருள் (சிவம்) என்பதாகவும், எனெர்ஜி என்பது, ஆற்றல் அல்லது சக்தி என்பதாகவும் உள்ளது.

E = MC2

**E** = Energy (ஆற்றல் அல்லது சக்தி)
**M** = Mass (or) Matter (பொருள் அல்லது சிவம்)
**C2** = Speed of Light (அறிவொளியின் விரிவு அல்லது வேகம்)

ஆக, நவீன விஞ்ஞானம் கூறுவதுப் போன்று ஒரு ஆற்றலை (சக்தியை) ஆக்கவோ, அழிக்கவோ, முடியாது, ஆனால், ஒரு ஆற்றலை வேறொரு ஆற்றலாக மாற்ற முடியும் என்பதே.

இதன் அடிப்படையில் பார்த்தாலும், புத்தி சக்தி என்பது, ஒர் அறிவு தாவரங்களில் தொடங்கி, ஆறு அறிவு படைத்த மனிதர்கள் வரை பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட மாறுதலுக்கு உட்பட்டே விரிந்துக் கொண்டே உயர்ந்து வந்திருக்கின்றது. அதாவது, இந்த பிரக்ருதியாகிய பிரபஞ்சமனதின் அறிவாற்றலாகிய **மஹத்** சர்வ வியாபியாக எல்லையற்று விரிந்துக்கொண்டே போகின்றது.

அத்தகைய, தூய அறிவின் பரந்த, விரிவு நிலையே, படைக்கப்பட்ட உயிரினங்களில், தாவரங்கள் முதல் மனிதர்கள் வரை புத்தி சக்தியாகப் பிரகாசிக்கின்றது. இதன் பிரகாசம் மாறுபட்டு இருப்பதற்கான காரணம் படைக்கப்பட்டவைகளின் உடல் மற்றும் மனம் சார்ந்த நிலைப்பாடு என்பதினால், விழித்துக் கொண்ட விவேகத்தில் மட்டுமே மனிதன் மகத்தானவனாகப் பார்க்கப்படுகின்றான்.

இத்தகைய மஹத் என்னும் மகத்தான மனதின் உயர்ப்பரிமாண அறிவு நிலை என்பது, படைக்கப்பட்ட பல்வேறு உயிரினங்களுக்குண்டான முக்குண அடிப்படையில், மூன்று விஷயங்களை உருவாக்குகிறது.

அவைகள், **"தன்னுணர்வு நிலை"** (EGO), **'பிரித்துணரும் நிலை'** (DISCRIMINATION) மேலும், இந்த இரண்டு நிலைகளையும் தன்னகத்தே கொண்ட மனம் (MIND) என்னும் **'சிந்தனா சக்தி நிலை'** ஆகும்.

மஹத் தத்துவத்தின் ஒரு விரிவில் சாத்விக அம்சமாக, ஐந்து ஞானேந்திரியங்களும், ஐந்து கர்மேந்திரியங்களும் வருகின்றன. மஹத் தத்துவத்தின் இன்னொரு விரிவில் தாமஸ அம்சமாக தன்மாத்திரைகள் எனப்படும் ஐந்து பௌதிக உறுப்புக்கள் வருகின்றன.

அவைகள் முறையே, **கண், காது, மூக்கு, வாய்** மற்றும் **தோல்** போன்ற இந்த ஐந்து ஞானேந்திரிய உறுப்புக்களும் **காணுதல், கேட்டல், நுகர்தல், சுவையுணர்தல்** மற்றும் **தொடுவுணர்ச்சி** போன்ற ஞானேந்திரியங்களின் செயல்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றன.


அடுத்து, கர்மேந்திரியங்கள் என்பன ஐந்து உறுப்புக்கள் மற்றும் அவற்றின் செயல்கள் ஆகியவைகளைக் கொண்டு, அவைகள், **பேசுதல்** (வாய்), **பற்றுதல்** (கை), **நகர்தல்** (கால்), **வம்சவிருத்தி செய்தல்** (குய்யம் – பிறப்புறுப்பு), **கழிவுகளை அகற்றுதல்** (குதம் – ஆசனவாய்) போன்றவைகளாகும். மேலும், இவைகள், இந்த பிரபஞ்சத் தொடர்பான நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் வெளி ஆகிய பஞ்சபூதங்களுக்கும் பொறுப்பாக உள்ளது.

[இதன் காரணமாகவே அசையாத **சிவம் (வெளி)** தனது மாயா சக்தியைக் கொண்டு, பஞ்ச பூதங்களின் மூலம் பிரபஞ்ச இயக்கத்தை மேற்கொள்கிறது என்பது தெளிவு].

ஆக, இந்த சாத்விக மற்றும் தாமஸ இயக்கங்களின் ஒவ்வொரு மாறுபாட்டுக்கும் பொறுப்பானதாக ராஜஸ இயக்கம் இருக்கின்றது. இதன் பொருள், உயிரினங்கள் தாமஸ மற்றும் சத்வ குணங்களுக்கிடையில் மாறுவது என்பது, ரஜோ குணத்தின் அடிப்படையில் என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இவையெல்லாம் சேர்ந்த ஒட்டுமொத்த சமஸ்டி இயக்கமே பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு உயிரின் வியஸ்டி எனும் தனித்த இயக்கமாக இருக்கின்றது. அதே நேரத்தில், அத்தகைய தனித்தனியான இயக்கங்களும், இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சத் இயக்கத்துக்கும் பொறுப்பானதாகவும் உள்ளது.

அதாவது, புருஷனிலிருந்து முதல் தத்துவமாக பிரக்ருதியும், இரண்டாவது தத்துவமாக **'மஹத்'** என்ற பிரபஞ்ச மனதின் விழிப்புணர்வு கொண்ட விவேக சக்தியான புத்தியும், மூன்றாவது தத்துவமாக தன்னுணர்வு நிலையாகிய **'அஹங்காரம்'** எனும் **'நான்'** என்பது, இரண்டாகப் பிரிகிறது. ஒரு பக்கம் சைதன்யமுள்ள [உயிரும், அறிவும் கொண்ட] சீவனாகி அவனுடைய மனதாகவும், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள் எனவும் ஆகிறது. இன்னொரு பக்கம் ஜடப் பிரபஞ்சத்திலே ஐந்து தன்மாத்திரைகளாகவும், ஐந்து மஹா பூதங்களாகவும் ஆகிறது.



இப்படியாக, பிரகிருதி, மஹத், புத்தி, அஹங்காரம், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், பஞ்ச தன்மாத்திரைகள், பஞ்ச மஹாபூதங்கள் என்று மொத்தம் இங்கு 24 தத்துவங்கள் இருக்கின்றன.

ஆக, இந்த 24 தத்வங்களாகப் பரிணமிப்பது, சைதன்ய புருஷனின் ஸாந்நித்தியம் என்பதினால், மனிதனிடம் இருக்கின்ற முக்குண அடிப்படையில் புலன்களின் மூலம், மனதைக் கொண்டு, மகத்தான தூய அறிவை தன்னுள் அறியும் விவேகம் என்பது, மனிதப்பிறவிக்கே உண்டான மகத்துவம் ஆகும்.

ஆக, அனைத்தையும் அறியும் அறிவாக தனி மனித மனம், ஒட்டுமொத்த ஈஸ்வர மனதுடன் இணைந்து, விழித்துக்கொண்ட விவேகத்தினால், இந்த பிரபஞ்ச விரிவுக்கு காரணமான புத்தி எனும் சக்தியும் தன்னுள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற தூய அறிவு நிலையில் எல்லாமாக இருப்பு கொண்டவன் **"நானே"** என தன் சுயசொரூபத்தை உணரும் மிக உயரிய நிலையைப் பெறுவதே மனிதப் பிறவியின் மகத்துவம் ஆகும். அந்த நிலையிலே, தூய அறிவாகிய ஆத்மாவான **புருஷன்** என்பவன் இந்த பிரக்ருதி சம்பந்தமேயில்லாத **கேவல ஞானஸ்வரூபி** என்றும் கூறப்படுகின்றது. **'கேவலம்'** என்றால் பிறவற்றின் கலப்பு இல்லாமல், தனித்து, தன்னந்தனியாக இருப்பது என்று பொருள். இதனைக் **'கைவல்யம்'** என்றும் அழைக்கலாம். அதாவது, **'கைவல்யம்'** என்றாலே, மோக்ஷம் என்றுதான் பொருள்.

சீவனானவன் (மனமானது) இருபத்து நான்கு தத்துவங்களையும் தள்ளிவிட்டு, ஜடத்திலிருந்து விடுபட்டு, சைதன்யமான புருஷனின் தனித்த நிலையில் இருப்பதே **'கைவல்யம்'** எனப்படுகின்றது.

(ஆனால், தமிழில் எப்படியோ "கேவலம்" என்றால், மட்டமானது, தாழ்வானது என்ற பொருள் வந்து விட்டது)

இப்படி புருஷன் எனும் ஆத்மாவிலேயே நிலைத்து நின்று, மற்ற எல்லாவற்றையும் **மாயை** என்று தள்ளி விடுவது மட்டும்தான் அத்வைதத்தின் ஆழமான இலக்ஷியமும் ஆகும்.

அதாவது, காரியமற்ற நிர்குணப் பிரம்மமே காரியமுள்ள ஸகுண ஈஸ்வரனாக அல்லது பிரக்ருதியாக இருந்துக்கொண்டு, தனது மாயா சக்தியால், இந்த பிரபஞ்சத்தை வழி நடத்துவது என்பது, அதனிடமிருந்து வெளிப்பட்ட **மஹத்** என்ற சர்வ வியாபகமான பிரபஞ்ச அறிவின் ஆற்றல் என்பதினால், அந்த விழிப்புற்ற புத்தி சக்தியில் விழித்துக் கொண்ட மனிதனே அறிவுப் பரிணாமத்தில் உயர் பரிமாண நிலையில், இந்த மனிதனையும் கடந்த தெய்வம் ஆகின்றான்.

**அனுவாகம் – 5.2**

**புத்தியே வேள்வியைச் செய்கிறது:**

விஜ்ஞானம் யஜ்ஞம் தனுதே । கர்மாணி தனுதே அபி ச ।
விஜ்ஞானம் தேவாஸ் ஸர்வே । ப்ரஹ்ம ஜ்யேஷ்ட்ட முபாஸதே ।
விஜ்ஞானம் ப்ரஹ்ம சேத்வேத । தஸ்மாச்சேன்ன ப்ரமாத்யதி ।
சரீரே பாப்மனோ ஹித்வா । ஸர்வான் காமான் ஸமச்னுத இதி ।
தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா । ய: பூர்வஸ்யா ॥ 5.2 ॥

பொருள்:

புத்தியே வேள்வியைச் செய்கிறது. எல்லா செயல்களையும் செய்வதற்கும் அடிப்படையாக உள்ளது. இந்த புத்தியும் மிக நுண்ணிய வடிவம் கொண்டது. எல்லா தேவர்களும், இந்த தூய அறிவாகிய புத்தியை ஆதி பரம்பொருளாகப் போற்றுகின்றனர். புத்தி தெய்வீகமானது என்றுணர்ந்து, அதற்கு ஏற்ப செயல்களில் ஈடுபட்டால், வாழும்போதே வளமான வாழ்க்கையை வாழக்கூடிய நிலைக்கு மனிதன் உயர்கின்றான். மனிதன் புனிதன் ஆகின்றான். அதன் வாயிலாக, பாவங்களிலிருந்து விடுபட்டு, எல்லா ஆசைகளும் நிறைவேறப் பெற்றவன் எல்லையில்லாத ஏகப்பரமாகப் பிரகாசிகின்றான்.

ஏற்கனவே, வேள்வி பற்றிக் கண்டோம் (1:7). இந்த இடத்திலே புத்தியே வேள்வியைச் செய்கிறது என்பதாக இந்த மந்திரம் கூறுகிறது.

இதன் பொருள் என்ன?

நாம் இந்த பிரபஞ்சத்திலிருந்து பெற்றதையெல்லாம் பிரபஞ்சமாகிய அக்கினியில் திருப்பிக் கொடுக்கும் வண்ணம் புத்திசாலித்தனமாக வாழ்வதே உண்மையான புற வேள்வி. ஆனால் **'அப்படி வாழ்கிறேன்'** என்று சொல்வதால் மட்டும் வாழ்க்கை ஒரு வேள்வியாக ஆகி விடுவதில்லை. நமது சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசாத நிலை இருக்க வேண்டும். ஏன்? நமது வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சமும், அனைத்திலும் தன்னைக் காண்கின்ற நிலையில் நிகழ வேண்டும். ஆக, இதில் எதைச் சாதிக்க வேண்டுமானாலும், அதற்கு நம்மிடம் இருக்கின்ற ஒரே கருவி விழித்துக் கொண்ட விவேகம் எனும் புத்தி சக்தி மட்டுமே என்பதையும் நன்கு உணர வேண்டும்.

அகவே, நாம் விரும்புவதுப்போல, நமது சுய புத்தி உயர் பரிமாண அறிவு நிலையில் நன்றாகப் பிரகாசிக்க வேண்டுமானால், நம்மிடமுள்ள ச புலன்களும், மனமும், நமக்கு வசப்பட்டிருக்க வேண்டும்.

சரி! மனதை வசப்படுத்துவது எப்படி?

மனத்தை விட உயர்ந்த ஒன்றால் மட்டுமே மனதை வசப்படுத்த முடியும். '**மனத்தை விட உயர்ந்தது புத்தி**' எனவே, புத்தியுடைய துணையுடன் மனத்தை வசப்படுத்த வேண்டும். ஆனால், புத்தியைப் பொருத்தவரை சாதாரணமாக எல்லோரிலும், எல்லாவற்றையும் புரிந்துக் கொள்ளக்கூடிய செயல் நிலைக்கு உயரவில்லை. அதாவது, பெரும்பாலானவர்களின் புத்தி சக்தி இன்னும் விழிப்புறவில்லை. அதனை இத்தகைய அத்யாத்ம யோகம் எனும் கல்வியின் மூலம், விழிப்புறச் செய்வதினால், அதனைக் கொண்டு சரியான செயல்கள் செய்யப்படும்போது மட்டுமே, அத்தகைய செயல்கள் வேள்வியாகப் பரிணமிக்கும் என்றும் பார்க்க வேண்டும்.

அதாவது, ஒருவனுக்கு புத்தி விழிப்புற்ற நிலையில் மட்டுமே, அவனது சாதாரண செயல்களை வேள்வியாகச் செய்ய முடியும். அவ்வாறு, செய்யப்படுகின்ற செயல்களால் பாவ புண்ணியங்கள் அவனுக்கு சேர்வதில்லை. அத்தகையவனிடம் ஆசைகள் ஏதாவது எழுமானால், அவையும் நிறைவேறுகின்றன.

'மெய்வருத்தம் பாரார்,
பசி நோக்கார், கண் துஞ்சார்,
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்,
செவ்வி அருமையும் பாரார்,
அவமதிப்பும் கொள்ளார்,
கருமமே கண்ணாயினார்' என்ற குமரகுருபரரின் அற்புதப் பாடல் இது.

காரியத்தில் கருத்தாய் இருப்பவர்கள் தாம் மேற்கொள்ளும் ஒரு செயலை மிக சரியாகச் செய்து முடிக்கவேண்டுமானால், அவர்களைப் பொருத்தவரையில், அவர்களது உடல் துன்பத்தைக் கண்டுகொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு வருகின்ற பசியையும் பொருட்படுத்த மாட்டார்கள், அவர்கள் செய்யும் செயலிலேயே கண்ணும், கருத்துமாக இருப்பதினால், தூக்கத்தையும் விலக்குவார்கள், மற்றவர்கள் தமக்கு வருகின்ற துயரங்களையும் பொருத்துக் கொள்வார்கள். காலத்தையும் கண்டுகொள்ள மாட்டார்கள், மற்றவர்களால் தமக்கு அவமானம் நேர்ந்தாலும், அதனால் பாதிப்படைய மாட்டார்கள் அவர்களே உண்மையில் செய்யும் செயலில் கண்ணாக இருப்பார்கள் என்பது இந்தப் பாடலிம் பொருள்.

*இதையே, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தமது பகவத்கீதையில் கூறும்போது, 'மிகப்பெரிய காரியங்களை சாதிக்ககூடிய உன் கடமைகளைச் சரியாகச் செய்! அதன் பலன்களை என்னிடம் விட்டுவிடு. சும்மா, சோம்பி இருப்பதில் விருப்பம் கொள்ளாதே!'* என்கின்றார்.

உண்மையில், இன்றும் இதுப்போல பலரும் வாழ்கின்றனர். அடுத்தவருக்கு செய்யும் உதவிகளை எந்தப் பிரதிபலனோ, பாராட்டோ எதிர்பாராமல் தம் போக்கில் செய்யக்கூடிய பல மனிதர்கள் இந்தப் பாரினில் இருக்கவே செய்கின்றனர். அது அவர்களைப் பொருத்தவரை, அவர்கள் செய்கின்ற செயல்கள், எந்த விதத்திலும் தனிச் சிறப்பான செயல்கள் அல்ல. அதை அவர்கள் வேள்வியைப் போலக் கருதி வாழ்கின்றனர்.

அவர்கள் போகிற போக்கில், இந்த பிரபஞ்சத்திடமிருந்து பெற்றவைகளையெல்லாம் தமக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளாகக் கருதி, இந்த பிரபஞ்சத்திற்கு திருப்பிக்கொடுகின்ற வேள்விகளாக அவைகளைச் செய்துவிட்டு, அதன் பலன்களைப் பற்றிய எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல், எல்லாவற்றையும் **ஈஸ்வரார்ப்பணம்** செய்யக்கூடிய மிக உயரிய உத்தமர்கள் வாழுகின்ற பூமி நமது பாரத பூமி என்றே நம்மால் பார்க்கப்படுகின்றது.

இது நம்போல சாதாரண உலகியலில் வாழும் மனிதர்களால் முழுவதுமாக முடியாத நிலையாக இருந்தாலும்கூட, அத்தகைய உயரிய நிலையில் செய்யும் செயல்களை வேள்விகளாக மாற்றிக் கொள்ள நாம் முயற்சித்துக் கொண்டே இருத்தல் வேண்டும்.

இந்த நிலையில் செய்யும் செயலானது ஈஸ்வரக் காரியமாக மாறிவிடுவதால், வியஷ்டி, சமஷ்டி விக்ஞானமயங்கள் ஒன்றுதான் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லா தேவர்களும் விக்ஞானமய கோஷத்தை முக்கியமாகவும், முதன்மையாகவும் உள்ள பிரம்ம தேவனாக (ஹிரண்யகர்ப்பனாக) உபாஸனை செய்கின்றார்கள். நாமும் இவ்வாறு உபாஸனை செய்ய வேண்டும். விக்ஞானமய கோஷத்தை ஹிரண்யகர்ப்பனாக ஒருவன் தியானித்தால், அவனது சரீர சம்பந்தபட்ட பாவங்கள் எல்லாம் நீங்கப்பெற்று, அவனது எல்லா ஆசைகளையும் அடையப்பெற்று ஆனந்த நிலையில் முழு திருப்தியாக வாழ்கின்றான் என இந்த ரிக் மந்திரம் முடிவடைகின்றது.

பொதுவாக, நாம் செய்யும் செயலில், சுயநலம் கொண்டு, எதிர்ப்பார்ப்புடன் செயல்களை செய்கின்றோமோ? நாம் அப்பொழுதெல்லாம் அந்த செயல் விளைவுகளினால், பாவம் – புண்ணியம் என்ற இருமைகளில் இருக்கின்ற காரணத்தினால், அன்னமய கோஷத்திற்கு வந்து விடுகின்றோம் என்றே பொருள். இதைத்தான் உடல் அபிமானம் என்கின்றது சாஸ்திரம். எனவே, இத்தகைய சரீர சம்பந்தத்தில் இருக்கும்போது, பாவங்கள் செய்யவும் நேரிடுகின்றது. இதையே சரீர சம்பந்தபட்ட பாவங்கள் என்று இங்கே குறிப்பிடப்படுகின்றது.

ஆகவே, செய்கின்ற செயல்களை ஈஸ்வரக் காரியமாக செய்துவிட்டு, அதை அந்த ஈஸ்வரனுக்கே அர்ப்பணம் செய்யும்போது, இவ்வுலகில் வாழுகின்ற வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும் அடைகின்றான். அவன் இறந்தபிறகு ஹிரண்யகர்ப்பனின் ஒரு அங்கமாகவே ஆகிவிடுகின்றான். அவன் மீண்டும் சம்சாரியாக பிறக்க மாட்டான். இந்த விக்ஞானமய கோஷத்திற்கு **சரீர ஆத்மா** என்றும் ஒரு பெயர் உண்டு.

**அனுவாகம் – 5.3**

**ஆனந்த உடம்பு:**

தஸ்மாத்வா ஏதஸ்மாத் விஜ்ஞானமயாத் ।
அன்யோ அந்தர ஆத்மா ஆனந்தமய: । தேனைஷ பூர்ண: ।
ஸ வா ஏவ புருஷவித ஏவ । தஸ்ய புருஷவிததாம் ।
அன்வயம் புருஷவித: । தஸ்ய ப்ரியமேவ சிர: ।
மோதோ தக்ஷிண: பக்ஷ: । ப்ரமோத உத்தர: பக்ஷ: । ஆனந்த ஆத்மா ।
ப்ரஹ்ம புச்சம் பிரதிஷ்ட்டா । ததப்யேஷ ச்லோகோ பவதி ॥ 5.3 ॥

பொருள்:

புத்தியால் ஆன உடம்பைத் தவிர மற்றோர் உடம்பும் உள்ளது. இது ஆனந்தத்தால் ஆனது. புத்தி–உடம்பு இதனால் நிறைக்கப்பட்டுள்ளது. இது மிக நுண்ணிய வடிவம் கொண்டது. இன்பம் இதன் தலை. மகிழ்ச்சி வலது பக்கம். சந்தோஷம் இதன் இடது பக்கம். ஆனந்தம் இதன் உடம்பாக உள்ளது. ஆத்மா இதன் கீழ்ப்பகுதியான ஆதாரமாக உள்ளது.

ஸ்தூல, சூட்சும சரீரங்களுக்குக் காரணமாக இருப்பது காரணச் சரீரம். காரண சரீரத்தில், ஸ்தூல – சூட்சும சரீரங்கள் விதைபோல் மாற்றத்துக்கு முந்தைய நிலையில் இருக்கின்றன. உங்களுடைய தகுதிகள், சாதனைகள், நிறைவேற்றிய செயல்கள் எல்லாம் பீஜ வடிவில் காரண சரீரத்தில் சாத்தியமாக இருக்கின்றன.

ஸ்தூல சூட்சும தேகங்கள் உண்டாவதற்குக் காரணமாக (மூலமாக) இருக்கும் அந்தச் சுழுப்தி நிலையில் அகங்காரம் (அபிமான வடிவ மனம்) மிக நுண்ணிய நிலையில் வாசனைகளாக ஜீவித்திருப்பதால், அதற்குக் **காரண சரீரம்** என்று பெயர். மரணத்திலும் நாம் இருப்பது இந்தக் காரண சரீரத்தோடுதான். ஆகவே இந்தக் காரண சரீரம், ஸ்தூல உடலின் மரணத்தினால் அழிந்துப் போவதில்லை. இந்தக் காரண சரீரமும் நாமல்லவென்பதற்குக் காரணம் என்னவென்றால், அந்த நிலையையும் அறிபவனாக அங்கு நாம் இருந்ததே ஆகும்.

அதாவது, அங்கிருந்த நம் இருப்பு மட்டுமே சத்தியமாகுமன்றி, அங்கு எதுவாக இருந்தோமோ, (இருள் மயமாக ஒன்றுமறியாத அஞ்ஞான மயமாக) அந்த வடிவம் நாமாக மாட்டோம். இந்த நனவில் நாம் ஸ்தூல உடல் வடிவமாகத் தோன்றினாலும் '**உடம்பு நாமல்ல**' என்று தீர்மானித்து விலக்கியது போலவே, கனவிலும் சூட்சும சரீரத்தையும் நாமல்லவென்று விலக்கியதுப் போலவே, தூக்கத்தின் நமது (அஞ்ஞான – இருள் நிலையையும்) காரண சரீரத்தையும் நமக்கு வந்துபோகும் வடிவமேயன்றி நாமல்லவென்று விலக்கி விடுவோம். ஆகையால் இம் மூன்று சரீரங்களும் நானல்ல, நானல்லவென்று அறிவால் திடமாக விலக்கி வைத்துவிட்ட பின்னர் எது மிஞ்சுகிறதோ? அந்த நம் இருப்புணர்வே – (ஸத்–சித்தே) – அறிவே நான்.

பொதுவாக, நாம் உறங்கும்போது, உடலுக்கும், மனதுக்கும் இருப்பு இல்லாதபோது, நாம் சார்ந்திருப்பது, நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்வது அல்லது தொடர்பு படுத்திக் கொள்வது என எல்லாமே இந்த **ஆனந்தமய கோஷம்** எனும் காரண சரீரத்துடனேயே ஆகும்.

இத்தகைய ஆனந்தமய கோஷத்தில், ஆழ்ந்த உறக்கத்தில் இந்த பரு உடலாகிய ஸ்தூல சரீரத்தால் படைக்கப்படும், அனுபவிக்கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. அதாவது, விழிப்பு நிலையில், நனவுலகின் எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப்படுவதில்லை.

அதுப்போன்று, மனம் என்ற சூக்ஷ்ம சரீரத்தால், உறக்க நிலையில், படைக்கப்படும், அனுபவிக்கப்படும் கனவு எனும் நிலையிலும், உண்மையான நம் சொரூபத்தை நாம் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. அதாவது, கனவுலகின் எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப்படுவதில்லை. அதாவது, அங்கு **'நான்'** தோன்றுவதில்லை.

பொதுவாக**, நான்** என்று குறிப்பிடும் சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளது.

1. சாஸ்திரம் கொடுக்கும் சரியான அர்த்தம்.
2. நாம் புரிந்து வைத்துக் கொண்டிருப்பது.

இதிலே, சாஸ்திரம் இந்த '**நான்**' என்ற சொல்லுக்கு "**ஆத்மா**" என்று பொருள் சொல்கிறது. இந்த ஆத்மாவானது **ஸத்யம், ஞானம், அனந்தம்** என்ற குணங்களைக் கொண்டது என்று ஏற்கனவே பார்த்தோம். ஆகவே, நாம் ஆத்மா எனும் நிலையில் எப்பொழுதும் மனநிறைவுடனும், திருப்தியுடனும், முழுமையான நிறைவுடனும் இருக்க முடியும் என்று சாஸ்திரம் உரைக்கிறது.

ஆனால், நாம் புரிந்து வைத்துக் கொண்டிருப்பது, இந்த பரு உடலை நாம் என அபிமானம் செய்துக் கொள்வது. பொதுவாக, நாம் எல்லாரும் ஏதாவது ஒரு கோஷத்தில் அதிக அபிமானம் வைத்துக் கொண்டிருப்போம். இன்னும் சிலருக்கு அன்னமய கோஷம் மட்டுமின்றி மற்ற எல்லாக் கோஷங்களின் மீதும் அதிக அபிமானம் இருக்கும். ஆகவே, இந்த நான் எனும் அபிமானம் நமக்கு எந்த கோஷத்தின்மீது அதிகமாக இருக்கின்றது என்பதை சிந்தித்துப் பார்த்து, விசாரத்தினால் கண்டு பிடிக்க வேண்டும்.

இதற்கு இரண்டு வழிகள் உண்டு.

a. நம் மனம் எதைக்குறித்து அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

b. எனக்கு வருகின்ற சுக–துக்கங்கள் எங்கிருந்து வருகின்றது என்பதையும் ஆராய்ந்துப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, உடலைச் சார்ந்து வருகின்றதா? மனதைச் சார்ந்து வருகின்றதா? அல்லது பிராணன் மூலமாக வருகின்றதா? (அடிக்கடி ஏதாவது உணவை உண்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆர்வம்) மேலும், அறிவு சம்பந்தமாக வருகின்றதா? (இது எதையாவது கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்) என்று இவைகளை எப்படி வெளிப்படுகின்றது என்பதை ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். இதை தெரிந்துக் கொண்ட பின்னர் அதிலிருந்து அவசியம் விடுபட முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக, நம்முடைய உடல் அபிமானம் அதிகமாக இந்த பௌதீக உடலாகிய கண்களுக்குத் தெரிகிற ஸ்தூல சரீரம் எனும் அன்னமய கோசம் மீதுதான் அதிகம் இருக்கும்.

இந்த உடம்பு உணவினால் கட்டப்பட்ட வீடு.

அதாவது, தோல், மாமிசம், இரத்தம், எலும்பு ஆகியவற்றின் ஒட்டு மொத்த தொகுப்பு இது! இந்த கண்களுக்குத் தெரிகின்ற ஸ்தூல சரீரம் என்பது பூதவுடலைக் குறிக்கும். '**ஸ்தூல**' என்றால் அறியக் கூடியது என்று அர்த்தம். '**சரீரம்**' என்றால் தொடர்ந்து அழிந்து கொண்டிருப்பது என்று அர்த்தம்.

அதாவது, தொடர்ந்து அழிந்துக் கொண்டிருக்கும் இந்த பரு உடலாகிய ஸ்தூல சரீரத்தை நம்மால் '**அறியக்கூடிய அழிவு**' என்று பொருள் கொள்ளலாம்.

ஆக, இந்த பூதவுடல் முற்றிலும் அழியும்போது, அதற்கு மரணம் ஏற்படுகிறது.

பூமியில் விதைக்கப்படும் விதைபோல, இந்தப் பூத உடலின் விதை, தாயின் கருவறையிலேயே விதைக்கப் படுகிறது. எப்படி மிகச் சிறிய விதையில் ஒரு மிகப் பெரிய ஆலமரம் ஒடுங்கி இருக்கிறதோ, அவ்வாறு, மிகச் சிறிய விந்தணுவில் மனிதனின் மிகப்பெரிய ஸ்தூல உடல் அடங்கியிருக்கிறது.

எவ்வாறு, இளஞ் செடியானது, சிறிது, சிறிதாக வளர்ந்து மரமாகிப் பூத்து, காய்த்து, கனிகளைத் தந்துவிட்டு, அந்தப் பழத்தில் உள்ள விதைகள் மூலம் மீண்டும் தன் மூலத்திற்கு திரும்பி, அதனால், மீண்டும் தன் சந்ததியை வளர்த்துக் கொள்கிறதோ? அதுப்போல, மனிதனும், விந்தணுவின் மூலம் உண்டான இந்த ஸ்தூல சரீரத்தைக் கொண்டு, தன் மூலமான விந்தணுவில் இருந்தே, தன்னுடைய சந்ததியை வளர்த்துக் கொள்கிறான்.

மேலும், தாவரங்களிலே ஒரு பிரமாண்டமான ஆலமரம் ஒரு நாள் தன் ஸ்தூல உடலை உதறிவிட்டு, இந்த மண்ணுடன், மண்ணாக மீண்டும் மக்கிப்போய், தனக்கு கொடுக்கப்பட்ட பஞ்சபூதங்களில் மீண்டும் கலந்து விடுகிறதோ?, அவ்வாறே, மனிதனும் தனது ஸ்தூல உடலை ஒரு நாள் உதறிவிட்டு, இந்த மண்ணுடன் மண்ணாக மக்கி, பஞ்சபூதங்களில் மீண்டும் கலந்து விடுகிறான்.

அதாவது, அவைகள் இயற்கை எய்துகின்றன. மனிதனும் இயற்கையை அடைகிறான்.

இதிலே, மரத்துக்கும், மனிதனுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், ஒரு மரத்துக்கு 'நான்' என்ற தன்னுணர்வு இன்னும் உண்டாகவில்லை. அது அறிவுப் பரிமாணத்தில் படிப்படியாக மனிதனின் ஆறாவது அறிவுப் பரிமாணத்தில் நுழையுபோது மட்டும்தான், அது, "நான் இருக்கிறேன்" என்ற தன்னுணர்வை அறியமுடியும். அதுவரை அதற்கு தான் இருப்பதை அறிந்துக் கொள்ள முடியாது.

ஆனால், மனிதனிடம் தோன்றும் அந்த '**நான்**' என்ற தன்னுணர்வு அவனது தனித்த உடலின் அபிமானம் காரணமாக **"நான் இருக்கிறேன்", "நான் செய்கின்றேன்"** என்ற, ஏற்றி

வைத்துக் கொண்ட எண்ணங்களின் அடிப்படையில் உண்டான புத்தி சக்தியின் மூலம், அஹங்காரமாக மாறி, அவனது அடுத்த பிறவிக்கான உடலுக்கு வித்திடுகின்றன.

எனவே, இந்த ஸ்தூல சரீரம் என்பது, எல்லையற்ற இந்த இயற்கை அம்சங்களான பஞ்சபூதங்களில் இருந்து தோன்றியதுதான் எனும்போது, எவராலும் அல்லது எதனாலும் அதை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஆனால், அவைகளை மாற்றத்திற்கு மட்டுமே உட்படுத்த முடியும். அதாவது, ஒரு ஆற்றல், வேறு ஒரு ஆற்றலாக மாறுகின்றது. அவ்வாறு, தோன்றி, மறையும் ஆற்றல்களாக இந்த உடல்கள் வந்து போவதால், இதை **'மித்யா'** என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது, **'மித்யா'** என்றால், இல்லாத ஒன்று, இருப்பதின்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்று பொருள்.

ஆக, உண்மையில் இந்த பரு உடலுக்கு என்று எந்தவித, தனித்துவமான மனம், குணம், திடம் என்று எதுவுமே கிடையாது. அதுப்போன்று, அந்த உடலுக்கு என அறிவும் கிடையாது. ஆனால், அவைகள் எல்லாம், அந்த அறிவின் வெளிப்பாடு என்பதை அறியாமல், பலரும் இந்த உடலையே **"நான்"** என்று அறியாமையால் அபிமானித்துக் கொண்டு, அதன்மீது பற்று வைத்துக் கொள்கின்றனர்.

ஆக, அவர்களுக்கு இந்த **"நான்"** என்ற தனித்துவமான உடல்மீது அபிமானம் கொண்ட அடையாளம் இருக்கும்வரை, அவர்கள் தங்கள் உண்மை சொரூபமாகிய அறிவை (ஆத்மா) அல்லது உணர்வை உணர முடியாமல் போகின்றது.

எனவே, எப்பொழுது, இந்த **"நான், நான்"** என்ற உணர்வு இந்த உடலுக்கு ஆதாரமான உயிரிடம் இருந்துதான் உண்டாகிறது என்பதை, தன்னுடைய பகுத்தறியக்கூடிய புத்தி சக்தியைப் பயன்படுத்தி, எவரொருவர் எளிதாகக் கண்டு கொள்கிறாரோ?, அவரே, 'என் செயலாவது எதுவுமில்லை, எல்லாம் அவன் செயலே!' என்றும் அப்படியே, 'உள்ளது உள்ளபடி' ஏற்றுக் கொள்கிறார்கள்.

இதைப் புரியாத பலரும் பலவிதமான பயிற்சிகளை பயின்றுக் கொண்டு, இந்த உடலை வளர்த்துக்கொள்ள பலரையும் நாடி இங்கும், அங்கும் அலைந்து, திரிந்துக் கொண்டுள்ளனர்.

ஆனால், அவர்கள் இந்த உடல் வளர வேண்டுமானால், அதற்கு அதாரமான உயிர் இருந்தாக வேண்டும் என்ற உண்மையை உணராமல், அதாவது, உயிரை வளர்க்கும்

உபாயம் தெரியாமல் உள்ளனர். இதைத்தான் அறியாமை என்று சாஸ்திரம் அறிவுறுத்துகிறது.

நாம் உறங்கும்போது என்ன நிகழ்கின்றது?

இதுவரை நாம் விழித்துக் கொண்டிருந்த இந்த விழிப்பு நிலையில், இந்த ஸ்தூல சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதையாக ஒடுங்கி, வெளிப்படாமல் அவ்யக்தமாக ஆகிவிடுகின்றது.

அதுப்போன்றே, சூக்ஷ்ம சரீரமாகிய மனம் என்பது, தனது கற்பனை சிறகை விரித்த கனவு நிலையில், அதுவரை நாம் கண்ட கனவுகள் மூலம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதைப்போன்று அவ்யக்தமாக ஒடுங்குகின்றன. இவ்வாறு ஒடுங்கும் இடமே இந்த காரண சரீரம் ஆகும்.

ஆக, இந்த விழிப்பு, மற்றும் கனவு நிலை அனுபவங்கள் யாவும், ஆழ்ந்த உறக்க நிலையில் தோன்றாமல் இருக்கின்றன. ஸ்தூல தேகத்துக்கும், சூக்ஷ்ம தேகத்துக்கும் இருக்கும் எல்லா உணர்வுகளும் ஒடுங்கிய நிலையைத்தான் **ஆழ்ந்த உறக்க நிலை** என்கின்றோம். அதாவது, மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய எல்லாமே விதை வடிவில், பீஜமாக ஒடுங்கிய நிலை **ஆழ்ந்த உறக்கம்** ஆகும்.

பொதுவாக, நாம் உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வரும்போது, நாம் காரண சரீரத்தை விடுத்து, ஸ்தூல சரீரத்தை அபிமானிக்கின்றோம். உடனே, அதுவரை விதைகளாக ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், செடிகள், மரங்கள் என்பதுப் போன்று, வளர்ந்து விரிவடைகின்றன. அதாவது, அவயக்த நிலையிலிருந்து வ்யக்தமாகின்றன.

நாம் சாதாரணமாக உறங்கும் உறக்கத்திலிருந்து கனவு நிலையை அடையும் போது, காரண சரீரத்தை விடுத்து, சூக்ஷ்ம சரீரத்தை அபிமானிக்கின்றோம். அப்போதும், அதுவரை விதைகளாக நம்மில் ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், அங்கே கனவுகளாக வளர்ந்து விரிவடைகின்றன.

இதனாலேயே, உறக்கத்திலிருந்து விழித்தவுடன், உறங்குவதற்கு முன் நின்ற நினைவுகள் யாவும், மீண்டும் விட்ட இடத்திலிருந்தே தொடர்கின்றன. பல நேரங்களில், கனவு அனுபவங்கள் விழித்த பின்னும், நினைவில் இருக்கின்றன.

நாம், எப்பொழுதெல்லாம், காரண சரீரத்துடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றோமோ? அப்பொழுதெல்லாம், எவ்வித அனுபவமுமின்றி, ஏதுமறியாத நிலையில் (ஆழ்ந்த உறக்கத்தில்

இருப்பதுப்போல) இருக்கின்றோம். இந்த நிலை அறியாமை நிலை அல்லது **அவித்யை நிலை** எனப்படும்.

பொதுவாக, எண்ணங்களினால் உண்டாகின்ற மனோ விகாரங்கள் காலம் மற்றும் இடத்தை ஆதாரமாகக் கொண்டே உண்டாகின்றது. ஆழ்ந்த உறக்கத்தில், நாம் காலம், இடம் ஆகியனவற்றை உணராமலேயே இருக்கின்றோம்.

காரண சரீரம், இடம், காலம் ஆகியவைகளை அறியாத நிலையில் (அறியாமையில்) நம்மோடு சம்பந்தப்படுகின்றது. அதனால், காரண சரீரம், மாறுதல் அடையாததாக உள்ளது. பொதுவாக, நாம் உறங்கும்போது, ஆனந்தமாக உறங்கிக் கொண்டு இருக்கின்றோம் என்று உணர்வதில்லையே தவிர, விழித்தவுடன், நாம் அதுவரை ஆனந்தமாக உறங்கினோம் என்று உணரவே செய்கிறோம்.

சரி, நாம் உறங்கும்போது ஆனந்தமாக இருந்தோம். அதாவது, எப்போதெல்லாம், ஸ்தூல, சூக்ஷும சரீரங்களை விடுத்து, காரண சரீரத்தை மட்டும் அபிமானிக்கின்றோமோ? அப்போதெல்லாம் ஆனந்தமாக இருக்கின்றோம். உறங்கும்போது ஸ்தூல சரீரமும், சூக்ஷும சரீரமும், செயல்படாது ஓய்ந்து விடுகின்றன. உடனே நாம் ஆனந்த மயமாகின்றோம்.

உறக்கத்தில் எல்லா இந்திரியங்களும் ஒடுங்கி விடுகின்றன. புத்தியின் விருத்தியும் ஒடுங்கி விடுகின்றது. நாம் ஏதுமறியாமல் முழு அறியாமையில் இருக்கின்றோம். ஆக, உறக்கத்தில் காரண சரீரத்தை முழு அறியாமையில் அபிமானித்து இருக்கிறோம் என்று பொருள்.

உறக்கம் என்பது ஆனந்தம் தருவது என்பதினால், அதுவே, உண்மையான ஆனந்தம் என தவறாகப் பொருள் புரிந்துக் கொள்ளக்கூடாது. நம், நித்திய அனுபவங்களில், உறக்கம் ஒன்றே, ஆனந்தத்திற்கு வெகு அருகாமையில் அனுபவமாகின்றது. பொதுவாக, நாம் உறங்கும்போது வருகின்ற ஆனந்தம் என்பது, எதன் ஆதாரத்தில் விளைகின்றது என்று தெரிந்துக் கொண்டால், அதை மீண்டும், மீண்டும் அடையலாமே, முடிந்தால் அதிலேயே நிரந்தரமாக, லயித்திருக்கலாமே என்றுகூட சிலருக்கு தோன்றுகின்றது. அந்த வகையிலே, நாம் இந்த விழிப்பு நிலையில் இருக்கும் போதுகூட, சில நேரங்களில் இந்த ஆனந்தமய கோஷமாகிய காரண சரீரத்தை அபிமானிக்கின்றோம்.

அதை சாஸ்திரம் **பிரியம், மோதம், பிரமோதம்** என்ற அடைப்படையில், இன்பம், மகிழ்ச்சி, ஆனந்தம் என இந்த காரண சரீரமாகிய ஆனந்தமய கோஷ உடம்பின் மூன்று அங்கங்களாக சுட்டிக் காட்டுகின்றன.

இன்பம் **(ப்ரியம்):** நமக்கு விருப்பத்திற்குரிய பொருளையோ அல்லது ஒரு நபரையோ பார்ப்பதால் வரும் ஒரு இன்பம்.

மகிழ்ச்சி **(மோதம்):** நமக்கு விருப்பத்துக்குரியதை அடைவதால் வரும் ஒரு மகிழ்ச்சி.

சந்தோஷம் **(ப்ரமோதம்):** நமக்கு விருப்பத்துக்குரியதை நேரடியாக அனுபவித்துப் பெறும் உச்சக்கட்ட சந்தோசம் ஆகும்.

ஆனந்தம் என்ற நடுப்பகுதியைக் கொண்ட ஆனந்த உடம்பு மூன்று விதமான ஆனந்தங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

உதாரணமாக, நமக்கு ஒரு கார் வாங்க வேண்டும் என்ற ஒரு ஆசை வருகின்றது என்றால், அந்தக் காரை வாங்க வேண்டும் என்ற எண்ணமே நமக்கு இரு இன்பகரமான மன நிலைக்கு நம்மைக் கொண்டு செல்கின்றது. இதனை **'பிரியம்'** என்று சாஸ்திரம் அழைக்கின்றது. இது இன்பத்தைக் கொடுக்கின்றது.

அந்த இன்பகரமான சூழ்நிலையில், நாம் ஒரு கார் ஷோரூம் சென்று பல மாடல்கள் கார்களை எல்லாம் பார்த்துவிட்டு, நமக்கான ஒரு நல்ல காரை மட்டும் தேர்ந்தெடுத்து, இதைத்தான் வாங்கப்போகின்றோம் என்றவுடன் நமக்கு வருவது, அந்த இன்பத்தையும் கடந்த ஒரு மகிழ்ச்சி நிலை. அதைத்தான் சாஸ்திரம் **'மோதம்'** என்கின்றது.

அடுத்து, அந்த காருக்கான ரொக்கப் பணத்தைக் கட்டிவிட்டு, அந்த காரை டெலிவரி எடுக்கும் அந்த குறிப்பிட்ட நாளில், அந்தக் காரை ஷோரூமில் இருந்து எடுத்துக் கொண்டு, அதை ஒட்டிக் கொண்டு வருகின்ற ஒரு சந்தோஷம் இருக்கின்றது அல்லவா? அது, பிரியம், மற்றும் மோதம் என்ற இரு நிலைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு உயரிய சந்தோஷம் எனும் நிலையாகிய **'பிரமோதம்'** என்பதாக சாஸ்திரம் சுட்டிக் காட்டுகின்றது.

முன் சொல்லப்பட்ட விக்ஞானமயத்திலிருந்து வேறாகவும், அன்னமய கோஷத்தின் உள்ளேயும் உள்ள ஆத்மாவே ஆனந்தமயன் எனப்படுகின்றது. இதை **போக்த்ரு ஆத்மா** என்றும் அழைக்கலாம். அதாவது, ஆனந்தத்தை அனுபவிக்கின்ற ஆத்மா என்கின்றோம். இதன் மூலமாகத்தான் நாம் ஆனந்தம் என்ற ஒன்றை அனுபவமாக்குகின்றோம்.

இந்த ஆனந்தமய கோஷத்திற்கு வியஷ்டி, சமஷ்டி எல்லாம் கிடையாது. காரணம் இதுவே, ஈஸ்வரன் என்பதினால், இதற்குள்ளேயே எல்லாம் அடங்கியுள்ளன என்பதினால், இதைப் பிரிக்க முடியாது. ஆகவே, இந்த ஆனந்தமய கோஷத்திற்கான உபாஸனை என்று தனியாக எதுவும் கிடையாது.

ஆனந்தமய கோஷம் காரண சரீரத்தை சார்ந்தது. காரண நிலையில் வேற்றுமைகள் கிடையாது. அதனால் ஐக்கியமும், உபாஸனையும் கிடையாது. இதுவரைப் பார்த்த மற்ற கோஷங்களை எல்லாம் நீக்கித்தான் அடுத்த கோஷத்தை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், இங்கு அதுப்போல செய்யவில்லை. காரணம், இந்த கோஷத்தை நீக்காமல், அப்படியே அதை வைத்துக்கொண்டு, ஆத்மா அறிமுகப்படுத்துகின்றது. அந்த ஆத்ம தத்துவத்தை தன்னுள் உணர்ந்தவுடன் தானாகவே இந்த கோஷத்திலிருந்து வெளியே வந்து விடுவோம்.

எந்த சரீரத்தைப் பற்றி அவ்வளவு எளிதாக விளக்க முடியாதோ..!, எதற்கு ஆரம்பம் இல்லையோ?, எதில் அறியாமையும், அறிவும் ஒன்றாக குடி கொண்டிருக்கிறதோ, எது ஸ்தூலம் மற்றும் சூக்குமம் என்ற இரண்டு சரீரங்களுக்கும் காரணமாக உள்ளதோ? எது தனது உண்மைத் தன்மையைப்பற்றி அறியாமல் இருக்கிறதோ, அத்துடன் எது மாறுபடாத உருவில், அப்படியே இருக்கிறதோ – அதுதான் **"காரண சரீரம்"** எனப்படுகிறது.

அதாவது, ஸ்தூல, சூக்கும சரீரங்களுக்குக் காரணமாக இருப்பது, **'காரணச் சரீரம்'** எனப்படுகிறது. அந்த காரண சரீரத்தில், ஸ்தூல – சூக்கும சரீரங்கள் விதைப்போன்று மாற்றத்துக்கு முந்தைய மூல நிலையில் இருக்கின்றன.

ஆக, ஒவ்வொரு மனிதனின் தகுதிகள், சாதனைகள், நிறைவேற்றிய செயல்கள் எல்லாம் விதை (பீஜ வடிவில் அந்த காரண சரீரத்தில் சாத்தியமாகக் காத்துக் கொண்டிருக்கின்றன. இந்த காரண சரீரம் மாற்றமடையாமல், அப்படியே இருப்பதற்குக் காரணம், இது கால, தேசங்களுக்கு அப்பாற்பட்டது. அதனால், அதை எல்லோராலும் எளிதாக விளங்கிக் கொள்ள முடியாது. அத்துடன், அதை அவ்வளவு எளிதாக விளக்கவும் முடியாது என்பதினால், அதை **"அனிர்வசனீயம்"** என்று சாஸ்திரம் கூறுகிறது.

அதாவது, அனிர்வசனீயம் என்றால், **'விளக்க முழயாதது'** என்று பொருள். ஏனென்றால், அது மாற்றங்களற்ற நிலையில் **"நிர்விகல்ப ரூபமாக"** உள்ளது.

நிர்விகல்பம் என்றால், விகல்பமற்ற நிலை எனலாம். நிர்விகல்பம் என்றால், கால, தேசங்கள் அற்றது என்று பொருள். பொதுவாக, ஸ்தூல, சூக்கும உடல்கள் பஞ்சபூதங்களால் ஆனதால், ஸ்தூல சரீரம் என்பது ஸ்தூல பஞ்சபூதங்களால் உண்டாகி, நம் கண்களுக்குப் புலப்படுகிறது. அவ்வாறே, கண்களுக்குப் புலப்படாத சூக்கும சரீரம் என்ற 'மனம்' சூக்கும பஞ்ச பூதங்களால் உண்டானது.

ஆகவே, ஆழ்ந்த உறக்கத்தில் இந்த ஸ்தூல உடல் மற்றும் சூக்கும மனம் ஆகிய இரண்டும் உதித்த இடமாகிய காரண உடலில் சென்று மீண்டும் ஒடுங்குகிறது. அவ்வாறு அவைகள் தன்னை அறிய முடியாமல் ஒடுங்கிய அந்த காரணச் சரீரத்துக்கென்று ஒரு

உருவமும் உண்மையில் இல்லை. எனவே, அதைப்பற்றி விளக்கவோ, விவரிக்கவோ முடியாது என்கிறது சாஸ்திரம். ஆக, உண்மையில் காரண சரீரம் என்பது அந்தராத்மாவின் கொள்கலன் ஆகும்.

அதாவது, அந்த காரண சரீரத்தை **"ஈஸ்வா சித்தம்"** என்று கூறலாம். அந்த ஈஸ்வர சித்தத்தின் வெளிப்பாடாக உண்டான சூக்கும பிரபஞ்சமனம் தன் சூக்கும எண்ணங்களை பல்வேறு ஸ்தூல உடல்களாக வெளிப்படுத்திக் கொண்டபோது, விளைந்த தன்முனைப்பு (EgO) அல்லது அஹங்காரம் என்பது, அறிவுக் குறைவான மற்ற உயிரினங்களிடம் தனித்துவமாக மாறாமல், அந்த ஈஸ்வர சித்தத்தின் ஒத்திசைவுடன் ஒவ்வொரு உடல்களிலும் செயலாற்றுகின்றன.

ஆனால், இதிலே, மனிதன் மட்டுமே, தனக்கு கிடைத்துள்ள மகத்தான ஆறாவது அறிவாகிய பிரத்யேக பகுத்தறிவினால், தன்னுடைய அறிவுக்கு ஆதாரமான அந்த ஈஸ்வர சித்தம் வெளிப்பட்டு இருப்பதை தகர்த்து, தானே வெளிப்படுத்துகின்ற தன்முனைப்பு (EgO) அல்லது அஹங்காரம் என்பதாகக் கருதிக்கொண்டு, தனித்துவமான தன்னுடைய செயல்களாக எல்லாவற்றையும் **"நான் செய்தேன்', "அது என்னுடையது"** என்பது போன்ற அஹங்கார, மமகாரத்தில் சிக்கிக்கொண்டு, தன்னை தனித்த உடலாகக் கருதிக் கொள்கிறான்.

அதாவது, ஒரு அறிவு தாவரத்தில் இருந்து, ஆறறிவு படைத்த பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதனின் தனித்தன்மை அறிவு மேம்பட்டு விரிவுபடும் பொழுது, அவனது பிரக்ஞை என்ற உள்ளுணர்வு தனக்கென்று ஒரு தனித்துவமான அடையாளத்தை வெளிப்படுத்தி, தன்முனைப்பு அஹங்காரமாக மாறி, அதன் காரணமாக இவன் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ண விருத்திகளின் விளை நிலமாக இந்த காரணசரீரம் இருப்பதினால், இவனது செயல் விளைவுகளின் ஒட்டு மொத்த சேமிப்புக் கலனான காரண சரீரமே **"சஞ்சித கர்மா"** என்றும் அழைக்கப்படுகிறது.

அதாவது, மனிதனிடம் உள்ள மூன்று கர்மாக்களில் பிராரப்தம், ஆகாமியம் மற்றும் சஞ்சிதம் என்பதில், அவனது பல்வேறு பிறவிகளின் ஒட்டுமொத்த எண்ணத் தொகுப்பாகிய காரண சரீரமே **'சஞ்சிதம்'** என்றும், தற்போதைய இந்த உடலின் வாயிலாக அவனை அறியாமலேயே அவனுக்கு அனுபவமாகும் அனைத்து செயல் விளைவுகளும் **'பிராரப்தம்'** என்றும், இதே உடலில் இவனது அறிவுக்கு உட்பட்டு, தற்போது இவனால் புதியதாக உண்டாக்கிக் கொள்கிற செயல் விளைவுகள **'ஆகாமியம்'** என்றும் கூறப்படுகிறது.

ஆக, இதுப்போன்று ஒரு அறிவு புல், பூண்டு என தொடங்கி தற்போதைய ஆறறிவு மனித உடல் கிடைத்துள்ள பல்வேறு பிறப்புகளின் அனுபவங்கள் எல்லாம் ஒன்று

சேர்க்கப்பட்டு, அந்த பரு உடலில் மனம் என்ற ஒன்றாக மாறி, அதில் தேங்கி நின்ற சித்தப் பதிவுகள் அவனது அடுத்த பிறப்புக்கு, காரணியாக அமைகிறது. அதுவே சஞ்சிதம் என்ற **'காரண தேகம்'** ஆகும். அதாவது, மனிதனின் பரிணாம வளர்ச்சி இச்சரீரத்தில் பிரதிபலிக்கின்றது.

இதனால், ஏனைய சரீரங்களான ஸ்தூல, சூக்கும சரீரங்கள் ஒவ்வொன்றாக அழிந்த பின்னரும், இந்த காரண சரீரம் மட்டும் பிறவிகள் தோறும் அப்படியே நிலைத்து நிற்கிறது. ஒவ்வொரு பிறப்பிலும், இவனால் ஏற்றி வைத்துக்கொண்ட ஏராளமான எண்ணங்களால் இவனது மனம் பெறும் அனுபவங்கள், அந்த காரண சரீரத்தை மேலும், மேலும் விருத்தி அடையச் செய்கிறது. அந்த காரண சரீரத்தை சாஸ்திரம் பஞ்சகோசங்களில் ஒன்றான **"ஆனந்தமய கோஷம்"** என்று கூறுகிறது.

**ஆனந்தமய கோஷம்** என்பதும், **காரண சரீரம்** என்பதும், **சஞ்சித கர்மா** என்பதும், **ஈஸ்வர சித்தம்** என்பதும், இவைகளெல்லாம் ஒன்றே! என்றும் பார்த்ததில், இங்கு ஆனந்தம் என்றாலே **ஈஸ்வரன்** அல்லது இறைவன் என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. சத்தும், சித்தும் அனுபவமாகும் நிலையே **ஆனந்தம்** என்பதினால், அந்த ஆனந்தத்தைப் பற்றிய விசாரம் மேற்கொள்ளும்போது,

a. ஆனந்தம் – பிரஹ்ம ஸ்வரூபம், ஆத்ம ஸ்வரூபம் என்ற அறிவை அடைவோம்.
b. ஈஸ்வர சித்தம் என்பதினால், நம் தனித்துவத்தை இழக்கின்ற பற்றற்ற நிலை எனும் வைராக்கியத்தின் முக்கியதுவத்தை, மேன்மையை அறிய முடியும்.
c. அடுத்து, ஜீவ – ஈஸ்வர ஐக்கியத்தை உணரலாம். இதுவே, ஆனந்தமய கோஷத்தைப் பற்றிய புரிதல் ஆகும்.

**ஆனந்தம் பிரஹ்ம ஸ்வரூபம்:**

அக்னி உஷ்ண ஸ்வரூபம் என்ற வாக்கியத்தின் பொருள் அது உஷ்ணமாக இருப்பதற்கு எதையும் சார்ந்திருக்க வேண்டியதில்லை. அதுப்போல, ஆத்மா ஆனந்தமாக இருப்பதற்கு எதையும் சார்ந்திருக்க தேவையில்ல. நானே ஆத்மாவாக இருப்பதால், நான் யாரையும் சார்ந்திருக்க தேவையில்லை என்ற புரிதல் வரவேண்டும்.

நாம் எதற்காக இந்த விசாரம் செய்ய வேண்டுமென்றால், நம் அனுபவத்தில் ஆனந்தம் வெளியே உள்ள பொருட்களிலிருந்து வருவதாக உணர்ந்திருக்கின்றோம். அதனால், அந்தப் பொருட்களைச் சார்ந்திருக்கின்றேன். நான் சுபாவமாக ஆனந்தமாக

இருக்கின்றேன் என்று உணரவில்லை. இதை உணர்த்துவதற்குத்தான் இந்த விசாரம் தேவைப்படுகின்றது.

**ஆனந்தம் எனும் சுபாவத்தை நிரூபித்தல்:**

நாம் ஆனந்தத்தை ஏற்றத்தாழ்வுகளுடன் அனுபவிக்கின்றோம். இந்த ஏற்றத் தாழ்விற்கு காரணம் எது? என்று விசாரிக்கும்போது, நம் மனம் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான விஷயங்கள்தான் இதை உருவாக்குகின்றது என்று புரிந்துக் கொள்ளலாம்.

சுகத்தின் ஏற்றத்தாழ்வு விஷயத்தின் நிமித்த காரணமா? அல்லது உபாதான காரணமா? பொருளின் காரணமா? அல்லது பொருளின் நிமித்தம் சுகம் உண்டாகின்றதா? என்று விசாரித்தால், சிலர் பொருளே காரணம் என்பார்கள். உதாரணமாக கார் வாங்கியதின் வாயிலாக ஆனந்தம் வந்தது என்று எடுத்துக் கொண்டால், அந்தப் பொருள் எல்லோருக்கும் ஒரே அளவுள்ள சுகத்தை கொடுக்க வேண்டும். ஆனால், அனுபவத்தில் அப்படி இல்லை. அந்த காரை எடுத்துக் கொண்டு பாதையில் ஓட்டிச் சென்ற எனது நண்பர் வழிப்போக்கர் ஒருவர்மீது இடித்து அவரைக் காயப்படுத்தி விட்டார். இதன்காரணமாக, அவர் காவல் நிலையம் சென்று வந்தார் என்றால், அவரைப் பொருத்தவரை எப்படி? அந்த பொருளின் நிமித்தம் சுகம் மட்டுமே வரும்?

ஆகவே, நம்முடைய மனம்தான் உபாதியான இந்த பொருட்களின் தார, தம்மியமான சுகத்திற்கு காரணமாக இருக்கின்றது. அதுவே, நம் மனதில் அமைதி அதிகரிக்கும்போது, சுகமானது அதிகரிக்கிறது. மனம் சூட்சுமத்தன்மை அதிகரிக்கும்போது இன்பமும் அதிகரிக்கின்றது.

எப்பொழுது மனம் அமைதியடையும், சூட்சுமமாகும்?

இதற்கென்ன வழி என்று கேட்டால், அதற்கு உபநிஷத் இரண்டு உபாயங்கள் கூறுகின்றது.

அவைகள் **புத்தி, வைராக்யம்.**

மனதின் பரிணாமம் புத்தி சக்தியாக பிரகாசித்து, தன்னைப் பற்றிய விவேகம் வளர வளர மனம் சூட்சுமாகின்றது. மனம் அமைதியும் அடைகின்றது. அதற்கேற்றவாறு சுகத்தின் அளவும் அதிகரிக்கின்றது. மனம் சூட்சுமமாகும்போது, மிக மிக நுண்ணிய விஷயங்களை

கிரகிக்கின்றது. இது மனம் அடையும் புத்தி கூர்மையினால் நிகழ்கின்றது. அந்த நிலையிலே மனம் தன் தனித்துவ அடையாளங்களை இழக்கின்றது. எல்லாம் ஈஸ்வர சித்தம் என்பதினால், அமைதியை அடைகின்றது.

அதன் வாயிலாக, மனதின் பலவிதமான விசய, சுகங்களின் பற்றை விட்டு, விழித்துக் கொண்ட விவேகத்தினால், அந்த மனதிற்கு வைராக்கியம் வருகின்றது. அதாவது, வைராக்கியம் என்பது பற்றற்ற நிலை என்பதினால், மனம் அமைதியடைகின்றது.

ஆக, இந்த ஆனந்தம் எங்கிருந்து வருகின்றது?

உண்மையில், ஆனந்தத்தின் பிறப்பிடம் நம் மனம் கிடையாது. அதாவது, ஆனந்தம் மனதிலிருந்து தான் வருகின்றது என்று சொன்னால் அது தவறு. காரணம், மனம் என்றுமே சுகத்தினை உற்பத்தி செய்வது கிடையாது. அதே சமயம் அந்த மனம் சுகத்தை அடைய விரும்புகின்றது என்று சொல்லலாம்.

காரணம், ஆனந்தம் என்பது மனதின் பிறப்பிடம் கிடையாது. மனம் ஆழ்ந்த உறக்கத்தில் ஒடுங்கி செயல்படாமல் இருக்கும்போது, அங்கும் ஆனந்தம் உள்ளதே? அதை ஆழ்ந்த உறக்கத்தில் அடைகின்றோமே? ஆகவே, மனம் ஆனந்தத்தின் உற்பத்தி ஸ்தானமல்ல என்பதினால், ஆனந்தத்தின் பிறப்பிடம் மற்றும் இருப்பிடம் ஈஸ்வரன் என்பது நிரூபணமாகின்றது.

இவ்வாறு, நம் அறியாமைகள் எல்லாவற்றையும் நீக்கிக் கொண்டு வந்தால், இறுதியாக எது எஞ்சி இருக்கின்றதோ? **அதுவே ஆத்மா**. அத்தகைய, ஆத்மாவின் தன்மையை மனமானது பிரதிபிம்பிக்கின்ற நிலையில் மனத்தூய்மையில் ஆனந்தம் அனுபவமாகின்றது. அதுவே, கலங்கிய மனது ஆத்மாவை சரியாகப் பிரதிபிம்பிக்க முடியாத காரணத்தினால், ஆனந்தம் அனுபவம் ஆவதில்லை.

உதாரணமாக, நிலைக்கண்ணாடி அதன் எதிரே இருக்கின்ற பொருளை பிரதி பிம்பிக்கும் தன்மையுடையது. அதுவே, தூசிபடிந்த கண்ணாடியில் பிரதி பிம்பம் தெளிவாகத் தெரியாது. அதே கண்ணாடியை தூசிகளை எல்லாம் நீக்கி, சுத்தப்படுத்திப் பார்க்கும்போது, அதில் பிரதிபிம்பிக்கின்ற பிம்பங்கள் தெளிவாகத் தெரியும்.

ஆகவே, இதிலிருந்து நாம் அறிய வேண்டிய ஆழமான உண்மை என்னவெனில், மனதின் தூய்மைத்தன்மை மட்டுமே ஆத்மாவை அனுபவமாகக் காட்டிக் கொடுக்கும்.

அதாவது, எண்ணங்களின் எழுச்சி இல்லாமல், மனம் அதன் நுண்ணிய சூட்சும தன்மைக்கு போகும்போது, அதில் பிரதிபலிக்கும் ஆத்மாவின் அதிர்ஷ்டானத்தில், ஆனந்தமும் அதிகரிக்கும். ஆக, ஆத்மா ஆனந்த ஸ்வரூபமாக இருப்பதால், மனமானது அதை பிரதி பிம்பிக்கும்போது, அதே மனதில் ஆனந்தம் ஏற்படுகின்றது. ஆகவே, உண்மையில் ஆத்மா மட்டும்தான் **ஆனந்த ஸ்வரூபம்** என்பது தெளிவாகத் தெரிகின்றது.

**வைராக்கியத்தின் பெருமை:–**
**––––––––––––––––––––––––**

மனதில் அனுபவிக்கும், ஆனந்தத்தின் ஏற்றத்தாழ்வுகள் என்பது, நம்மிடமுள்ள மனதின் பற்றற்ற தன்மையைக் கொண்ட வைராக்கியத்தின் அளவை பொறுத்து இருக்கின்றது. மனதின் அனாவசியமான ஆசைகள் குறையக் குறைய ஆனந்தம் அதிகரிக்கின்றது.

அதாவது, காமத்தியாகம் இரண்டு விதத்தில் ஏற்படுகின்றது.

1. காரண சரீரத்தை ஈஸ்வர சித்தம் என்று உணரும்போது, நம்மிடமுள்ள ஆசா, பாசங்களை எல்லாம் நீக்கிவிட்டு, ஈஸ்வர சரணாகதியில், அனைத்தையும் ஈஸ்வரக் காரியமாகவே காணும்போது, மனம் அடைந்த பக்குவத்தினால், அதனிடமுள்ள அஹங்கார, மமகார நிலைகள் நீங்கி, எல்லாம் ஈஸ்வர செயல் என்று மாறுவதால், மனமடையும் பற்றற்ற தன்மையில் உண்மையான வைராக்கியம் உண்டாகின்றது.

2. அடுத்து, மனம் விரும்பிய பொருளை அடையும்போது, அதிலுள்ள உண்மைத் தன்மையை ஆராயும்போது, அதன் நுண்ணிய நிலையில் அணு என்பதாகப் பார்த்தால், அதன்மீதுள்ள ஆர்வம் குறையும். அதாவது, அனைத்தும் அணுவில் அணுவாய் இருக்கின்ற ஆதிபிரானின் அற்புதம் என்பதும் புரியும். ஆகவே, அவைகள் வாயிலாக வருகின்ற சுக, துக்கங்கள் என்பது, மனதின் ஆசைகள் அடிப்படையில் நிகழ்கின்றது எனும் நிலையில், அதன்மீது பற்றற்ற நிலை உண்டாகி, வைராக்கியம் உண்டாகின்றது.

அந்த வைராக்கியத்தினல் இரண்டுவிதமான பலன்களை அடையலாம்.

1. இந்த பற்றற்ற நிலையில், ஆசைகள் இல்லாமல் போவதினால், லௌகீக வாழ்க்கையிலே அதிக ஆனந்தத்தை அனுபவிக்கலாம். அதாவது, ஆத்மாவின் பிரதி பிம்ப ஆனந்தத்தை அனுபவிக்கலாம். இதனால், மனம் அமைதியடையும்.

2. அவ்வாறு, பொருட்களின் எதார்த்தத்தை உணர்ந்துக் கொண்ட பற்றற்ற நிலையில், வைராக்கியத்தின் அளவு அதிகரிக்கும்போது, மோட்சத்தை அடைவதற்கான தகுதியை மனம் பெறுகின்றது.

**பிரம்மானந்தம்:**

**———————————**

நானே என்னுடைய சுய ஸ்வரூப சுபாவமாக பிரம்மனாகவே இருக்கின்றேன் என்ற நிலையை அடையும்போது, உண்டாகின்ற ஆனந்தத்தை அனுபவிக்க, நாம் நமக்கு வேறாக வேறு எதையும் சார்ந்திருக்கத் தேவையில்லை. ஏனென்றால், ஆத்மாவில் ஸ்வரூபமே ஆனந்தமாக இருக்கின்றது. தன்னிடத்திலேயே திருப்தியுடன் இருப்பவன்தான் நிலையான ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான். இந்த பிரம்மானந்தத்தை அடைவதற்கு மனதின் பற்றற்ற நிலையாகிய வைராக்கியம் என்பது, மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது.

**அன்னமய கோஷம்**

முகத்துக்கான ஒப்பனை, உடலுக்கான அலங்காரம், அடிக்கடி புதிய ஆடைகள் அணிவதில் ஆர்வம். அத்துடன் தனது உடலுக்கு வருகின்ற உபாதைகள் மற்றும் கஷ்ட–நஷ்டங்களால் வருத்தத்தை அடைவது. அத்துடன் இந்த உடலின் தோற்றத்தில் உண்டாகும் வயதானதைக் கொண்டு வருத்தம் அடைதல். உடல் நோயினாலும், சாலை விபத்தினாலும் உண்டாகும் உடலின் மாற்றத்தினால் வருந்துவது.

**பிராணமய கோஷம்**

உணவு உட்கொள்வதில் யாருக்கு அதிக ஆர்வம் இருக்கின்றதோ? அவர்கள் இந்த பிராணமய கோஷத்தில் இருப்பவர்கள். இவர்கள் உண்ணா நோன்பு போன்ற விரதங்களை மேற்கொண்டு, அடிக்கடி கண்டதை உண்ணுகின்ற உணவு அபிமானத்தை நீக்க வேண்டும். அத்துடன் ஏதாவது வேலை செய்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற மனநிலையை உடையவர்களும் இந்த கோஷத்தின்தான் இருக்கின்றார்கள்.

<u>**மனோமய கோஷம்**</u>

மற்றவர்கள் என்னை நேசிக்க வேண்டும், அன்பாக நடத்த வேண்டும், தான் அன்பு செலுத்துவதற்கு எனக்கு யாராவது இருக்க வேண்டும் என்று எப்போதும் எதிப்பார்ப்பவர்கள் இந்த மனோமய கோஷத்தில் இருப்பவர்கள்.

<u>**விக்ஞானமய கோஷம்**</u>

மனம் மிகவும் நுண்ணியதாக சிந்திக்கும். எப்போதும் புத்தி கூர்மையுடன் செயலாற்றுவது. இந்த நிலையில் தன்னுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு பெருமிதம் அடைவது. அதன் சிறப்பை அறியாமல், இவர்களை யாராவது திட்டினாலோ, அவர்களது அறிவில் குறைகள் கண்டாலோ? அதன் வாயிலாக வருத்தைமடைபவர்கள் இதில் இருப்பவர்கள்.

<u>**ஆனந்தமய கோஷம்**</u>

இந்த கோஷம் நமது பூர்வ சம்ஸ்காரங்களை உள்ளடக்கியது. அந்த நிலையிலே, இது நமது உறக்கத்தின் போது சில கனவுகளைக் கொண்டு வரும். நல்ல ஆழ்ந்த உறக்கத்தில் மனம் நன்கு ஒடுங்கி, நன்றாகத் தூங்க வைக்கும். அதனால்தான் ஆனந்தமாக தூங்கினேன் என்று நம்மால் மறுநாள் கூறமுடிகின்றது. இந்த கோஷம் எப்போதும் நான் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டதாக இருப்பதினால்தான், இந்தப் பிறவி மாத்திரமல்ல, இந்தப் பிறவியில் அனுபவிக்க முடியாத ஆசைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு, இன்னும் ஒரு பிறவிக்கான உடலை எடுக்கக் காரணமாக இருக்கின்ற கோஷம் இது.

**அனுவாகம் – 6.1**

**உடம்புகளின் தலைவன்: ஆத்மா:**

அஸன்னேவ ஸ பவதி । அஸத் ப்ரஹ்மேதி வேத சேத் ।
அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத । ஸந்தமேனம் ததோ விதுரிதி ।
தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா । ய: பூர்வஸ்ய ॥ 6.1 ॥

பொருள்:

ஆத்மா இல்லை என்று சாதிப்பவன் எதுவும் இல்லாதவனாக ஆகிறான். ஆத்மா இருக்கிறது என்று அறிபவன் எல்லாம் உள்ளவனாக ஆகிறான். இத்தகையவன் சான்றோனாகக் கருதப்படுகிறான். ஆத்மா அந்த ஆனந்தமயமான உடம்பின் ஆதாரமாக இருக்கிறது.

ஐந்து உடம்புகளின் தலைவனாக இருக்கிறது ஆத்மா. அதாவது, ஆத்மா இந்த ஐந்து உடம்புகளையும் கருவியாகக் கொண்டுள்ளது. இந்த ஆத்மாவே நாம். இந்த ஆத்மா மட்டுமே இறையம்சம் கொண்டது. இது ஒரு உணர்வுப் பொருள். இது இருப்பதால்தான் ஐந்து உடம்புகளும் இயங்குகின்றன. உணர்வுடையவைப் போல் தோன்றுகின்றன.

ஆத்மா இல்லை என்று கூறும்போது, நம்மையே மறுத்தவர்கள் ஆகிறோம். அதனால்தான், அப்படி மறுப்பவன் **'எதுவும் இல்லாதவனாக ஆகிறான்'** என்று மந்திரம் கூறுகிறது. அதுப்போல, உடம்பு, மனம் போன்றவற்றை நாம் என்று கருதாமல், ஆத்மாவை மட்டுமே, நாம் என்று அறியும்போது நாம் அனைத்தையும் பெற்றவர்கள் ஆகிறோம்.

**மனிதன்: ஐந்து உடம்புகள் ஒரு கண்ணோட்டம்:**

மனிதன் என்று சொல்லும்போது அவனது ஆளுமையைக் (PERSONALITY) குறிப்பிடுகிறோம். ஆளுமை என்பதை இந்த உபநிஷதம் ஐந்து அடுக்குகள் கொண்ட ஒரு தொகுதியாகக் காண்கிறது. அவைகள்: அன்னமய ஆத்மா (தூல–உடம்பு), பிராணமய ஆத்மா (பிராண–உடம்பு), மனோமய ஆத்மா (மன–உடம்பு), விஜ்ஞானமய ஆத்மா (புத்தி–உடம்பு), ஆனந்தமய ஆத்மா (ஆனந்த–உடம்பு).

இந்த உடம்புகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு உணர்வு நிலையில் உள்ளவைகள் என்பதினால், பரிணாமத்தின் பல்வேறு படிகள் இவைகளாகும். ஆக, அறியாமைக் குழந்தைகளிலும், காட்டுவாசிகளிலும் முதல் இரண்டு உடம்புகளாகிய அன்னமயம் மற்றும் பிராணமயம் ஆகிய இவைகள் மட்டுமே முற்றிலுமாகச் செயல் நிலையில் உள்ளன.

அடுத்து, ஏற்றி வைத்துக்கொண்ட எண்ணங்களின் அடிப்படையில், அவைகள் சரியானவற்றைக் கற்றுக் கொள்வது அல்லது மனம்போனபடி கண்டதைக் கற்றுக் கொள்வது என்பதின் வாயிலாகவும் மனிதன் நாகரீகமும், அனுபவமும் அடைவதைக் கொண்டு, அவனது மனோ உடல் வளர்ச்சியுறுகின்றது. அதிலே, நல்லவற்றைக் கற்றவர்களின் மனம் இன்னும் ஒருபடி உயர்ந்து, சற்று பக்குவம் பெற்ற நிலையில் புத்தி–உடம்பு என்பதில் படிப்படியாக விழித்தெழத் துவங்குகிறது. ஆக, இந்த மனிதர்கள்

என்பவர்கள் இப்படித்தான் வாழ்க்கையின் ஏதோ சில கணங்களில் அனுபவத்தைப் பெறுகின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது, இதிலே, ஐந்தாவதான ஆனந்த–உடம்பு எனும் காரண சரீரம் என்பதை சரியான ஞானம் அடைந்த ஞானிகள் மட்டுமே, தங்களது அநுபூதி நிலையில், அந்த உடலைக் கையாளுகின்றார்கள் என்பதையும் பார்க்க முடிகின்றது.

பொதுவாக, உயர் வாழ்வு பற்றி சிந்திக்கின்ற ஒவ்வொரு மனிதனிடமும், அதாவது, தன்னைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ள ஒவ்வொருவரிடமும் எல்லா உடம்புகளும் செயல்நிலையில் இருந்தாலும், அதில் சரியான நேரத்தில் சரியான உடம்பைக் கொண்டு, கொடுக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்வது என்பது, புத்தி விழிப்புற்ற ஒருசிலரால் மட்டுமே சாத்தியம் ஆகின்றது.

இருப்பினும் இந்த எல்லா உடம்புகளும் செயல்படுவதற்கான பிராண சக்தியை பிராண உடம்பு நிலையில் அது அளிக்கிறது. அத்துடன் அதன் வாயிலாக, சில வேளைகளில் சிந்திக்கின்றோம், கற்பனை செகிறோம். அப்போது மன–உடம்பு நிலையில் வாழ்கிறோம். சில வேளைகளில் உள்ளது உள்ளபடி காண்கிறோம். அதாவது உலகம் என்பதன் உண்மை, இறைவனை நாட வேண்டுவதன் அவசியம் போன்றவைகள் நம்மில் எழுகின்றன. இது புத்தி–உடம்பின் செயல்பாடு. அனைத்தையும் மறந்து சில நேரங்களில் நாம் ஆனந்தத்தில் திளைப்பதுண்டு. அது ஆனந்த–உடம்பின் செயல்நிலை. நமது மனப்பக்குவத்தின் உயர்வுக்கு ஏற்ப நாம் இந்த உணர்வு நிலைகளில் வாழ்வதும் அதிகரிக்கிறது.

இந்த ஒவ்வோர் உடம்பும் தூல–உடம்பைப் போலவே உள்ளது. ஒவ்வொன்றின் உள்ளே அடுத்த உடம்பு உள்ளது. தூல–உடம்பின் உள்ளே பிராண–உடம்பு தூல–உடம்பை நிறைத்தபடி உள்ளது. பிராண–உடம்பை நிறைத்தபடி மன–உடம்பு உள்ளது. மன–உடம்பை நிறைத்தபடி புத்தி உடம்பு. புத்தி–உடம்பை நிறைத்தபடி ஆனந்த–உடம்பு. ஒன்றிற்குள் ஒன்று என்பதை அப்படியே புரிந்துக் கொள்ளக் கூடாது.

ஒவ்வொன்றும் தனித்தனியானவை அல்ல, ஒன்றையொன்று சார்ந்தது, ஒன்றை விட அடுத்தது நுண்ணியது என்பதே இதன் பொருள். ஆக, இந்த ஐந்து உணர்வு நிலைகளையும் கடந்து ஆத்மா உள்ளது.

ஒருவன் பிரம்மத்தை இல்லையென்று கருதினால் அவன் இல்லாதவன் போல் ஆகின்றான். இவன் சம்சாரத்தை அனுபவித்துக்கொண்டு பிரம்மத்தை அறியாமல் எப்பொழுதும் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான். பிரம்மம் இருக்கின்றதென்று ஒருவன் கருதினால், அவனை ஸத் புருஷனாகவும், மேலோனாகவும், புருஷார்தத்தை அடைந்தவனாகவும் ரிஷிகள் கருதுகின்றார்கள். இவ்வாறு ரிக் மந்திரம் சொல்லுகிறது.

முன் சொன்ன விக்ஞானமயத்திற்கு எந்தவொன்று உள்ளேயுள்ள ஆத்மாவாக இருக்கின்றானோ? அவனே இந்த ஆனந்தமயன்.

**அனுவாகம் – 6.2**

**யார் கடவுளை அடைவார்கள்?:**

அறிந்தவற்றிலிருந்து அறியாதவற்றுக்கு நம்மை அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது இந்த உபநிஷதம். உடம்பு, மனம் என்று தொடங்கி படிப்படியாக ஆத்மா வரை கூறப்பட்டது. அடுத்ததாக கடவுளைப் பற்றி வருகிறது.

அதாதோஅனு ப்ரச்னா: । உதா வித்வானமும் லோகம் ப்ரேத்ய ।
தச்சன கச்சதீ । ஆஹோ வித்வானமும் லோகம் ப்ரேத்ய ।
கச்சித் ஸமச்னுதா ॥ 6.2 ॥

பொருள்:

இப்பொழுது கீழ்வரும் கேள்விகள் எழுகின்றன. உயிர்நீத்தபிறகு பாமரன் கடவுளை அடைகிறானா? அல்லது ஆத்மாவை உணர்ந்தவன் அடைகிறானா? இறைவன் என்ற தலைப்பினுள் நுழைவதற்கு ஓர் அறிமுகமாக அமைகின்றன இந்தக் கேள்விகள்.

தவத்தால் தோன்றிய உலகம் இறைவன் உலகைப் படைத்தார்.

எப்படி? தவத்தினால்.

இந்த உலகம் அற்புதமானது, மேன்மையானது. மேன்மையான, அற்புதமான ஒன்று வேண்டுமென்றால் அதற்கு வழி தவம் என்பதை இந்த மந்திரம் கூறுகிறது. இவ்விதம் உபதேசம் செய்ததற்கு பிறகும் சந்தேகம் இருப்பதனால் அதை ஒட்டிய கேள்விகள் எழுகின்றன.

**அவைகள்**

1. பிரம்மன் இருக்கின்றதா அல்லது இல்லையா?
2. ஞானி பிரம்மத்தை அடைகின்றானா, இல்லையா?
3. அக்ஞானி பிரம்மத்தை அடைகின்றானா இல்லையா?

ஞானியும், அக்ஞானியும் இருக்கும்போதும், இறந்தப்பிறகும் பிரம்ம ஸ்வரூபமாகவே இருக்கின்றார்கள். எனவே, இந்த கேள்விகளும் தவறு.

இவர்கள் அடைவதற்கு தேவையே இல்லை. ஆத்ம ஞானத்தை அடைந்தவன் ஆத்மாகவே இருந்துக்கொண்டு ஆனந்தமாக இருக்கின்றான். ஆத்ம ஞானத்தை அடையாதவன் அறியாமையில் இருந்துக்கொண்டு கர்ம பலன்களான சுக–துக்கங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். ஞானியானவன் பஞ்ச கோஷத்தை கடந்து பிரம்மத்தை அறிகின்றான். அக்ஞானியானவன் பஞ்ச கோஷத்திலேயே அபிமானம் கொண்டு, அறியாமையில் பிரம்மத்தை அறிவதில்லை.

**அனுவாகம் – 6.3**

ஸோஅகாமயத | பஹு ஸ்யாம் ப்ரஜாயேயதி |
ஸ தபோ அதப்யத | ஸ தபஸ் தப்த்வா | இதம் ஸர்வ மஸ்ருஜத | யதிதம் கிஞ்ச |
தத் ஸ்ருஷ்ட்வா | ததேவானு ப்ராசாவிசத் | ததனு ப்ரவிச்ய |
ஸச்சத்யச் சாபவத் | நிருக்தம் சாநிருக்தம் ச | நிலயனம் சாநிலயனம் ச |
விஜ்ஞானம் சாவிஜ்ஞானம் ச | ஸத்யம் சான்ருதம் ச ஸத்யம பவத் |
யதிதம் கிஞ்ச | தத் ஸத்ய மித்யா சக்ஷதே | ததப்யேஷ ச்லோகோ பவதி || 6.3 ||

பொருள்:

**'நான் பிறப்பேனாக! நான் பலவாக ஆவேனாக!'** என்று இறைவன் விரும்பினார். அதற்காக தவத்தில் ஈடுபட்டார். தவம் செய்து இந்த அனைத்தையும் படைத்தார். படைத்த பிறகு படைப்பினுள் அவரே ஆற்றலாக நிறைந்தார். வெளிப்பட்டவை––வெளிப்படாதவை, விளக்கப்பட்டவை–விளக்கப்படாதவை, இருப்பிடம் உடையவை–இருப்பிடம் இல்லாதவை, அறிவு–அறியாமை, உண்மை–உண்மையற்றவை என்று அனைத்துமாக அவரே ஆனார். அதனால், அவர் அனைத்திற்கும் அடிப்படை என்று அறியப்படுகிறார். அதுப்பற்றி இந்த ஸ்லோகம் கூறுகின்றது.

(பரமபுருஷனை ஆகுதியாக வைத்து தேவர்கள் இந்திரனின் தலைமையில் யக்ஞம் செய்ததாக புருஷ சூக்தம் கூறுகிறது. அந்த யாகத்திலிருந்து விராட் புருஷன் வெளிவந்து பிரபஞ்சம் முழுதையும் படைத்ததாகவும் அந்த வர்ணனைகள் கூறுகின்றன.

இன்னும் அதற்கும் முன்னால் என்ன நடந்தது? பரமாத்மா என்று சொல்லப்படும் அது மட்டுமே இருந்தது. அது ஒரு அறுதி உணர்வு நிலையாக இருந்தது. அது தனிமையில் இருந்தது. அதைத் தவிர உணர்வுள்ள எதுவும் அங்கு அப்போது படைக்கப்படவே இல்லை!

அந்த ஆத்மா தன் தனிமையால், தன் தனிமை போக வேண்டும் என்று விழைந்தது. தான் விரிய வேண்டும் என்று சிந்தித்தது. அதற்காக பன்னெடுங்காலம் தவம் செய்தது. அதன் தவ வலிமை அதிகமாக, அதிகமாக அது அப்படியே அறிவால் விரியத் தொடங்கியது. அதன்காரணமாக, வெளி உண்டானது. வெளியிலிருந்து காற்று உண்டானது. நெருப்பு உண்டானது. நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டானது. இப்படிப் பஞ்ச பூதங்களைப் படைத்த பரமாத்மா அதன் பின்னால் அந்தப் பஞ்சபூத சேர்க்கையை வைத்து உயிர்களைப் படைக்க ஆரம்பித்தது. அதன் தனிமை தொலைந்துப் போக, தன்னால் படைக்கப்பட்ட அனைத்திலும் நிறைந்து நின்றது)

அனுவாகம் – 7.1

**எதுவும் இல்லை:**

அஸத்வா இதமக்ர ஆஸீத் I ததோ வை ஸதஜாயத I
ததாத்மானம் ஸ்வயமகுருத I தஸ்மாத் தத் ஸுக்ருத முச்யத இதி II 7.1 II

பொருள்:

ஆரம்பத்தில் எதுவும் இல்லை. பிறகு தோற்றம் உண்டாகியது. இறைவன் தம்மைத்தாமே தோற்றுவித்தார். அதனால் '**தானே தோன்றியவர்**' என்று கூறப்படுகிறார். படைப்பு என்பது சுழற்சியாக (CYCLE) நடைபெறுவதாக வேதங்கள் கூறுகின்றன. அதாவது திடீரென எதுவும் தோன்றவில்லை.

படைப்பும், ஒடுக்கமும் தொடர்ந்து மாறிமாறி வந்து கொண்டிருக்கின்றன. எவ்வாறு நம் வாழ்வில் விழிப்பு நிலையும், தூக்கமும் தொடர்ந்து மாறி மாறி வருகின்றனவோ? அவ்வாறு படைப்பும், ஒடுக்கமும் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் உள்ளன. எனவே, ஆரம்பம் என்றால், ஒரு சுழற்சியின் ஆரம்பம் என்று பொருள். 'ஆரம்பம் என்பதற்கு யுகத்தின் ஆரம்பம் என்றுதான் பொருள். பிரபஞ்சம் முழுவதும் ஆரம்பம் என்பதாக, அதற்கு ஒருபோதும் பொருள்

இல்லை. படைப்பிற்கு ஓர் ஆரம்பம் இருப்பது இயலாத காரியம்,' என்கின்றனர் ஞானிகள். '**ஆரம்பத்தில் எதுவும் இல்லை**' என்றால், அனைத்தும் ஒடுக்க நிலையில் இருந்தன என்பது அதன் பொருள்.

இறைவன் இந்த உலகத்தைப் படைத்தானா?

பொதுவாக எல்லா மதமும் என்ன கூறுகிறது என்று பார்த்தால், இறைவன்தான் எல்லாவற்றையும் படைத்தான் என்று கூறுகின்றது. ஆனால், அவைகள் கூறுவதற்கும் நம்முடைய சனாதன தர்மம் கூறுவதற்கும் உள்ள வித்தியாசத்தை சரியாகப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இறைவன் இந்த உலகைப் படைக்கிறான் என்றால், எதை மூலமாகக் கொண்டு படைக்கிறான்? எதற்காக நம்மை படைக்கிறான்? அதன் நோக்கம் என்ன? இதற்கு நம் சனாதன தர்மம் என்ன விளக்கம் தருகிறது என்று பார்போம்.

இறைவன் என்பவன் என்றும் அறிவாக இருப்புக் கொண்ட ஆனந்த மயமானவன் ஆவான். அவன் இந்த அண்ட சராசரங்கள் மற்றும் ஜீவராசிகளை படைத்ததன் நோக்கமே அவன் ஆனந்தமாய் இருப்பதற்கே ஆகும். அவன் தனித்து இருக்க விரும்பவில்லை அதன் விளைவே இந்த உலகம் மற்றும் உயிரினங்கள் உண்டாக்கப்பட்டன.

எவ்வாறு கடற்கரையில் விளையாடும் குழந்தை ஆனந்தமாக மணலில் அழகான ஒரு வீடு கட்டும். அந்த வீட்டைக் கட்டி விளையாடி முடித்து வீடு திரும்பும்பொழுது, அது கட்டிய அந்த வீட்டை இடித்து விடும்.

எதற்காக கட்டினாய்? ஏன் இடித்தாய் என்று காரணம் கேட்டல் சும்மா விளையாட்டாக கட்டினேன் பின்பு இடித்தேன் என்று பதில் வரும்.

அதுப்போலத்தான் இறைவனின் இந்த அண்டத்தின் படைப்பும் ஆகும். ஆனால் மற்ற மதங்கள் கூறுவதுப் போல, இறைவன் உலகை படைக்க ஆறு நாட்கள் எல்லாம் எடுத்துக் கொள்ளவில்லை.

அவர் நான் பலவாக ஆவேனாக என்ற சங்கல்பம் எடுத்ததன் மூலம் தோன்றியவையே இவைகள் அனைத்தும். அதாவது, அவர் தன்னையே மூலமாக கொண்டு எல்லாவற்றையும் படைத்தார் என்கிறது சனாதன தர்மம். இந்த இடத்தில் நாம் புரிந்துக் கொள்ள வேண்டிய ஆழமான உண்மை என்னவெனில், அவன் தன்னையே மூலமாகக் கொண்டு, இவைகள் எல்லாவற்றையும் படைத்ததினால், எல்லாவற்றிலும்

அவனுடைய அம்சம் நிறைந்திருக்கிறது என்று பார்ப்பதினாலே, இறைவனே இந்த உலகமாக மாறிவிட்டாரா? என்றால், அப்படியும் இல்லை.

காரணம், இறைவன் அவ்வாறு இந்த உலகமாக மாறிவிட்டார் என்றால், அது தவறு. பால் தயிர் ஆனதும், எவ்வாறு மீண்டும் பால் ஆகாதோ? அப்படி இறைவன் இந்த உலகமாக மாறிவிட்டார் என்றால், மீண்டும் அவர் எப்படி இறைவனாக இருக்க முடியும் என்ற குழப்பம் வந்துவிடும்.

ஆகவே, இங்கு இறைவன் சங்கல்பம் செய்தார் என்றுதான் சாஸ்திரம் கூறவருகின்றது. அதாவது, அவர் பலவாறாக மாறுவேனாக என எண்ணினார். அவ்வளவுதான்.

இதிலிருந்து இறைவனின் உண்மை தன்மையை நாம் நன்கு உணர வேண்டும். அவர் நம்மைப் போன்று மனித உருவில் இல்லை. அவர் உணர்வாக இருப்புக் கொண்டுள்ளார். அந்த தூய உணர்வின் ஆற்றல் மனோ சக்தியாக வெளிப்பட்டு இந்த பிரபஞ்சம் அவரிடத்திலேயே அவரால் படைக்கப்பட்டு, அவராலேயே அனுபவிக்கப்பட்டு, அவராலேயே அழிக்கப்படுகின்றது என்பதுதான் இங்கு நாம் அறிய வேண்டிய அரிதான உண்மை.

இறைவன் தூய உணர்வு வடிவினன். தன்னையே தான் உணர்கின்ற அறிவு கொண்டவன். அவனது அத்தகைய தூய அறிவின் வெளிப்பாடே இந்த பிரபஞ்சம் என்கின்ற ஈஸ்வர மனம் (Cosmic Mind) அல்லது **ஈஸ்வர சித்தம்** அல்லது **காரண சரீரம்** என்று பார்த்தோம்.

ஆக, இறைவன் இந்த உலகத்தைப் படைக்க தனக்கு வேறாக எதையுமே வெளியில் இருந்து எடுத்து, இந்த உலகத்தை உண்டாக்கவில்லை. உண்மையில், இந்த உலகம் அவனது மனதில்தான் உண்டாக்கப்பட்டுள்ளது. துய அறிவின் வெளிப்பாட்டில் வந்த மனோ சக்தியே இறைவனின் ஆற்றல் என்பதினால், அந்த மனமே படைப்பு, இருப்பு, அழிவு என முத்தொழிலைப் புரிகின்றது. இதுவே, **ஈஸ்வர சக்தி**. இந்த சக்தி உண்மையில் மனோ சக்தி அவ்வளவே.

நம்முடைய நடைமுறை உலகியல் வாழ்க்கையில், நம் அனுபவத்தில் எப்படி ஒரு குயவன் மன்பாண்டகள் செய்ய மண்ணை மூலப் பொருளாக கொள்கிறானோ? அதைப் போல இறைவன் தன்னையே, தன் அறிவையே மூலப்பொருளாக கொண்டான்.

இதனாலேயே, இறைவனை **"ஆதிமூலம்"** என்கிறோம்.

மற்ற மதங்கள் இறைவன் மனிதனைப் படைத்ததன் நோக்கம், மற்றவர்களுக்கு அல்லது மற்ற சீவர்களுக்கு சேவை செய்வதற்காக அல்லது இறைவனை வழிபடுவதற்காக படைத்தான் என்கிறது. ஆனால் இறைவனோ இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். நாம் மற்றவைகளுக்கு சேவை செய்வதனாலோ? அல்லது அவனை வழிபடுவதினாலோ? இறைவன் மகிழப் போவதில்லை.

அவனுடைய எதிர்ப்பார்பெல்லாம், தன்னையே தான் அறியும் அற்புதமான இந்த பிரபஞ்சப் படைப்பு எனும் அவனது லீலா விணோத விளையாட்டில், படைக்கப்பட்ட பல்வேறு சீவர்களில், மிக உயரிய பரிணாம வளர்ச்சியில் உண்டாக்கப்பட்ட படைப்பாக, பகுத்தறிவுப் பரிமாணத்தில் ஆறாம் அறிவு கொண்ட மனிதன் எனும் மிகச் சிறப்பான உபாதியைக் கொண்டு, தன்னையே தான் உணர்வதிலேயே உண்மையில் இறைவன் மகிழ்கிறான். ஆக, இதை நமது சனாதன தர்மத்தின் வழியில் வந்த ஹிந்து மதமோ இறைவனின் திருவிளையாடல்கள் என்கிறது.

உதாரணமாக, பரமபதம் விளையாட்டை எடுத்து கொள்வோம் அதில் coins– ஆக இருப்பவன் மனிதன் அவன் தன் மனதை தாயமாக உருட்டி விடுகிறான் நல்ல எண்ணங்கள் மற்றும் அவன் செய்யும் தர்மங்களின் மூலமாக விரைவாக முன்னேறி இறைவனை அடைகிறான் அல்லது அவன் செய்யும் தீய வினைகளுக்கேற்ப மீண்டும் பின்னோக்கி செல்கிறான் இதுவே, அந்த இறைவனின் பரமபத விளையாட்டாகும். ஆகவே, எல்லோரும் இந்த பரமபத விளையாட்டில் கலந்துக் கொண்டுதான் இருக்கின்றோம். இந்த விளையாட்டின் இறுதி இலக்காகிய பரமனின் பதம் அடைவதில்தான் சிலருக்கு அவர்களின் மனதின் ஆசைகள் எனும் பாம்புகள் கடித்து, வெற்றி இலக்கை அடையத் தாமதம் ஏற்பட்டு, பின்னோக்கி செல்வது, பெரிய ஆசைகள் எனும் பெரிய பாம்பு கடித்து, புறப்பட்ட இடத்திற்கு திரும்ப வருவதும் என அவர்களது பயணம் தாமதம் ஆகின்றது. ஆனால், அனைவரும் ஒரு நாள் இந்த விளையாட்டில் வெற்றி பெறுவது நிச்சயம். அதாவது, நாம் அனைவரும் ஒருநாள் பரமபதத்தை அடைவது சத்தியமே.

சரி! இறைவனை ஏன் அடையவேண்டும்?

இந்த கலியுகத்தில் மனிதன் முதலில் எது நிரந்தர இன்பம் எது நிலையில்லாத இன்பம் என்று அறிய இன்னும் முயற்சிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்று அவன் எதெல்லாம் நிரந்தரம் என்று நினைக்கிறானோ? அதெல்லாம் அவன் கண் முன்னே அழிந்துப் போனாலும், மீண்டும் மீண்டும் அதையே அடைய துடிக்கிறான். அதாவது, அவனது சிறு வயதில் ஒரு பொம்மையின் மீது ஆசை வைக்கிறான். பின் வளர்ந்து பெரிய ஆளாக ஆனபிறகு அந்த பொம்மையின் மீது உள்ள ஆசை போய்விடுகிறது. இப்போது, எதிர் பாலினத்தின் மீது அவனது ஆசை போகிறது. அந்த ஆசையின் காரணமாக, திருமணம்

முடித்த பின் அவனுக்கு அந்த வாழ்க்கையும் நாளடையில் கஷ்டங்களைத் தருகின்றது. அதாவது, அவன் மட்டுமின்றி, அவனது ஆசை மனைவி, மக்கள் என எல்லோருக்கும் அவர்களது தேவைகளைக் கருத்தில் கொண்டு, கஷ்டங்களைப் பொருத்துக் கொண்டு, பொருளாதாரத்தில் ஆர்வம் காட்டுகின்றான். பணத்தை தேடி பலவாறாக அலைகிறான். அந்த பணம், உத்தியோகத்தில் பதவி என பலதும் கிட்டியவுடன் போதுமென்ற மனதுடன் நிம்மதியாக இருக்க விரும்புகின்றானா? என்றால் இல்லை. இன்னும் வேண்டும் என்ற ஆசைகளில் சிக்குகின்றான். மன நிம்மதியை இழக்கின்றான். எது நிலையானது? எது நிலையற்றது என சிந்திக்கும் நிலையில் அப்போது அவன் இல்லை. அந்த சிந்தனை வரும்போது அவனது ஆயுள் முடிந்து விடுகின்றது.

அதாவது, அவன் வந்த வழி தெரியாமலும், போய் சேர வேண்டியது எங்கு என்று புரியாமலும் இந்த புவியில் வாழ்ந்து, இந்த வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றான்.

இன்று நாம் வாழும் இந்த பூமியே உண்மையில் நிரந்தரமில்லாதது. அப்படி இருக்க இந்த பூமியில் இருக்கும் நாம் மற்றும் நாம் அடையும் அற்ப பொருட்கள் எப்படி நிரந்தரமாய் இருக்க முடியும்? அப்படி நிரந்தரமில்லாத இந்த பொருட்கள் மற்றும் ஆசைகளால் எப்படி நிரந்தரமான இன்பத்தை அடையமுடியும்?

இறைவனின் உணர்வு வெளியில் வெளிப்பட்ட அவனது மனோ சக்தியின் மகத்தான விளையாட்டில், ஒரு அம்சமாய் இருக்கின்ற நாம் அதை அறிய முடியாத அவல நிலையில், அவனிடம் இருந்து பிரிந்து வந்து, அவன் தோற்றவித்த இந்த மாய பிம்ப பிரபஞ்ச உலக மனோ விளையாட்டில் சிக்கி கொண்டு, சின்னாபின்னம் ஆகின்றோம். இந்த உலகத்தை உண்மை என்று நம்பி, அதை நிரந்தரம் என்று கருதி, நாம் மீண்டும், மீண்டும் இந்த மாய உலகையே அடைய விரும்புகிறோம்.

மரணம் வருகின்ற சாகும் தருவாயில் கூட பெரும்பாலானவர்கள் இந்த படைப்பை பற்றியும், படைப்புக்கு ஆதாரமான பரமனைப் பற்றியும் அறிந்துக் கொள்ள ஆர்வம் காட்டுவதே இல்லை. படைப்புக்கு ஆதாரமான பரமனை இந்த மனிதன் பகுத்தறிவுப் பரிமாணத்தில் உயர்ந்து வந்த பிறகும், சிந்தனா சக்தியை இழந்து, சிந்திக்கும் சக்தியற்று, அவன் உருவாக்கிய மாய தோற்றங்களே நிரந்தரம் என்று அதையே நினைத்து உயிரை விடுகின்றார்கள்.

அதுவே, மனிதனின் மறு பிறவிக்கு காரணமாய் அமைந்து விடுகிறது.

அப்படியென்றால், எது நிலையானது? எது நித்யமானது? எது அநித்யமானது? என்பதை படைக்கப்பட்ட சீவர்களிலேயே மனிதன் மட்டுமே மகத்தான பகுத்தறிவைக்

கொண்டு, விழித்துக் கொண்ட விவேகத்தினால், மனதை விசாரணை செய்து, இந்த மாய மன மயக்கத்தின் உண்மைத் தன்மையை உணர வேண்டும். அவனே மனிதப்பிறவின் மகத்துவம் உணர்ந்தவன் ஆவான்.

**இறைவனுக்கும் நமக்கும் என்ன உறவு?**

பொதுவாக இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையில் உள்ள உறவு என்பது படைத்தவன் மற்றும் படைக்கப்பட்ட உயிர் என்பதையும் தாண்டி இறைவனை தாயாகவும், தந்தையாகவும், காதலனாகவும், நண்பனாகவும், தனக்கான முதாளியாகவும் பார்க்க வைப்பது நம்முடைய சனாதன தர்மத்தின் வழியில் வந்த இந்து மதம் மட்டுமே.

இது சரியா என்றால், இது தான் சரி.

இதுதான் நமக்குண்டான சுதந்திரம்.

தூய அறிவாகிய இறைவனும் தன்னுடைய படைப்பாகிய மனிதர்களின் மனோ விகாரங்களின் எண்ணங்களுக்கு ஏற்ப எல்லாவகையிலும் ஒத்துழைக்கும் விதமாக, அவனுக்குள்ளேயே இருந்துக் கொண்டு, அவர்களின் தனிப்பட்ட ஆசைகளுக்கு இசைந்து கொடுக்கிறான் என்கிறது இந்துமதம்.

அதற்கான ஆதாரமே நமது புராணங்கள் மற்றும் இதிகாசங்கள்.

அப்படி நமக்கான ஆசைகளை அவன் நிறைவேற்றும் விதமாகத்தான் 'ததாஸ்து' அப்படியே ஆகட்டும் என்று ஆசிர்வதிக்கின்றான். ஆனால், அது நன்மையாக முடியுமா? அல்லது தீமையாக முடியுமா? என்பது அவரவர்களின் ஆசைகளைப் பொருத்து அமைகின்றது என்றாலும், இறைவன் இதில் தலையிடுவதில்லை. அவர்களுக்காம முழு சுதந்திரத்தை அளித்துள்ளான். இல்லையென்றால் இறைவன் எப்படி இருப்பன் என்றால், நமது பூமியில் ஆட்சி செய்த ஹிட்லர் போன்று தன்னிடம் இப்படிதான் பேசவேண்டும், என்னை இப்படித்தான் புகழ வேண்டும், என்னிடம் இப்படித்தான் பழகவேண்டும் என்று அகம்பாவம் பிடித்து திரியும் மனிதனுக்கும், இறைவனுக்கும் வித்யாசம் இல்லாமல் போய்விடும் இல்லையா? ஆகவே, பரமன் அந்தந்த தனித்த மனதிற்கான சுதந்திரம் கொடுத்துள்ளான் என்றும் பார்க்க வேண்டும். இதைப் பற்றியும் சிந்திக்கச் சொல்கிறது நமது சனாதன தர்மம். ஆகவே, அதன் அடிப்படையில்தான் மனிதனுக்குண்டான ஆகாமிய கர்மா என்ற ஒன்றும் உள்ளது.

"அடக்கமாய் இரு அடிமையாகிவிடாதே" என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் கூறியிருக்கிறா என்றால், நாம் படைத்த உயிர்கள் நமக்கு அடிமையாய் இருக்க வேண்டும் என்று எப்படி இறைவன் நினைப்பார்? என்று சிந்தித்தார்கள் நம் சித்தர் பெருமக்கள். அதன் விழைவே இறைவனை தாயாகவும், தந்தையாகவும், நண்பனாகவும் என பார்த்திருக்கிறார்கள்.

அவ்வாறே ஆண்டாள் இறைவனை தன் காதலனாக நினைத்து இறைவனை அடைந்தாள். திருஞான சம்பந்தருக்கு அன்னை உமா தேவியாக வந்து பாலூட்டினார். அர்ஜுனனுக்கோ நண்பனாகவும், பாரதப் போரில் ஒரு நல்ல வழிகாட்டியாகவும் இறைவன் இருந்தார். இதிலிருந்தே இறைவனைப் பற்றிய சரியான புரிதல் நம் சனாதன தர்மத்தின் வழி வந்தவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள் என்பது தெள்ளத் தெளிவாய் தெரிகிறது.

ஆனால், மற்ற மதங்களோ இறைவன் என்பவன் முதலாளி நாம் அனைவரும் அவன் படைத்த அடிமைகள் மட்டுமே என்கின்றன. அவனை நாம் பலவாறாக உறவுகள் சொல்லி அவனைடம் உறவாடும் நோக்கில் அவனை அழைக்கக் கூடாது என்கின்றது. இதுதான் பரிதாபம்.

முதலாளி அடிமை என்பதே இந்த உலகில் இருக்க கூடாது என்று கூறும் இன்றைய கம்யூனிசம் போன்ற கட்சியை உருவாக்கிய மனிதனுக்கே தனக்கான சுதந்திரம் எப்படிப் பட்டது என்று எதிப்பார்க்கும் நிலையில், இந்த படைப்புக்கு ஆதாரமான பரமனே மனிதனை அடிமைப்படுத்த விரும்புவானா?

அவன் நம்மிடம் எதிர்பார்ப்பது தூய தன்னலமில்லாத, இருமைகளற்ற பக்தி மட்டுமே. அந்த தூய பக்தியை எந்த வழியில் செலுத்தினால் என்ன? நமது தூய பக்திக்காக தன் நிலையிலிருந்து இறங்கி வராதவர் எப்படி இறைவனாக இருக்க முடியும்? என்கிறது நமது சனாதன தர்மம். ஆகவே, மனிதனைன் தெய்வமாகப் போற்றும் ஒரே மதம் நமது சனாதன தர்மத்தின் வழியில் வந்த ஹிந்து மதம் மட்டுமே.

**மறு ஜென்மம்**

இந்து மதமும் மற்றும் பௌத்த மதம் உலகில் மற்ற அந்நிய மத கொள்கைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்ட முக்கியமான கொள்கைகளில் மறு ஜென்மம் என்ற இதுவும் ஒன்று. அதாவது, மனிதனுக்கு மறுஜென்மம் உண்டு என்பதை ஏற்பது நமது பாரத தேசத்தில் தோன்றிய பண்டைய ரிஷிகள் மட்டுமே.

அதுவே, ஆப்ரஹாம் வழியில் வந்த இஸ்லாம் மதமும், கிருஸ்துவ மதமும் மறுஜென்மம் என்பது மனிதனுக்கு கிடையாது என்றும் அவன் இறந்த பிறகு ஒன்று சொர்கத்திற்கு செல்வான் அல்லது நரகத்திற்கு செல்வான் என்று மட்டுமே கூறுகின்றது. மேலும், மனிதனுக்கான பாவ மன்னிப்பு இந்த பூமியில் உள்ள மத போதகர்களால் கொடுக்கப்படுவதினாலேயே, அவர்கள் இங்கேயே செய்த பாவங்கள் மன்னிக்கப்பட்டு, மறு உலக வாழ்க்கையான சொர்க்கம் என்னும் இறைவனின் இருப்பிடம் செல்வார்கள் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஆனால், இந்து மதமோ இதை ஏற்பதில்லை. காரணம், அவரவர்கள் செயல் விளைவுகளுக்கான அனுபவத்தை அவர்கள் நிச்சயம் பெறாமல் தப்பிக்க முடியாது என்பது சனாதன தர்மத்தின் கோட்பாடு.

அதாவது, **"உப்பு தின்னா தண்ணி குடிக்கணும்! தப்பு செய்தா தண்டனை அனுபவிக்கணும்!"** என்பது நம் முன்னோர் பழமொழி. ஆக அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் என்பதை ஏற்றுக் கொள்கின்ற நமது இந்த மதம் அவைகளுக்கான அனுபவம் பெற மனிதன் மீண்டும் பிறவிகள் எடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது என்கின்றது.

இல்லையெனில், அவர்களால் ஒரு மனிதன் இறந்த பிறகு அவனுடைய மனதின் ஆசைகளுக்கு ஏற்ப அவன் செய்த கர்ம வினைகளுகேர்ப்ப வேறொரு உடலை அடைகிறது அதுவே, **மறு ஜென்மம்** என்கிறது. வேறொரு உடல் என்பது மிருகங்களுடைய அல்லது பறவைகளுடைய மற்றும் பூச்சிகளுடைய அல்லது மனித உடல் என்பனவாகும்.

**ஏன் மறுஜென்மம்?**

பிறவிகளிலே மிகவும் உயர்ந்த பிறவி மனிதப் பிறவி ஆகும். ஏனென்றால், மனிதப் பிறவியில் இருக்கும் ஒரு உயிரால் மட்டுமே பகுத்தறிவோடு, சிந்தித்து செயல் படமுடியும். எது தர்மம்? எது அதர்மம்? என பகுத்துப் பிரித்துப் பார்த்து செயல்படும் மனோபாவம் மனித பிறவிக்கு மட்டுமே உண்டு.

ஆனால், மனிதனோ இந்த அரிதான பிறவியைக் கொண்டு இறைவன் வகுத்த அர நெறியில் வாழ்கையை நடத்தாமல் தனக்கு எது சரியென்று படுகிறதோ? அதை ஏற்றுக் கொண்டு, தன் மனம்போன போக்கிலே போகின்றான். அப்படி மனிதன் மனம் போன போக்கிலே போய்விடக்கூடாது என்பதினால்தான் நம்முடைய முன்னோர்கள் தர்ம சாஸ்திரத்தை வகுத்துக் கொடுத்தனர்.

எது நித்யம்? எது அநித்யம்? என்பதை விசாரித்து, நன்மை, தீமைகளைப் பகுத்துப் புரிந்துக் கொண்டு மனிதன் வாழ வேண்டும் என்று எதிர்ப்பார்த்தனர்.

அறியாமையினால், மனிதன் அதர்ம வழியிலே சென்றுவிடுவான் என பயந்துதான் நம் முன்னோர்கள் கல்வியில் கட்டாயமாக ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தனர். அதன்வாயிலாக, மனிதன் அஹங்கார, மமகாரங்கள் விடுத்து, விவேகத்தினால் விழித்துக் கொண்ட வாழ்க்கையை வாழ வேண்டும் என்று எதிர்ப்பார்த்தனர். ஆனால், காலத்தின் கோலம் நம்மை ஆளவந்த ஆங்கிலேயர்களின் மெக்காலே கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்ட நாம் நமது தர்மத்தை மறந்தோம். அதர்மத்தில் ஆட்சி செய்ய ஆசைப்படுகின்றோம். அதன் வாயிலாக எங்கு பார்த்தாலும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கலப்படம், கஞ்சா, மது, மாது என எல்லாவற்றிலும் இன்றைய மனித சமுதாயம் தர்மத்தை மறந்து அதர்மத்தில் வாழ்வதை நம்மால் கண்கூடாகக் காண முடிகின்றது. இதன் காரணமாக, மனித இனம் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கின்ற சூழ்நிலைகளுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

அதாவது, இயற்கை சீற்றங்கள், சுனாமி, பூகம்பம் மற்றும் கொள்ளை நோய்கள் என எல்லாவற்றையும் மனிதன் எதிர்கொள்ளக் கற்றுக் கொள்கின்றான். ஆனால், அவைகளை தவிற்கக்கூடிய தர்மப்படி வாழ மட்டும் மறந்து விடுகின்றான்.

இதற்கான மிக முக்கியக் காரணம் கல்விமுறை மட்டுமே, கல்வி என்பது மனிதனுக்கு மட்டுமே. அதன் நோக்கம் மனிதன் புனிதனாக வாழ வேண்டும் என்பதே. ஆனால், அத்தகைய பாடத்திட்டங்கள் திட்டமிட்டு இன்று நீக்கப்பட்டுள்ளன. அதைத்தான் அதர்மம் என்று பார்க்கின்றோம். நம்முடைய சனாதன தர்மம் வகுத்துக் கொடுத்த அறம், பொருள், இன்பம், வீடு என்ற வழிகளில் வாழ மறுக்கின்றோம்.

இத்தகைய தவறான வாழ்க்கை முறைகள் நம்முடைய மறுபிறவிக்கு காரணமாய் அமைந்து விடுகிறது. ஒருவன் முக்தி அடைவது என்பது, சனாத தர்மத்தைப் பொறுத்த மட்டிலும், அவன் வாழும்போதே ஆனந்தமாக வாழ்வதே ஆகும். அத்தகைய ஆனந்த வாழ்க்கையில் வழியில், அவனிடம் அஹங்கார, மமகாரம் இல்லையென்பதினால், அவனது மறுபிறவி தடுக்கப்படுகின்றது. இதுவே, **முக்தி** அல்லது **மோக்ஷம்** என்பதாக நமது பாரத தேசத்தின் பண்டைய ரிஷிகள் கண்டறிந்து வாழ்ந்தார்கள்.

மனிதனுக்கு மூளை இருப்பதுப்போல, விலங்குகளுக்கும் மூளை இருக்கின்றன என்றாலும், அவைகளெல்லாம் மனிதனைப் போல சிந்திப்பது இல்லை. மனிதனாகிய நாம் மட்டும்தான் சிந்தித்து செயல்படுகிறோம். அதனால்தான் முக்தி அடைய வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ மனிதப் பிறவியே மகத்தானப் பிறவி என்கிறது இந்து மதம்.

ஆனால், நமக்கு இறைவன் கொடுத்த இந்த அறிய வாய்ப்பை நாம் ஒழுங்காக பயன் படுத்துகிறோமா? என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நாம் செய்யும் சில தீய செயல்களாலே நாம் முக்தி அடைய முடியாமல், துக்கமான வாழ்க்கை வாழ்வது மட்டுமின்றி, மீண்டும் வேறொரு பிறவிக்கு வழி வகுத்து விடுகின்றது. ஏன் இந்த மறு பிறவி என்றால், செய்த செயல் வினைகளுக்கான தண்டனை என்பதைவிட நம்முடைய பாவத்தை போக்குவதற்கான வழி என்றே சொல்கிறது இந்து மதம்.

எடுத்துக்காட்டாக, ஒரே வகுப்பறையில் இரண்டு மாணவர் இருக்கிறார்கள் ஒருவன் நன்றாக படிப்பான். மற்றவன் உதாரிதனம்மாக திரிவான். நன்றாகப் படித்த மாணவன் இறுதி ஆண்டுதேர்வில் வெற்றிபெற்று அடுத்த வகுப்புக்கு செல்கிறான். அதுவே, உதாரிதனமாக திரிந்த மாணவனோ அதே தேர்வில் தோல்வியுற்று மீண்டும் அதே வகுப்பில் படிக்கும் படி ஆகிவிடுகிறது. இது அந்த உதாரிதனமாக திரிந்த மாணவனுக்கான தண்டனை அல்ல. அந்த மேற்படிப்புக்காக அவனை மீண்டும் தயார் செய்துக் கொள்வதற்கான மற்றொரு வாய்ப்பு என்பதாகத்தான் பார்க்க வேண்டுமே தவிர, அவனது அந்த சந்தர்பத்தை தண்டனை என்பதாகப் பார்க்கக்கூடாது.

இதுவே மறுபிறப்பின் ரகசியம். ஆம்! நாம் மனிதப் பிறவியின் மகத்துவம் அறிந்து, அறியாமைகளை அகற்றி, அந்த தூய அறிவு நிலைக்கு உயருகின்ற வரையிலும், நம்மை நாம் தயார் படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு என்றுதான் பிறவியைப் பார்க்க வேண்டுமே தவிர மற்ற மதங்கள் கூறுவதுப்போன்று '**பாவத்தின் சம்பளம் மரணம்!**' என்று கூறக்கூடாது.

இந்த சரியான கல்வியைக் கற்றுக்கொண்டு, அத்யாத்ம யோகத்தில் ஆன்மிகப் பாதையில் முன்னேறுகிறவன் படிப்படியாக பயனுள்ள வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கின்றான். அதன் பயனாக, இறைவனை தன்னுள் உணர்கின்றான். ஆனால், இந்த அத்யாத்ம யோகக் கல்வியைக் கற்றுக் கொள்ளாத சராசரி மனிதர்கள் மனம்போன போகில் வாழ்க்கையை துயரத்துடன் வாழ்ந்து, இறைவனையும், இந்த உலகத்தையும், தன்னைப் பற்றியும் தெரிந்துக் கொள்ளாமலேயே மரணத்தை அடைகின்றான். அவனே மறுபிறப்பு எடுக்கின்றான் என்கின்றது நமது சனாதன தர்மம். பாவம் செய்தவனோ அவன் கர்ம வினைகளுக்கேற்ப பல பிறவிகள் எடுத்து தாமதமாக இறைவனை அடைகிறான்.

சனாதன தர்மத்தின் சரியானப் பாதை என்கின்ற இந்த வேதம் ஏன் எல்லோருக்கும் சென்று சேரவில்லை. இதற்கு யார் காரணம்? என ஆராய்ந்தால் நமக்கு நன்றாகப் புரியும், அதற்கு நாமேதான் காரணம் என்பது. எப்படி?

இன்று சில மதங்களில் சிறு குழந்தையிடம் கூட அவர்கள் மதத்தின் அரிய, மிக உயரிய வேதங்களான குர்ரான், பைபிள் போன்றவைகளை கட்டாயம் கற்றுக் கொள்ள

வைக்கின்றார்கள். அதுப்போல, நம் சனாதன தர்மத்தின் வழியில் வந்த இந்துமதத்தில் மட்டும் என் எல்லோரும் வேதம் கற்றுக் கொள்ள வேண்டும்ன் என கட்டாயப்படுத்தப் படுவதில்லை என்றால், ஒரு விஷயம் நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். அதாவது, கட்டாயப் படுத்தி கற்றுக் கொடுக்கும் மற்ற மதங்களின் குழந்தைகள் சிறு வயது முதல் பைபிள் படித்த கிறிஸ்துவர்கள் எல்லாம் கிறிஸ்துவைப் போல் வாழ்கின்றார்களா? அல்லது சிறு வயது முதல் குரான் படித்த அனைத்து முஸ்லிம்களும் அவர்களது மத குரு சொன்ன நல்ல ஒழுக்கங்களோடு இருகின்றார்களா?

யோசித்துப் பாருங்கள்!

நிச்சயமாக அவ்வாறு இல்லை ஏன்?

காரணம், பைபிள், குர்ரான் போன்ற மற்ற மதங்களின் வேதங்கள் மற்றும் நமது சனாதன தர்மத்தில் நமது பண்டைய ரிஷிகளால் கொடுக்கப்பட்ட வேதங்கள் என எதுவாக இருப்பினும், கட்டாயத்தின் அடிப்படையில் கற்றுக் கொள்வதற்காகக் கொடுக்கப்படவில்லை.

வேதங்கள் என்பது இறைவனைப் பற்றிய ஆழமான தேடுதல் உள்ளவர்களுக்காக மட்டுமே கொடுக்கப்பட்டது. ஆகவே, இறைவன், இந்த உலகம், நான் என தன்னப் பற்றிய உண்மையான தேடுதல் உள்ளவர்களுக்கு மட்டுமே இத்தகைய வேதங்கள் கற்றுக் கொள்வதினால் பலன் கிடைக்கும். மற்றபடி, மற்றவர்களின் கட்டாயத்தின் காரணமாக கற்றுக் கொள்வதினால், அவர்கள் அந்த வேதம் கூறுகின்ற வாழ்க்கையை கண்டிப்பாக வாழ மாட்டார்கள். அதைத்தான் நாம் இன்று இந்து மதம் முதற்கொண்டு, எல்லா மதங்களிலும் நடைமுறையில் பார்க்கின்றோம்.

உதாரணமாக, நமது நடைமுறை வாழ்க்கை உண்மைகளைப் பார்க்கலாமே! நமது வீட்டுக் குழந்தைகள் பள்ளி முடிந்து மாலை வேளையில் அவரவர்கள் வீடு திரும்பியதும், ஒன்றுக்கொன்று ஓடி விளையாடும் விளையாட்டின்போது, அந்த சிறுவனிடம் சென்று பள்ளிப் பாட புத்தகத்தை படிக்கச் சொன்னால், அவர்கள் நிச்சய்மாக படிக்க விரும்ப மாட்டார்கள். விளையாடத்தான் விரும்புவார்கள். அப்படியே அவர்களை கட்டாயப் படுத்தி படிக்கச் சொன்னாலும், அவர்கள் அந்த புத்தகத்தை படிப்பதுப் போல் ஏமாற்றுவார்கள்.

காரணம். அவர்கள் எண்ணங்களெல்லாம் அந்த விளையாட்டிலே இருக்குமே தவிர, அந்த புத்தகத்தில் என்ன விசயம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கற்றுக் கொள்ளக்கூடிய ஆர்வம் இருக்காது.

அத்தகைய அந்த மாணவர்களாகிய குழந்தைகளைப் போலத்தான் நாம் எல்லோரும் அன்றும் இருந்தோம், இன்றும் இருக்கின்றோம். என்ன ஒரு வித்தியாசம் என்றால், அன்று பள்ளிப் பாடங்களைக் கற்றுக்ப் கொள்வதைவிட, அதிகமான ஆர்வம் விளையாட்டில் காட்டினோம். இன்று இதுப்போன்ற வேதப் பாடங்களைக் கற்றுக் கொள்வதைவிட அதிக ஆர்வத்தை நமது அன்றாட அலுவல்கள் அல்லது தொழில், வியாபாரத்தில் காட்டுகின்றோம். அவ்வளவுதான் அன்றைக்கும், இன்றைக்கும் உள்ள வித்தியாசம்.

அதாவது இன்று (கலியுகத்தில்) நிரந்தரமில்லாத பணம், பொருட்கள், பட்டம், பதவி, என நிலையில்லாத சுகங்களின் மீதே நம்முடைய மனம் அலைபாய்கிறது. அதற்கேற்றார் போல, அவைகளைப் பெறுவதற்காக, இறைவனும் நமக்கு பல சந்தர்பங்களைத் தருகிறான். என்று நாம் நமக்கு கொடுக்கப்பட்ட விவேகத்தைக் கொண்டு, எது நித்தியம்? அது அ நித்யம் என்பதை விசாரித்து விழித்துக் கொள்கின்றோமோ? அதுவரை, நமக்கு நிரந்தர இன்பம் ஒரு நாளும் கிடைக்கப் போவதில்லை. அதாவது, நாம் இந்த நிரந்தரமில்லாத பொருட்களை மறந்துவிட்டு, எதுதான் உண்மையில் நமக்கு நிரந்தர இன்பம் தரும் என்று யோசிக்கும் தருவாயில்தான் நமக்கு இறைவன் அளித்த வேதங்களைப் படிப்பதற்கு இறைவன் முலாமாகவே இத்தகைய வாய்ப்புகள் கிடைகின்றது. அப்போது மட்டும்தான் அந்த வேதத்தில் கூறப்பட்ட கருத்துக்களின் உண்மைப் பொருள் விளங்கும். அதை விடுத்து அழியக்கூடிய, நிரந்தரமற்ற இந்த உலகப் பற்றுகளில் நம் ஆசையை விடாமல், நாம் எத்தனை தடவைதான் வேதங்களைப் படித்தாலும் அதன் அர்த்தம் நமக்கு விளங்காது. உண்மையான ஆனந்தத்திற்கான வாழ்க்கை நம்மிடம் தொடங்காது.

**இறைவன் ஆனந்தத்தின் இருப்பிடம்:**

யத்வை தத் ஸுக்ருதம் I ரஸோ வை ஸ: I
ரஸக்க்ம் ஹ்யேவாயம் லப்த்வாஆனந்தீ பவதி I
கோ ஹ்யேவான்யாத் க: ப்ராண்யாத் I
யதேஷ ஆகாச ஆனந்தோ ந ஸ்யாத் I
ஏஷ ஹ்யேவானந்தயாதி II 7.2 II

பொருள்:

எது உள்ளதோ அதுவே தோன்றியது. அந்த இறைவன் ஆனந்தமயமானவர். அவரிடமிருந்து ஆனந்தத்தைப் பெற்றதாலேயே மனிதன் ஆனந்தத்தை அனுபவிக்கிறான். இதய வெளியில் அந்த ஆனந்தம் இல்லாவிட்டால், யார்தான் இங்கு உயிர் வாழ முடியும்? ஆகவே, அவரே ஆனந்தம் தருபவர்.

இயற்கையின் ஏராளமான படைப்புகளின் அம்சங்களாகிய அனேக மலர்களை, மலையை, நதிகளை, கடலை, வானத்தை, நிலவை இரசிக்கிறோம். ஆனால், அந்த இரசனையில் பெறும் ஆனந்தம் எங்கிருந்து வருகிறது? மலர்களிலும் நதிகளிலும் இருந்தா? இல்லை என்கிறது இந்த மந்திரம். உண்மையில் ஆனந்தம் என்பது வெளியே இல்லை. அது நம்முள்ளேயே உள்ளது. அவைகளை இரசிப்பதற்கான மனநிலையில் நாம் இருந்தால் மட்டுமே, அத்தகைய மலர்களும், மலைகளும் நமக்கு இன்பத்தைத் தர முடியும்.

இல்லாவிடில் அவைகள் என்றுமே நமக்கு இன்பத்தைத் தர முடியாதது மட்டுமின்றி, சில வேளைகளில் ஆழ்ந்த துக்கத்தைத் தருபவைகளாகக்கூட அவைகள் அமைவதை நாம் உணர்வதுண்டு. எனவே, இன்பம் என்பது எப்போதும் நம் உள்ளேயே உள்ளது.

இன்பம் நம்முள் உள்ளது என்பதன் பொருள் என்ன?

உயிராக இருக்கின்ற நாம் உடல் எடுத்து வந்து, இந்த உலக சுக, துக்கங்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் என்றாலும், உண்மையில் இந்த அனுபவங்கள் எல்லாம் எதற்கு என்றால், நமது மனதிற்கு மட்டுமே. ஆம, அந்த மனம் ஏற்றி வைத்துக் கொண்டுள்ள எண்ணங்களுக்கு ஏற்ப, இந்த உலகத்தை அனுகின்றது. ஆனால், இந்த அனுபவங்கள் மனதிற்கு உண்டானாலும், இந்த மனதிற்கு அதிர்ஷ்டானமாக, ஆத்மா நம்முள் இருப்பதை நாம் மறந்து விட்டதின் காரணமாகத்தான் நம்மிடம் இருக்கின்ற உண்மையான ஆனந்தம் அனுபவம் ஆவதில்லை.

ஆனந்தம் என்பது இறைவனின் அம்சம். இறைவன் எபோதும் ஆனந்தமயமானவர். எனவே, ஆத்மாவும் ஆனந்தம் நிறைந்தது. அந்த ஆத்மா நம்முள் எங்கே இருக்கிறது? இதய வெளியில் இருக்கின்றது என்று ஏற்கனவே முதல் அத்தியாயத்தில் (1:6.1) பார்த்தோம். ஆனந்தத்தின் உறைவிடமான ஆத்மா நம்முடைய ஹிருதயக் குகையில் இருப்பதால்தான் நாம் இன்பம் பெற முடிகிறது.

(இந்த இடத்தில் மனம் தானே ஆனந்தம் என்ற உணர்வை உணர்கிறது. ஆனால், ஆத்மா என்று மந்திரம் சொல்கிறதே என்ற முரண்பாடு நமக்குத் தோன்றலாம். ஆனால் உபநிஷதங்கள் மிகத் தெளிவாக உடல், மனம், புத்தி ஆகிய அனைத்துமே ஜடப் பொருட்கள் என்று கூறுகிறது. இவைகள் தமக்குரிய பணிகளை பெறுவது என்பது, அந்த தூய அறிவாகிய ஆத்மாவின் இருப்பினால்தான்.

அதாவது, ஆத்மா என்பது, எதிலும் சம்பந்தப்படாமல் இருக்கின்றது. ஆனால் அது இருப்பதினால்தான் இங்கு எல்லாம் இருக்கின்றது என்ற உண்மை விளங்க வேண்டும்.

**இறைவன் பயமின்மையின் உறைவிடம்:**

யதா ஹ்யே வைஷ எதஸ்மின் அத்ருச்யே அனாத்ம்யே
அநிருத்தே அநிலையனே அபயம் பிரதிஷ்ட்டாம் விந்ததே ‌।
அத ஸோ அபயம் கதோ பவதி ।
யதா ஹ்யே வைஷ ஏதஸ்மின்னு தரமந்தரம் குருதே ।
அத தஸ்ய பயம் பவதி । தத்வேவ பயம் விதுஷோ அமன் வானஸ்ய ।
ததப் யேஷ ச்லோகோ பவதி ॥ 7.3 ॥

பொருள்:

இறைவன் காண முடியாதவர். உடம்பு இல்லாதவர். விளக்க முடியாதவர். ஆதாரம் இல்லாதவர். பயம் அற்றவர். அந்த இறைவனின் நிலைபெறும்போது மனிதன் பயமற்ற நிலையை அடைகிறான். அவரிலிருந்து சிறிது விலகினாலும் அவனுக்கு பயம் உண்டாகிறது. கொடுக்கப்பட்ட பகுத்தறிவைக் கொண்டு சிந்திக்காத பண்டிதனுக்கும் கூட இறைவனே பயத்தின் காரணமாகி விடுகிறார்.

இறைவன் பயமின்மையின் உறைவிடமாக இருக்கிறார். அவரை அணுகுவதும், அவரை வாழ்க்கையின் ஆதாரமாகக் கொள்வதும் ஆகிய இவைகள் மூலம் மட்டுமே பயம் நம்மை விட்டு விலகுகிறது. முழுமையாக அவரில் நிலைபெறும்போது மட்டுமே நாம் பயமற்றவர்கள் ஆகிறோம்.

சிந்திக்காத பண்டிதன் யார்?

இந்த உலகை உலகமாகக் காண்பவன். இந்த உலகமாக இருப்பவர் இறைவன் என்பதை 2:6.3 இல் கண்டோம். இந்த உலகின் உண்மைத் தன்மையை உணராமல், உலகை அதன் பல்வேறு தோற்றங்களுடன் காணும்போது, அவனுக்குக்கூட இயல்பாகவே பயம் வருகிறது.

இதனை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அழகாக விளக்குகிறார். புலித்தோலை போர்த்திக் கொண்டு ஒருவன் அனைவரையும் பயமுறுத்தினான். அவனது வெளித்தோற்றத்தை வைத்து புலி என்று நம்பியவர்கள் அங்கும், இங்கும் பயந்து ஓடினர். ஆனால், அது புலித்தோல் போர்த்திய மனிதன் என்ற உண்மையை அறிந்தவன் மட்டும், 'டேய்! நீ யார் என்று எனக்குத் தெரியும். நீ நம்முடைய ஹரிதானே?' என்று கேட்டான். அவ்வளவுதான் புலி வேஷக்காரன் சிரித்துக் கொண்டே தன் உண்மை நிலையை ஒப்புக்கொண்டு, அறியாமையில் இருந்த மற்றவர்களை பயமுறுத்தச் சென்றான்.

அதுப்போல, இறைவனின் உண்மைத் தன்மையை உணராதவர்கள், இந்த புறத் தோற்றமான உலகை உண்மை எனக் காண்பவன் அதன் வாயிலாகப் பயப்படுகிறான் என்கின்றது இந்த மந்திரம்.

**இயற்கையின் தலைவர் இறைவன்:**

பீஷாஸ்மாத் வாத: பவதே |
பீஷாதேதி ஸூர்ய: |
பீஷா அஸ்மாத் அக்னிச் சேந்த்ரச்ச |
ம்ருத்யுர் தாவதி பஞ்சமி இதி || ௧ ||

பொருள்:

இறைவன் மீது கொண்ட பயத்தால்தான் காற்று வீசுகிறது. சூரியன் உதிக்கிறான். நெருப்பு சுடுகிறது. பஞ்சபூதங்களைக் கொண்டு இந்திரன் வேலை செய்கிறான். அவ்வாறே, ஐந்தாவதாக இந்த மரண தேவன் தன் கடமையைச் செய்கின்றான்.

இறைவன் மீது கொண்ட பயத்தினால்தான் இயற்கை செயல்படுவதாக இந்த மந்திரம் கூறுகிறது. அதாவது இயற்கையின் தலைவராக, இயற்கையை ஆள்பவராக இறைவன் உள்ளார்.

பாரத நாட்டில் தொன்றுதொட்டு **'சத்ய ப்ரதிஜ்ஞை'** என்பதை ஓர் சிறந்த தர்மமாகத் தீர்மானித்துப் போற்றி வந்துள்ளார்கள். வேதங்களிலும், இதிஹாஸ புராணங்களிலும், நம்முடைய மதக் கிரந்தங்களிலும் சத்ய ப்ரதிஜ்ஞை செய்தவர்கள் மிக உருக்கமாகவும் அழகாகவும் போற்றிக் கொண்டாடப் பெற்றுள்ளனர். **'சத்யம்'** என்ற சொல் கடவுளையே குறிக்கும். மூன்று காலங்களிலும் உண்மையாக நிற்கும் பொருளை சத்யம் என்று நம் நூல்களில் வழங்கியிருக்கிறார்கள். மூன்று உலகங்களும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு நிற்கின்றன.

நாள்தோறும் சூரியன் தவறாமல் உதிப்பதும், அஸ்தமிப்பதும், இந்த சத்யத்துக்கு உட்பட்டுத்தான். சத்யத்தைத் தாங்கித் தான் சமுத்திரம் நிற்கிறது. இந்த அண்டசராசர பிரம்மாண்டத்தில் கோளங்கள் ஒழுங்காகச் சுற்றி வந்துகொண்டிருப்பதும் சத்தியமாகிற சட்டத்துக்கு உட்பட்டுத்தான். ஒரு கோளத்துக்கும், மற்றொரு கோளத்துக்கும் உள்ள இடைவெளி குறையாமல் அவைகள் அவையவைகளின் பாதையில் சுற்றி வரும் ஒழுங்கிலேயே இயங்கி வருகின்றன என்பதை விஞ்ஞானமும் தெரிவிக்கிறது.

வசந்தம் முதலான ருதுக்களும் அந்த அந்தக் காலங்களில் தவறாமல் மாறி வருவதையும் பார்க்கிறோம்.

'கடவுளுக்குப் பயந்தே காற்று வீசுகிறது: சூரியன் உதிக்கிறான்: சந்திரன் அக்கினி முதலியவர்களும் அவ்விதமே' இவைகள் ஸத்யமாக இருக்கின்ற இறைவனின் பெருமையைப் போற்றுகிறது இந்த சத்ய ப்ரதிஜ்ஞையுடன் உள்ள பஞ்சபூதங்கள், கோளங்கள் முதலியவற்றின் நடவடிக்கைகளைக் குறிப்பிட ரிதம் என்ற சொல் வேதத்தில் வழங்குகிறது.

ஸத்யம் என்ற சொல், ஒருவனின் நடவடிக்கை சம்பந்தப்பட்டதைக் குறிக்கும். ரிதம் என்பது, உலக அமைப்பிலேயே உள்ள உண்மையைக் குறிக்கிறது. இப்படி இரண்டு சொற்களும் வேதத்தில் வழங்குவதைப் பார்க்கிறோம். இதில் மனிதன் சத்யம் தவறாமல் வாழும்போது மட்டும்தான் மகத்தான இறை அனுபூதியை அடைவான் என்றும் பார்க்கப்படுகின்றது.

(இயற்கை என்று இங்கு கூறப்படுவதை மலைகள், நதிகள் என்பதாகவே எல்லோரும் நினைக்கின்றார்கள். ஆனால், இந்த ஒட்டுமொத்தப் பிரபஞ்சமும் இயற்கை என்பதாகத்தான் சாஸ்திரம் பார்க்கின்றது. இறைவன் இந்த பிரபஞ்சமாக உள்ளார் என்பது எந்த அடிப்படையில் என்றால், தன்னுடைய மனோ ஆற்றலின் அடிப்படையில் என்பதாகத்தான் நாம் பார்க்க வேண்டும். மற்றபடி அறிவியல் அறிஞர்கள் இறைவனை நம்பாமல், இந்த இயற்கையை மட்டும் நம்புவார்கள். அவர்களைப் போன்றே இன்னும் சிலரும் இந்த இயற்கைதான் இறைவன் என்றும் சொல்வார்கள். ஆனால், இந்த இயற்கைக்கு, பிரபஞ்சத்திற்கு ஆதாரமாகத்தான் இறைவன் இருக்கின்றான் என்பதை விழித்துக் கொண்ட விவேகிகள் மட்டுமே அறிவார்கள்.

இந்தப் பிரபஞ்சம் தோன்றி, பஞ்ச பூதங்கள் தோன்றி, உயிரினங்கள் தோன்றி, கிரகங்கள், சூரியன்கள், சந்திரன்கள் எல்லாம் தோன்றி, பல ஆயிரக்கணக்கான உயிரினங்கள் தோன்றி, அதில் சிந்திக்கும் திறன் கொண்ட மனிதன் தோன்றியதால்தான் இறைவன் என்ற தத்துவமே தோன்றுகிறது என்பதை ஏற்காதவர்கள் மட்டும்தான் இயற்கை மட்டும் இறைவன் என்பார்கள், இன்னும் சிலரோ இறைவனை இதனுள்ளே தேடிக் கொண்டிருப்பார்கள். உண்மையில் படைக்கப்பட்ட இவைகளெல்லாம் இல்லை என்றால், இறைவன் பற்றிய சிந்தனை யாருக்கு எப்படி வரும்?

உண்மையில் இந்த மகாப் பிரபஞ்சம் தானாக உருவானதா? தானாக உருவாகி தானாக ஒரு இயந்திரம் இவ்வளவு பிரம்மாண்டமாக ஒரு ஒழுங்கு முறையுடன் இயங்க இயலுமா? பிரபஞ்சத்தில் உள்ள அத்தனை இயற்கை சக்திகளும் ஒன்றையொன்று சார்ந்து

இயங்குவது அதுவும் தானாக இயங்குவது சாத்தியமா? இதற்கெல்லாம் விஞ்ஞானத்தை தாண்டி, நாம் சொல்லக்கூடிய ஒரே பதில், அது தூய அறிவாகிய இறைவனின் மனோ வியாபகம் என்பதாகத்தான் இருக்க முடியும். அதைவிடுத்து, நம்மால் கற்பனையாக உருவாக்கப்பட்ட கையில் சங்கு சக்கரத்துடனோ, அல்லது ஜடாமுடியுடன் கூடிய திரிசூலத்துடனோ இந்த பிரபஞ்சத்தை படைத்து இயக்குவது என்பது, விஞ்ஞானம் மட்டுமல்ல, இறைவனைப் பற்றிய ஏராளமான சந்தேகங்களுடன் இருக்கும் சராசரி மனிதர்களுக்கும் ஏற்புடையதல்ல.

ஆனால், ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் வாயிலாக, அதை அப்படியே நம்புபவனுக்கு மட்டுமே இறைவன் அவனது கற்பனை உருவங்களுக்கு ஏற்றவாறு இருப்பார். அதுவும் நம்மைப் போன்ற மனிதர்கள் போலவே இருப்பார்.

ஆனால், கடவுளர் நம்போல மனிதர்கள் போலன்றி மிக பிரம்மாண்டமான சக்திகளை உடையவர்கள் என்பதால் தான் அப்படி வர்ணிக்கப்பட்டுள்ளனர்.

இதையும் தாண்டி கடவுளுக்கு அடுத்த நிலையாக சொல்லப்படும் இயற்கையில் கடவுளர் பல்வேறு சக்தி வடிவங்களாக செயல்படுகிறார்கள் என்பதே நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாக இருக்கும்! அப்படித்தான் மறை பொருளாக வேதங்களும் உரைக்கின்றன! என்ன அவைகள் எதையெல்லாம் குறிக்கின்றன என்பதை நம் போல மனிதர்கள் ஆழ்ந்த சிந்தனை மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக '**மித்ரன்**' என்ற சொல் மின்னலைக் குறிப்பதாகக் கொள்ளலாம்! இன்னும் ஒளி சார்ந்த ஒளியைத் தரும் நெருப்பு சார்ந்த சக்திகளாகக் கொள்ளலாம்! இந்திரன் பற்றிய வர்ணனைகளை வைத்துப் பார்க்கும்போது அவன் இடியைக் குறித்த வர்ணனை என்று கொள்ள இயலும்.

அதே போல தமக்கென இயக்கங்களை கொண்ட பஞ்ச பூதங்களும் கடவுளராக வர்ணிக்கப்படுகின்றனர்! இன்னும் இயற்பியலில் வரும் பலவேறு சக்தி மையங்களாக பல கடவுளரை நாம் புரிந்துக் கொள்ள இயலும். யுகப் பிரளயம், மன்வந்தரப் பிரளயம், மகாப் பிரளயம் (பிரபஞ்ச அழிவு) ஆகியவற்றை உண்டாக்கி அனைத்தையும் அழித்து ஒடுக்கும் கடவுளாகவும், அவைகள் அனைத்தையும் இயக்கும் காலரூபமாக ருத்ரனைக் கொள்ளலாம்.

அதுப்போல, இயக்கம் இல்லாத பருப்பொருள் தன்மையாகவும் இறைவன் இருப்பதைக் கவனத்தில் கொள்ளலாம். இவையெல்லாம் நுட்பமான விஷயங்கள். நாம் கொஞ்சம் வேதங்களில் மறைந்துள்ள பொருளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தால்தான் இவைகள் எல்லாம் விளங்கும்!)

பிரம்மனிடத்தில் கொண்ட பயத்தினால் காற்று வீசுகின்றது. சூரியனும் உதிக்கின்றது. அக்னியும், இந்திரனும் தத்தம் வேலையை செய்து கொண்டிருக்கின்றனர். யமதர்மனும் தன் வேலையை செய்வதற்கு ஒடுகின்றார். இவ்வாறு கூறி ரிக் மந்திரம் முடிக்கின்றது.

மனித லோகத்தில் அடையக்கூடிய அதிக சுகங்களை கற்பனை செய்யப்படுகிறது. இதையெல்லாம் அடைந்தால் அனுபவிக்கும் ஆனந்தத்தை விட நூறு மடங்கு ஆனந்தத்தை இந்த சுகங்களை நீக்குவதால் அடையலாம்.

**இன்பத்தின் அளவீடு:** (9.1 – 9.12)

உபநிஷதங்கள் ஒவ்வொன்றும் இறை வாழ்விற்கான தனிப் பாதையைக் காட்டுவதாக ஆரம்பத்தில் கண்டோம். இது வித்யை எனப்படும். தைத்திரீய உபநிஷதம் இரண்டு வித்யைகளைக் கூறுகிறது. இங்கே வருவது **ஆனந்தமய வித்யை.**

சாதாரண மனித வாழ்க்கை இன்பத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொதுவாக மனிதன் இறைவனை நாடாமல் இருப்பதற்கும் அதுவே காரணம். இறைவனை நாடினால் எங்கே இன்பங்களை இழக்க நேருமோ என்று அஞ்சுகிறான் அவன். அவனுக்கு உண்மை நிலையைப் புரிய வைத்து இறை வழியில் செலுத்துகிறது இந்த வித்யை. இறைவனைப் பெறுவதால் வருகின்ற இன்பம் உலக இன்பங்களை விட எத்தனையோ மடங்கு பெரியது என்று இந்த மந்திரங்கள் பட்டியல் இடுகின்றன. 11 – ஆம் மந்திரம் இந்த வித்யையால் பெறப்படுகின்ற மிக மேலான இன்பமான இறையனுபூதியையும் கூறுகிறது.

ஸைஷா ஆனந்தஸ்ய மீமாம் கம்ஸா பவதி ।
யுவா ஸ்யாத் ஸாது யுவா அத்யாயக: ।
ஆசிஷ்ட்டோ த்ருடிஷ்ட்டோ பலிஷ்ட்ட: ।
தஸ்யேயம் ப்ருதிவீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத் ।
ஸ ஏகோ மானுஷ ஆனந்த: ।
தே யே சதம் மானுஷா ஆனந்தா: ।
ஸ ஏகோ மனுஷ்ய கந்தர்வாணா மானந்த: ।
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ 9.1 ॥

பொருள்:

இன்பத்தின் அளவீட்டைப் பார்ப்போம். நல்ல, வாலிப மிடுக்குடைய, அறிவாளியான, சுயக் கட்டுப்பாடு உடைய, மன உறுதி கொண்ட, பலசாலியான இளைஞன் ஒருவனை அளவுகோலாகக் கொள்வோம். அத்தகையதோர் இளைஞனுக்கு எல்லா வித செல்வங்களும் நிறைந்த இந்த பூமி உரியதாவதாக வைத்துக் கொள்வோம். இந்த இளைஞன் பெறும் இன்பம் ஒரு மனித இன்பம். அத்தகைய நூறு மனித இன்பங்கள் சேர்ந்தால் அது **ஒரு மனித கந்தர்வ இன்பம்**. ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

**தேவ கந்தர்வ இன்பம்:**

தே யே சதம் மனுஷ்ய கந்தர்வாணா மானந்தா: ।
ஸ ஏதோ தேவ கந்தர்வாணாமானந்த: ।
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ 9.2 ॥

பொருள்:

நூறு மனித கந்தர்வ இன்பங்கள் **ஒரு தேவ கந்தர்வர்கள் இன்பம்**. ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

தே யே சதம் தேவ கந்தர்வாணா மானந்தா: ।
ஸ ஏக: பித்ருணாம் சிர லோக லோகானா மானந்த: ।
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ 9.3 ॥

பொருள்:

நூறு தேவ கந்தர்வர்கள் இன்பங்கள் என்பது, நீண்ட ஆயுளை உடைய நம்முடைய முன்னோர்களாகிய **ஒரு பித்ரு இன்பத்திற்கு சமம்**. ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

தே யே சதம் பித்ருணாம் லோகானாமானந்தா: ।
ஸ ஏக ஆஜானஜானாம் தேவானாமானந்த: ।
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ 9.4 ॥

பொருள்:

நூறு பித்ருக்களின் இன்பங்கள் தேவலோகத்தில் பிறந்த தேவர்கள் அனுபவிக்கின்ற **ஒரு தேவ இன்பம்.** ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

தே யே சதம் ஆஜானஜானாம் தேவானா மானந்தா: ।
ஸ ஏக: கர்ம தேவானாம் தேவானா மானந்த: ।
யே கர்மணா தேவான பியந்தி ।
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ 9.5 ॥

பொருள்:

நூறு தேவர்கள் அடைந்த இன்பங்கள் **ஒரு கர்ம தேவ இன்பம்.** செய்த நற்செயல்களின் மூலம் தேவ நிலையை அடைந்தவர்கள் கர்ம தேவர்கள். ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் அந்த இன்பத்தைப் பெறுகிறான்.

(மனிதனும் தேவனும் வெவ்வேறு என்ற எண்ணத்தைத் தகர்க்கும் ஸ்லோகங்கள் இங்கே சொல்லப்பட்டுள்ளன. மனிதன் தன் செயல்பாடுகள் மற்றும் ஆசைகள் அற்ற தன்மைகளின் மூலம் படிப்படியாக கந்தர்வ நிலை, பித்ரு நிலை இவையெல்லாவற்றையும் தாண்டி தேவ நிலையில் அனுபவிக்கக் கூடிய இன்பத்தைப் பெறலாம் என்பதை இந்த ஸ்லோகம் வலியுறுத்துகிறது.)

**இந்திர இன்பம்:**

தே யே சதம் கர்மதேவானாம் தேவானாமானந்தா: ।
ஸ ஏகோ தேவானாமானந்த: ।
ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ॥ 9.6 ॥

பொருள்:

நூறு கர்மதேவர்கள் இன்பங்கள் **ஒரு முக்கிய தேவ இன்பம்.** ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

தே யே சதம் தேவானா மானந்தா: ।
ஸ ஏக இந்த்ரஸ்யானந்தா: ।
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ 9.7 ॥

பொருள்:

நூறு முக்கிய தேவர்கள் இன்பங்கள் **ஓர் இந்திர இன்பம்**. ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

தே யே சதமிந்த்ரஸ் யானந்தா: ।
ஸ ஏகோ ப்ருஹஸ்பதேரானந்த: ।
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ 9.8 ॥

பொருள்:

நூறு இந்திரர்கள் இன்பங்கள் **ஒரு ப்ருஹஸ்பதி இன்பம்**. ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

**தேவர்களின் குரு ப்ருஹஸ்பதி.**

தே யே சதம் ப்ருஹஸ்பதே ரானந்தா: ।
ஸ ஏக: ப்ரஜாபதே ரானந்த: ।
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ 9.9 ॥

பொருள்:

நூறு ப்ருஹஸ்பதிகளின் இன்பங்கள் **ஒரு பிரஜாபதி இன்ப**ம். ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

(பிரஜாபதி என்பவர்கள் படைப்பில் மனிதர்களைக் காக்கும் பல சக்திகள். உதாரணமாக மும்மூர்த்திகளில் ஆரம்பித்து, அக்னி, வாயு, வருணன், இந்திரன் போல பல

சக்திகள் பிரஜாபதி எனப்படுகிறார்கள். உறவின்றிப் படைக்கப்பட்டவர்கள் /இருப்பவர்கள் பிரஜாபதிகள்.)

தே யே ப்ரஜாபதே ரானந்தா: I
ஸ ஏகோ ப்ரஹ்மண ஆனந்த: I
ச்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய II 9.10 II

பொருள்:

நூறு பிரஜாபதிகள் இன்பங்கள் **ஒரு பிரம்ம ஞானியின் இன்பம்**. இதுவே, **ப்ரம்மானந்தம்** ஆகும். ஆக, ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த இன்பத்தைப் பெறுகிறான்.

('**மனிதன் என்பவன் தெய்வமாகலாம்**' என்பதினால், இதில் வரக்கூடிய ஸ்லோகங்கள் அந்தக் கருத்தையே தாங்கி நிற்கின்றன. நமக்கு ஒரு சந்தேகம் வரலாம். அதென்ன எல்லா ஸ்லோகத்திலுமே **ஆசைகள் அற்றவனும், அறிவாளியுமான ஒருவன்** என்று வருகிறதே அது எப்படி சாத்தியம்? எப்படி படிப்படியாக இது விவரிக்கப்படுகிறது என்று தோன்றலாம். ஆனால், ஆசைகள் அற்ற, அறிவாளி என்பது பல அளவைகளில் இங்கு பொருள் கொள்ளப்படுகிறது என்பதாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒருவனுக்கு '**ஆசைகள் அற்ற தன்மை**' என்பது எந்த அளவில் வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஆசைகளை அடக்கி தவமிருந்த விஸ்வாமித்திரர் கூட ஒரு கட்டத்தில் மேனகை மீது ஆசை வயப்பட்டார் என்று அறிவோம். இன்னொன்று அறிவாளி என்ற நிலை ஒவ்வொரு மனிதனுக்கும் புரிதலும் மாறுபடுகின்ற அறிவு நிலை ஒவ்வொன்றாக இருக்கும். அந்தந்த நிலைக்கு ஏற்ற இன்பங்களை அவன் பெறுகிறான் என்பதையே இந்த ஸ்லோகங்கள் கூற வருகின்றன.)

(இதுப்போன்ற இன்பங்கள் நடக்குமா? இது நம்மால் இயலுமா? இப்படியெல்லாம் இருமைக் குணங்கள் பற்றிக் கேட்கும் போதெல்லாம், நம்மைப்போன்ற மனிதர்களுக்கு கண்டிப்பாகத் தோன்றவே செய்யும். இன்பத்தையும், துன்பத்தையும் ஒருங்கே காணும் மனநிலையா? அது சாத்தியமா என்று தோன்றும்! நம்முடைய நண்பனையும் நமக்குத் தீமையையே செய்யும் பகைவனையும் வேறுபாடின்றிக் காண்பதா? இது நம்போல மனிதப் பிறவிகளுக்கு சாத்தியமா? இப்படியெல்லாம் கண்டிப்பாகத் தோன்றவே செய்யும். அவ்வாறு தோன்றுவதில் தவறே இல்லை.

ஏனென்றால், இன்றைய உலகியலில் இந்தக் கேள்விகள் நமக்குள் தோன்றாமல் இருந்தால்தான் தவறே! ஆனால் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் நாம் மன முதிர்ச்சியடைந்து இதுப்போல நிலையை அடைந்தால், அதுவே இறைநிலையை நோக்கிய பயணத்தில் முதல் படியென்று நாம் முடிவு செய்துக் கொள்ளலாம். இன்னும் **"இருமைக் குணங்களை கடந்தவன் என்னை உள்ளபடி அறிகிறான்"** என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கீதையிலும் இதைப் பற்றியே கூறுகிறார்.)

இளம் வயதுடைய ஒருவன் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கர்மங்களை செய்வபவன், நன்னெறியை நன்றாகப் புரிந்துக் கொண்டு, அவைகளைப் பின்பற்றுகின்றவன், நன்கு சாஸ்திரங்களை கற்றவன், விரைவில் செயல்படும் திறமையுடையவன், மூவரிடம் நன்கு முறையாக உபதேசத்தை பெற்றவன், அவர்களுடைய அனுக்கிரகத்தைப் பெற்றவன், உறுதியான உள்ளமுடையவன், மனோ தைரியமுடையவன், நிச்சயமாக முடிவெடுப்பவன், உடல் வலிமையுடையவன், ஆரோக்கியமாக இருப்பவன் செழிப்பான இந்த முழு பூமியை அடைந்தவனாக இருக்கின்றான். இதுதான் ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய அதிகபட்ச ஆனந்தம். இது ஒரு பங்கு ஆனந்தம் என்று வைத்து கொள்வோம்.

ஒரு சராசரி மனிதனுடைய நூறுபங்கு ஆனந்தம் எவையோ? அவைகள் மனித கந்தர்வர்களுடைய ஒரு பங்கு ஆனந்தம்.

மனித கந்தர்வனுடைய நூறு மடங்கு ஆனந்தம் தேவகந்தர்வனுடைய ஒரு மடங்கு ஆனந்தம்.

தேவ கந்தர்வனுடைய நூறு மடங்கு ஆனந்தம் = பித்ரு லோகத்தில் இருக்கின்றவர்களின் ஒரு பங்கு ஆனந்தம்.

பித்ருக்களுடைய 100 மடங்கு ஆனந்தம் = ஸ்மார்த்த தேவலோகத்தில் உள்ளவர்களின் ஒரு பங்கு ஆனந்தம்.

ஸ்மார்த்த தேவலோகத்தில் உள்ள 100 மடங்கு ஆனந்தம் = கர்ம தேவலோகத்தில் உள்ளவர்களின் ஒரு பங்கு ஆனந்தம்.

கர்ம தேவ லோகத்தில் உள்ள 100 மடங்கு ஆனந்தம் = இந்திரனின் ஆனந்தம்.

இந்திரனின் நூறு மடங்கு ஆனந்தம் = பிருகஸ்பதியின் ஆனந்தம்.

பிருகஸ்பதியின் நூறு மடங்கு ஆனந்தம் = பிரஜாபதியில் (விராட் புருஷன் அல்லது ஹிரண்யகர்ப்பன்) ஆனந்தம்.

பிரஜாபதியின் நூறு மடங்கு ஆனந்தம் = தன்னையே எல்லாவற்றிலும் காணுகின்ற ஈஸ்வரத் தன்மையில் தன்னை உணர்ந்துக் கொண்டவனுடைய ஆனந்தம்.

ஆனந்த மீமாம்ஸத்தின் மூலமாக பிரதிபிம்பானந்தம் எடுத்துரைக்கப்பட்டது. ஜீவ – ஈஸ்வர ஐக்கியம் ஆனந்தத்தின் மூலமாக நிரூபிக்கபட்டிருக்கின்றது. மனிதனிடத்தில் இருக்கும் ஆனந்தமும், ஹிரண்யகர்ப்பனிடத்தில் இருக்கும் ஆனந்தமும் ஒன்றே. இந்த ஆனந்தத்திற்கு காரணம் ஆனந்த ஸ்வரூபமாக இருக்கும் ஆத்மாவேதான். அது இரண்டற்றது என்று புரிந்துக் கொள்ள முடிகின்றது.

இந்த ஞானத்தை அடைந்தவனுக்கு வரும் மனநிறைவே உண்மையில் **மோட்சம்** என்று கூறப்படுகின்றது. இங்கே ஆனந்தம் அனுபவமாக இருக்காது, அது ஸ்வரூபமாக இருக்கும். ஹிரண்யகர்ப்பனின் ஆனந்தத்தைக்கூட வைராக்கியத்தோடு விலக்கி விட்டால், அடைவது பிரம்ம ஞானம். இதுவே, **ஜீவன் முக்தி** என்றும் கூறப்படுகின்றது.

மனிதனின் இதயக்குகையில் இருக்கின்ற ஆத்மா, நம்முடைய அனுபவத்தில் இருக்கின்ற **'நான்'** என்ற ஆத்மா, இந்த உலகமாகத் தெரிகின்ற மாயைக்கு ஆதாரமான ஈஸ்வரனிடத்தில் இருக்கின்ற ஆத்மா என எல்லாமே தூய அறிவாகிய பரமன் எனும் ஒரே ஆத்மா என்பதாக ஐக்கியப்படுத்தப்பட்டுள்ளது.

எவனொருவன் இவ்விதம் ஜீவ – ஈஸ்வர ஐக்கியத்தை அறிகின்றனோ? அவன் இந்த உலகத்தின் உண்மைத் தன்மையை உணர்ந்துக் கொண்டு, அதன்மீது வைராக்கியம் அடைந்து, இந்த உலகத்து விஷய, சுகங்களை உண்மை எனக் கருதாமல், நான் எனது என்ற அஹங்கார, மமகாரம் கொள்ளாமல், இந்த பரு உடலாகிய ஸ்தூல சரீரத்தை என்னுடையது என்று அபிமானிக்காமல், தன்னுடைய தனித்துவ அடையாளங்களை விட்டு விடுகின்றான். இது மித்யா என்று புரிந்து கொள்கின்றான், இந்த ஜகத் தன்னுடைய சுய அறிவின்மீது ஏற்றி வைக்கப்பட்டு, உண்மைபோல் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது என்ற விழித்துக் கொண்ட விவேகியாக இருக்கின்றான். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது ஞானிதான் பிரம்மத்தை அடைகின்றான். அக்ஞானி பிரம்ம ஸ்வரூபமாக இருந்தாலும் அதை அறியாமலிருப்பதால் பிரம்மத்தை அடைவதில்லை.

**இன்பங்கள் எது?:**

பிரம்மா என்பவர் படைக்கும் இறைவன்.

இந்த மந்திரங்களில் (9.1 – 9.10) கூறப்பட்ட தேவ, கந்தர்வ இன்பங்கள் எல்லாம், மனிதன் இறந்தபிறகு ஏதோ வேறு சில உலகங்களில் அனுபவிக்கபடுகின்ற இன்பங்கள் அல்ல. அவைகள் எல்லாமே இங்கேயே அனுபவிக்கப்படுகின்ற இன்பங்கள் ஆகும்.

இன்பத்தைப் பற்றிய ஓர் அடிப்படை உண்மையை இங்கே நாம் காண்கிறோம். பொதுவாக, செல்வங்களைப் பெருக்குவதாலும், சூழ்நிலையை மாற்றுவதாலும் அதிக இன்பம் பெறலாம் என்று நினைக்கிறோம். ஆனால் நம்முள் இருந்துதான் ஆனந்தத்தைப் பெற முடியும் என்பதை ஏற்கெனவே (2:7.2) கண்டோம். எனவே புறவுலகில் எத்தனை மாற்றங்கள் செய்தாலும், அதனால் இன்பத்தின் அளவு அதிகரிப்பதில்லை.

ஒரு மாம்பழம் சாப்பிட்டால் ஒரு இன்பமும், பத்து மாம்பழங்கள் சாப்பிட்டால் பத்து மடங்குகள் இன்பமும் ஒரு போதும் கிடைப்பதில்லை. ஆகவே, புற உலகப் பொருட்களின் எண்ணிக்கையையோ, அளவுகளையோ அதிகரிப்பதால் மட்டும், இன்பத்தின் அளவு அதிகரிப்பதில்லை.

நமது அக உணர்வில் மாற்றங்கள் செய்து, அதன்மூலம் ஆத்மாவை நெருங்கும் போது மட்டுமே இன்பத்தின் அளவு உண்மையாகவே அதிகரிக்கிறது என்பதை இந்த மந்திரங்கள் ஆணித்தரமாகக் கூறுகின்றன. அதிலே, சாதாரண மனித இன்பம் முதலில் வைக்கப்பட்டது (9.1). அதன்பிறகு தொடரும் மந்திரங்களில் ஆனந்தத்தின் அளவீடுகள் பலவாறாக அதிகரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அதன் தேவதைகளை சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனால் அங்கெல்லாம், அவ்வாறு அதிகரித்த இன்பங்களை அனுபவிப்பவன் '**ஆசைகள் அற்றவனும், அறிவாளியுமான ஒருவன்**' என்று கூறப்பட்டது. இதில் பொருளாதார செல்வம் அதிகம் உள்ளவனோ? மற்ற மண், பெண், பொன் போன்ற சுகபோக வசதிகள் அதிகம் உள்ளவனோ அதிக இன்பத்தை அனுபவிக்கின்றான் என்று சொல்லப்படவில்லை.

ஆசைகள் அற்றவனே இன்பத்தை அனுபவிக்கின்றான் என்பது மிக முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். இந்த அடிப்படை உண்மை எந்தக் காலத்தையும் விட, இந்தக் காலத்திற்கு மிகவும் பொருந்துவதாகும். ஆசைகள் குறையக் குறைய இன்பம் பெருகும். ஆசைகள் குறைவது மட்டும் போதாது. ஆசைகளைக் குறைக்கின்ற அதே நேரத்தில் அக உணர்வில் மாற்றங்களை செய்து, ஆத்மாவை

அணுகுவதன்மூலம் அதிக இன்பத்தைப் பெறுவது எப்படி என்பதை அவன் அறிந்திருக்க வேண்டும்.

அதனால்தான் அவன் '**அறிவாளியாக இருக்க வேண்டும்**' என்று இந்த மந்திரங்கள் கூறுகின்றன. ஆசைகளைக் குறைப்பது, அதன் காரணமாக அக நாட்டம் உண்டாவது முதற்படி என்றால், அதன் காரணமாக அதிக இன்பத்தைப் பெறுவது என்பது இரண்டாம்படி.

**இன்பத்தின் எல்லையும் இறையனுபூதியின் நான்கு விளைவுகளும்:**

படிப்படியாக அதிகரித்து வந்த இன்பம் இறையனுபூதியில் அதன் எல்லையைத் தொடுகிறது.

ய யச்சாயம் புருஷே । யச்சாஸா வாதித்யே ।
ஸ ஏக: । ஸ ய ஏவம் வித் ।
அஸ்மாத் லோகாத் ப்ரேத்ய । ஏதம் அன்னமய மாத்மானம் உப ஸங்க்ராமதி ।
ஏதம் பிராணமய மாத்மானம் உப ஸங்க்ராமதி ।
ஏதம் மனோமய மாத்மானம் உப ஸங்க்ராமதி ।
ஏதம் விஜ்ஞானமய மாத்மானம் உப ஸங்க்ராமதி ।
ஏதம் ஆனந்தமய மாத்மானம் உப ஸங்க்ராமதி ।
ததப்யேஷ ச்லோகோ பவதி ॥ 9.11 ॥

பொருள்:

இந்த மனிதனில் இருப்பவரும் அந்த சூரியனில் இருப்பவரும் ஒருவரே. இந்த உண்மையை அறிபவன் உலக உணர்விலிருந்து விடுபடும்போது அன்னமயம், பிராண மயம், மனோமயம், விஜ்ஞானமயம், ஆனந்த மயம் ஆகிய இந்த ஐந்து உடம்புகளைக் கடந்து செல்கிறான். அது பற்றி இந்த ஸ்லோகமும் உள்ளது.

இறையனுபூதியின் மிக உயர்ந்த நிலை இங்கே கூறப்படுகிறது.

சூரியன் இங்கே ஒரு சின்னமாகக் கொள்ளப்பட்டுள்ளது. மனிதன், இயற்கை என்று எல்லா இடங்களிலும் இருப்பவர் இறைவன் ஒருவரே என்பதை உணர்கின்றவன் இன்பத்தின் எல்லையை அனுபவிக்கிறான்.

எல்லாவற்றிலும் இறைக்காட்சியைப் பெறுபவன் இந்த உலக உணர்விலிருந்து விடுபடுகிறான். அதாவது, உலகம் உலகமாகத் தெரியாமல், இறைமயமாக அவனுக்குக் காட்சியளிக்கின்றது. அவன் மீண்டும் பிறப்பற்றவன் ஆகிறான். சாதாரண மனிதன் இறக்கும்போது, இந்த பரு உடலாகிய தூல உடம்பு (அன்னமயம்) மட்டுமே விடுபடுகிறது. ஆனால், இறையனுபூதி பெற்றவன் விஷயத்தில், அவனது, தூல, சூக்கும மற்றும் காரண என அனைத்து உடம்புகளும் விடுபடுகின்றன. அதாவது, அவனுக்கான காரண உடல் இல்லாத காரணத்தினால், அவன் மீண்டும் பிறப்பதில்லை. அந்த தூய அறிவாகிய இறைவனில் நிலைபெறுகிறான்.

**அவரே இறைவன்:**

யதா வாசோ நிவர்த்தந்தே । அப்ராப்ய மனஸா ஸஹ ।
ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் । ந பிபேதி குதச்சனேதி ।
ஏதம் ஹ வா வ ந தபதி । கிமஹம் ஸாது நாகரவம் । கிமஹம் பாப மகரவமிதி ।
ஸ ய ஏவம் வித்வானதே ஆத்மானம் ஸ்ப்ருணுதே ।
உ பே ஹ்யே வைஷ ஏதே ஆத்மானம் ஸ்ப்ருணுதே ।
ய ஏவம் வேத । இத்யுபநிஷத் ॥ 9.12 ॥

பொருள்:

யாரை அடைய இயலாமல் மனமும், வாக்கும் திரும்புகின்றனவோ? அவரே இறைவன். அவரை அனுபூதியில் உணர்கின்ற இறையானந்தத்தை அறிபவன் எதற்கும் பயப்படுவதில்லை. 'நான் ஏன் நன்மை செய்யவில்லை? நான் ஏன் தீமை செய்தேன்?' போன்ற எண்ணங்கள் அவனை அலைக்கழிப்பதில்லை. இத்தகைய எண்ணங்கள் அவனது மனதை மட்டுமே திடப்படுத்த செய்கின்றன. ஆனால், எண்ணங்களின் எழுச்சியை வெறும் சாக்ஷி மாத்திரமாகப் பார்க்கின்றவனுக்கு ஆன்ம ஞானம் உறுதிப்படுகிறது. இவ்வாறு உபநிஷதம் (இந்தப் பகுதி) நிறைவுபெறுகிறது.

ஆகவே, நன்மை – தீமை, இன்பம் – துன்பம் போன்ற இருமைகளைக் கடந்தவனது நிலையானது, எங்கும், எதிலும் இறையுணர்வையே காண்கின்றவன் எதையும் இறைவனுக்கு வேறாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. அதனால், இறை நியதில், இருமைகள் இல்லாத காரணத்தினால், நன்மை, தீமை என அனைத்தும் அவனுக்கு மட்டுமே இறை மயமாகத் தெரிகிறது.

இத்துடன் தைத்திரீய உபநிஷதத்தின் ஆனந்தவல்லீ நிறைவு பெறுகிறது.

## முடிவுரை:

• பிரஹ்மவித் ஆப்னோதி பரம் என்ற சூத்திர வாக்கியம் கூறப்பட்டது.

• விருத்தி வாக்கியமான "ஸத்யம், ஞானம், அனந்தம் பிரஹ்ம....ப்ரஹ்மனா விபஸ்சிதா" விளக்கப்பட்டது.

• அத்யாரோப – அபவாதம் முறையில் ப்ரஹ்ம் விளக்கப்பட்டது.

• ஸ்ருஷ்டியானது பிரம்மத்தின் மீது ஏற்றி வைக்கப்பட்டது.

• ஏற்றி வைத்ததையெல்லாம் ஒவ்வொன்றாக பஞ்சகோஷ விவேகம் மூலமாக நீக்கப்பட்டது. இதில் சமஷ்டி – வியஷ்டி இரண்டையும் நீக்குதலையும் உபதேசிக்கபட்டது.

• இந்த பிரபஞ்சத்தை நீக்கி நிர்குண பிரம்மத்தை உபதேசித்தது.

• ஜகத் மித்யா என்பதையும் பிரஹ்மம் ஸத்யம் என்பதையும் நிரூபிக்க இந்த முறையை கையாளப்பட்டது.

• ஆனந்த மீமாம்ஸா அதாவது ஆனந்தமய வித்யா விசாரம் செய்யப்பட்டது.

• ஆத்மா ஆனந்த ஸ்வரூபம் என்று நிலை நாட்டுவதற்கும், நம் அனுபவத்தில் ஆனந்தம் வெளியேயிருந்து வருகின்றது என்ற தவறான புரிதல் உள்ளதால், அதை நீக்கவும் இந்த விசாரம் செய்யப்பட்டது.

• வைராக்கியத்தின் பெருமையை உணர்த்துவதற்காக மனதில் ஆசைகள் நீங்க நீங்க அமைதியும் அதிகரிக்கும். அதனால், ஆனந்தம் அதிகரிக்கும் என்று கூறப்பட்டது. ஆனந்தமே விஷயானந்தம், வைராக்கியானந்தம், ஆத்மானந்தம் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டது.

• இதன் பலனாக எதைக் கண்டும் பயம் இல்லை. பயமும் அதற்கான காரணமும் சேர்ந்து நீங்கி விடுகின்றது. அஹம் பிரம்மம் என்ற நிலையில் எல்லாம் இறைவனே என்ற பேருண்மை புரிகின்றது.

# அத்தியாயம் – 3 (இறைவன்)

## (பிருகு வல்லீ)

இறைவன் (பிருகு வல்லீ):

வருண முனிவர் தன் மகனான பிருகுவிற்குப் போதிக்கின்ற பகுதி ஆதலால் இந்தப் பகுதி பிருகு வல்லீ என்று பெயர் பெற்றது.

வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொண்டால், ஆனந்தமாக வாழ முடியும் என்பதை முதற்பகுதியில் கண்டோம். இரண்டாம் பகுதியில் நம்மைப் பற்றி ஆராய்ந்து இந்த மனித வாழ்க்கை மற்றும் இந்த உலகம், இந்த இரண்டிற்கும் தலைவர் இறைவன் என எல்லாவற்றையும் அறிந்துக் கொண்டோம். கடந்த இரண்டாம் அத்தியாயத்தில் ஆரம்பித்த ஆராய்ச்சி இந்தப் பகுதியிலும் தொடர்கிறது. மனிதன் தன் உண்மைத் தன்மை உணர்ந்துக் கொண்ட நிலையில், இறைவனில் நிலைபெற்ற பிறகும், இந்த உலகை மறுக்காதிருப்பது பற்றிய விளக்கத்துடன் இனி வருகின்ற அத்தியாயம் அதற்கான விசாரணையை தொடங்குகின்றது.

உணவு பற்றிய நான்கு முக்கியமான நியதிகளையும் இங்கே நாம் காண்கிறோம்.

**பிரார்த்தனை**

ஓம் । ஸஹ நாவவது ।
ஸஹ நௌ புனத்து ।
ஸஹ வீர்யம் கரவாவஹை ।
தேஜஸ்வீ நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை ॥
॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

பொருள்:

ஆச்சாரியார், சீடன் ஆகிய நம் இருவரையும் இறைவன் காப்பாராக! அறிவின் ஆற்றலை நாம் இருவரும் அனுபவிக்குமாறு ஊக்குவிப்பாராக! நாம் இருவரும் ஈடுபாடுமிக்க

ஆற்றலுடன் உழைப்போமாக! கற்றது நமக்குப் பயனுள்ளதாக விளங்கட்டும்! எதற்காகவும் நாம் ஒருவரை ஒருவர் வெறுக்காமல் இருப்போமாக.

இறைவன் யார்?

வருண முனிவரின் மகன் பிருகு அவன் தந்தையை அணுகி, 'இறைவன் என்பவர் யார்?' என்று கேட்டான். அதற்கு வருணர் ஒருசில விளக்கங்களைக் கூறி, தவம் செய்து உண்மையை அறியுமாறு கூறினார். தவம் செய்து படிப்படியாக இறைவனைப் பற்றிய மிக உயரிய உண்மையை உணர்ந்தான் பிருகு. இவ்வாறு, இறைவனைப் பற்றிய படிப்படியான புரிதலின் அடிப்படையில், ஆழமான உண்மையை அறிகின்ற முறையே தைத்திரீய உபநிஷதம் கூறும் இரண்டாவது வித்யையான **பார்கவீவாருணீ வித்யை**.

**அனுவாகம் – 1**

அனைத்திற்கும் ஆதாரம்:

ப்ருகுர்வை வாருணி: I வருணம் பிதரமுபாஸஸாரா I
அதீஹி பகவோ ப்ரஹ்மேதி I
தஸ்மா ஏதத் ப்ரோவாச I
அன்னம் ப்ராணம் சக்ஷு:ச்ச்ரோத்ரம் மனோ வாசமிதி II 1.1 II

பொருள்:

வருண முனிவரின் மகன் பிருகு என்பவர் இருந்தான். அவன் தனது தந்தையை அணுகி, 'தெய்வத்திற்கு நிகரானவரே, இறைவன் என்பவர் யார்? என்பதை எனக்கு உபதேசியுங்கள்' என்று கேட்டான்.

அதற்கு அவர், 'உணவு, பிராணன், கண், காது, மனம், பேச்சு ஆகியவைகளே இறைவன்' என்று கூறினார்.

அவரது இத்தகைய பதிலிலிருந்து பிருகுவால் எதையும் புரிந்துக் கொள்ள முடியவில்லை. 'உணவு, பிராணன் போன்றவை எப்படி இறைவனாக இருக்க முடியும்?' என்று குழம்பி நின்றான்.

அவனது நிலைமையைக் கண்ட வருண முனிவர், அவன் புரிந்து கொள்வதற்காக, தாம் கூறியதைச் சற்று தெளிவுபடுத்தினார்.

தம் ஹோவாச | யதோவா இமானி பூதானி ஜாயந்தே |
யேன ஜாதானி ஜீவந்தி | யத் ப்ரயந்த்யபி ஸம்விசந்தி |
தத் விஜிஜ்ஞாஸஸ்வ | தத் ப்ரஹ்மேதி | ஸ தபோஅதப்யத | ஸ தபஸ்தப்த்வா || 1.2 ||

பொருள்:

வருண முனிவர் உபதேசத்தைத் தொடர்ந்தார்: 'யாரிடமிருந்து இந்த உயிரினங்கள் அனைத்தும் பிறக்கின்றனவோ? பிறந்தவைகள் எல்லாம் யாரால் வாழ்கின்றனவோ? மரணத்திற்குப் பிறகு, அவைகள் எல்லாம் யாரிடம் ஒடுங்குகின்றனவோ? அவரே இறைவன். அவரை அறிய முயற்சி செய்.' அனைத்திற்கும் ஆதாரமானவர் இறைவன். அவரிலிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன, வாழ்கின்றன, ஒடுங்குகின்றன. இவ்வாறு கூறி, உண்மையைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை பிருகுவிடம் விட்டு விடுகிறார் வருணர். அவரது இந்த உபதேசத்தைக் கேட்டதும் பிருகு தவத்தில் ஈடுபட்டான்.

அதற்கான முயற்சியில் ஈடுபட்டான் பிருகு.

எப்படி? தவத்தின் மூலம்.

பண்டைய பாரதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்று **தவம்** என்பதாக இங்கே கூறப்படுகிறது. சிவபெருமானைக் கணவனாக அடைய எண்ணிய பார்வதி தவம் செய்தாள், அவரைப் பெற்றாள். மந்திரபூர்வமான ஆயுதங்களைப் பெற விரும்பிய அர்ஜுனன் தவத்தின் மூலமே அவற்றைப் பெற்றான். எந்த உயரிய முயற்சிக்கும் தவம் அடிப்படையாகிறது. தவத்தின் மூலம் செய்யபடுகின்ற முயற்சிகளே அரியனவற்றைச் சாதிக்கிறது. தவம் பற்றி கீதை விரிவாக ஆராய்கிறது.

தவம் என்பது என்ன? **'மனத்தையும் புலன்களையும் வசப்படுத்துவது'** என்று விளக்குகிறார் ஸ்ரீசங்கரர்.

எல்லா உண்மைகளும் நமக்குள்ளே உள்ளன. மனத்தையும் புலன்களையும் வசப்படுத்தி, நம்முள் ஆழ்ந்துப் பார்த்தால் நம்மைப் பற்றியும், பிரபஞ்சத்தைப் பற்றியும், இறைவனைப் பற்றியும் அனைத்து உண்மைகளையும் அறிய முடியும். அதற்கான ஒரே வழி தவம். எனவே பிருகு தவத்தில் ஈடுபட்டான்.

**விசாரம்:**
**=======**

• அவரே ரிஷியாக இருப்பதால் இதை தவம் செய்துதான் அறிந்து கொள்ள முடியும் என்று அறிந்திருக்கின்றார், எதை அடைய வேண்டுமென்றாலும் தவம் செய்து முயற்சிக்க வேண்டும். நாம் செய்யும் தியாகங்களையும் தவத்தில் சேர்க்கலாம். இவைகள் ரிஷிகளுக்கு தெரிந்திருப்பதால் அவர் தவத்தை மேற்கொண்டார்.

• தவம் என்றால் என்ன? ஒவ்வொரு ஆசிரமத்திலும் அவரவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கர்மங்களை சொல்லப்பட்டிருகின்றது. இவைகளையே தவம் என்று அழைக்கப்படுகின்றது.

• **பிரம்மச்சர்யம்** – ஸ்வாத்யாயம் – சாஸ்திரங்களை படித்தல்.
• **கிருஹாஸ்ரமம்** – தானம் செய்வதுதான் தவம்.
• **வானப்ரஸ்தாசிரமம்** – விரதம் இருப்பதைக் காட்டிலும் பெரிய தவம் வேறெதுவும் இல்லை.
• **சந்நியாஸம்** – மனம், இந்திரியங்கள் கட்டுப்பாடு மேலான தவம்.

இந்த கதையில் ப்ருகு ரிஷி இந்திரியங்கள் மனம் இவைகளைக் கட்டுபடுத்தும் தவத்தில் ஈடுபட்டார். மீண்டும், மீண்டும் சிந்தித்தார், விசாரத்தில் ஈடுபட்டார்.

**அனுவாகம் – 2**

**முதற்படி**

பிருகு படிப்படியாக உண்மையை அறிகிறான். இந்த மந்திரம் முதற்படியாக அவன் கண்ட உண்மையைக் கூறுகிறது.

அன்னம் ப்ரஹ்மேதி வ்யஜானாத் ।
அன்னாத் யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே ।
அன்னேன ஜாதானி ஜீவந்தி ।
அன்னம் பிரயந்த்யபி ஸம் விசந்தீதி । தத் விஜ்ஞாய ।
புனரேவ வருணம் பிதர முபஸ ஸார । அதீஹி பகவோ ப்ரஹ்மேதி । தம்ஹோவாச ।
தபஸா ப்ரஹ்ம விஜி ஜ்ஞாஸஸ்வ । தபோ ப்ரஹ்மேதி ।
ஸ தபோ அதப்யத । ஸ தபஸ் தப்த்வா ॥ 2 ॥

பொருள்:

'உணவே இறைவன் என்று முடிவு செய்தான் பிருகு. ஏனெனில், உணவிலிருந்தே உயிரினங்கள் தோன்றுகின்றன. தோன்றியவைகள் உணவினாலேயே வாழ்கின்றன. மரணத்திற்குப் பிறகு உணவிலேயே ஒடுங்குகின்றன' என்று அறிந்தான் பிருகு.

தவம் நிறைவுற்ற பிறகு......

பிறகு அதையே மீண்டும் விசாரம் செய்து அன்னத்திற்கு இந்த பிரம்ம ஸ்வரூப லக்ஷணம் பொருந்தவில்லை என்று உணர்ந்தார். அன்னமானது மாற்றத்தை அடைவதை உணர்ந்தார். இது வரையறுக்குட்பட்டது. ஆகவே, இது பிரம்மனாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார், மீண்டும் தந்தையான குருவை அடைந்தார்.

இந்த அன்னமய உடம்பு என்பது, ஸ்தூல பிரபஞ்சத்தை அவர் குறிப்பிட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டும். உணவிலிருந்துதான் இந்த ஜீவராசிகளின் சரீரங்கள் தோன்றுகின்றன. உணவினால் தோன்றி வாழ்கின்றன. உணவிடத்தில் இறுதியாக லயத்தை அடைகின்றன. இவ்விதமாக பிரம்மத்தை அன்னமாக கருதினார்.

பிருகு தவத்தில் ஈடுபட்டபோது அவனுக்கு உண்மை தெரிய வந்தது. எல்லா உயிரினங்களுக்கு ஆதாரமாக உணவே உள்ளது. உணவிலிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன. வாழ்கின்றன. உணவுக்கு ஆதாரமான பூமியில் ஒடுங்குகின்றன. எனவே, அதுதான் இறைவன் என்ற முடிவுக்கு பிருகு வந்தான்.

தான் கண்ட உண்மையைத் தந்தையிடம் கூறினான் பிருகு. வருணர் அதை ஆமோதிக்கவுமில்லை மறுக்கவுமில்லை. மாறாக, தவத்தில் மேலும் ஆழ்ந்து ஈடுபடும்படி கூறினார். பிருகு கூறியதை ஆமோதித்தால், அதுவே முழு உண்மை என்று நினைத்து பிருகு தனது முயற்சிகளை நிறுத்தி விடுவான். '**உணவே இறைவன்**' என்பது, இறைவனைப் பற்றிய உண்மையின் ஒரு பகுதி. எனவே, இதுவே உண்மையல்ல என்று அதனை மறுக்கவும் இயலாது. அதனால் தொடர்ந்து முயற்சி செய்யுமாறு உரைத்தார் வருணர்.

பிறகு தந்தையாகிய வருண முனிவரை அணுகி, 'தெய்வத்திற்கு நிகரானவரே, தாங்கள் கூறிபடி உணவே இறைவன் என்றாலும், அது மாற்றத்திற்கு உட்படுகின்றதே? ஆகவே, அருள்கூர்ந்து, மீண்டும் இறைவன் என்பவர் யார்? என்பதை எனக்கு உபதேசியுங்கள்' என்று கேட்டான். அதற்கு அவர் தவமே இறைவனை அறியும் சாதனம்.

ஆகவே, தவத்தால் அவரை அறிவாயாக' என்று கூறினார். இந்த உபதேசத்தைக் கேட்டதும் பிருகு மீண்டும் தவத்தில் ஈடுபட்டான்.

**அனுவாகம் – 3**

வழிமுறை தவமே:

முயற்சியின் ஆரம்பத்திலேயே விளைவைப் பற்றிக் கவலைப்படாமல் முயற்சியில் கவனம் செலுத்துவது மிக முக்கியம் என்பது இங்கே அறிவுறுத்தப்படுகிறது. 'வாழ்க்கையில் நம்மிடம் பெரிய குறை உள்ளது. குறிக்கோளே நம்மை மிகவும் கவர்வதாக உள்ளது. அதன் பரிமாணத்தின் காரணமாக, அதை அடைவதற்கான வழிமுறைகளை நாம் பெரிதாக எண்ணாமல் விட்டு விடுகிறோம். தோல்வி வரும் போதெல்லாம் அதனை ஆராய்ந்து பார்த்தால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் செயல்களிலும் நாம் வழிமுறைகளில் நாம் கவனத்தை செலுத்தியிருக்க மாட்டோம், அதுதான் தோல்விக்கு காரணமாக இருந்தது என்று தெரிய வரும். பாதையை முற்றுப் பெறச் செய்வதிலும் பலப்படுத்துவதிலும் ஒழுங்காகக் கவனம் செலுத்துவதே நாம் செய்ய வேண்டியது. பாதை சரியாக இருந்தால், பலன் வந்தேயாக வேண்டும்....ஆதலால் வழிமுறையில் கவனத்துடன் இருப்பதே வாழ்வின் மேலான ரகசியம்' என்று விளக்குகிறார் சுவாமி விவேகானந்தர்.

எனவே வழிமுறையான தவத்தையே கடவுளாகக் கொண்டு முன்னேறுமாறு மகனுக்குக் கூறினார் வருணர். பிருகுவும் படிப்படியாக உண்மையைக் காணலானான்.

**இரண்டாம் படி**

ப்ராணோ ப்ரஹ்மேதி வ்யஜானாத் । ப்ராணாத் யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே ।
ப்ராணேன ஜாதானி ஜீவந்தி । ப்ராணம் ப்ரயந்த்ய பிஸம் விசந்தீதி । தத் விஜ்ஞாய ।
புனரேவ வருணம் பிதர முபஸ ஸார । அதீஹி பகவோ ப்ரஹ்மேதி । தம் ஹோவாச ।
தபஸா ப்ரஹ்ம விஜிஜ் ஞாஸஸ்வ । தபோ ப்ரஹ்மேதி ।
ஸ தபோ அதப்யத । ஸ தபஸ் தப்த்வா ॥ 3 ॥

பொருள்:

'பிராணனே இறைவன். ஏனெனில் பிராணனிலிருந்தே உயிரினங்கள் தோன்றுகின்றன. தோன்றியவை பிராணனிலேயே வாழ்கின்றன. மரணத்திற்குப் பிறகு

பிராணனிலேயே ஒடுங்குகின்றன' என்று அறிந்தான் பிருகு. பிறகு தந்தையாகிய வருண முனிவரை அணுகி, 'தெய்வத்திற்கு நிகரானவரே, இறைவன் என்பவர் யார் என்பதை எனக்கு உபதேசியுங்கள்' என்று கேட்டான். அதற்கு அவர், 'தவமே இறைவன். தவத்தால் அவரை அடைவாயாக' என்று கூறினார். இந்த உபதேசத்தைக் கேட்டதும் பிருகு தவத்தில் ஈடுபட்டான்.

தவம் நிறைவுற்ற பிறகு......

**அனுவாகம் – 4**

**மூன்றாம் படி**

மனோ ப்ரஹ்மேதி வ்யஜானாத் । மனஸோ ஹ்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே ।
மனஸா ஜாதானி ஜீவந்தி । மன: ப்ரயந்த்யபி ஸம் விசந்தீதி ।
தத் விஜ்ஞாய । புனரேவ வருணம் பிதர முபஸ ஸார । அதீஹி பகவோ ப்ரஹ்மேதி |
தம் ஹோவாச । தபஸா ப்ரஹ்ம விஜிஜ் ஞாஸஸ்வ । தபோ ப்ரஹ்மேதி ।
ஸ தபோ அதப்யத । ஸ தபஸ் தப்த்வா ॥ 4 ॥

பொருள்:

'மனமே இறைவன். ஏனெனில் மனத்திலிருந்தே உயிரினங்கள் தோன்றுகின்றன; தோன்றியவை மனத்தாலேயே வாழ்கின்றன; மரணத்திற்குப் பிறகு மனத்திலேயே ஒடுங்குகின்றன' என்று அறிந்தான் பிருகு. பிறகு தந்தையாகிய வருண முனிவரை அணுகி, 'தெய்வத்திற்கு நிகரானவரே, இறைவன் என்பவர் யார் என்பதை எனக்கு உபதேசியுங்கள்' என்று கேட்டான். அதற்கு அவர், 'தவமே இறைவன். தவத்தால் அவரை அடைவாயாக' என்று கூறினார். இந்த உபதேசத்தைக் கேட்டதும் பிருகு தவத்தில் ஈடுபட்டான்.

தவம் நிறைவுற்ற பிறகு.........

**அனுவாகம் – 5**

**நான்காம் படி**

விஜ்ஞானம் ப்ரஹ்மேதி வ்யஜானாத் । விஜ்ஞானாத்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே ।
விஜ்ஞானேன ஜாதானி ஜீவந்தி । விஜ்ஞானம் ப்ரயந்த்யபி ஸம் விசந்தீதி ।
தத்விஜ்ஞாய । புனரேவ வருணம் பிதரமுபஸஸார । அதீஹி பகவோ ப்ரஹ்மேதி |
தம்ஹோவாச । தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ । தபோ ப்ரஹ்மேதி ।
ஸ தபோஅதப்யத । ஸ தபஸ்தப்த்வா ॥ 5 ॥

பொருள்:

'புத்தியே இறைவன். ஏனெனில் புத்தியிலிருந்தே உயிரினங்கள் தோன்றுகின்றன; தோன்றியவை புத்தியாலேயே வாழ்கின்றன; மரணத்திற்குப் பிறகு புத்தியிலேயே ஒடுங்குகின்றன' என்று அறிந்தான் பிருகு. பிறகு தந்தையாகிய வருண முனிவரை அணுகி, 'தெய்வத்திற்கு நிகரானவரே, இறைவன் என்பவர் யார் என்பதை எனக்கு உபதேசியுங்கள்' என்று கேட்டான். அதற்கு அவர், 'தவமே இறைவன். தவத்தால் அவரை அறிவாயாக' என்று கூறினார். இந்த உபதேசத்தைக் கேட்டதும் பிருகு தவத்தில் ஈடுபட்டான்.

தவம் நிறைவுற்ற பிறகு.......

**அனுவாகம் – 6**

**ஐந்தாம் படி**

ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜானாத் । ஆனந்தாத் யேவ கல்வி மானி பூதானி ஜாயந்தே ।
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி । ஆனந்தம் ப்ரயந்த்யபி ஸம் விசந்தீதி ॥ 6 ॥

பொருள்:

'ஆனந்தமே இறைவன். ஏனெனில் ஆனந்தத்திலிருந்தே உயிரினங்கள் தோன்றுகின்றன; தோன்றியவை ஆனந்தத்தாலேயே வாழ்கின்றன; மரணத்திற்குப் பிறகு ஆனந்தத்திலேயே ஒடுங்குகின்றன' என்று அறிந்தான் பிருகு.

2–6.1 வரையுள்ள 5 மந்திரங்களில் பிருகு படிப்படியாக உண்மையை உணர்வதைக் காண்கிறோம். 2:2:.1 – 2:6.1 வரை மனிதனின் ஐந்து உடம்புகள் பற்றிக் கண்டோம். இந்த ஐந்து உடம்புகளும் உணர்வின் ஐந்து நிலைகள். பிருகு தவத்தின் மூலம் இந்த நிலைகள் ஒவ்வொன்றையும் கடந்து செல்கிறான். ஒவ்வொரு நிலையையும் அவன் அனுபவிக்கும் போது அதுவே எல்லாமாக அவனுக்குத் தோன்றுகிறது. ஆனால் வருண முனிவரின் சரியான வழிகாட்டுதலால் அவன் மேலும் மேலும் தவத்தில் ஈடுபட்டு முன்னேறுகிறான்.

(உனக்குள்ளே இறைவன் இருக்கிறார் என்று ஒருவனிடம் சொல்லப்படும் நிலையில் அவனுக்கு உடனே என்ன தோன்றும்? முதலில் உடல் சம்பந்தப்பட்ட ஒன்றே இறைவன் என்று தோன்றும். உடலுக்கு ஆதாரம் என்ன? உடல் இருப்பது எதனால் என்று சிந்தித்தால் உணவால் என்பது புரியும்! அதனால் உணவே இறைவன் என்று அறிவது முதல் நிலை! அதைத் தாண்டிய நிலையில் இந்த உடலை இயங்கும் நிலையில் வைத்திருப்பது எதுவென்ற கேள்வி வருகிறது. அதற்கு விடையாகக் கிடைக்கும் பிராணன் அதுவே இறைவன் என்று அறிய வைக்கிறது! அதைத் தாண்டிய நிலையில் மனிதனுக்கு மட்டுமே என்று உள்ள உணரும் நிலையைத் தரும் மனம். அதுதான் இறைவன் என்ற அறிவு வருகிறது!! இன்னும் அதையும் தாண்டி சிந்திக்கும் தன்மையைத் தருவதும் அதன் மூலம் மனிதனை பல சாதனைகளை நிகழ்த்த உதவுவதுமான புத்தி வருகிறது. அந்நிலையில் அதுவே இறைவன் என்ற அறிவு கிடைக்கிறது. அதையும் தாண்டிய நிலையில் பெறும் ஆனந்த உணர்வே இறைவன் என்ற அறிவு கிடைக்கிறது! இதில் ஏதோ ஒன்று மட்டும் இறைவன் அல்ல. இவைகள் எல்லாமே படிப்படியாக இறைவன் நிலையை உரைத்து நிற்கின்றன.)

இந்த ப்ரஹ்மஞானம் ப்ருகு என்பவரால் புரிந்து கொள்ளப்பட்டது. வருணரால் உபதேசிக்கபட்டது.

மனிதனின் ஹ்ருதயத்தில் உள்ள மேலான ஆகாசத்தில் இருக்கின்ற பிரஹ்மத்தினிடத்தில் பரா வித்யாவானது அறிந்தவுடன் முடிவடைகின்றது. யாரொருவன் ப்ருகு புரிந்து கொண்டதைப்போல அறிகின்றார்களோ அவர்கள் ப்ரஹ்மனிடத்தில் நிலைபெறுகின்றார்கள், தன்னிடத்திலே நிலைபெறுகின்றார்கள். அவனுக்கு நல்ல உணவு வேண்டிய அளவு கிடைக்கும். உணவை நன்கு உட்கொள்ளும் சக்தியுடையவனாகவும் இருக்கின்றான். மேன்மையை அடைகின்றான்.

நல்ல சந்ததிகளினாலும், சிஷ்யர்களாலும் பெருமையடைவார். செல்வங்களை உடையவனாகவும், தேஜஸ் உடையவனாகவும், புகழினாலும் மேன்மையை அடைகின்றான்.

**வித்யையின் விளைவு:**

படிப்படியாக உண்மையை அறிகிறான் பிருகு. பார்கவீ–வாருணீ வித்யையின் பலனை அல்லது நிறைவை இந்த மந்திரம் தெரிவிக்கிறது.

ஸைஷா பார்கவீ வாருணீ வித்யா ၊ பரமே வ்யோமன் பிரதிஷ்ட்டிதா ၊
ய ஏவம் வேத ப்ரதிஷ்ட்டதி ၊ அன்னவானன்னாதோ பவதி ၊
மஹான் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்மவர்ச்சஸேன ၊ மஹான் கீர்த்யா ॥ 6.2 ॥

இது, **பார்கவீ – வாருணீ வித்யை**.

இது மேலான இதயவெளியில் நிலைபெற்றுள்ளது. யார் இவ்வாறு அறிகிறானோ அவன் இதய வெளியில் ஒளிரும் ஆன்மாவில் நிலைபெருகிறான். அவன் உணவுச் செல்வம் உடையவனாக ஆகிறான்; உண்டு மகிழ்கிறான். மக்கட்செல்வமும் கால்நடைச் செல்வமும் உடையவன் ஆகிறான். புனிதப் பேரொளி மிக்கவனாக, மகிமை மிக்கவனாக ஆகிறான்.

கடவுள் யார் என்று பிருகு கேட்ட கேள்விக்கு, 'உணவு, பிராணன், கண், காது, மனம், பேச்சு ஆகியவையே கடவுள் என்று பதில் கூறினார் வருணர். தவத்தின் மூலம் தான் கண்ட உண்மைகளை பிருகு தெரிவித்த போது அவற்றை முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளாமல் முயற்சியைத் தொடருமாறு கூறினார். ஐந்து படிகள் தாண்டியதும் இதய வெளியில் ஒளிரும் உண்மையை உணர்கிறான் பிருகு. இங்கும் பயணம் நின்று விடவில்லை. ஆனால் இதயத்தில் ஆன்மாவை உணர்வது கடவுளை அறிவதற்கான முயற்சியில் ஒரு முக்கிய படி. பார்கவீ – வாருணீ வித்யை இந்த இடத்தில் நின்று விடுகிறது.

தன்னை உடம்பாக, பிறந்து இறக்கும் ஒருவனாக அறிந்திருந்த மனிதன் தன்னை மரணமற்ற ஓர் ஆன்மாவாக இங்கே உணர்கிறான். அவன் இறைவனை நாடி தன் பயணத்தைத் தொடரலாம்; அல்லது உலக வாழ்க்கையில் ஈடுபடலாம். இதைக் குறிப்பிடத்தான் இரண்டு விதமான செல்வங்களும் கிடைப்பதாக இந்த மந்திரம் கூறுகிறது. இதயத்தில் ஆன்மாவை உணர்ந்த ஒருவனுக்கு உணவுச் செல்வம் போன்றவையும் கிடைக்கும்; புனிதப் பேரொளியும் கிடைக்கும். எதை வேண்டுமானாலும் ஏற்றுக் கொண்டு அவன் வாழ்க்கையைத் தொடரலாம். இதையே சுவாமி விவேகானந்தர், 'உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள். அது எவ்வாறு விழித்தெழுகிறது என்று பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வுடன் (SELF–CONSCIOUS) செயலில் ஈடுபடுமானால் சக்தி வரும், பெருமை வரும், நன்மை வரும், தூய்மை வரும்,

எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும்' என்று எடுத்துக் காட்டுகிறார். சிறப்பான வாழ்க்கை வாழ இந்த ஆன்ம தரிசனம் ஒரு முக்கியப் படி.

**அனுவாகம் – 7**

அக்ஞானிகளுக்கான உபாஸனையும், சில நல்ல பண்புகள் இதில் சொல்லப்படுகின்றது. உணவை அவமதிக்கக்கூடாது. அதை விரதமான பின்பற்ற வேண்டும், அன்னம் என்பது விராட் ஸ்வரூபம், ஸமஷ்டி ஸ்தூல சரீரத்தையுடைய ஈஸ்வரன். அன்னத்தின் உதவியால்தான் அன்னமயகோசம் இருக்கின்றது. இந்த கோசம் பிரம்மத்தை அடைவதற்கு ஒரு படியாக இருக்கின்றது.

**வளமாக வாழுங்கள்:**

தெய்வ சிந்தனையுடன் வாழ்க்கையை வளம் பெறச் செய்வதும், வலமாக வாழ்வதும் இறைவனின் மகிமையைப் போற்றுவதேயாகும். தெய்வ சிந்தனையுடன் செல்வத்தைப் பெருக்கி, வலமாக வாழ்வது பற்றித் தொடரும் மந்திரங்கள் கூறுகின்றன.

உணவைப் பழிக்கக் கூடாது

உணவை தெயவீகமாகப் போற்ற வேண்டும் என்று ஏற்கெனவே கண்டோம். அதற்கான நான்கு நியதிகள் இங்கே கூறப்படுகின்றன.

அன்னம் ந நிந்த்யாத் I தத் வ்ரதம் I ப்ராணோ வா அன்னம் I
சரீரமன்னாதம் I ப்ராணே சரீரம் ப்ரதிஷ்ட்டிதம் I சரீரே ப்ராண: ப்ரதிஷ்ட்டித: I
ததேதன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் I
ஸ ய ஏததன்ன மன்னே ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிஷ்ட்டதி I அன்ன வானன்னாதோ பவதி I
மஹான் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்மவர்ச்சஸேன I மஹான் கீர்த்யா II 7 II

பொருள்:

உணவைப் பழிக்கக்கூடாது. இது உங்கள் கடமை. பிராணனே உணவு. உணவை உண்பது உடம்பு. உடம்பு பிராணனில் நிலை பெற்றுள்ளது. பிராணன் உடம்பில் நிலை பெற்றுள்ளது. எனவே உணவு உணவில் நிலைபெற்றுள்ளது. யார் இதனை அறிகிறானோ அவன் அந்த உண்மையில் நிலைபெறுகிறான்.

அவன் உணவுச் செல்வம் உடையவன் ஆகிறான். உணவை உண்டு மகிழ்கிறான். மக்கட்செல்வமும், கால்நடைச் செல்வமும் உடையவன் ஆகிறான். புனிதப் பேரொளி மிக்கவனாக, மகிமை மிக்கவனாக ஆகிறான்.

உணவை இறையருளின் ஒரு சின்னமாகக் காண வேண்டும். அந்த உணர்வுடனும் மரியாதையுடனும் அதைக் கையாள வேண்டும். இயற்கை நமக்குத் தருகின்ற உணவு எல்லா வளமும் சேர்ந்ததாக உள்ளது. அளவுக்கு மீறி வேக வைப்பது, எண்ணெய் மசாலா போன்றவற்றை அளவுக்கு மீறி சேர்ப்பது போன்ற காரணங்களால் உணவின் இயற்கைத் தன்மை கெடுகிறது. இவ்வாறு செய்யாமல் உணவை அதன் இயற்கை வளங்களுடனே உண்ண வேண்டும்.

உடம்பு உணவினால் வளர்கிறது. உடம்பை இயக்குவது பிராணன். எனவே உடம்பு பிராணனைச் சார்ந்துள்ளது. அது போல், பிராணனின் செயல்பாடும் உணவைப் பொறுத்தே அமைகிறது. தொடர்ந்து சாப்பிடாமல் இருந்தால் உடம்பின் இயக்கம் தடைபடுவதை நாம் உணரலாம். உடம்பும் பிராணனும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. இரண்டும் உணவைச் சார்ந்திருக்கின்றன. எனவே வாழ்க்கைக்கு ஆதாரமான உணவைப் போற்ற வேண்டும்.

**உபாஸனை:**

இந்த உலகத்திலுள்ள அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றது. எந்தவொரு தத்துவமும் சுதந்திரமாக இருக்க முடியாது. உதாரணமாக சரீரமானது பிராணனை சார்ந்திருக்கின்றது, அதேபோல பிராணனானது சரீரத்தை சார்ந்திருக்கின்றது என்று தியானிக்க வேண்டும். இந்த உலகத்தின் மித்யாத்வம் உணராதவர்களுக்கு இந்த ஞானம் பயன்படுகின்றது. இந்த தியானத்தின் மூலம் இந்த பிரபஞ்சம் மித்யா என்று உணர்ந்து கொள்வான். எது ஒன்றை சார்ந்திருக்கின்றதோ அது மித்யாவின் லக்ஷணம். இந்த நிலை அடைந்தும் வேதாந்தம் புரிய ஆரம்பிக்கும். இது நிஷ்காம உபாஸகன் அடையும் பலன். காம்ய உபாஸகனுக்கு வேறு வகையான பலன்கள் கிடைக்கின்றது. நல்ல உணவு கிடைக்கும், உணவு உட்கொள்ளும் சக்தி கிடைக்கும், தேஜஸ், புகழ் கிடைக்கும்.

**அன்ன–அன்னாத உபாஸனை:**

**அன்னம்** – எது சாப்பிடபடுகின்றதோ – உணவு
**அன்னாத** – எது சாப்பிடுகின்றதோ – சாப்பிடுபவர்

இதில் இரண்டு தத்துவங்கள் எடுத்துக்கொண்டு விளக்கப்படுகின்றது.

அவைகள் சரீரம் – பிராணன்.

**பிராணன்** என்பது அன்னம்,

**உடல்** என்பது அன்னாதம்.

உடலானது பிராணனை சாப்பிடுகின்றது, இதற்கு பொருள் சரீரம் பிராணனை சார்ந்திருக்கின்றது. பிராணனை தனக்குள்ளே வைத்திருப்பதால், உடல் அதற்கான ஒரு பாத்திரமாக இருக்கின்றது, பிராணன் அதில் வைக்கப்படும் பொருளாக இருக்கின்றது.

**உடல்** என்பது அன்னம்,

**பிராணன்** என்பது அன்னாதம்.

பிராணன் உடலை சாப்பிடுகின்றது, பிராணன் உடலை சார்ந்திருக்கின்றது. இதில் பிராணன் ஒடுக்குபவராகவும், உடல் ஒடுங்குகின்ற பொருளாகவும், இருக்கின்றது. இதனால் பிராணமயகோசம் அன்னமய கோசத்தை நீக்கி விடுகின்றது.

ஒரு பொருள் இருக்கும்போதும், இல்லாதபோதும் நம்முடைய மனமானது எந்த பாதிப்பும் அடையாமலிருந்தால், அந்தப்பொருளின் மித்யா தத்வத்தை நாம் நன்கு உணர்ந்துள்ளோம் என்று அறிந்து கொள்ளலாம்.

**பிரதிஷ்டா – பிரதிஷ்டித உபாஸனை:**

பிராணனால் உடல் தாங்கப்படுகின்றது. பிராணன் உடலுக்கு உயிரூட்டுகின்றது. எனவே, இது பிரதிஷ்டா, உடல் உயிரை அடைவதால் அது பிரதிஷ்டிதம். உடலினால் பிராணன் தாங்கப்படுகின்றது. உடலானது பிராணன் இருப்பதற்கு பாத்திரமாக இருப்பதால் அது பிரதிஷ்டா, பிராணனானது உடலுக்குள்ளே இருப்பதால் அது பிரதிஷ்டிதம்.

இவ்விதம் உடல் ரூபமாக இருக்கின்ற அன்னம், பிராண ரூபமாக இருக்கின்ற அன்னத்தினால் தாங்கப்படுகின்றது. யார் இந்த அன்னம், அன்னத்தை சார்ந்திருக்கின்றது என்பதை அறிகின்றார்களோ? அவர்கள் நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள்.

நிஷ்காமமாக இந்த உபாஸனை செய்தால், இந்த ஜகத் மித்யா (உலகம் பொய்) என்ற அறிவை அடையலாம். காம்யமாக செய்பவர்களுக்கு அதிகமான உணவு கிடைக்கும், அதை சாப்பிடும் சக்தியும் கிடைக்கும், நல்ல சந்ததிகளாலும், செல்வங்களாலும், புகழினாலும் மேன்மையை அடைகின்றார்கள்.

**அனுவாகம் – 8**

உணவை வெறுக்கக் கூடாது:

அன்னம் ந பரிசக்ஷீத । தத் வ்ரதம் । ஆபோ வா அன்னம் ।
ஜ்யோதிரன்னாதம் । அப்ஸு ஜ்யோதி: ப்ரதிஷ்ட்டிதம் । ஜ்யோதிஷ்யாப: ப்ரதிஷ்ட்டிதா: ।
ததேதன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் ।
ஸ ய ஏததன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிஷ்ட்டதி । அன்னவானன்னாதோ பவதி ।
மஹான் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்ம வர்ச்சஸேன । மஹான் கீர்த்யா ॥ 8 ॥

பொருள்:

உணவை வெறுக்கக் கூடாது. இது உங்கள் கடமை. தண்ணீரே உணவு. உணவை உண்பது நெருப்பு. நெருப்பு தண்ணீரில் நிலைபெற்றுள்ளது. எனவே உணவு உணவில் நிலைபெற்றுள்ளது. யார் இதை அறிகிறானோ அவன் இந்த உண்மையில் நிலைபெறுகிறான். அவன் உணவுச் செல்வம் உடையவன் ஆகிறான்; உண்டு மகிழ்கிறான். மக்கட்செல்வமும் கால்நடைச் செல்வமும் உடையவன் ஆகிறான். புனிதப் பேரொளி மிக்கவனாக மகிமை மிக்கவனாக ஆகிறான்.

உணவை வீணாக்கக்கூடாது அதை ஒரு விரதமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீரானது அன்னமாக (சாப்பிடப்படுகின்ற உணவாக) இருக்கின்றது. நெருப்பானது அன்னாதமாக (சாப்பிடுபவராக) இருக்கின்றது. பிரளய காலத்தில் நீரானது நெருப்பினால் விழுங்கப்படுகின்றது.

நெருப்பானது அன்னமாக (சாப்பிடப்படுகின்ற உணவாக) இருக்கின்றது, நீரானது அன்னாதமாக (சாப்பிடுபவராக) தியானிக்கபடுகின்றது; வயிற்றில் பசி எடுக்கும்போது தோன்றும் நெருப்பானது நீரினால் அமைதிப் படுத்தப்படுகின்றது.

நீரினால் நெருப்பானது கட்டுப்படுத்தப்படுகின்றது. அப்போது நீர் பிரதிஷ்டாவாகவும் (கட்டுபடுத்துபவர்), நெருப்பு பிரதிஷ்டிதமாகவும் (கட்டுப்படுத்தபடுவதால்) இருக்கின்றது. நெருப்பினால் நீர் கட்டுபடுத்தபடுகின்றது. இதில் நெருப்பானது பிரதிஷ்டாகவும், நீரானது பிரதிஷ்டிதமாகவும் இருக்கின்றது. இவ்வாறு தியானம் செய்வதால் முன் அனுவாகத்தில் சொல்லப்பட்ட பலன்களையே அடைவார்கள்.

உடம்பை வளர்க்கவே உணவு. எனவே அதைத் தேவையான உணவை தேவையான அளவில் உண்ண வேண்டும். மாறாக, சுவையைக் கருத்தில் கொண்டு சில உணவை விரும்புவதும் சில உணவை வெறுப்பதும் கூடாது.

2:1.2 இல் படைப்பு பற்றிக் கண்டோம். படைப்பின் வரிசைக் கிரமத்தில் நெருப்பிலிருந்து நீர் வருகிறது. எனவே நெருப்பில் நீரின் அம்சமும், நீரில் நெருப்பின் அம்சமும் இருக்கும். இதையே நீரும் நெருப்பும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதாக மந்திரம் கூறுகிறது.

(இக்காலத்துக் குழந்தைகளுக்கு மிக அவசியமான மந்திரம் இது. "இது பிடிக்கும் இதை நிறைய உண்பேன்; இது எனக்குப் பிடிக்காது இதை உண்ணவே மாட்டேன்" என்று இக்காலக் குழந்தைகள் பிடிவாதம் பிடிக்கின்றன அல்லவா? அது கூடாது. அது மட்டுமின்றி உலகெங்கிலுமுள்ள பல நாடுகளுக்கும் ஒரு அறிவுரை இதில் மறைந்துள்ளது. வேத கால மனிதன் பெருமளவில் விவசாயம் செய்தான். உணவைப் பெருக்கினான். அதைத் தாண்டி அந்தக் காலத்தில் முக்கியமான தொழிலாக மாடு வளர்ப்பு இருந்தது.

ஒரு மன்னன் இன்னொரு மன்னனை யுத்தத்துக்கு அழைக்க முதலில் அவனுடைய மாடுகளைக் கவர்ந்து சென்றதாக வரலாறு உள்ளது. **'ஆநிரை கவர்தல்'** என்று இது சொல்லப்பட்டது. ஆநிரையை வேற்று அரசன் கவர்வது பெரும் இழுக்கு என்று கருதப்பட்டது. அந்தளவுக்கு கால்நடை செல்வம் மதிப்புள்ளதாக இருந்தது. இவைகள் மக்களுக்கு மிக எளிய சத்தான உணவை வழங்கின. இன்றைக்கு இயற்கையுடன் இயைந்து விவசாயம் செய்வது ஒழிந்து போனது. செயற்கை மருந்துகள் பயன்பாட்டில் உள்ளன! உலகில் எவ்வளவுதான் விவசாயம் செய்தாலும் இன்னும் பல நாடுகளில் பட்டினியால் ஆயிரக்கணக்கில் மக்கள் சாகும் நிலை உள்ளது. இவையெல்லாம் கருத்தில் கொண்டால் வேத காலத்தில் உலகம் எத்தனை அமைதியாக சுபிக்ஷமாக இருந்திருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது. உலகத்தில் தொழில்நுட்பம் வளர்ச்சியடைய, வளர்ச்சியடைய நன்மையை விடவும் தீங்கே அதிகமாக உள்ளது என்பது திண்ணம்)

**அனுவாகம் – 9**

உணவை ஏராளமாக உற்பத்தி செய்யுங்கள்:

அன்னம் பஹுகுர்வீத । தத் வ்ரதம் । ப்ருதிவீ வா அன்னம் ।
ஆகாசோஅன்னாத: । ப்ருதிவ்யாமாகாச: ப்ரதிஷ்ட்டித: ।
ஆகாசே ப்ருதிவீ ப்ரதிஷ்ட்டிதா । தததேதன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் ।
ஸ ய ஏததன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிஷ்ட்டதி ।
அன்னவானன்னாதோ பவதி । மஹான் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்ம வர்ச்சஸேன ।
மஹான் தீர்த்யா ॥ 9 ॥

பொருள்:

உணவை ஏராளமாக உற்பத்தி செய்யுங்கள். இது உங்கள் கடமை. பூமியே உணவு. உணவை உண்பது வெளி. வெளி பூமியில் நிலைபெற்றுள்ளது. பூமி வெளியில் நிலை பெற்றுள்ளது. எனவே உணவு உணவில் நிலைபெற்றுள்ளது. யார் இதை அறிகிறானோ அவன் இந்த உண்மையில் நிலைபெருகிறான். அவன் உணவுச் செல்வம் உடையவன் ஆகிறான்; உண்டு மகிழ்கிறான். மக்கட் செல்வமும் கால்நடைச் செல்வமும் உடையவன் ஆகிறான். புனிதப் பேரொளி மிக்கவனாக மகிமை மிக்கவனாக ஆகிறான்.

பூமியிலிருந்தே உணவு பெறப்படுகிறது. எனவேதான் உணவே பூமி எனப்பட்டது. பூமியை வெளி சூழ்ந்து நிற்பதால் பூமி வெளியின் உணவாகக் கூறப்பட்டது.

பூமி வெளியைத் தாங்குவது போல உள்ளது; வெளியில்தான் பூமி உள்ளது. எனவே இரண்டும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன.

(மிக ஆழ்ந்த கருத்துக்களை கொண்ட ஸ்லோகம் இது. வெளி பரந்தது. அந்த வெளியில் பல கிரகங்கள் உள்ளன. அப்படியானால் வெளிக்குள் கிரகங்கள் அடங்கியுள்ளன என்பதையே நாம் கொள்ள முடியும். அதனாலேயே பூமி வெளிக்கு உணவாகக் கூறப்படுகிறது. அதே நேரம் வெளியும் பூமியும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. எனவே தான் பூமி வெளியிலும், வெளி பூமியிலும் நிலைபெற்றுள்ளதாக சொல்லப்படுகிறது.)

உணவுப் பொருட்களை அதிகமாக சேகரித்து, அதிகமாக சமைக்க வேண்டும்.

இங்கு நிலமும், ஆகாசமும் தியானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**நிலம்** – அன்னம் – ஒடுங்குபவர் – பிரளய காலத்தில் நிலம் ஆகாசத்தில்
**ஆகாசம்** – அன்னாதம் – ஒடுக்குபவர் – ஒடுங்குகின்றது

**ஆகாசம்** – அன்னம் – ஒடுங்குபவர் – வயிற்றுக்குள் இருக்கும் ஆகாசம்
**நிலம்** – அன்னாதம் – ஒடுக்குபவர் – நிலத்தினால் தாங்கப்படுகின்றது

நிலம் பிரதிஷ்டா தாங்குபவர்
ஆகாசம் பிரதிஷ்டிதம் தாங்கப்படுவது

நிலம் பிரதிஷ்டிதம் காரியம்
ஆகாசம் பிரதிஷ்டா காரணம்

இப்படி தியானிப்பதால் அனுவாகம்–7 ல் கூறப்பட்ட பலன்களையே அடைவர்.

**அனுவாகம் – 10.1**

உணவு தேடி வருகின்ற யாரையும் திருப்பி அனுப்பக் கூடாது:

ந கஞ்சன வசதௌ பப்ரத்யா சக்ஷீத । தத் வ்ரதம் ।
தஸ்மாத் யயா தயா ச விதயா பஹ்வன்னம் ப்ராப்னுயாத் ।
அராத்யஸ்மா அன்ன மித்யா சக்ஷதே ।
ஏதத் வை முகதோ அன்னம் ராத்தம் ।
முகதோ அஸ்மா அன்னம் ராத்யதே ।
ஏதத்வை மத்யதோ அன்னம் ராத்தம் ।
மத்யதோ அஸ்மா அன்னம் ராத்யதே ।
ஏதத்வா அந்ததோ அன்னம் ராத்தம் ।
அந்ததோ அஸ்மா அன்னம் ராத்யதே ।
ய ஏவம் வேத ॥ 10.1 ॥

பொருள்:

உணவு தேடி வருகின்ற யாரையும் திருப்பி அனுப்பக் கூடாது. இது உங்கள் கடமை. எனவே பல வழிகளில் ஏராளமாக உணவை உற்பத்தி செய்ய வேண்டும். யார் எப்போது வந்தாலும் 'இவனுக்கு உணவு தயாராக உள்ளது' என்று சொல்லுமளவிற்கு உணவு

தாராளமாக இருக்க வேண்டும். உணவைச் சிறந்த முறையில் தயாரிப்பவனுக்கு உணவு சிறந்த முறையில் கிடைக்கிறது. சாதாரணமாகத் தயாரிப்பவனுக்கு சாதாரண முறையில் கிடைக்கிறது. மிகச் சாதாரணமாகத் தயாரிப்பவனுக்கு மிகச் சாதாரண முறையில் கிடைக்கிறது. உணவின் முக்கியத்துவத்தையும், உணவு தானத்தால் வரும் பயனையும் அறிந்து அதைச் செய்பவன் அந்தப் பலனைப் பெறுகிறான்.

'**நல்லது செய்பவனுக்கு நல்லது கிடைக்கும்**' என்ற உண்மையை அடிப்படையாக வைத்து, இங்கே உணவின் முக்கியத்துவம் கூறப்படுகிறது. நல்ல உணவைத் 'தயாரித்து' என்றால், தயாரிப்பது மட்டுமல்ல; வேண்டியவர்களுக்கு தானம் செய்யவும் வேண்டும். அவ்வாறு மிகச் சிறந்த உணவை தானம் செய்பவர்கள் 'மக்கட்செல்வம், கால்நடைச் செல்வம், புனிதப் பேரொளி' போன்றவற்றை மிகச் சிறந்த முறையில் பெறுவான்.

இந்த நான்கு மந்திரங்களில் (7 – 10.1) '**உணவு**' என்று கூறப்பட்டதை '**செல்வம்**' என்ற பரந்த பொருளில் காண வேண்டும். உணவை ஏராளம் உற்பத்தி செய்ய வேண்டும் என்றால் செல்வத்தைப் பெருக்க வேண்டும். உபநிஷதங்களுள் மிகவும் ஆக்கப்பூர்வமான கருத்து இது.

(உணவு அல்லது செல்வத்தை நிறைய செம்மையாக உற்பத்தி செய்யக் கூடியவன் அதனால் அடையும் முழுப் பலன் என்ன? யாரெல்லாம் உணவை சொந்தமாக உற்பத்தி செய்ய இயலாமல் உள்ளார்களோ, யாரெல்லாம் வயோதிகர்களாக, ஆதரவற்றவர்களாக, நோயாளிகளாக உள்ளார்களோ அவர்களுக்கெல்லாம் அந்த உணவை/செல்வத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதையே இதன் சிறந்த நோக்கமாகக் கொள்ளலாம். இதே காரணத்தால் வேத காலங்களில் பிச்சைக் காரர்கள் என்ற பெயரில் யாரும் இல்லை என்பதும் நோக்கத்தக்க ஒன்று!)

ஒருவர் நம்மிடம் இருப்பிடம் நாடி வந்தால் நாம் மறுக்க கூடாது, இதை விரதமாக கொள்ள வேண்டும், அவருக்கும் தங்க இடமும், சாப்பிட உணவும் கொடுக்க வேண்டும்.

ஆகவே, ஏதாவது ஒரு விதத்தில் தர்மப்படி அதிகமான உணவை சேகரிக்க வேண்டும். இவருக்கு உணவு தயாராக உள்ளது என்று இல்லறத்தோர் கூறுகிறார்கள்.

உயர்ந்த விதத்தில் உணவை தயாரித்து கொடுத்தால் அவனுக்கும் உயர்ந்த விதத்தில் உணவானது கிடைக்கின்றது. இடைநிலை தரத்தில் தயாரித்து கொடுத்தோமானல் அதே தரத்தில்தான் உணவும் திரும்ப கிடைக்கும். ஒருவேளை மோசமாக உணவை தயாரித்து கொடுத்தோமானால் நமக்கும் மோசமான உணவே கிடைக்கும்.

இங்கு உணவு ஒரு உதாரணத்திற்கு கூறப்பட்டுள்ளது. இந்த கருத்தை எல்லாவற்றிற்கும் பொருத்திப் பார்த்து புரிந்து கொள்ள வேண்டும். யார் இந்த உண்மையை அறிந்து அவ்விதம் நடந்து கொள்கிறார்களோ அவர்கள் புண்ணியத்தை அடைகின்றார்கள்.

இந்த உலகத்திற்கு நாம் எதைக் கொடுக்கின்றோமோ அதை இந்த உலகம் நமக்கு திருப்பிக் கொடுக்கும். எப்படி கொடுத்தோமோ அப்படியே திருப்பி கொடுக்கும். உணவைக் கொடுத்தால் நமக்கு உணவு கிடைக்கும், அன்பைக் கொடுத்தால் நமக்கும் அன்பு கிடைக்கும்.

**அனுவாகம் – 10.2**

**தெய்வ சிந்தையுடன் வாழ்தல்**

'**ஈஸ்வர சிந்தையுடன் செல்வத்தைப் பெருக்க வேண்டும், வாழ வேண்டும்**' என்று பார்த்தோம். அதனை அடுத்த இரண்டு மந்திரங்கள் விளக்குகின்றன. ஈஸ்வர சிந்தையுடன் வளமாக வாழ்வது என்பதை இந்த இரண்டு மந்திரங்களும் இரண்டு கோணங்களில் கூறுகின்றன.

க்ஷேம இதி வாசி | யோக க்ஷேம இதி ப்ராணா பானயோ: |
கர்மேதி ஹஸ்தயோ: | கதிரிதி பாதயோ: | விமுக்திரிதி பாயௌ |
இதி மானுஷீ: ஸமாஜ்ஞா: || 10.2 ||

பொருள்:

ஈஸ்வர சிந்தையுடன் வாழ்வது பற்றிக் கூறப்படுகிறது. வாக்கின் நன்மையாகவும், பிராணன் மற்றும் அபானனின் மங்கலமாகவும், கைகளில் செயலாகவும், கால்களில் நடையாகவும், குதத்தில் வெளியேற்றுதலாகவும் இறைவன் செயல்படுகிறார்.

தனிநபர் வாழ்க்கையில் ஈஸ்வர சிந்தனையைப் பற்றி இந்த மந்திரம் கூறுகிறது. வாக்காக, பிராணனாக, செயல்களாக இறைவனே செயல்படுகிறார். நன்மை தரும் வாக்குகள் நம்மிடமிருந்து வெளிவரும் போது, மங்கலமான செயல்களில் நாம் ஈடுபடும்போது அங்கே இறைவன் வெளிப்படுகிறார். அதாவது வாழ்க்கையில் தெய்வசிந்தனை அதிகரிக்க வேண்டுமானால் நன்மை தருகின்ற, மங்கலமான செயல்களில் ஈடுபட வேண்டும். எந்தச் செயல்களும் வெறுக்கத்தக்கதல்ல என்பதை உணர்த்தவே வெளியேற்றுதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கர்மேந்திரியங்களாக உள்ள கைகளால் செயல்கள் செய்யப்படுகின்றன. கால்கள் நடக்க உதவுகின்றன! அப்படியானால் கழிவு உறுப்புகள் குதமும், குய்யமும் எதைச் செய்கின்றன? குதமும், குய்யமும் (மல, ஜல உறுப்புகள்) மனிதனுடைய மறைக்க வேண்டிய பாகங்களாக உள்ளனவே தவிர அருவருக்கத்தக்க ஒன்று அல்ல. சிறுநீரகத்தில் கோளாறு உள்ள ஒருவரைக் கேட்டுப் பாருங்கள் அந்த உறுப்பின் பயன் அவருக்கு அப்போதுதான் தெரியும். சிறுநீர் வெளியேறுதல் என்ற செயல்பாடு நோயால் நின்று போன ஒருவன் கைகளாலோ, கால்களாலோ பெரிய செயல்கள் எதையும் செய்து விட முடியாது. அதே போல்தான் குதமும். உடலிலுள்ள கழிவுகள் முறையாக வெளியேற்றப்பட வேண்டும். இல்லையென்றால் மனிதன் நோய்வாய்ப்படுவான். இவைகள் மனிதனுடைய உடலில் முக்கிய செயல்களைப் புரியும் உறுப்புக்கள். அதன்பிறகே, இதர உறுப்புகளின் செயல்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன! இதே போல் தான் தோல் வியர்வையை வெளியேற்றும் செயலும் முக்கியமான ஒன்று ஆகும்)

**பிரஹ்ம உபாஸனம்**

மாயையுடன் கூடிய பிரம்மன் சகுணபிரம்மன் என்றும், ஈஸ்வரன் என்றும் அழைக்கப்படுகின்றது. உபாஸனை வரும் இடத்தின் பிரம்மன் என்பதை ஈஸ்வரன் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒவ்வொரு சக்தி இருக்கின்றது. நாம் இந்த சக்திகள் என்னைச் சார்ந்தது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இவையனைத்தும் **ஈஸ்வரனுடைய சக்தி** என்று தியானிக்க வேண்டும்.

1. **க்ஷேம இதி வாசி:** நம்முடைய வாக்கில் தூய்மைரூபமாக ஈஸ்வரன் இருக்கின்றார் என்று தியானிக்க வேண்டும். ஒரு மனிதனுடைய உயர்வும், தாழ்வும் அவனுடைய சொல்லில்தான் இருக்கின்றது என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

2. **யோக ஷேம இதி பிராண–அபானயே:** பிராணன் – அபானன் இவைகளில் யோகஷேமமாக இருப்பதாக தியானிக்க வேண்டும். யோகம் என்பது பொருள் ஈட்டுதல், ஷேமம் என்பது சேர்த்ததை பாதுகாத்தல்.

3. நமது இரண்டு கைகளில் செயல்வடிவமாக ஈஸ்வரன் இருப்பதாக தியானிக்க வேண்டும்.

4. நமது இரண்டு கால்களில் நடக்கின்ற சக்தியாக இருப்பதாக தியானிக்க வேண்டும்.

5. மலத்தை வெளியே தள்ளும் இந்திரியத்தில் வெளித்தள்ளும் சக்தியாக தியானிக்க வேண்டும்.

6. கருவாயில் உற்பத்தி செய்யும் சக்தியாகவும், அம்ருதமாகவும், சந்ததி உருவாகுவதற்கு காரணமாகவும், சரீர ஆனந்தத்தை தருகின்ற சக்தியாகவும் தியானிக்க வேண்டும்.

இவ்விதம் மனிதர்களுடைய உறுப்புக்கள் சம்பந்தமான உபாஸனைகள் சொல்லப்பட்டுள்ளது.

**அனுவாகம் – 10.3**

எல்லாம் இறைவனே:

அத தைவீ: । த்ருப்திரிதி வ்ருஷ்டௌ ।
பலமிதி வித்யுதி । யச இதி பசுக்ஷு ।
ஜ்யோதிரிதி நக்ஷத்ரேஷு । ப்ரஜாதி ரம்ருத மானந்த இத் யுபஸ்த்தே ।
ஸர்வமித்யாகாசே ॥ 10.3 ॥

பொருள்:

தெய்வ சிந்தனையின் அடுத்த பகுதி இது. மழையில் திருப்தியாகவும், மின்னலில் ஆற்றலாகவும், மிருகங்களில் புகழாகவும், நட்சத்திரங்களில் ஒளியாகவும், குழந்தையை உற்பத்தி செய்யும் மேலான இன்பமாகப் பிறப்புறுப்பிலும், வெளியில் எல்லாமாகவும் இறைவனே உள்ளார்.

தனி நபர் வாழ்க்கையில் தெய்வ சிந்தனை நிறைய வேண்டுமானால் சமுதாயமும் இயற்கையும் கூட கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் மனிதன் ஒரு தீவல்ல; அவன் சமுதாயத்தில் ஒரு அங்கம்.

இந்த மந்திரத்தில் சமுதாயம் மற்றும் இயற்கையின் பல்வேறு அம்சங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இங்கே கூறப்பட்டுள்ள ஒவ்வொன்றும் தன்னளவில் நல்லவையும் அல்ல; தீயவையும் அல்ல.

நாம் பயன்படுத்துகின்ற விதமே அவற்றின் தன்மையை நிர்ணயிக்கிறது. 'இந்த உலகம் நல்லதும் இல்லை, கெட்டதும் இல்லை. நெருப்பு தன்னளவில் நல்லதோ தீயதோ இல்லை. அது நமக்கு இதமான வெதுவெதுப்பு தரும்போது, "ஆ, எவ்வளவு அருமையான நெருப்பு!" என்கிறோம்; விரலைச் சுட்டு விட்டால் அதையே குறை கூறுகிறோம். எனினும் நெருப்பு தன்னளவில் நல்லதோ கெட்டதோ இல்லை. அதை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோமோ? அதற்கு ஏற்ற உணர்ச்சியை அது நம்முள் எழுப்புகிறது. உலகமும் அவ்வாறே' என்று சுவாமி விவேகானந்தர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

மழை, 'பெருமழையாகப் பொழிந்து தீமை விளைவிப்பதும், அதனால் பாதிக்கப் பட்டவர்களைக் காப்பதும் மழை' என்கிறார் திருவள்ளுவர்.

அதுப்போலவே மின்னல், மிருகங்கள், நட்சத்திரங்கள், பிறப்புறுப்பு போன்ற அனைத்தும் நன்மை, தீமை இரண்டையும் விளைவிக்க வல்லவை. அவற்றின் நல்ல பகுதியை எடுத்துக் கொள்ளப் பழக வேண்டும். அதாவது சமுதாயம் மற்றும் இயற்கையின் நல்ல பகுதியை மட்டும் ஏற்றுக் கொண்டு வளர முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு தன்னளவில் இறைவனின் மகிமை வெளிப்படும் விதமாக வாழ்ந்து, சமுதாயத்திலிருந்து நல்லவற்றை மட்டும் ஏற்றுக்கொண்டு வளர்வதே தெய்வசி ந்தனையுடன் வாழும் வாழ்க்கையாகும்.

பிரம்மனை மழையில் திருப்தியாகவும், மின்னலில் சக்தியாகவும், செல்வத்தில் புகழாகவும், நட்சத்திரங்களில் (சூரியன், சந்திரன் இரண்டும் நட்சத்திரங்களுடன் சேர்த்து பார்க்க வேண்டும்) ஒளிவடிவமாக இருக்கின்றதாகவும், ஆகாசத்தில் பிரம்மத்தை அனைத்துமாக இருக்கின்றதாகவும் தியானிக்க வேண்டும்.

நாம் எதை, எப்படி உபாஸிக்கின்றோமோ அது சம்பந்தமான பலனை அடைவோம். யாரோடு உறவு வைத்திருக்கின்றாயோ, யாராக உயர விரும்புகின்றாயோ அவராக நாம் மாறுவோம். இது இயற்கையின் விதி.

• ஆகாசத்திலிருந்து வேறுபடாத பிரஹ்மன் (ஈஸ்வரன்) அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கின்றார் என்று தியானித்தால் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு செல்வதற்கான எல்லாமும் கிடைக்கும், எல்லாவிதத்திலும் உதவி கிடைக்கும்.

• பிரம்மத்தை மேன்மையானதாக உபாஸித்தால் மகானாக உயர்கின்றான்.

• பிரம்மத்தை சிந்திக்கும் சக்தியாக உபாஸித்தால் சிந்திக்கும் திறனுடையவனாகின்றான்.

• பிரம்மத்தை வணங்கத்தக்கதாக தியானிப்பதால், வசீகரிக்கும் தன்மையுடையதாக தியானித்தால் ஆசைப்படும் பொருட்கள் யாவும் வந்தடையும்.

• மிகவும் பெரியதாகவும், தியானித்தால் உயர்ந்த நிலைக்கு செல்கின்றான்.

• அழிக்கக்கூடிய சக்தியாக தியானித்தால், தன்னை அழிக்க நினைக்கும் பகைவர்கள் அழிந்து போவார்கள். மேற்கூறிய தியானங்களை நிஷ்காமமாக (ஆசைகளற்று) செய்தால் இந்த உலகம் மித்யா (மாயை அல்லது பொய்) என்று புரிந்து கொள்ளப்படும்.

**அனுவாகம் – 10.4**

ஆக்கபூர்வமான வாழ்க்கையின் பலன்:

தத் பிரதிஷ்ட்டேத் யுபாஸீத । ப்ரதிஷ்ட்டாவான் பவதி ।
தன் மஹ இத்யுபாஸீத । மஹான் பவதி ।
தன்மன இத்யுபாஸீத । மானவான் பவதி ।
தன்னம இத்யுபாஸீத । நம்யந்தே அஸ்மை காமா: ।
தத் ப்ரஹ்மேத் யுபாஸீத । ப்ரஹ்மவான் பவதி ।
தத் ப்ரஹ்மண: பரிமர இத்யுபாஸீத ।
பர்யேணம் ம்ரியந்தே த்விஷந்தஸ் ஸபத்னா: ।
பரி யே அப்ரியா ப்ராத்ருவ்யா: ॥ 10.4 ॥

பொருள்:

பரம்பொருளை அனைத்திற்கும் ஆதாரமானவராகப் போற்ற வேண்டும். அப்படிப் போற்றுபவன் தன்னில் நிலைபெற்றவனாக ஆகிறான். அவரை மகிமை வாய்ந்தவராகப் போற்றுபவன் மகிமை பெறுகிறான்.

சிந்தனையாகப் போற்றுபவன் சிந்திக்க வல்லவன் ஆகிறான். ஆசைகள் அவனுக்கு அடிபணிகின்றன. அவரைத் தலைவராகப் போற்றுபவன் தலைவனாகிறான்.

அவரை அழிக்கும் சக்தியாகப் போற்றுபவனைச் சூழ்ந்துள்ள வெறுப்பவர்களும், எதிரிகளும், விரும்பாதவர்களும், தீயவர்களும் அழிகிறார்கள்.

(ஆன்மீகத்தின் அடிப்படை நெறி இங்கே விளக்கப்படுகிறது. மனிதனுக்கு மிகுந்த கேட்டை விளைவிக்கும் சொற்களாக **'நான்' 'எனது'** ஆகியவைகள் ஆகும். 'இதை நான் செய்தேன்', 'இந்த சிறப்பை நான் பெற்றேன்' என்றெல்லாம் தன்னைத் தானே பெருமைக் கொள்ளும் மனிதர்கள் எந்த நேரத்திலும் இறைவனின் அநுபூதியைப் பெறுவதில்லை.

அனைத்துக்கும் இறைவனே காரணம் என்பதை உணரும் மனிதனுக்கு சொல்லில், செயலில் பணிவு வரும். தானாகவே அவன் செயல்களில் வெற்றியை ஈட்டுவான். தன்னில் நிலைபெறுவது என்றால் தனக்கு நடப்பது எல்லாம், தான் செய்வது எல்லாம் இறைவனின் அருளால்தான் என்று புரிந்து கொள்வது. அப்படிப் புரிந்து கொண்டவன் உலகிலுள்ள எதையும் தன்னுடையது என்று உரிமை கொண்டாட மாட்டான்.)

எந்தவொரு. ஆனந்தம் மனிதனிடத்தில் இருக்கின்றதோ அதுவும், ஹிரண்யகர்ப்பனிடத்தில் இருக்கும் ஆனந்தமும் ஒன்றேயாகும். யார் இவ்வாறு அறிகின்றார்களோ அவர்களுக்கு வெளியே உள்ள பொருட்களிலிருந்து பற்றை விட்டுவிட்டு ஒவ்வொரு கோசத்திலிருக்கும் அபிமானத்தை நீக்கி விடுவான்.

இந்த அன்னமயம்தான் ஆத்மா என்ற அபிமானத்தை விட்டு, பிராணமயத்திலிருந்தும் இந்த அபிமானத்தை விட்டு, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமயத்திலிருந்தும் அபிமானங்களை விட்டுவிடுவான்.

**அனுவாகம் – 10.5**

எல்லாம் ஒருவரே:

ஸ யச்சாயம் புருஷே । யச்சா ஸா வாதித்யே ।
ஸ ஏக: । ஸ ய ஏவம் வித் ।
அஸ்மால் லோகாத் ப்ரேத்ய ।
ஏ தமன்னமய மாத்மான முபஸங்க்ரம்ய ।

ஏதம் ப்ராணமய மாத்மான முபஸங்க்ரம்ய |
ஏதம் மனோமய மாத்மான முபஸங்க்ரம்ய |
ஏதம் விஜ்ஞானமய மாத்மான முபஸங்க்ரம்ய |
ஏதமானந்தமய மாத்மான முபஸங்க்ரம்ய |
இமான் லோகான் காமான்னீ காமரூப் யனுஸஞ்சரன் |
ஏதத் ஸாம காயன்னாஸ்தே || 10.5 ||

பொருள்:

இந்த மனிதனில் இருப்பவரும் அந்தச் சூரியனில் இருப்பவரும் ஒருவரே. இந்த உண்மையை அறிபவன் உலக உணர்விலிருந்து விடுபடும்போது அன்ன மயம், பிராண மயம், மனோ மயம், விஜ்ஞான மயம், ஆனந்த மயம் ஆகிய உடம்புகளைக் கடந்து செல்கிறான். பிறகு விரும்பிய வடிவைப் பெற்று, விரும்பிய உலகங்களில், விரும்பிய உணவை உண்டபடி சுற்றித் திரிகிறான்; பாடல்களைப் பாடியபடி ஆனந்தமாக இருக்கிறான்.

(முக்திக்கு முதற்படியாக முமுட்சுத்துவம் சொல்லப்படுகிறது. இந்த ஸ்லோகம் முமுட்சுத் தன்மையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஏனென்றால் தவத்தினால், முறையான வாழ்வினால், தியானத்தினால் இறையனுபூதியைப் பெறும் ஒருவன் அதன் பின் நடப்பது எல்லாம் அவனுடைய செயலாலே என்பதையும் எல்லாமாக இருப்பதும் அவன் ஒருவனே என்பதையும் உணர்கிறான்! அந்த இறைவனே சூரியனாகவும், வெளியாகவும், அந்தரிக்ஷமாகவும், நட்சத்திரங்களாகவும், சந்திரனாகவும், வெளியாகவும், வளியாகவும், கிரகங்களாகவும், பல மிருகங்களாகவும், மனிதனாகவும், மனிதனில் உள்ள ஆன்மாவாகவும், மனிதனுக்கு உணவாகவும், மனிதனின் பிராணனாகவும், அவன் மனமாகவும், புத்தியாகவும், ஆனந்தமாகவும், இந்தப் பெரும் பிரபஞ்சமாகவும் இன்னும் அனைத்துமாகவும் இருக்கிறான் என்பதை உணர்வதே இறையனுபூதி நிலை எனலாம்! அந்த நிலையை அடைந்தவன் உலக உணர்விலிருந்து (இதை மரணிக்கும் போது என்றும் கொள்ளலாம்) விடுபடும் போது உடலின் ஐந்து நிலைகளையும் கடந்து சென்று இறவா நிலையை அடைகிறான் என்று சொல்கிறது இந்த ஸ்லோகம்)

**(மோட்ச பலன் – ஜீவன் முக்தனின் நிலை)**

ஜீவன் முக்தன் இந்த உலகத்தில் திரிந்து கொண்டும், உலவிக் கொண்டும் இருக்கின்றான். விருப்பப்படி உணவை சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றான். ஏதோ ஒரு பாடலை இசையுடன் பாடிக் கொண்டிருக்கின்றான்.

• நாம் சாப்பிடும் உணவு அந்தக்கரணத்தைப் பாதிக்கின்றது. ஞானிக்கு இந்த நிலை கிடையாது. உணவு விஷயத்தில் அவனுக்கு எந்த நியமமும், நிஷேதமும் கிடையாது.

• ஞானியானவன் உலகமே நான் என்ற பாவனையில் இருப்பவன். எனவே நானே எல்லா உருவமாக இருக்கின்றேன் என்று கருதுவான். தான் விரும்பிய வாழ்க்கையை வாழ்வான். பிராரப்தத்தின் செயலை ஏற்றுக் கொள்வான்.

• பிரம்மத்தை பாடிக் கொண்டும், உபதேசித்துக் கொண்டும் வாழ்ந்து கொண்டிருப்பான்.

• இந்த உலகத்தை அவன் ஆச்சரியமாக பார்க்கின்றான். நடக்க முடியாத விஷயத்தை பார்த்து ஆச்சரியத்தை அடைவது போல இருக்கும் அவனது பார்வை. இந்த உலகில் நான் ஒருவன் மட்டும்தான் இருக்கின்றேன். நானே உணவாகவும், உணவை உட்கொள்பவனாகவும் இருக்கின்றேன் என்று ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு இருப்பான்.

• நானே சாப்பிடும் பொருளாக இருக்கின்றேன் என்று ஆச்சரியத்துடன் பார்க்கின்றான்.

• நானே உணவை சாப்பிடுபவனாகவும் இருக்கின்றேன் என்று ஆச்சரியத்துடன் பார்க்கின்றான்.

• நானே இந்த இரண்டையும் சேர்த்து வைக்கின்றேன் என்றும் எண்ணிக் கொள்வான். இது ஞானியிடத்திலுள்ள ஸர்வாத்ம பாவத்தை குறிக்கின்றது என்று பகவான் ஸ்ரீ சங்கரர் கூறுகின்றார்.

உலகத்திற்கு நானே ஹிரண்யகர்ப்பனாக இருக்கின்றேன். தேவர்களுக்கு முன் தோன்றிய விராட் ஸ்வரூபமாகவும் இருக்கின்றேன். அம்ருதத்தின் மையமாக இருக்கின்றேன். பிரம்மத்தை அடைய விரும்பும் முமுக்ஷுக்களுக்கு ஆதாரமாக இருக்கின்றேன். உணவு ரூபமாக இருக்கின்ற யார் கொடுக்கின்றார்களோ அவர்களை நான் காப்பாற்றுகின்றேன். உணவு தொடர்ந்து கிடைக்கப்பெற்று வாழ்வார்கள்.

அன்னரூபமான என்னை பகிர்ந்து உண்ணாதவர்கள் அழிந்து விடுவார்கள். சூரியனின் ஒளியைப் போல நான் அனைத்துலகத்தையும் வியாபிக்கின்றேன்.

ஞானியானவன் எப்பொழுதும் முழு மனநிறைவுடன் இருக்கின்றான் என்று புரிந்து கொள்ள வேண்டும். யார் இவ்விதம் அறிகின்றானோ அவன் முக்தியடைந்தவனாக கருதப்படுகின்றான்.

**அழிவற்றவன் நானே:**

ஹா உ ஹா உ ஹா உ ।
அஹ மன்ன மஹமன்ன மஹமன்னம் ।
அஹ மன்னாதோ அஹ மன்னாதோ அஹ மன்னாத: ।
அஹம் ச்லோக க்ருதஹம் ச்லோக க்ருதஹம் ச்லோகக்ருத் ।
அஹ மஸ்மி ப்ரதமஜா ரிதா ஸ்ய । பூர்வம் தேவேப்யோ அம்ருதஸ்ய நா பா இதி ।
யோ மா ததாதி ஸ இதேவ மா வா: । அஹ மன்ன மன்ன மதந்தமாத்மி ।
அஹம் விச்வம் புவன மப்ய பவாம் । ஸுவர்ன ஜ்யோதீ: ।
ய ஏவம் வேத । இத்யுபநிஷத் ‖ 10.6 ‖

பொருள்:

'ஆகா! ஆகா! ஆகா! நானே உணவு, நானே உணவு, நானே உணவு! நானே உணவை உண்பவன், நானே உணவை உண்பவன், நானே உணவை உண்பவன்! நானே இந்த சுலோகங்களை ஏற்படுத்தியவன், நானே இந்த சுலோகங்களை ஏற்படுத்தியவன், நானே இந்த சுலோகங்களை ஏற்படுத்தியவன்! படைப்பில் முதலில் தோன்றியவன் நானே! தேவர்களுக்கும் முன்னால் அழிவற்றவனாக நானே இருக்கிறேன்! எனக்கு உணவு தருபவனை நான் காக்கிறேன். எனக்குத் தராமல் உண்பவனை நானே உண்கிறேன். உலகங்கள் அனைத்தையும் நானே வெற்றி கொள்கிறேன். பொன்னொளி வீசிப் பொலிகின்ற தேவன் நானே!' இவ்வாறு அறிபவன் அனைத்துப் பலன்களையும் அடைகிறான். இவ்வாறு இந்த உபநிஷதம் நிறைவு பெறுகிறது.

பரம்பொருள் பற்றிய வர்ணனையை இது விளக்குகிறது. தேவர்களுக்கும் வானவர்களுக்கும் முன்னதாகவே நான் இருக்கிறேன்! நான் பிறப்பு அழிவற்ற ஒருவன். படைப்பில் முதலில் தோன்றியவன் நானே என்று உள்ளதை நாம் விசாரித்துப் பார்க்கின்ற பொழுது, எப்படி பிறப்பே இல்லாதவன் படைப்பில் முதலில் தோன்றினான் என்றால், படைப்பு என்பது பரமனின் கற்பனை உலகம். கனவு உலகம். ஆகவே, அவனைப் பொருத்தவரை அவன் எப்போதுமே இருந்து கொண்டேதான் இருக்கிறான். தோன்றி, மறைகின்ற படைப்பு என்ற ஒன்று மாயா. மனதின் கற்பனை. மித்யா என்பது அறியப்படும்போது, அதில்

அடைவதற்கு ஒன்றுமில்லை. அழிவதற்கும் ஒன்றுமில்லை. இதுவே, ஆத்ம ஞானம் என்பதாக இதுப் போன்ற சாஸ்திரங்கள் வாயிலாக, சாதுக்கள் நமக்கு புரிய வைக்க முயற்சிக்கின்றார்கள் என்பதாகத்தான் பார்க்கப்படுகின்றது.

ஆகவே, இருக்கின்ற இந்த வாழ் நாட்களை அடைந்த ஞானத்தினால், ஈஸ்வர நிஷ்டையில், ஆக்கபூர்வமான வாழ்க்கையை உணர்ந்து, அனுபவித்து வாழ்பவன் ஆனந்தத்தை அனுபவிக்கிறான். அத்தகைய ஒருவரின் ஆனந்த அனுபவத்தைக் கூறி இந்த உபநிஷதம் நிறைவு பெறுகிறது.

(ஈஸ்வர சிந்தனையுடன் செய்யப்படும் எந்தச் செயலிலும் சுயநலம் தோன்றாது. தற்பெருமை தோன்றாது. ஆணவம் தோன்றாது. தான் என்ற உணர்வு தோன்றாது. பசித்தவனுக்கு உணவளிக்கும் ஒருவனுக்கு 'ஆஹா என்னால் அல்லவா இவன் பசி நீங்கினான்' என்ற பெருமை தோன்றாது. மாறாக 'இவன் பசிப்பிணியை நீக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கிய இறைவனுக்கு நன்றி' என்றே சொல்லத் தோன்றும். நம் செயல்கள் அனைத்திலும் இறைவனை எண்ணி செய்யும் நிலையில், நம்மால் தீய பாதைகளில் செல்லவும் இயலாது.)

॥ இதி தைத்திரீயோபநிஷதி வல்லீ ஸமாப்தா ॥

இத்துடன் தைத்திரீய உபநிஷதம் உபதேசம் நிறைவடைந்தது.

**-------------- ஓம் தத் ஸத் ---------------**

# தைத்திரீய உபநிஷதம்

## (வாழ்க்கையை வாழுங்கள்)





யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ?
அந்த தூய சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக!

ப்ரக்ஞன்